வெளியீடு 9-12-2004 Issued 9-12-2004

28 2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூலை 30, 2004—தொகுதி 63—எண் 1

**Friday the 30th July, 2004—Volume 63—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

D
V2'', 31'P04
P04
226218

[Price Rs. 3.00

30-07-2004

## உள்ளடக்கம்

28 2005


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi - xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1–37 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம், புளியந்துறை இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் | 37–38 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு | 39 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு, 2004 | 39–40 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 40 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு; (ஆ) கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் | 41–121 |
| * மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் | 41, 43, 100–119 |
| * மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் | 42, 43–44, 88–99 |
| திரு. ஜெ.க. வீரபாண்டியன் | 45–56, 57, 58 |
| *திரு. ராதாரவி | 59–71, 100 |
| *திருமதி நளினி மனோகரன் | 72–78 |
| *திருமதி மல்லிகா சின்னசாமி | 78–83 |
| திருமதி சு. கலாவதி | 83–88 |
| **6. தகவல் கோரல்**— | |
| ஓர் அமைச்சர் பற்றி 'துக்ளக்' பத்திரிகையில் செய்தி | 44 |
| **7. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு— மதிப்பீட்டுக் குழு; பொதுக் கணக்குக் குழு; பொது நிறுவனங்கள் குழு; விதிகள் குழு; அலுவல் ஆய்வுக் குழு | 121–122 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் தீர்மானங்கள்**—தொடர்ச்சி | |
| (ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு— அவை உரிமைக் குழு; சட்ட விதிகள் ஆய்வுக் குழு; அரசு உறுதிமொழிக் குழு; அவைக் குழு; மனுக்கள் குழு; நூலகக் குழு; பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு | 122–123 |
| **8. அரசினர் தனித் தீர்மானம்**— | |
| 'தி ஹிந்து' மற்றும் பிற நாளிதழ்கள் குறித்து உரிமைக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 7–11–2003 அன்று பேரவையில் நிறைவேற்றிய தீர்மானங்களை இரத்து செய்தல் மற்றும் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கைவிடுதல் | 123–124 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 125–129 |


—

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறு[illegible]திவு செய்தல், உள்[illegible]நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

தமிழ்நாடு ஆவணக் [illegible]
226218
சென்னை 600 00[illegible]

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.



11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

17. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

20. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு



22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

-------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. Minister for Finance and Food | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. Minister for Law, Information Technology and Electricity | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**
Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

9. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**
Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

11. **Minister for Agriculture and Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

12. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Commercial Taxes and Co-operation.



13. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**
Animal Husbandry.

14. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Forests & Environment and Pollution Control.

15. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

16. **Minister for Education and Backward Classes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities

17. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**
Milk and Dairy Development.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

20. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

21. *Minister for Labour* .. ***The Hon. Thiru P. Annavi:***

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

22. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

23. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

-----



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி. எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ. கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

– – –

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

| | | |
|---|---|---|
| 66. | காளிமுத்து, டாக்டர் கா. | .. திருமங்கலம் |
| 67. | கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. | .. அரூர் (செ.வ.) |
| 68. | கிருஷ்ணன், திரு. ஆர். | .. அந்தியூர் (செ.வ.) |
| 69. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 70. | குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | .. ஆண்டிமடம் |
| 71. | கோதண்டராமன், திரு. ஜி. | .. முகையூர் |
| 72. | கோபிநாத், திரு. கே. | .. ஓசூர் |
| 73. | கோவிந்தசாமி, டாக்டர் ஆர். | .. விருத்தாசலம் |
| 74. | கோவிந்தராஜ், திரு. வெ. | .. கிருஷ்ணகிரி |
| 75. | கோவை தங்கம், திரு. | .. வால்பாறை (செ.வ.) |
| 76. | சக்திவேல் முருகன், திரு. எம். | .. அம்பாசமுத்திரம் |
| 77. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 78. | சசிகலா, திருமதி ஆர். | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 79. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. ஸ்ரீவைகுண்டம் |
| 80. | சண்முகம், திரு. சி. | .. பூந்தமல்லி |
| 81. | சண்முகம், திரு. சி.வி. | .. திண்டிவனம் |
| 82. | சண்முகவேலு, திரு. சி. | .. உடுமலைப்பேட்டை |
| 83. | சந்தானம், திரு. லா. | .. உசிலம்பட்டி |
| 84. | சந்திரசேகரன், திரு. எம்.எஸ். | .. இராணிப்பேட்டை |
| 85. | சந்திரமோகன், திரு. நா. | .. சீர்காழி (செ.வ.) |
| 86. | சந்திரன், திரு. வீ. | .. சிவகங்கை |
| 87. | சம்பத், திரு. எம்.சி. | .. நெல்லிக்குப்பம் |
| 88. | சரவணன், திரு. துரை. கி. | .. சிதம்பரம் |
| 89. | சரோஜா, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |



| | | |
|---|---|---|
| 90. | சாமி, திரு. ஆர். | .. மேலூர் |
| 91. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 92. | சிதம்பரம், திரு. ப. | .. பவானிசாகர் |
| 93. | சிவகாமி, திருமதி வி. | .. தாராபுரம் (செ.வ.) |
| 94. | சிவசாமி, திரு. கே.கே. | .. அருப்புக்கோட்டை |
| 95. | சிவசாமி, திரு. சி. | .. திருப்பூர் |
| 96. | சிவசுப்பிரமணியன், திரு. டி.என். | .. கரூர் |
| 97. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 98. | சிவபெருமாள், திரு. அ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 99. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 100. | சின்னசாமி, திரு. மா. | .. பழனி (செ.வ.) |
| 101. | சீனிவேல், திரு. எஸ்.எம். | .. திருப்பரங்குன்றம் |
| 102. | சுதர்சனம், திரு. கே. | .. கும்மிடிப்பூண்டி |
| 103. | சுதர்சனம், திரு. டி. | .. திருவள்ளூர் |
| 104. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 105. | சுந்தராம்பாள், திருமதி செ. | .. மேட்டூர் |
| 106. | சுப்பிரமணியன், திரு. வீ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 107. | சுப்பையா பாண்டியன், திரு. எம். | .. கடையநல்லூர் |
| 108. | சூரியகலா, திருமதி சி.எம். | .. குடியாத்தம் |
| 109. | செம்மலை, திரு. செ. | .. ஓமலூர் |
| 110. | செல்லையா, திரு. வி.ஏ. | .. மருங்காபுரி |
| 111. | செல்வம், திரு. எஸ்.கே. | .. வீரபாண்டி |
| 112. | செல்வராஜ், திரு. ஏ.கே. | .. மேட்டுப்பாளையம் |

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.டி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. சு. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்டாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்



136. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

| | | |
|---|---|---|
| 159. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. | தொண்டாமுத்தூர் |
| 160. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. | ஸ்ரீரங்கம் |
| 161. | பாலபாரதி, செல்வி க. .. | திண்டுக்கல் |
| 162. | பாலன், திரு. எஸ்.எம். .. | லால்குடி |
| 163. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. | சோழவந்தான் |
| 164. | பிச்சாண்டி, திரு. கு. .. | திருவண்ணாமலை |
| 165. | புகழேந்தி, திரு. இ. .. | கடலூர் |
| 166. | பூபதி மாரியப்பன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 167. | பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. | பெருமாள், திரு. என்.கே. .. | விளாத்திகுளம் |
| 169. | பொன்முடி, டாக்டர் க. .. | விழுப்புரம் |
| 170. | பொன்னம்பலம், திரு. ப. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 171. | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 172. | போளூர் வரதன், திரு. .. | செங்கம் (செ.வ.) |
| 173. | மகாலிங்கம், திரு. எஸ். .. | அவினாசி (செ.வ.) |
| 174. | மகேந்திரன், திரு. கே. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 175. | மகேஸ்வரி, திருமதி எஸ். .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 176. | மணி, திரு. கோ.சி. .. | கும்பகோணம் |
| 177. | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 178. | மணி, திரு. ஜி.கே. .. | பெண்ணாகரம் |
| 179. | மலையப்பசாமி, திரு. அ.இரா. .. | கபிலர்மலை |
| 180. | மல்லிகா சின்னசாமி, திருமதி .. | முசிறி |
| 181. | மாணிக்கராஜ், திரு. எஸ். .. | நாங்குநேரி |



| | | |
|---|---|---|
| 182. | மில்லர், திரு. அ. .. | கடலூர் |
| 183. | முரளிதரன், திரு. கே.வி. .. | தளி |
| 184. | முருகவேல் ராஜன், திரு. க. .. | வந்தவாசி (செ.வ.) |
| 185. | முருகேசன், திரு. ஆகு. .. | ஆத்தூர் |
| 186. | முனுசாமி, திரு. கா.பூ. .. | காவேரிப்பட்டினம் |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். .. | பாளையங்கோட்டை |
| 188. | மோகன், திரு. ப. .. | சின்னசேலம் |
| 189. | யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. | ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம் |
| 191. | ரங்கராஜன், திரு. என்.ஆர். .. | பட்டுக்கோட்டை |
| 192. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 193. | ராதாகிருஷ்ணன், திரு. எம். .. | திருமயம் |
| 194. | ராதாரவி, திரு. .. | சைதாப்பேட்டை |
| 195. | ராமசாமி, திரு பி.சி. .. | மொடக்குறிச்சி |
| 196. | ராமராஜ், திரு. ச. .. | போடிநாயக்கனூர் |
| 197. | ராம்குமார், திரு. எம். .. | பாபநாசம் |
| 198. | ராஜகோபால், திரு. ஆ. .. | சிவகாசி |
| 199. | ராஜம்மாள், திருமதி எஸ். .. | தூத்துக்குடி |
| 200. | ராஜா, திரு. எச். .. | காரைக்குடி |
| 201. | ராஜாங்கம், திரு. வி.ஆர். .. | சோழவந்தான் |
| 202. | ராஜு, திரு. எச்.எம். .. | உதகமண்டலம் |
| 203. | ரெங்கநாதன், திரு. என். .. | பூம்புகார் |
| 204. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. | பேரூர் |

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. விஸ்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி



228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 15, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 ஜூலை 30, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 81, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**81—**

### தூர் வாருதல்

***948—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, புள்ளம்பாடி கால்வாய் தூர்வாரும் பணி நடைபெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2004 ஜூலை 30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே பணி எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 40 ஆண்டு காலமாக புள்ளம்பாடி கால்வாய் தூர்வாரப்பட வேண்டுமென்ற விவசாயிகளினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றி, விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புள்ளம்பாடி கால்வாயில், புள்ளம்பாடி அருகில், கூடலூர் என்கின்ற கிராமத்தினுடைய அருகிலே, மானோடை மற்றும் நந்தையாறுகளில் செல்லக்கூடிய வெள்ள நீர் வீணாகச் சென்று கொள்ளிடத்திலே கலக்கின்றது. இந்தத் தண்ணீர் விவசாயத்திற்கு எந்தப் பலனும் இல்லாமல் வீணாகச் செல்கிறது. இந்தத் தண்ணீரைப் புள்ளம்பாடி கால்வாயில் பாசனத்திற்குப் பயன்படக்கூடிய வகையிலே திருப்ப ஏற்பாடுகள் செய்தால், கிட்டத்தட்ட 30,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புள்ளம்பாடி வாய்க்காலின் மொத்த நீளம் 52 மைல்கள், 2 பர்லாங் ஆகும். இவ்வாய்க்காலில் செல்லக்கூடிய நீரின் அளவு, வினாடிக்கு 978 கன அடியாகும். இவ்வாய்க்கால், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 72,114 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது. இவ்வாய்க்காலின் 26-வது மைலில் கூடலூர் என்னும் கிராமத்தில் மழை நீர் சுமார் 581 கன அடியில் ஒரு பகுதி, வாய்க்காலில் கலக்கிறது. மீதி மழை நீர், வாய்க்காலின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்க் கடத்தி வழியாக, மானோடையை அடைந்து இறுதியாக கொள்ளிடம் ஆற்றைச் சென்று அடைகிறது. இந்த முழு மழை நீரையும், ஏற்கெனவே புள்ளம்பாடி வாய்க்காலில் வரும் மழை நீருடன் சேர்த்துத் திருப்பிவிட்டால், வாய்க்காலின் கொள்ளளவு போதாது. எனவே, இவ்வாய்க்காலில் ஏற்கெனவே உள்ள கட்டுமான அமைப்புகள்



2004 ஜூலை 30]

போதுமானதாக இல்லை. எனவே, முழு அளவு மழை நீரையும் புள்ளம்பாடி வாய்க்காலிலே திருப்பிவிட தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்கள், ஏரிகள் தூர்வாருகின்ற பணி சென்ற ஆண்டிலே, வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நடைபெற்றது. உணவுக்கு வேலை என்கின்ற அடிப்படையில், 25 சதவீதம் பணமாகவும், 75 சதவீதம் அரிசியாகவும் வழங்குவது என்றவகையில், பொதுப் பணித் துறையின்மூலம் தமிழ்நாடு முழுமையும் பல்வேறு குளங்களும், ஏரிகளும், வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டன. ஆனால் அதற்குரிய அரிசி, இன்னும் வழங்கப்படவில்லை என்கின்ற நிலை இருப்பதை அரசு அறியுமா? அதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக வேலைக்கு உணவு என்ற திட்டத்தினை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, கிராமங்களில் இருக்கின்ற வேலை இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும்பொருட்டு, அங்கே இருக்கின்ற குளங்கள், ஏரிகள், வரத்து வாய்க்கால்கள் தூர்வாரப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில், அரசினுடைய கவனத்திற்கு, கணக்கிற்கு இன்னும் முழு அளவினுடைய, வேலையினுடைய பணி வந்து சேரவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் கோட்டாட்சியரினுடைய தலைமையில், அந்தப் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அரசுக்கு முழுமையாக வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு உரிய உணவோ, அரிசியோ, பணமோ வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 82, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

82—

## வாய்க்கால் செப்பனிடுதல்

***27476–திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதியிலுள்ள திருத்தலையூரில் அமைந்துள்ள ஏரியைத் தூர் எடுத்து வாய்க்கால் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிதி நிலைமைக்கு ஏற்ப, பணி வருங்காலங்களில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதியில் அமைந்துள்ள திருத்தலையூர் ஏரியில் தேங்கும் பாசன நீர் மூலமாக சுமார் 1,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. இதனால், அதைச் சுற்றியுள்ள 25, 30 கிராமங்கள் பயனடைகின்றன. அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, பாசன நீர் வீணாகாமல் செல்ல வாய்க்கால்களைச் செப்பனிட்டு, ஆண்டு முழுவதும் பாசன நீர் தேங்கி நிற்கும் அளவிற்கு அரசு ஆவன செய்யுமா என்று பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருத்தலையூர் கிராமத்தில் திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரி என இரண்டு ஏரிகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு ஏரிகளும் பொதுப் பணித் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ளன. இதன் பாசனப் பரப்பு முறையே, 421.55 ஏக்கர் மற்றும் 228.80 ஏக்கராகும். திருத்தலையூர் ஏரியின் கரை பலப்படுத்துதல் மற்றும் வரத்து வாய்க்கால் செப்பனிடுதல் ஆகிய பணிகள், 2003–2004 ஆம் ஆண்டில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், ரூ.12 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன. திருத்தலையூர் ஏரியின் வரத்து வாய்க்கால் பணியின் முதற் பகுதி 2001–2002 ஆம் ஆண்டில் உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், ரூ.4 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. திருத்தலையூர் சின்ன ஏரியின் கரை மற்றும் வரத்து வாய்க்கால் 2002–2003 ஆம் ஆண்டில் B, C, D வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் ரூ.3.42 இலட்சத்தில் பலப்படுத்தப்பட்டுள்ளன. சின்ன ஏரியின் பழுதடைந்த மதகு, இந்த ஆண்டு 2004–2005 சிறப்பு மராமத்துப் பணியில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, திருகுப் பலகை பொருத்தப்பட உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயம், ஏரிகளை நம்பியே இருக்கிறது. ஏரிகளுக்குத் தண்ணீர் வருவதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும். அதற்கு மாநில அளவிலேயே ஒரு mass project, ஒரு mass plan, போட்டு இதுபோன்ற வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருவதன் காரணமாகவும், கர்நாடக அரசு நமக்குத் தரவேண்டிய நீரைத் தராத சூழ்நிலையாலும், கிடைக்கின்ற மழை நீரை, இருக்கின்ற ஏரி, குளங்களில் நிரப்பிக் கொள்வதற்கும், அது போதவில்லையென்றால் புதிதாக ஏரி, குளங்கள் அமைப்பதற்கும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், தமிழகத்தின் முன்னோடித் திட்டமாக இராமநாதபுரத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் அத்தனையையும் செப்பனிடுவதற்குத் திட்டமிட்டு, அந்தப் பணி முதற்கட்டமாக 24 கோடி ரூபாயில் எடுக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன், இரண்டாம் கட்டமாக இராமநாதபுரத்தில் இருக்கின்ற அத்தனை ஏரி, குளங்களையும் செப்பனிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும், தூர்வாருவதற்கும் நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றைத் தூர்வாருவதற்கும், செப்பனிடுவதற்கும் ஓர் ஆய்வு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 83, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**83—**

## கோதுமை வழங்குதல்

***6404—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கோதுமை எத்தனை டன்?*

*(ஆ) குடும்ப அட்டைதாரர்களுக்குக் கோதுமை என்ன விலைக்கு விற்கப்படுகிறது?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொது விநியோகத் திட்டத்திற்காக, மத்திய தொகுப்பிலிருந்து இம்மாநிலத்திற்கு 1-7-2002 முதல் மாதந்தோறும் 10,000 டன்கள் கோதுமை, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான விலையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. தற்போதைய நிலையில், மாத நுகர்வின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்திற்காக 5,000 டன்கள் வரையில் கோதுமை எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

(ஆ) நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ கோதுமை 7 ரூபாய், 50 பைசா என்ற விலையில் 24-7-2002 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.





முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 84, திரு. எ.வ. வேலு. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**84—**

## ஒருங்கிணைந்த நீதிமன்றம்

***11755—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலையில் மாவட்ட அலுவலகக் கட்டடத்தின் பக்கத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்புகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி பொற்பாதக் கமலங்களுக்கு எனது வணக்கத்தைக் கூறி, குடியாத்தம் நகரில் துணை நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், நீதித் துறை நடுவர் மன்றம் ஆகியவை வெவ்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் வழக்குரைஞர்களுக்கு வாதிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. பொது மக்களுக்கும் அலைச்சல் ஏற்படுகிறது. ஆகையினால், குடியாத்தம் நகரில், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்ட, இடம் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை கட்டப்படவில்லை. இந்தக் கட்டடத்தைக் கட்டித் தர, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசியத்தின் தன்மையை அரசு உணர்ந்திருக்கிறது. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, அவர் குறிப்பிட்ட அந்த இடத்திலே கட்ட வேண்டுமென்றாலுங்கூட, நிதிச் சுமை இருக்கின்ற சூழ்நிலையில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பொதுவாக மத்திய அரசு 50 சதவிகிதம் நிதி உதவி அளிக்கிறது. எனவே, நம்முடைய மாமன்றத்தில் நான் தெரிவித்ததுபோல, 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் கட்டவும், ஆரணியில் 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டவுமான இவை உள்ளிட்ட மொத்தம் 74 செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. 140 கோடியில் அவர்கள் 70 கோடி கொடுத்தாலுங்கூட, நாம் 70 கோடி ரூபாயை நம்முடைய Matching Grant - ஆகப் போட்டு, இந்தத் திட்டத்தை ஒரு வருடத்திலேயே, அனைத்து ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களையும், நல்ல அழகிய கட்டடங்களாக உருவாக்குவதற்கு வழிவகை பிறக்கும்; மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறும் என்று தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன். சட்டக் கல்லூரி வாங்காமல் விடமாட்டார்போல் இருக்கிறது.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில், வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்ட குதிரை லாயத்திலே நீதிமன்றம் செயல்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே, ஏற்கெனவே அதைப்பற்றிக் கடிதமாகக்கூட கொடுத்திருக்கிறேன். ஆரணி தொகுதியில், நீண்டகாலமாக இடிந்துபோகின்ற நிலையில் இருக்கிறது நீதிமன்றம். அதை ஒருங்கிணைந்த நீதிமன்றமாகக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே கவனித்திருப்பார் என்று நினைக்கிறேன்; என்னுடைய பதிலிலே நான்



தெளிவாகக் குறிப்பிட்டேன். 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசாங்கத்திற்கு 74 செயற்குறிப்புகள் மாநில அரசுமூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த 74 செயற்குறிப்புகளில், ஆரணி பற்றியும் ஒரு செயற்குறிப்பு உள்ளது. எனவே, விரைந்து மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதி, ரூ.70 கோடி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெற்றவுடன், முதல் பணியாக நம்முடைய ஆரணி கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவில் ஆரணிக்கு நீதிமன்றம் கட்டித் தரப்படும் என்று சொன்னதற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 85, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**85—**

### துணை மின் நிலையம்

***41283—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதியில், தணிகை போளூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் தொகுதி, தணிகை போளூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க, அவசியம் இருந்தால் நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 30

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி,

"தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்."

என்ற குறளுக்கு ஏற்ப தவசியாய், தவமணியாய், தன்னுடைய உயிர் இந்த நாட்டினுடைய ஏழையெளிய பாமர மக்களுக்குத்தான் என்று எல்லாவற்றையும் துறந்து, தவக்கோலத்தில் காட்சித் தந்து, கடமை தவறாது, கண்ணியம் நிறைந்து, கடையேழு வள்ளல்களில் முதல் வள்ளலாக விளங்கும் எங்களின் தாயே. அரக்கோணம் தொகுதி, தணிகை போளூர் ஊராட்சியில் சுமார் 20 கிராமங்கள் உள்ளன. நெசவாளர்கள், விவசாயிகள் அதிகம் உள்ளனர். மேலும், குறைந்த மின் அழுத்தத்தால் குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, ஏழைகளின் துயரைத் துடைக்கும் அரசாக உள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, தணிகை போளூர் ஊராட்சிக்கு அவசியமாக ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து, தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக சீரான மின்சார வசதியை அனைவரும் பெறவேண்டும் என்கின்ற அந்த உயர்ந்த நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி நிதிச்சுமையைப்பற்றிப் பார்க்காமல், மின்சார வாரியம் பல்வேறு சிரமங்களுக்கிடையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தாலும்கூட, வளர்ச்சிப் பணிகளை முழுமையான அளவிற்கு — development activities-லே ஆர்வம் காட்டவேண்டும் — எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான், பல்வேறு இடங்களில் transformers, pillar boxes வைப்பது, cable replace பண்ணுவது, துணை மின் நிலையங்கள் அமைப்பது போன்ற நடவடிக்கைகள், வேகமாக அம்மாவின் அரசால் எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, கிட்டத்தட்ட 1,051 துணை மின் நிலையங்கள், தமிழ்நாட்டிலே சீரான மின்சாரம் வழங்குவதற்காக இயங்கி வருகின்றன. Accelerated Power Development Reforms Programme மூலமாக, 600 கோடி ரூபாய் நிதியைப் பெற்று



2004 ஜூலை 30]

தமிழ்நாடு முழுவதும், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதிலே, சென்னைக்கு மட்டும் 200 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் திட்டத்தின்மூலம், சீரான மின்சாரம் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டிலே இதுவரை இல்லாத அளவிற்கு, low voltage pockets—குறைந்த மின் அழுத்தப் பகுதிகள்—தமிழ்நாட்டிலே இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையில், எப்படி ஒரு காலத்தில் small pox என்று சொல்லக்கூடிய பெரியம்மையை அரசாங்கம் ஒழித்ததோ அதேபோன்று, வளர்ந்துவிட்ட இந்த விஞ்ஞான உலகச் சூழ்நிலையில் குறைந்த மின் அழுத்தம் எந்தக் காலத்திலும் இருக்கக் கூடாது என்கின்ற நிலையை அடைய வேண்டுமென்பதற்காக—மொத்தம் எவ்வளவுதான் low voltage pockets இருக்கிறது என்பதை இதுவரையில் யாரும் ஆய்வு செய்யவில்லை—மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையின்படி அந்த pockets-களை எல்லாம் identify பண்ணி இருக்கிறோம். 71 இடங்களில் அதுபோன்று இருக்கின்றது. அந்த இடங்களையெல்லாம் இப்பொழுது கண்டறிந்து, அங்கே low voltage இல்லாத அளவிற்கு, fluctuations இல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தக் கேள்வியை அவர்கள் போட்ட உடனேயே, அந்த இடத்தில் சீரான மின்சாரம் கிடைப்பதற்காக நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, மின்சார வாரியத்தின் மூலமாக 68 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவில் 8 MVA மின் மாற்றியாக, திறனை உயர்த்தி இருக்கின்றோம். இதிலே இன்னொன்று என்னவென்றால், அங்கே நாம் அதிகமான அளவிற்கு supply செய்யவேண்டுமென்றால், demand இருக்க வேண்டும். Demand இருக்கிற சூழ்நிலையில்தான், நாம் supply-யை அதிகப்படுத்த முடியும். எனவே அப்படி இருக்கின்ற நிலையில் நாம் Sub Station- ஐக்கூட, தேவையில்லாத இடத்தில் போட்டால், high voltage கூட problem ஆக வந்து, இருக்கின்ற bulb எல்லாம் fuse ஆகின்ற ஒரு நிலைமை வரும். எனவே, இது technical problem என்கின்ற ஒரு சூழ்நிலையிலே முழுமையான அளவிற்கு ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபடி., நிச்சயமாக, தேவைப்படின் அந்த இடத்திலே Sub-Station-ஐ நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

[2004 ஜூலை 30

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்தில் 110 K.V. மின் அழுத்த நிலையம் அமைக்க, இடங்களெல்லாம் தனியார் மூலமாக survey செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணிக்கு 7 கோடியே 11 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு இருப்பதாக அறிகிறேன். அந்தப் பணிகள் எப்பொழுது துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது விளாத்திகுளம் துணை மின் நிலையத்தைப் பற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவசியம் இருந்தால், வருங்காலத்தில் நிச்சயமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகம்தான் மின்வெட்டே இல்லாத மாநிலமாக இருக்கிறது. அந்த அளவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்கள். மேலும், விவசாயிகளாக இருந்தாலும் சரி, குடிசையிலே வாழ்கிற சாதாரணத் தொழிலாளியாக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பல்வேறுபட்ட சலுகைகளை, மின்சாரத் துறையிலே, நம்முடைய அரசு வழங்கி வருகிறது. அதைப்போல, தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். தமிழகத்திலே, இந்த ஆண்டு எந்தெந்த மாவட்டங்களில், எத்தனைத் துணை மின் நிலையங்கள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புவதோடு, அதை அடிப்படையாக வைத்து, என்னுடைய தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியிலுள்ள பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலேயுள்ள காளிப்பேட்டையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று அங்கேயிருந்து ஒரு கருத்துரு இங்கே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வந்திருக்கிறது. அதற்கான நிலம்கூட, கடந்த இரண்டு வருடங்களாக அங்கே போராடி, மக்களுடன் கலந்து பேசி கையகப்படுத்தப்பட்டு, இங்கே நம்முடைய துறைக்கு அந்தக் கோப்புகள் வந்திருக்கின்றன.



2004 ஜூலை 30]

முற்பகல் 10-20

என்னுடைய தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காளிப்பேட்டை பகுதியில் — இரண்டாவது பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அந்தப் பகுதி — பல்வேறுபட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே, low voltage current வருகிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுகிறவகையில், அந்தக் காளிப்பேட்டை பகுதியில் புதிய துணை மின்சார நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கொண்டுவர நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு, முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், 60 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டிலே, 60 துணை மின் நிலையங்கள், இந்த ஆண்டு அமைக்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செயற்குறிப்பு பெறப்பட்டு, மின் வாரியத்தினுடைய பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையாகவே அந்த இடத்திலே, அவர் குறிப்பிட்டதைப்போலவே அவசியம் இருப்பின், இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 86, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

## மண்டபத்தைப் புதுப்பித்தல்

***19954—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை முருகன் சன்னிதானத்தின் பழைய மண்டபத்தை அரசு புதுப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணி வேலைகளுக்குத் திருப்பணிக் குழு அமைத்து, நிதி வசூல் செய்து, பெரிய அளவில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளன. அப்போது, மேற்படி பழைய கல்மண்டபத்தினை அப்புறப்படுத்தி, புதிதாகப் பெரிய அளவில் மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி, அவர் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய தொகுதியான காங்கேயத்திற்கு, 32 ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் வாரி வழங்கிய மனித நேயம் மிக்க, மாசற்ற தெய்வம், தாயின் திருவடிகளுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோயிலாகும். இம்மலைக் கோயிலின் படிக்கட்டிலே, 12-2-1984 அன்று, இரட்டை மாட்டு வண்டி மேலே ஏறி, சாதனை நிகழ்த்தப்பட்டது. அத்தகைய சக்தி வாய்ந்தது இத்திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் அடிவாரத்திலிருந்து மலைக்குச் செல்லும் தார்ச் சாலையின் ஓரத்தில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்கு, ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் இன்னும் முடிவுறாமல் இருக்கின்றன. காரணம், வனத் துறையிலிருந்து, இன்னும் ஓர் அனுமதி கிடைக்கப் பெறாமல், காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைந்து அந்த அனுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். முன்புறம் அமைந்துள்ள கல்மண்டபத்தை அகற்றி, புதிதாகப் பெரிய அளவில் மண்டபம் கட்டுவதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன். இத்திருக்கோயிலின் உப கோயிலான கைலாசநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணிகள் பாதியிலேயே நிற்கின்றன; காரணம், பண வசதி போதவில்லை. சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய



சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.90 இலட்சம் நிதி உள்ளது; அந்த நிதியிலிருந்து சிறிதளவு நிதியை ஒதுக்கிக் கொடுத்து, திருப்பணிகளை விரைந்து முடித்து, கும்பாபிஷேகம் நடத்திட, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் பேரவைத் துணைத் தலைவரின்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைக் கோயிலுக்குச் செல்கின்ற பாதைக்குச் சுற்றுச் சுவர் அமைக்க, தற்சமயம் அறநிலையத் துறையின்மூலமாக, டெண்டர் விடப்பட்டு, வனத் துறை அலுவலரினுடைய அனுமதியை உடனடியாகப் பெற்று, அந்தப் பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்கு — அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு — தற்போது திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கு, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு கல்மண்டபத்தை அகற்றுவதற்கும், புதிதாக மண்டபம் கட்டவும் மற்றும் அங்கே கதவுகள் போடவுமான திருப்பணிகள் செய்வதற்காக, ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்தினுடைய நிதியிலேயிருந்தும், பொது மக்களுடைய நன்கொடையிலேயிருந்தும், கூடிய விரைவில் 50 இலட்சம் ரூபாய் அளவில், திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 87, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**87—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***35771–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 88, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***45270–திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, பொன்பரப்பி ஊராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், பொன்பரப்பி கிராமத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக, சுகாதாரத் துறையிலே, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய நல்லாட்சியிலே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், குறிப்பாக, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப



சுகாதார நிலையங்களிலே, முழுவதுமாகப் பெண் மருத்துவர்களையே நியமனம் செய்ய, அரசு ஆவன செய்யுமா? அப்படிப் பெண் மருத்துவர்களை முழுமையாக அந்த கிராமப்புறங்களில் நியமனம் செய்கின்றபோது, அவர்களுக்கென்று அங்கே தங்குகின்ற Quarters கட்டித் தரவேண்டும். அதுமட்டுமல்லாமல், Labour ward என்று சொல்லக்கூடிய பிரசவ அறை இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அந்தப் பிரசவ அறையையும் கட்டிக் கொடுக்கின்றபோது, கிராமப்புறங்களில், எல்லா இடங்களிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணுகின்ற முழுமையான மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே, பெண் மருத்துவர்களை, முழுமையாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழகத்தின் முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தரம் உயர்த்தப்பட்ட 93 அரசு மருத்துவமனைகளிலும், ஒரு பெண் மருத்துவரை நியமிக்க உத்தரவிட்டு, அதற்கான நேர்முகத் தேர்வும் முடிவு பெற்று இருக்கிறது. தமிழகத்திலே மட்டும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இதிலே தற்சமயம் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளனர். மருத்துவர்களுக்கான இட வசதியும் வேண்டுமென்று உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார். தற்சமயம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், Taluk, Non–Taluk மற்றும் மாவட்டத்தினுடைய அத்தனை மருத்துவமனைகளையும் மேம்படுத்த வேண்டும் என்பதற்காக உலக வங்கியை நாடி, அதற்கான வேலைகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. கூடிய விரைவிலே, நிதி கிடைத்தவுடனே, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 89, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**89—**

**மாணவர் விடுதி**

***7534–திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, எஸ். புதூர் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருப்பத்தூர் தொகுதி, வி. புதூரில் இயங்கிவரும் மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்ட 23-3-2002 அன்று ஆணையிடப்பட்டு, 2-8-2003 அன்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, புதிய கட்டடத்தில் தற்போது விடுதி செயல்பட்டு வருகிறது. எஸ். புதூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஏதும் வாடகைக் கட்டடத்தில் செயல்படவில்லை.

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் சம்பந்தி என்று சொல்லிக் கொண்டு, 5 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்திய கருணாநிதி ஆட்சிக் காலத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக எதையும் செய்யாத கருணாநிதி ஆட்சிக் காலத்தில், முடிந்துபோன அந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதைப்போல, புரட்சித் தலைவியினுடைய புனிதமான ஆட்சியில், 3 ஆண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 350–க்கு மேற்பட்ட அரசினர் விடுதிகளைக் கட்டிக் கொடுத்து, இந்த ஆண்டு 100 விடுதிகளைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் எனது தொகுதியில் எஸ். புதூரில் அரசினர் விடுதி கட்டிக் கொடுத்த அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும் எனது தொகுதி மக்களின் சார்பிலும் கோடானு கோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



2004 ஜூலை 30]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, இந்தச் சட்டமன்றத்திற்கு வராத சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள், தேர்தல் நேரத்தில்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைத் தனது சம்பந்தி என்று சொல்வார்; தேர்தல் முடிந்தவுடனே, அதற்கு அப்புறம் அவர் தனது குடும்ப மக்களைப்பற்றித்தான் ஒரே சிந்தனையில் இருப்பார். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் இயங்கி வருகின்ற 1,102 மாணவ மாணவியர் விடுதிகள் அனைத்தும், சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் கழித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், சொந்தக் கட்டடமாக மாற்றப்பட்டுள்ளன. அந்தப் பெருமை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாடு முதல் மாநிலம் என்ற இலட்சியத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும் என்பதை இந்த அவையின்மூலம் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகாலிங்கம்

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதி ஆண்டில், ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகப் புதிதாக மாணவர் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற விடுதிகளில், 100 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 90, திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 30

**90—**

## பேருந்து வசதி

***15425—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மேல் பகுதியிலுள்ள சிறுகுன்றம் பகுதிக்குப் பேருந்து வசதி குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிக பேருந்து வசதி செய்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்கு மேல் பகுதியிலுள்ள சிறுகுன்றம் பகுதிக்கு கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பயணிகளின் அடர்விற்கேற்ப இரு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். இங்கே போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் சற்று இலாபத்திலே இயங்குகின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படி இயங்குகிறபோது, ஒவ்வோர் ஆண்டும் பழுதுபட்டிருக்கிற பேருந்துகளைப் புதுப்பிக்கின்ற நிலையில், இந்த ஆண்டு அப்படிப் புதுப்பிப்பதற்காக எத்தனை புதிய பேருந்துகள் வாங்கப்பட இருக்கின்றன? அப்படி வாங்குகிற நிலையில் எங்களது மதுரை மாவட்டத்தைப் பொறுத்தளவிலே பேருந்துகள் எல்லாம் மிகுந்த பழமையானதாக இருக்கிற காரணத்தால், அதற்குச் சற்றுக் கூடுதலான பேருந்துகள் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



2004 ஜூலை 30]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு நடத்துகின்ற போக்குவரத்துக் கழகங்கள்மூலமாகத் தரமான, பயணிகளுக்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அவர்கள் உத்தரவிட்டதோடு நின்றுவிடாமல், பழுதடைந்த பேருந்துகளைப் பழுது நீக்குவதற்காக, சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.30 கோடியை தாய் உள்ளத்தோடு இந்தத் துறைக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். அதனுடைய அடிப்படையில், நமது போக்குவரத்துத் துறையில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் பழுது பார்க்கப்பட வேண்டியவை என்று கண்டறியப்பட்ட பேருந்துகள் 5,316. இந்த 5,316 பேருந்துகளும் இந்த 30 கோடி ரூபாய் செலவிலே முழுமையாகப் பழுது நீக்கப்பட்டு, இப்போது நல்லமுறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், புதிய பேருந்துகள் வாங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நேற்று நடந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 1325 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே, இப்போது புதிய பேருந்துகளை வாங்குகின்ற பணி தொடர இருக்கிறது. அப்படி வாங்குகிறபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மதுரை மாவட்டத்திற்கும் — மதுரை மண்டல அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு — 250 புதிய பேருந்துகளை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல. வேறு யாராவது கேட்கக்கூடும்; எங்களுடைய பகுதிக்கு எவ்வளவு என்று கேட்பதற்கு முன்பாகவே, எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எவ்வளவு புதிய பேருந்துகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன என்ற செய்தியைச் சொல்லிவிட விரும்புகிறேன். இன்றைக்கு, இந்த 1,325 பேருந்துகளில், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150 புதிய பேருந்துகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 75 பேருந்துகளும் — அதிலே 10 பேருந்துகள் Hi-tech வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள். ஆக அந்த 75 சொகுசுப் பேருந்துகளில் 10-ஐயும் சேர்த்து — வாங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதோடு

[2004 ஜூலை 30

மட்டுமல்ல, விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150; கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 200; கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250. ஆக 1,325 பேருந்துகள் வாங்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**91—**

## பேருந்து வசதி

***18009–செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பகுதியில் பழுதடைந்த நிலையில் ஓடும் அரசுப் பேருந்துகளை மாற்றி, நல்ல நிலையில் உள்ள புதிய பேருந்துகளை இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பேரணாம்பட்டு பணிமனையிலிருந்து இயக்கப்படும் எந்தப் பேருந்தும் பழுதடைந்த நிலையிலோ, வயது முதிர்ந்த நிலையிலோ இல்லை. ஆறு மாதத்திற்கு ஒரு முறை அனைத்துப் பேருந்துகளும் புதுப்பிக்கப்பட்டு, தகுதி மற்றும் சாலைத் தகுதிச் சான்று போக்குவரத்து ஆய்வாளரிடம் பெறப்பட்டு, நல்ல நிலையில் தடத்தில் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



2004 ஜூலை 30]

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையின் உலகத்தின் அமுத சுரபியே, அருள் ஆட்சி வழங்கும் அன்னையே, அன்பு நதி தீரமே, நீவிர் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்கி, குடியாத்தம்–பெங்களூர் சாலை, காஞ்சிபுரம்–பெங்களூர் சாலை போன்ற பேருந்துச் சாலைகள் மிக மோசமான நிலையில் உள்ளதால், அச்சாலைகளில் செல்கின்ற பேருந்துகள் அடிக்கடி நின்று விடுகின்றன. இந்தச் சாலைகள் சீர் செய்யப்பட்டு, புதிய பேருந்துகள் இயக்கப்பட்டால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். எனவே, குடியாத்தம்–பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண் 444 ஜி பேருந்துகளும், காஞ்சிபுரம்–பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண் 666 பேருந்துகளும் புதிய பேருந்துகளாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய நான் விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பு சொன்ன பதிலிலே இதற்குரிய விடையும் அடங்கி இருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி புதியதாக வாங்கப்பட இருக்கின்ற, 1,325 பேருந்துகளில், 250 பேருந்துகள் விழுப்புரம் போக்குவரத்துக் கோட்டத்திற்கு வழங்கப்பட இருக்கின்றன. விழுப்புரம் கோட்டத்திலே உள்ளடங்கிய பேரணாம்பட்டு தொகுதிக்கும் அதிலே, தேவைக்கேற்ப நிச்சயமாகப் புதிய பேருந்துகள் வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கி வந்த போக்குவரத்துத் துறையை, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது சீரிய முயற்சியினாலே, இலாபத்தில் இயங்கக்கூடிய நல்லதொரு நிறுவனமாக மாற்றி இருக்கிறார்கள். தனியார் பேருந்துகளில் பயணிகளைக் கவர்வதற்காக பல்வேறு வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக Hi–tech bus–கள் மட்டும் அல்லாமல், நவீன தொலைக்காட்சிகளும், வீடியோ வசதிகளும், ரேடியோ வசதிகளும், சில தனியார் பேருந்துகளிலே செல் ஃபோனிலே பேசுகின்ற அந்த வசதிகளைக்கூட இப்போது உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல, பயணிகளைக் கவர்வதற்கு — இலாபத்தை இன்னும் அதிகமாக்குவதற்காகப் பயணிகளைக் கவர்கின்ற நோக்கிலே —

கட்டணங்களைக் கொடுத்துவிட்டு, செல் ஃபோன் பேசுகின்ற வசதிகளும் மற்றும் தொலைக்காட்சி, ரேடியோ வசதிகளும் எல்லா அரசுப் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் தொலைக்காட்சி மற்றும் படக்காட்சி வசதிகளோடு, ஒலிநாடா மூலம் இசைப் பாட்டுகள் எல்லாம் ஒலி பரப்பப்படுகின்றன. அதேபோன்று. இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் தனியார் பேருந்துகளுக்கு இணையாக, அந்த அளவுக்கு, தொலைக்காட்சிகள் எல்லாம் ஆங்காங்கு — புதிய பேருந்துகளில், தேவையான பேருந்துகளில் தேவையான அளவுக்கு வீடியோ படக் காட்சிகள் — காண்பிக்கப்படுகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வசதியான செல் ஃபோன் வசதியும் செய்யப்படுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். இதைப் பொறுத்து. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அறந்தாங்கியிலே இருந்து போபால் நகருக்கு எப்போது பேருந்து விட இருக்கிறார் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு தூரம் போனால் உடம்புக்குத் தாங்காது! *(சிரிப்பு)*

வினா எண் 92, திரு. டி. மணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**92—**

## ரப்பர் பூங்கா

***6073—திரு. டி. மணி:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் ரப்பர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா?*

*(ஆ) இப்பணி எப்போது நிறைவேறும்?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் ரப்பர் பூங்கா அமைப்பதற்கு, கூட்டு முயற்சியில் செயல்படுத்த, திருவாளர்கள் அக்ஸா டெக்னாலஜீஸ் என்ற நிறுவனம் டிட்கோ நிறுவனத்தின் சகதொழில் முனைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 8-9-2003 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் என்ற கூட்டு முயற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலத்தைப் பெற, அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், கட்டுமானப் பணிகளுக்கான ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, கட்டுமானப் பணிகள் போன்றவை 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2 ஆண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, ரப்பர் பூங்கா அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசு தீர்மானித்திருக்கிறது, அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு, அரசு வழங்குகிற மானியம் எவ்வளவு, எப்போது இந்தப் பணி முடிவடையும் என்கிற தகவல்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2004 ஜூலை 30

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகராமன்புதூர் கிராமத்தில் கிட்டத்தட்ட 135 ஏக்கர் நிலப் பரப்பளவில் மொத்த மதிப்பீடு ரூ. 14.52 கோடி செலவில் அமைக்கப்படும் இத்திட்டத்திற்கு ரப்பர் வாரியத்தின்மூலமாக, அரசு மானியமாக 3.55 கோடி ரூபாய் மானியம் அளிக்க, இந்திய அரசின் தொழில் வணிகத் துறையும் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தை 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு - செப்டம்பர் திங்களில் தொடங்கி, 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் கண்டிப்பாக முடிப்பதற்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**93—**

## தொழில் வளர்ச்சி

***7506—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாக ஆக்க, தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்துக் கலந்தாலோசிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் துறை வளர்ச்சியில், முன்னோடி மாநிலமாக ஆக்க இந்த அரசு தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்து அவ்வப்போது ஆலோசித்து நல்ல முடிவுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவ்வரசு இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் இந்திய வணிகம் மற்றும் தொழில் கழகங்களினுடைய கூட்டமைப்பு போன்ற அமைப்புகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கிறது. மேலும், இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட அம்மாவினுடைய அரசு, தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு செயற்குழுவை அமைத்துச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 30]

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சியில், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாக ஆக்கிக் காட்டுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிற அன்னையின் அரசு இது. இன்றைக்குப் படிப்பை முடித்துவிட்டு, வேலையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவ, மாணவியருக்கு வேறு ஏதாவது புதிய தொழில் தொடங்கி, அதன்மூலம் மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான புதிய திட்டம் நமது அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு புதிய தொழில்களுக்கான முயற்சிகளை எடுத்து, புதிய தொழிலதிபர்களை அழைத்துத் தொழில்களைத் தொடங்குவதில் மீண்டும் ஒரு உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்தப் பொருட்கள் விளைகின்றனவோ, அந்தந்தப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்களை ஆரம்பித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்ற பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. அது மட்டுமல்ல, புதிய தொழில்களுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதற்கென்றே தொழில் வழிகாட்டுதல்மூலம் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றை அமைத்து அரசு செயல்பட்டு வருகிறது. இன்னும் தொழில் வழிகாட்டுதல்மூலம் — பல தொழிலதிபர்களை நமது நாட்டிற்கு அழைத்துப் பேசும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிறையப் பேர் வரவிருக்கின்றார்கள். அதனுடைய அடிப்படையில் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்தத் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதைக் கருத்திற்கொண்டு நிச்சயமாகப் புதிய தொழில்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்து, சுயமாக புதியதாகத் தொழில் துவங்க இருக்கின்ற இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்றவிதமாக, புதிய துறைகளில் என்னென்ன தொழில்களைச் செய்யலாம்; அதற்குரிய இயந்திரங்களை எவ்வாறு பெறுவது; அந்தத் தொழிற்சாலைகளை எவ்வாறு நிறுவுவது; அதற்கு எப்படிக் கடன் வசதி பெறுவது என்பதுபோன்ற பல்வேறு

[2004 ஜூலை 30

ஆலோசனைகளைப் பெறுகின்றவிதமாக இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்றமுகமாக, தொழில் வளர்ச்சி மன்றம் கருத்தரங்கங்களை மாவட்ட அளவிலே நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்கெனவே நமது மதிப்பிற்குரிய, மாண்புமிகு அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்கள், மாவட்டந்தோறும் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த ஏற்பாட்டின் விளைவாக, பல்வேறு தொழில்களுக்கு, சிறுதொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலமாகத் தொழில் தொடங்கப்பட, ஏற்கெனவே பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் மாவட்டந்தோறும் இதுபோன்ற முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்வோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

94—

### சுங்க வரி

***17741—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய அளவில் தங்க நகைகளை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்குச் சுங்க வரி விதிக்க, மைய அரசுக்குப் பரிந்துரைக்க, மாநில அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்க நகைகள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்கு சுங்க வரிகள் விதித்தல் தொடர்பாக மைய அரசுக்குப் பரிந்துரைக்க தற்சமயம் வாய்ப்பில்லை என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



2004 ஜூலை 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

95—

### வனவிலங்கு சரணாலயம்

***6967—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில், வனவிலங்கு சரணாலயம் அமைப்பதற்கு அரசு தேவையான திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துக்குளிவயலில் விலங்குகள் சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் காப்புக் காடுகளை உள்ளடக்கிய பகுதிகளை, கன்னியாகுமரி வன உயிரின சரணாலயமாக்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், 16–07–2002–ல் Notification வெளியிடப்பட்டுள்ளது. Final notification வெளியிடுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துக்குளிவயல் பகுதியும் இவ்வறிவிக்கையில் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

96—

### வனவிலங்குப் பகுதி

***36541—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 30

தமிழகத்தில் வனவிலங்குப் பகுதியென மத்திய அரசால் தடை விதிக்கப்படாத வனப் பகுதிகளை, மலைவாழ் மக்கள் சங்கத்தினருக்கு "சிறு வன மகசூல்" அனுமதி வழங்க, அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவிக்கப்பட்ட சரணாலயப் பகுதிகளைத் தவிர்த்து, ஏனைய வனப் பகுதிகளில் விளையும் சிறு வனப் பொருட்களை இலவசமாகச் சேகரிக்கும் உரிமையை மலைவாழ் இனத்தவருக்குச் சில நெறிமுறை மாற்றங்களுடன் 29-4-2003-ல் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு ஆணை வழங்கியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**97—**

## வீட்டு வசதி வாரியம்

***37482—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி நகரப் பகுதியில் வீட்டு வசதித் துறைமூலம் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தர, நடப்பாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அவிநாசி நகரப் பகுதியில் அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2004 ஜூலை 30]

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே வாரி வழங்கும் வள்ளல் குணம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அவிநாசி தொகுதிக்கு உட்பட்ட வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் அதிகமான தொலைதூரத்திலிருந்து வருவதால், அரசின் வேலைப்பாடுகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அரசின் வேலைப்பாடுகள் விரைவாக நடைபெறுவதற்காக அடுத்த ஆண்டிலாவது அவிநாசியில், அரசு அலுவலர் குடியிருப்புகள் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 373, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-4-1979-ன்படி, மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டுமே அரசு அலுவலருக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவிநாசியில் அரசு ஊழியர் குடியிருப்பு கட்டும் திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, தற்போது விலை அதிகம் என்ற காரணத்தால் விற்கப்படாமல் இருக்கிற வீட்டு மனைகளையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. வினா எண் 98, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[2004 ஜூலை 30

98—

## மீன்பிடித் துறைமுகம்

***53627—திரு. என்.கே. பெருமாள்:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் சிறிய மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, வேம்பார் கிராமத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 10–50*

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக ஆக்கிவருகிறது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான வசதி வாய்ப்புகள் ஏராளம், ஏராளம். காரணம், விளாத்திகுளம் தொகுதியிலுள்ள வேம்பாரில் விசைப் படகுகள் 45–ம், நாட்டுப் படகுகள் 50–ம், கீழவைப்பாரில் கட்டுமரங்கள் 6–ம், நாட்டுப் படகுகள் 95–ம், சிப்பிகுளத்தில் நாட்டுப் படகுகள் 35–ம், பெரியசாமிபுரத்தில் கட்டுமரங்கள் 16–ம், நாட்டுப் படகுகள் 5–ம் உள்ளன. பட்டணம்புதூரில் நாட்டுப் படகுகள் 19–ம், தரவைக்குளத்தில் விசைப் படகுகள் 42–ம், நாட்டுப் படகுகள் 475–ம், வெள்ளப்பட்டியில் நாட்டுப் படகுகள் 80–ம் சேர்த்து மொத்த நாட்டுப் படகுகள் 759–ம், விசைப் படகுகள் 87–ம், கட்டுமரங்கள் 22–ம் உள்ளன. அது மட்டுமின்றி, விளாத்திகுளம் தொகுதியில், சுமார் 4,908 மீனவர்களும், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில், சுமார் 5,189 மீனவ மக்களும், ஆக சுமார் 10,097 மீனவர்கள் தொகுதியில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், சிறிய மீன்பிடித்



2004 ஜூலை 30]

துறைமுகம் அமைக்கக் கோரும் இடமாகிய வேம்பாரிலிருந்து தூத்துக்குடி சுமார் 48 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. வேம்பாரிலிருந்து வட பகுதியில் ஏர்வாடி, கீழக்கரை, மண்டபம், இராமநாதபுரம் வரை தொடர்ந்து கடற்பரப்பு உள்ளதால், இங்கு சிறிய மீன்பிடித் துறைமுகமும் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேம்பார் கிராமத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து, கடந்த மார்ச் 2003 திங்களில் பெங்களூர், C.I.C.E.F. இயக்குநர், துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள். வேம்பாரில், சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடம் கடலரிப்பால் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாலும், கடற்பகுதி நிலையற்ற தன்மை உடையதாகவும் ஆய்வின்போது காணப்பட்டது. எனவே இப்பகுதி திறந்த கடல்வெளியாக இருப்பதால், தூண்டில் வளைவு போன்ற அமைப்பை ஏற்படுத்திய பிறகே உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வசதியாக இருக்கும் எனவும், இதற்கு மிகுந்த பொருட்செலவு ஆகும் என்பதால், வேம்பாரில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லையென பெங்களூர் C.I.C.E.F. இயக்குநர், தனது ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளதால், வேம்பாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. என்.கே. பெருமாள்:** நான் 6–9–2001–ல் குட்டித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று அன்றைய சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கோரியிருந்தேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக. அது மறு ஆய்வு செய்யப்பட்டு, 10,000–க்கு மேற்பட்ட ஏழையெளிய மீனவ குடும்பங்களை வாழவைக்க தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, மறு ஆய்வு செய்து அந்தப் பணியைத் தொடங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களிடம் கொண்டுசென்று, இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**99—**

### சுற்றுலாத் தலம்

***2117—திரு. பி.ஆர். சுந்தரம்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஸ்ரீ குருபகவான் திருத்தலமாகிய ஆலங்குடியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்ரீ குருபகவான் திருத்தலமாகிய ஆலங்குடியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க எந்தவிதமான செயற்குறிப்பும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ குருபகவான் திருத்தலத்தை, சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். இந்த குரு பகவான் கோயிலைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், சோழ மண்டலத்தின் மையப் பகுதியாக நவக்கிரக வரிசையில் நடுநாயகமாக விளங்குவது ஆலங்குடி குரு பகவான் திருக்கோயில். அந்தக் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற குருவைப் பார்த்தால் கோடி புண்ணியம் என்பார்கள். அந்தவகையிலே குருவை நாம் பார்த்தாலும், குரு நம்மைப் பார்த்தாலும் கோடி புண்ணியம் கிடைக்கும். அந்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஏதும் குருப் பெயர்ச்சி ஆகிறதா? (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த ஆலங்குடி கோயிலுக்கு வடக்கே கும்பகோணம், தெற்கே மன்னார்குடி, கிழக்கே திருவாரூர், மேற்கே தஞ்சாவூர் என நான்கு பக்கமும் சூழ்ந்திருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அந்தத் திருக்கோயிலுக்கு பக்தர்கள் வாரா



2004 ஜூலை 30]

வாரம் வருகை தருகிறார்கள். ஆகவே, அங்கே தங்குவதற்கு இடவசதி இல்லாத காரணத்தினால், சுற்றுலாத் துறை மூலமாக கோயிலில் தங்கும் விடுதி மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்குச் சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதோடு, வருகிற 19–8–2004 அன்று குருப் பெயர்ச்சி நடைபெற இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கான பக்தர்கள் வர இருக்கிறார்கள். இங்கே அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கின்ற காரணத்தால், போக்குவரத்துத் துறை அமைச்சரும் இங்கே இருக்கின்ற காரணத்தினால், அறநிலையத் துறையின்மூலமாகத் தங்கும் விடுதி மற்றும் சாப்பாடு வசதிகளை மேற்கொள்ளவும், போக்குவரத்துத் துறை அமைச்சர்மூலமாகச் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால் சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. திருவாரூர் மாவட்டம், ஆலங்குடியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலில் இடம்பெற்றுள்ள அருள்மிகு குருபகவான் மிகவும் புகழ்வாய்ந்தவராகக் கருதப்படுகிறார். இக்கோயில் கும்பகோணத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தற்போது அங்கு கழிப்பறைகள் மற்றும் குளியல் அறைகள் உள்ளன. திருக்கோயில் வளாகத்தில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குள் போதுமான மின் இணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வழிபடுவோர் தங்கும் விடுதி கோயில் வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது.

நவக்கிரக சன்னதி சுற்றுச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2003–2004 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 50 இலட்சம் ரூபாயை வழங்கி, சுற்றுச் சாலைகள் திருநள்ளாறு நீங்கலாக இதர சுற்றுலாத் தலங்களான சூரியனார் கோயில், திங்களூர்,

[2004 ஜூலை 30

வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், கீழ்பெரும்பள்ளம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளான கழிப்பறை, வாகனம் நிறுத்துமிடம், அணுகு சாலை, ஓய்வுக் கூடம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் முகமையான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆலங்குடி மேம்பாட்டிற்காக ரூபாய் 6.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாகனம் நிறுத்தும் இடம் கட்டப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நவக்கிரக ஆலயங்களுக்குச் சென்று வழிபடும்வகையில், நவக்கிரகச் சுற்றுலாவை நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலா, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு நவக்கிரக ஆலயங்களை வழிபட்ட பிறகு, திங்கட்கிழமை காலை சென்னை வந்தடையும். நவக்கிரக ஆலயங்களின் சிறப்புகளை எடுத்துக் கூறும்வகையில், சிறப்பு மடிப்பேடு, சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், அவ்வளவுதானா? திருப்தியாகிவிட்டீர்களா?

வினா எண் 100, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**100—**

### சுற்றுலாத் தலம்

***44734–திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில் இளைஞர்களுக்காகப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2004 ஜூலை 30]

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில், இளைஞர்களுக்கானப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம், புளியந்துறை இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையில் உள்ள உப்பனாற்றில் போக்குவரத்துப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பாலம், சீர்காழி தொகுதிக்கு உட்பட்ட புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையில் குறுக்கிடும் உப்பனாற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலமாகும். பாலம் கட்டக் கோரியுள்ள சாலை, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இச்சாலை ஆணைக்காரன்சத்திரம்– மகேந்திரபள்ளி அரசுச் சாலையில் கி.மீ. 0.4–ல் பிரிந்து புளியந்துறை கிராமம் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இந்த ஒன்றியச் சாலையின் நீளம் 2.40 கி.மீ. ஆகும். புளியந்துறை கிராமம், இந்தச் சாலையில் 2.40 கி.மீ.–ல் உள்ளது. இந்தச் சாலை ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் மேம்பாடு செய்யப்பட உள்ளது. புதுப்பட்டினம் கிராமம், புத்தூர்–புதுப்பட்டினம் அரசுச் சாலையை ஒட்டி அமைந்துள்ளது. புளியந்துறை மற்றும் புதுப்பட்டினம் கிராமங்களுக்கிடையில் 200 மீட்டர் நீர்வழிப் பாதையில் உப்பனாறு குறுக்கிடுகிறது. உப்பனாற்றில் 200 மீட்டர் நீளத்திற்கு உயர்மட்டப் பாலம் அமைக்கவும் 0.80 கி.மீ. நீளத்திற்கு அணுகுசாலை அமைக்கவும் தோராயமாக ரூ.120.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை, இந்த நிதியாண்டில், பணியின் முன்னுரிமையைப் பொறுத்தும், நபார்டு வங்கியின் கடனுதவியைப் பொறுத்தும் எடுத்துக்கொள்ளப் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையே உள்ள உப்பனாற்றில் போக்குவரத்துப் பாலம் இல்லாததனால், கடந்த 20 ஆண்டுகளாகப் பொதுமக்கள் தினந்தோறும் ஆற்றில் கழுத்தளவு நீரில் நடந்து செல்லும் அவல நிலையைப் போக்க, இந்த ஆண்டிலேயே முன்னுரிமை அடிப்படையில், போக்குவரத்துப் பாலம் கட்டிக் கொடுக்க அனுமதி அளித்ததற்காக, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், புளியந்துறை மற்றும் புதுப்பட்டினம் ஊராட்சிகளின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*முற்பகல் 11–00*

## 3. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் 46–வது முதல் 50–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2004 ஜூலை 30]

# 5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

## (அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.164,31,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.17,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 169, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில், கரகத்திக்கோட்டை, அத்தாணி ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.164,31,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 214, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தளி ஒன்றியத்தில் கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், தக்கட்டி, மஞ்சுகொண்டபள்ளி ஆகிய இடங்களிலும், கெலமங்கலம் ஒன்றியத்தில் பேவநத்தம், தொட்டபேளூர் ஆகிய இடங்களிலும் புதியதாகக் கால்நடை மருந்தகங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.164,31,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.304,50,50,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 165, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,50,50,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு

---

@ 131 முதல் 194 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

@@ 195 முதல் 235 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(முற்பகல் 11–05*

## 6. தகவல் கோரல்

### ஓர் அமைச்சர் பற்றி 'துக்ளக்' பத்திரிகையில் செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) என்ன? அரசன், உங்கள் ஜெக. வீரபாண்டியன்தான் பேசுகிறார்!

***திரு. ப. அரசன்:** ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கால்நடை பாரமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே விவாதம் நடைபெற இருக்கிறது. நம்முடைய 'துக்ளக்' பத்திரிகையிலே இன்றைக்கு நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களைப்பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. அது எந்த அளவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. Question hour முடிந்தவுடன் சொல்ல வேண்டும் அதையெல்லாம். மாண்புமிகு ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) குறிப்பை ஜெக. வீரபாண்டியனிடம் கொடுங்கள். அவர் நன்றாகப் படிப்பார். அவரிடம் கொடுங்கள். (குறுக்கீடு) Zero hour-ல்தான் ஏதாவது பிரச்சினையைக் கேட்க வேண்டும்; சொல்ல வேண்டும்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு**

**(ஆ) கோரிக்கை எண் 16–கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல்**

} தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004–2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஜெக. வீரபாண்டியன்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் கைத்தறித் துறையின் சார்பாக, இன்றைய மானியக் கோரிக்கையிலே என்னைப் பேசப் பணித்தமைக்கு நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சி வரிசையிலே ஒரு பகுதியினுடைய இருக்கைகள் முற்றிலும் காலியாக இருக்கின்றன. அதன் காரணமாகத்தான், தாங்கள் முதலிலே என்னை அழைத்தீர்கள் என்பதை எண்ணுகிறபோது, ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அவர்களுக்கும் சேர்த்து நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தனைக் கட்சிக்காரர்களும் நேற்று கவர்னரைச் சந்தித்து – சட்டமன்றத்திற்கு வராமல் ஆளுநரைச் சந்தித்து – சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டதாக ஒரு மனுவைத் தந்து, பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருக்கிறார்கள். நேற்றுவரை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் துறைவாரியாகப் பதில் அளிக்கின்றபோது, சாதனைகளிலே, இந்தியாவிலே தமிழகம் முதலிடம் வகித்ததாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன், சட்டம்–ஒழுங்கை நிர்வகிப்பதில்கூட, அமைதியான ஆட்சியை நிர்வகிப்பதில்கூட, தமிழகம் முதலிடம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் ஒன்றாகச் சந்தித்து, பத்திரிகைகளை அழைத்துப் பேட்டிக் கொடுக்கின்றபோதுகூட, என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், கொலை நடந்திருக்கிறது, அதனால் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். இந்தக் குழு அப்படியே பீகாருக்குச் சென்றால் (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வாறு இருக்கும்? அங்கே ஜாதியின் பெயரைச் சொல்லியே, தினம் 10 பேர் கழுத்தை அறுத்துக் கொல்லப்படுகிறார்கள். பீகார் மாநில கவர்னரிடமும், இந்தக் குழு கலையாமல் சென்று மனு கொடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆந்திரா, அதேபோல கேரளம் மற்றும் West Bengal ஆகிய இந்த மாநிலங்களின் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையை, அவர்கள் பார்ப்பது கிடையாது. காரணம், அவர்கள் அறிக்கை தயாரிப்பதில்கூட முரசொலியையும், தீக்கதிரையும் பார்த்துத்தான் தயாரிக்கிறார்களே தவிர, தினமணியையோ, தினமலரையோ, இந்துவையோ, எக்ஸ்பிரஸையோ படித்துவிட்டு எழுதுவதில்லை. அப்படி எழுதினால், பீகாரைப் பற்றியும் குறிப்பிடவேண்டி வரும்; West Bengal–ஐப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கும். ஆனால், அதையெல்லாம் செய்யாமல் இலாப நோக்கத்தில், குறுகிய அரசியல் இலாப நோக்கத்திலே, ஜனநாயகக் கடமையை ஆற்றத்

தவறி – இங்கே வந்துகூட பேசலாம். எங்களுக்குக்கூட முரண்பாடு இருக்கிறது. ஏழு நாட்கள் எங்களுக்குப் பத்தவில்லை, போதவில்லை என்று சொல்கிறோம். ஆனால், நாங்கள் எங்களுடைய கடமையைத் தவறாமல் இங்கே வந்து, கிடைத்த நேரத்திலே எங்களுடைய தொகுதிக்குக் கிடைக்க வேண்டிய பணிகளை, நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நாங்கள் செய்கிறோம் – விளம்பரத்தை விரும்பி வீதிமுனையிலே ஜனநாயகம் பேசுவதை, ஒரு தவறான பாதையாக நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே வந்தால்கூட தினம் தினம் வெளிநடப்பு செய்யலாம். வெளியே போனால் டி.வி.காரர்கள், கரெக்டாக 10 கேமராவை வைத்துக்கொண்டு காத்திருப்பார்கள். மஞ்சள் துண்டு, சிவப்புத் துண்டு, பச்சைத் துண்டு எல்லாம் போட்டுக்கொண்டு, தினம் தினம் பேட்டி கொடுத்தால்கூட, அதற்குக்கூட ஒரு விளம்பரம் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், விளம்பர நோக்கத்திலே இவர்கள் வெளிநடப்புச் செய்வது என்பது வருத்தம் அளிக்கிறது. இது ஒரு தவறான பாதை. இது மேல்மட்டத்தில், தமிழகத்தின் தலைநகரத்தில் மட்டுமல்லாமல், மாவட்ட அளவிலும் கொண்டுபோகும் என்கிற ஓர் அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

நேற்றைக்குக்கூட, பண்ருட்டியில் election நடந்திருக்கிறது. பண்ருட்டியில் ஒன்றிய கவுன்சில் தேர்தல் நடந்திருக்கிறது. தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியினர் என்ன சொல்கிறார்கள்? என் கட்சிக்காரர் கட்சி மாறிவிட்டார். அதனால் ஓட்டுப் போடக் கூடாது என்று சொல்கிறார்கள். இரண்டு உறுப்பினர்கள் ஓட்டுப் போடக் கூடாது என்று சொல்லிவிட்டு, அவர்களில் யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. தேர்தல் அவைக் களத்தில் பெஞ்சைப் போட்டு உடைக்கிறார்கள். எல்லோரும் வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போடாமல் வெளியே போய்விடுகிறார்கள். தேர்தல் நடக்கிறது ஜனநாயக முறைப்படி; அண்ணா தி.மு.க. வெற்றி என்று சொல்லியிருக்கிறார்கள். வாக்களிக்க வேண்டிய கடமையைத் தவறவிட்டு, வேட்புமனுத் தாக்கல் செய்யாமல் தேர்தலைப் புறக்கணித்துவிட்டு, நாற்சந்தியில் சேர்ந்துநின்று சத்தம் போடுகிறார்கள். இந்தப் பாடம், மாநிலத் தலைநகரில் நடக்கின்ற பாடம்; மாவட்டத் தலைநகரத்திலே, கீழ்மட்டத்திலே போவது என்பது வெட்கக்கேடான விஷயமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உண்மையிலே நான் வருத்தப்படுகிறேன். ஒரு தவறான நோக்கத்தோடு டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் வருகிறவரை அப்படியே எல்லாக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்வதிலே வெற்றிகரமாகக் கொண்டு போவார்.



நேற்றைக்குப் பேராசிரியர் பேசுகிறபோதுகூட, ஆட்சிக் கலைப்பைப் பற்றிக் கேட்டபோது, அந்த ஒரு வார்த்தையை மட்டும் போடவில்லை என்கிறார். மற்ற எல்லாக் காரணங்களையும் சொல்கிறார். கவர்னர் தன் கடமையைச் செய்ய வேண்டுமாம். ஒரு காலத்திலே ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னரும் ஏன் என்று சொன்ன கட்சிகள்தான்; கவர்னரைப் பற்றிக் கேவலமாகப் பேசிய கட்சிகள், இன்றைக்கு அதே கவர்னரைப் பார்த்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக் கலைப்பு வார்த்தையை மட்டும் போடவில்லை என்று நாசூக்காகச் சொல்கிறார்கள். கவர்னர் உரையைப் புறக்கணிக்கிறார்கள்; ஆனால் கவர்னரைப் பார்த்து மனு கொடுக்கப் போகிறார்கள். எங்களுக்கு, என்னவென்று ஒன்றுமே புரியவில்லை. நீங்கள்தான் சொல்லவேண்டும் பேரவைத் தலைவர் அவர்களே. ஆகையினால்...

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெக. வீரபாண்டியன், சொல்லக்கூடிய நிலையிலா நான் இருக்கிறேன்? (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** ஆகையினால்தான், நாங்கள் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம். அதைப்போல, அவர்களுக்குக்கூட ஒரு கனவு, ஒரு கற்பனை இருக்கிறது. ஆட்சியைக் கலைத்தால்தான் தேர்தல் வரும், மீண்டும் ஒன்றாக வந்து உட்காரலாம் என்று நினைக்கிறார்கள். தேசிய அளவிலான பிரச்சினையிலே தேர்தல் எவ்வாறு வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். ஆனால், இவர்கள் நோக்கம் நிறைவேறுகிறமாதிரி, வருங்காலத்திலே, ஆட்சியைக் கலைக்கும் நிலை வராது என்று நிச்சயமாகத் தெரியும். அப்படி வந்தாலும்கூட ஒரு முன்மாதிரி இருக்கிறது. டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது, இதேபோல ஒரு கூட்டணி பாராளுமன்றத்திலே ஏற்பட்டது. அதற்குப் பிறகு அ.தி.மு.க.–விற்கும் – தி.மு.க.விற்கும்– காங்கிரசிற்கும்கூட பார்லிமெண்டிலே ராசி இருக்கலாம். நிச்சயமாகச் சட்டமன்றத்திலே எந்த ராசியும் கிடையாது என்பது நன்றாக எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு வாய்ப்பு வருமேயானால் – இங்கே இருக்கைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன – மீண்டும், அதேநிலையிலே நிச்சயமாக எவரும், ஒருவர்கூட இங்கே திடீர் தேர்தல் வந்தால், இங்கே வந்திருக்கக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைத்தவர்கூட, மறுமுறை வரமுடியாது என்று ஆணித்தரமாக நான் சொல்லுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், எங்களுடைய பொதுச் செயலாளர் ராஜா அவர்கள்கூட

நேற்று சொன்னார்கள்; உங்களிடம் டாக்டர் கலைஞர் அவர்களைக் கூப்பிடுங்கள் என்று சொன்னார். இன்றைக்கு திரு. ராஜாவே கலைஞரைக் கூப்பிட்டார் என்றால், நிச்சயமாக தி.மு.க.–வில் யாராவது ஒருவராவது வருவார் என்று நினைத்தேன். இன்றைக்குக்கூட அவர்கள் வரவில்லை என்பதால் நான் மிகவும் வருந்துகிறேன். நாளைக்காவது — ஒரு நாள், கடைசி நாள் – நிறைய மானியக் கோரிக்கைகள் வருகின்றன. நிச்சயமாக நாளைக்கு வருவதற்கான வாய்ப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தருவார்கள். ஆகவே, நாளை ஒரு நாளாவது எதிர்க்கட்சியினர் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று நான் அன்போடு திரு. ராஜாவுக்காகவாவது மீண்டும் அவர்களை அழைக்கிறேன். இப்பொழுதுதான் வித்தியாசமான அமைச்சர் என்று எங்கள் அரசன் அவர்கள் இங்கே பேசினார்கள். ஆகையினால் மீண்டும் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அத்தனைப் புறக்கணிப்பு செய்துள்ள பாதி எதிர்க்கட்சிகள் – நாங்களெல்லாம் இங்கே இருக்கிறோம். பி.ஜே.பி. இருக்கிறது, குடியரசுக் கட்சி இருக்கிறது, ஃபார்வார்டு பிளாக் கட்சி இருக்கிறது. எல்லாக் கட்சிகளும் புறக்கணிக்கவில்லை – கொஞ்சம் மனம் மாறி, டாக்டர் கலைஞர் அவர்களும், தோழமைக் கட்சிக்காரர்களும், அவர்களது உறுப்பினர்களை அவைக்குச் செல்லுமாறு அவர்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையிலே 1951-லிருந்து 102 இலட்சமாக இருந்த பசு இனம், இன்றைக்கு 90 இலட்சம் அளவிற்குக் குறைந்திருக்கிறது. ஏறத்தாழ 12 சதவிகிதம் அளவுக்கு, 50 ஆண்டுக் காலத்திலே பசு இனம் குறைந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், பசுக்கள் மாமிசத்திற்காகக் கொல்லப்படுவது தமிழகத்தில் அதிகமாக இருக்கிறது. பசுக்களும், பசு இனமும் லாரிகளில் மிகவும் கொடுமையான முறையிலே ஏற்றிச் செல்லப்பட்டு, கேரளத்திலே மாமிசத்திற்காக மிகவும் கொடூரமான முறையிலே கொலை செய்யப்படுகின்றன. பல நூற்றுக்கணக்கான பசுக்கள் அவ்வாறு தமிழகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படுவதைத் தினந்தோறும் எங்களால் பார்க்க முடிகிறது. காளை மாடுகள் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் பயன்படுகின்றன. உழவிற்கும், சுமைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவும் கால்நடைகள், அதாவது காளை இனங்கள் அதிகமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கு டில்லர் மற்றும் லாரிகளைப் பயன்படுத்தவேண்டுமேயானால், பல்லாயிரக்கணக்கான ரூபாய்க்கு



பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை வரும். மேலும், பசுஞ்சாணத்திற்குப் பதிலாக இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டுமானால்கூட, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை வரும். எனவே, பசு இனம் நமக்குப் பால் தருவதற்கு மட்டுமல்லாமல் உரமாகவும், எரிசக்தியாகவும் பலவகைகளிலும் பயன்படுகிறது. இரசாயன உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவது நிலத்திற்குக் கேடு விளைவிக்கும். இரசாயன உரங்களை அதிகமாகப் பயன்படுத்தி, உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொண்டால், ஆரோக்கியத்திற்குக்கூட ஊறு விளைவிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

முற்பகல் 11–15

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பேசுகின்றபோது குறிப்பிட்டதுபோல், ஜெட்ரோபா, சர்க்கரைச் சோளம், வெண்ணிலா போன்ற பயிர்களைத் தமிழக விவசாயிகள் பயன்படுத்தினால், அவர்களுக்கு இயற்கை உரங்கள்தான் பொருத்தமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோதுகூட, இயற்கை உரங்களை மேம்பாடு செய்ய, இயற்கை உரங்களைத் தயாரிக்க, பசுவினம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற மிக முக்கிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல, இயற்கையிலே பஞ்சகாவியம் என்ற ஒரு பூச்சிக்கொல்லியைக்கூடத் தயாரிக்க முடியும். அதற்குக்கூட, பசுவினம் அதிகமாகப் பயன்படுகிறது. ஆகையினால், தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக அண்டை மாநிலங்களுக்கு மாடுகள் ஏற்றிச் செல்லப்படுவதை அரசு தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பசுக்களின் எண்ணிக்கை குறைந்துவரும் சமயத்தில், 2003–2004 ஆம் ஆண்டில் 1,66,000 மாடுகள் இறைச்சிக்காக மட்டும் வெட்டப்பட்டுள்ளன. இது ஓர் அதிர்ச்சியான செய்தியாக எனக்குப் படுகிறது. காங்கேயம், மணப்பாறை, கண்ணாயிரம் போன்ற மிக வலிமை மிகுந்த இனங்கள் தற்போது மறைந்து வருகின்றன. நம் நாட்டுக் காளைகள் வலிமையுடன் நன்றாக உழைக்கும் தன்மை உடையவை. கலப்பினக் காளைகள் விவசாயத்திற்கு ஏற்றதாக இருக்காது. எனவே, அரசு நம் நாட்டுக் காளை இனங்களைக் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு கால்நடைப் பண்ணைகளில் நம் நாட்டுக்குச் சொந்தமான, நம் நாட்டைச் சார்ந்திருக்கிற பசுவினங்களைக்

காப்பாற்ற பிரத்தியேக நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது அதிகமாகின்றது என்கிறபோது, முயல் இறைச்சி சுவையாகவும், பல்வேறு மருத்துவக் குணங்கள் கொண்டதாகவும் இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் முயல்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் காணமுடிகிறது. எனவே, முயல்கள் வளர்ப்பதற்கு அரசு மானியம் வழங்கினால், இறைச்சிக்காகக் காளை மாடுகள் மற்றும் பசுவினங்கள் கொல்லப்படுவதை ஓரளவுக்குத் தடுக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல, வெறி நாய்க்கடி நோயிலிருந்து வளர்ப்புப் பிராணிகளை, செல்லப் பிராணிகளைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. காலமுறைப்படி வீடு வீடாகச் சென்று, வளர்ப்பு நாய்களுக்கு உரிய கட்டணம் வசூலிக்கப்படுவதன்மூலம் வெறிநாய்த் தடுப்பு ஊசி போடும் பணி மேற்கொள்ளப்படுவதாகவும், 2003–2004 ஆம் ஆண்டில் 10,949 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாகவும், கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. நாய்களுக்குப் போடும் ஒரு தடுப்பு ஊசியின் விலை ரூபாய் 250 ஆக இருக்கிறது. அந்த மருந்தினை மானிய விலையில் வழங்கினால், வளர்ப்பு நாய்களை அல்லது செல்லப் பிராணிகளை வளர்த்துக் கொண்டிருக்கும் அனைவரும் தவறாமல் தங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்குக்கூட தாங்களாகவே தடுப்பு ஊசி போடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் தடுப்பூசி மருந்தின் விலையைக் குறைக்க வேண்டும்; அல்லது அதற்கான மானியத் தொகையை நமது அரசு வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடைகளை ஏற்றிச் செல்கிறபோது, மனிதாபிமானமற்ற முறையிலே—மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்—ஒழுங்குமுறை விதிகளைக் கடைபிடிப்பது கிடையாது. கால்நடைகளை ஏற்றிச் செல்லும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமை ஊர்தி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், வேலையாட்கள், அரசு அதிகாரிகள் போன்றவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். கொடுமையான முறையிலே, ஒரே லாரியிலே 40, 50 மாடுகள் இரக்கம் இல்லாமல் ஏற்றப்பட்டு, கதவைச் சாத்த முடியாமல்—நானேகூட பார்த்திருக்கிறேன்—காலை, ஒரு கட்டையால் உடைத்துச் சாத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இதை எவ்வாறு தடுப்பது என்பதுபற்றிக் கொஞ்சம் அரசு விழிப்போடு



இருக்க வேண்டும்; எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ளவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இப்படிச் சட்டங்கள் மீறப்படுவதற்கு—சட்டங்கள் பாதுகாக்கப்படுவதைவிட, சட்டங்கள் மீறப்படுவதற்கு—சரியான தண்டனை வழங்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். காவல் துறை அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள் மட்டுமல்லாமல் வணிக சோதனைச் சாவடிகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்ற அலுவலர்கள்மீது, கடமை தவறிய அதிகாரிகள்மீது, நாம் கடுமையான நடவடிக்கை எடுத்தால், இரக்கம் இல்லாமல் கால்நடைகளை ஏற்றிச் செல்கின்ற வாய்ப்புக் கொஞ்சம் குறையும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல், என்னுடைய சகோதரர் ராஜா அவர்கள், சென்ற மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, தன்னுடைய பகுதியிலே கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும், கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால், இன்றுவரை அது கட்டப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல், தளி தொகுதியில், தளி யூனியனில் உள்ள கும்மாளபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், மஞ்சுண்டாபள்ளி போன்ற கிராமங்களில் கால்நடை மருத்துவமனை கட்ட வேண்டுமென்று சகோதரர் முரளிதரன் அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதற்கும் அரசு ஆவன செய்யுமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

இப்போது நான் எனது தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன். சபாநாயகர் அதற்கு நேரம் கொடுக்க வேண்டும். மயிலாடுதுறையிலே, புதிய பேருந்து நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. 1963 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே வெறும் 12 பேருந்துகளை நிறுத்துவதற்காக 1.9 ஏக்கர் நிலத்திலே கட்டப்பட்டது அந்தப் பேருந்து நிலையம். இன்றைக்கும் அதே பேருந்து நிலையம்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று எல்லா அதிகாரிகளும், நாங்களும் முயற்சி எடுத்து, எங்கள் மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தபோது, அந்தச் செயல் திட்டத்திலேயே அறிவிப்பதாக இருந்தது. நம்முடைய மாவட்ட முன்னாள் அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. இரா. ஜீவானந்தம் அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும், நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஒன்று சேர்ந்து

உழைத்து, இதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள். ஆனால், ஏதோ சில தவிர்க்க முடியாத காரணங்களால், அன்றைக்கு அந்த அறிவிப்பை வெளியிட முடியாமல் போய்விட்டது. நம்முடைய இந்து சமய அறநிலையத் துறைக்கு, எங்கள் நகராட்சி, பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு TUFIDCO மூலமாகக் கடன் கேட்டிருக்கிறோம். 1 கோடி ரூபாய் கடன் தர ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், எந்தத் தடையும் இல்லாமல் மயிலாடுதுறையில் புதிய பேருந்து நிலையத்தை அமைத்துத் தரும்படி இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, Revenue Court-லே உள்ளோர், இப்போது நிறைய ஜப்தி நடவடிக்கையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுக் காலமாக விவசாயம் பொய்த்திருக்கிறது. அதனால், நம்முடைய தமிழக அரசுகூட கிஸ்தியைத் தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால், இந்தநேரத்திலே வருவாய் நீதிமன்றம், விவசாயிகள்மீது, ஒரு கெடுபிடி வசூலை உருவாக்கி, பலவந்தமாக நில உடைமையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். 28–04–2004 அன்று மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்திலே வழக்கு வந்தபோது, தேர்தலைக் காரணம் காட்டியும், இயற்கைச் சூழலைக் காரணம் காட்டியும், வாதிக்கு ஆஜராகிற வழக்கறிஞர்களும், பிரதிவாதிக்கு ஆஜராகிற வழக்கறிஞர்களும் ஒன்று சேர்ந்து வழக்கை நடத்த ஒத்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால், அன்றைய தேதியிலே வந்த Special Deputy Collector, (Revenue Court) வாசலில் நின்று கொண்டிருந்த வாதிகளை அழைத்து, எல்லோருக்கும் ஒரு Ex-parte தீர்ப்பு மாதிரி எல்லாவற்றையும் vacate பண்ணியிருக்கிறார். இதனால், உள்ளூரிலே நிறைய பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கமே, சாகுபடி சரியில்லை என்று சொல்லிக்கொண்டு நில வரியை இரத்து செய்கிறது. குத்தகையை அவர்களால் உடனே கட்ட முடியவில்லை. அதற்கு ஒரு regulation; 3 ஆண்டுகள் குத்தகையை உடனே கட்டினால் மற்ற குத்தகை தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னால், நிச்சயமாக நமது விவசாயிகளெல்லாம் குத்தகையைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்த நேரத்திலே, இந்த வறட்சிக் காலத்திலே, இந்த Revenue Court நடவடிக்கையைக் கொஞ்சம் ஒத்தி வைக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, எனது தொகுதியிலே மணல்மேடு பேரூராட்சி என்று ஒரேவொரு பேரூராட்சி இருக்கிறது. நகரத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஒரு சாதாரண தீ விபத்து ஏற்பட்டால்கூட,



தீயணைப்பு நிலையத்திற்குத் தெரிவிக்க நாங்கள் சீர்காழிக்குச் செல்ல வேண்டும் அல்லது மயிலாடுதுறைக்கு வர வேண்டும். இப்போது குடந்தைச் சம்பவம் மிகப் பெரிய ஒரு எச்சரிக்கையையும், அச்சத்தையும் விளைவித்திருக்கிற இந்தநேரத்திலே மணல்மேடு பகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையத்தைக் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த 15 ஆண்டுக் காலமாக மயிலாடுதுறை நகரத்திலே நூலகம் இல்லை. சொந்தக் கட்டடமும் கிடையாது. எனது சட்டமன்றத் தொகுதி அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே நிலத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறேன். ஏறத்தாழ ஒரு ground இடம் இருக்கிறது. நூலகம் கட்டுவதற்குப் பணமும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்துகூட நான் பணம் ஒதுக்கியிருக்கிறேன். ஆனால், 60 ஆண்டுகளுக்கு முன்பு அந்த இடம் ஏதோ இடுகாடாக இருந்ததாக ஒரு காரணத்தைக் காட்டி, நிலத்தைக் கையகப்படுத்த முடியாமல் அந்தக் கோப்பு காலதாமதமாகவே சென்று கொண்டிருக்கிறது. ஆகையினால், நூலகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கையை தமிழக அரசு எடுக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, எனது தொகுதியிலே குடந்தைச் சம்பவத்தைக் காரணம் காட்டி, எல்லாப் பள்ளிக்கூடங்களின் கூரைகளும் அகற்றப்படுகின்றன. குடந்தையிலே தீ விபத்துச் சம்பவம் நடந்து – குடந்தைச் சம்பவத்திலே பள்ளிக்கூடத்தினுடைய தீ விபத்திலே – தீ விபத்தின் விளைவாக அந்தப் பள்ளிக்கூடத்துச் சுவரினுடைய சூடு தணிவதற்கு முன்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குடந்தைக்கு வந்து ஆறுதலளித்ததற்குத் தமிழக மக்கள், குடந்தைப் பகுதி மக்கள் நெஞ்சார்ந்த நன்றியோடு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–25*

இன்றைக்கு அந்தச் சம்பவத்தைக்கூட — தினந்தோறும் யாராவது ஓர் அமைச்சர் போய், அதைக்கூட — அரசியலாக்குகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு மந்திரி என்பதுமாதிரி போய்ப் பார்த்து, ஒரு கூட்டத்தோடு போய், அந்த intensive care unit-லே, யாராவது ஒரு V.I.P. உள்ளே போகிறார்கள். கூடவே 100 பேர் உள்ளே போகிறார்கள். எங்களுடைய, முன்னாள் துணைப் பிரதமர் திரு. அத்வானி அவர்கள் வந்திருந்தார்கள். நண்பர் ராஜா அவர்களும் வந்திருந்தார்கள். நானும் சென்றிருந்தேன். நான்கு பேருக்கு மேலே உள்ளே செல்லவில்லை. ஒரு

பத்திரிகையாளரையோ, புகைப்படக்காரரையோ, வீடியோகிராபரையோ கூட உள்ளே அழைத்துச் செல்லவில்லை. மனிதாபிமானத்தோடு பார்த்துவிட்டு வந்துவிட்டோம். ஆனால், சாதாரண அமைச்சராக இருந்தாலும் கூட, எதிர்க் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சந்நிதானம் முதல் மதுரை ஆதீனம் வரை உள்ளே போகிறார்கள். 50 பேர்களுடனே உள்ளே போகிறார்கள். ஒரு வீடியோ கேமிராவை, ஒரு போட்டோ கேமிராவைப் பார்த்தவுடனேயே செயற்கையாகவே அழுகிறார்கள். பக்கத்திலே suicide பண்ணிக்கொண்டு ஒரு பையன் படுத்துக்கொண்டு இருக்கிறான்; suicide பண்ணும் முயற்சி செய்தவன். அந்த 12 குழந்தைகளும் படுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து விட்டு, அவனைப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுகிறார்கள். டாக்டர்கள் அவர்களிடம், இவன் தீ விபத்தினால் அல்ல, suicide பண்ணிக் கொள்ள முயற்சித்தவன், அவனைப் பிழைக்க வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்கமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், அரசு முன்வந்து அங்கே, உள்ளே நிருபர்களையும் அங்குள்ள வீடியோகாரர்களையும் கண்டிக்க வேண்டும். தொலைக்காட்சிப் பெட்டிகள் அப்படியே அங்கே உட்கார்ந்து கொண்டு அந்த ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே வராமல் யார் வருகிறார்களோ, அப்படியே படம் பிடித்து, மீடியாவிலே பேர் வரவேண்டும், மீடியாவிலே முகம் வரவேண்டும் என்பதற்காகவே சம்பவத்தை மிகைப்படுத்துகிறார்கள். நிகழ்ச்சியைக் காட்டிக் காட்டி — மயிலாடுதுறை தொகுதியிலே மயிலாடுதுறையிலே டி.வி.யைப் பார்த்துவிட்டு — ஒரு பெண் செத்துப் போய் விட்டார்; எதை உண்டாக்குகிறார்கள் என்றால், அடிக்கடி இந்தத் துயரச் சம்பவத்தைக் காட்டிக் காட்டி, ஒரு அச்சத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதன்மூலம், ஓர் உயிர் பலி வாங்கப்பட்டிருக்கிறதேதவிர, இதில் எதைச் சாதித்தார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் மீடியாக்கள் அந்தத் துயரச் சம்பவத்தை மிகைப்படுத்திக் காட்டுவதைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குடந்தை அரசு மருத்துவமனையிலே பத்திரிகையாளர்களை, வீடியோகாரர்களைக் கொஞ்ச நாளைக்கு, ஒரு வாரத்திற்குத் தடை பண்ணினால் அவர்கள் எல்லாம், தானே discharge பண்ணிக் கொண்டு போய்விடுவார்கள். இந்த விளம்பரத்தைப் பார்த்துப் பார்த்து, நன்றாகக் குணமான குழந்தைகள்கூட வெளியே வர மாட்டேன் என்கிறார்கள்; படுத்துக் கொண்டு போகமாட்டேன் என்கிறார்கள்; நான் discharge வாங்கவில்லை, இன்னும் ஒரு நாளைக்கு, ஒரு வாரத்திற்கு இருக்கிறேன் என்று. ஓரளவிற்கு இந்த 12 நோயாளிகளையும் நான் பார்த்து இருக்கிறேன்.



தொடர்ந்து 5 முறை நான் போய்ப் பார்த்தேன். அவர்கள் எல்லாம் நன்றாக ஆரோக்கியமாக இருக்கிறார்கள். Discharge பண்ணும் நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்.

தினந்தோறும் ஒரு மந்திரி போவதினாலே, அவர்கள் காலி பண்ண மாட்டேன் என்கிறார்கள். இந்தமாதிரி சூழ்நிலை இருக்கிறது. நேற்றுக்கூட, டெல்லி மத்திய மந்திரி (குறுக்கீடு) ஆமாம் நேற்றுக்கூட திரு. ப. சிதம்பரம் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார். அதை நான் தப்பு என்று சொல்லவில்லை. ஆனால், தமிழக அரசு ஓரளவிற்கு, போதுமான அளவிற்கு நிவாரணம் தந்திருக்கிறது.

அதேபோல், ஒவ்வொரு கட்சியும், திரைப்பட நடிகர்களும் போட்டிப் போட்டுக் கொண்டு, அந்தத் துயரத்திலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே ஒன்றும் அரசியல் கிடையாது. ஆனால், இதை அரசியலாக்க வேண்டாம் என்று நான் கேட்கிறேன். இன்னும் பார்த்தால்கூட, அடுத்து, கோப்புக் காட்சிப் போட்டு, அடுத்த தேர்தலுக்கு முன்னாடி அந்த 90 குடும்பத்தைக் காட்டினாலும் காட்டுவார்கள் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்குப் பயம் இருக்கிறது. ஆகவே, மீடியாக்கள் அந்த அவலச் சம்பவத்தை எந்த அளவிற்குக் காட்ட வேண்டும் என்பதை வரையறுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழக அரசுக்கு என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். என்னுடைய மயிலாடுதுறையிலே பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் கூரை வேய்ந்துதான் கட்டப்பட்டிருக்கின்றன. குடந்தைக்கு அம்மா அவர்கள் சென்றபோது நானும் சென்றிருந்தேன். மிகப் பெரிய தீ விபத்திற்கு, குழந்தைகளுடைய மரணத்திற்குக் காரணம் ஆசிரியர்களுடைய அலட்சியம்; அதாவது crisis management என்று சொல்வார்கள். நெருக்கடியான காலகட்டத்திலே ஆசிரியர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாத காரணத்தினால், அத்தனைக் குழந்தைகளையும் உள்ளே வைத்துவிட்டுக் கதவைப் பூட்டியதன் காரணத்தால், ஏறத்தாழ அந்த 92 குழந்தைகளும் தீக்கிரையாகியிருக்கின்றன.

அதற்குக் கூரை மட்டும் காரணம் அல்ல; ஆனால் கூரைதான் காரணம் என்று முதலில் பார்த்த கட்சிக்காரர்கள், கட்சிகள் சொல்லியதால் எல்லாக் கட்சிக்காரர்களும் கூரைதான் காரணம், கூரைதான் காரணம் என்று கூரைக்கு எதிராக ஒரு போரைத் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி விசாரணை கமிஷனிலே உண்மையான விவரம் தெரியும். ஆகையால் கூரைக்கு, தென்னங்கீற்றுக்கு எதிராக ஒரு பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால்

கூரை வேய்கின்ற, கீற்று முடைகின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். கீற்றுக் கொட்டகை என்பது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை. தரைத்தளத்திலே கூரைக் கட்டடம் இருந்தால் தயவு செய்து அதைப் பிரிக்க வேண்டாம் என்று தமிழக அரசு சொல்ல வேண்டும்; அறிவுறுத்த வேண்டும்; மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், கல்வித் துறை மூலம் அறிவுறுத்த வேண்டும். Emergency way —தப்பித்துப் போவதற்கு ஒரு வழி—இருக்க வேண்டும்.

நேற்றுக்கூட மத்திய அரசு, ஒரு கமிஷன் போட்டு ஒரு செயற்குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதில் 3 காரணங்கள்; கூரை மட்டுமே காரணம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய அலட்சியம்; அதேபோல கட்டடத்தினுடைய அமைப்பு; சரியான நேரத்திலே சரியாக நடந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்கிறார்களேதவிர, அந்த மிகப் பெரிய தீ விபத்திற்குக் கூரை மட்டும் ஒரு காரணம் அல்ல. ஆகையால், கூரைக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தை எல்லாக் கட்சிகளும், அரசும்கூட நடத்துவதாக நான் அறிகிறேன்.

கூரையை நீங்கள் அனுமதிக்க வேண்டும். Asbestos sheets பற்றி இன்றைக்கு எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் வருகிறது. அதனால் ஆபத்து இல்லை என்று சொல்கிறார்கள். Asbestos sheets போட்டுக் கொடுத்தால் நிச்சயமாக நுரையீரல் நோய் வரும் என்று சொல்கிறார்கள். நான் நிச்சயமாக என் அனுபவத்திலிருந்து சொல்வேன். கீற்று என்பது ஒரு சுகாதார சுதேசித் தொழிலையும் அது ஊக்குவிப்பதாக அமையும். எந்த இடத்திலே எந்தப் பொருள் கிடைக்கிறதோ அதை வைத்துத்தான் அந்த மக்கள் பயன்படுத்துகின்றவகையிலே அமைத்துக் கொடுக்க வேண்டும்.

தமிழகத்திலும், கேரளாவிலும்தான் கீற்றுக் கொட்டகையிலே பாடம் எடுக்கின்ற நிலையுள்ளது. பர்ண சாலையிலிருந்து பழைய பாரம்பரியம் வரை பார்த்தால், கீற்றுக் கொட்டகைக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. தயவுசெய்து கீற்றுக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும் என்று இந்த அரிய நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே இந்த அளவிற்கு என்னைப் பேசப் பணித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



*முற்பகல் 11–30*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசும்போது பசு மாடுகள் எந்த அளவிற்கு, அதிக எண்ணிக்கையிலே, கொடுமையாக வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன என்பதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள், 30 மாடுகளை ஏற்றிச்சென்ற அப்படிப்பட்ட வாகனத்தைத் தானே பிடித்து நிறுத்தி, அந்தப் பசுக்களை விடுதலை செய்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக அவை உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இப்படிச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர் நேரடியாகப் பார்த்திருக்கின்ற காரணத்தினால் தடுப்பு நடவடிக்கைகளைக் கடுமையாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சொல்ல மறந்துவிட்டேன். (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கையும் அதுதான். அதாவது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒரு கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள் ஊதிய உயர்வு பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் முதலிலே சொன்னார்கள். நீங்கள் அதிகமாக, கோடிக்கணக்கிலே எவ்வளவோ அள்ளித் தருகிறபோது, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் – இங்கே வராதவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அவர்களுக்கும் இந்த ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் – இந்த ஊதிய உயர்வு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் பயணப்படி மிகக் குறைவாக இருக்கிறது. M.L.A.–களுக்கான செலவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பயணப்படியை இரட்டிப்பாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சட்டமன்றத்திற்கு வராத சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி, அவர்கள் செய்திருக்கின்ற காரியங்களைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன்.

அவர் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் மயிலாடுதுறை நகராட்சிக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்பட்ட இடங்களை அரசுத் துறைக்காக வேண்டுமென்று கேட்டால், அவர்கள் அந்த இடத்திற்குரிய தொகையை அந்தத் துறை மூலம் கட்டுவதற்கு முன்வருவார்களேயானால், அந்த இடத்தை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அது மருத்துவமனை கட்டுவதற்காக இருந்தாலும் சரி, நகராட்சிக்கான கட்டடங்கள் கட்டுவதற்காக இருந்தாலும் சரி, பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக இருந்தாலும் சரி, அல்லது மின் வாரியம் மூலம் power station ஏற்படுத்துவதற்தாக இருந்தாலும் சரி, அனைத்து இடங்களிலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இடம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நகராட்சி அந்தத் தொகையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால் அந்த இடத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே, மாமன்றத்திலே மிகவும் பெருந்தன்மையாக அறிவித்த நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கட்டளையிட்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் மயிலாடுதுறை தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி. (குறுக்கீடு) என்ன, அரசன்?

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற தொகை என்பது மிக அதிகம். ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்குத்தான் கொடுக்கிறீர்கள். அதைக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அனைவரின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.



***திரு. ராதாரவி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Budget கூட்டத் தொடரிலே என்னைப் பேச அனுமதித்ததற்காக என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக உயிர்களின் முதல் உச்சரிப்பு அம்மா; கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சு அம்மா; நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைச் சக்திகளைப் போல தமிழகம் ஏற்றுக்கொண்ட ஒரே சக்தி புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வேதனைகளைச் சாதனைகளாக்கி பாரதத்தில் தமிழகம் முதலிடம் பெற வேண்டுமென்று ஓய்வில்லாமல் உழைத்திடும் சக்தி அம்மா. எங்களுக்கெல்லாம் வாழ்வளித்து வழி நடத்திச் செல்லும் சக்தி அம்மா. ஆதியும் அந்தமுமாகத் தமிழகம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சக்தி அம்மா. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களைக் கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–35*

7 நாட்கள் சட்டமன்றம் கூடுகிறது என்று சொன்னவுடன் இன்னொரு போராட்டத்தைப் பண்ணுகிறோம், உண்ணாவிரதம் இருக்கிறோம் என்று சொல்லி, 7 நாட்கள் வரமாட்டோம், புறக்கணிக்கப்போகிறோம் என்று சொல்லி, எதிர்க்கட்சியினர் புறக்கணித்துவிட்டார்கள். ஆனால், அந்த 7 நாட்களில் அவர்கள் பண்ணியது என்னவென்றால்—உண்ணாவிரதம் இருக்கும்போது கோட்டையில் இருக்கக் கூடாது என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால்—அங்கே இருக்கிற மாதிரி இருந்து, அப்புறம் அண்ணா சாலையில் போய் traffic-ஐ jam பண்ணி, எல்லா காரும் நின்றன. பெரிய தகராறு பண்ணினார்கள் . எல்லோரும் நினைக்கிறார்கள் இதை போராட்டம் பண்ணுகிறார்கள் என்று. அது கிடையாது. ஏன் நான் சொல்கிறேன் என்றால், அது கிடையாது என்று. அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததைச் சொல்கிறேன். உண்மையிலேயே போராடுவதாக இருந்தால், ஒன்று வள்ளுவர் கோட்டம்; இல்லையென்றால் அரசினர் மாளிகையில் – Guest House – இருந்து இருக்கவேண்டும். அது இல்லாமல் இங்கே ஏன் இருந்தார்கள் என்றால் அவர்களுக்குத் தெரியும், எப்படியும் துரத்தி விடுவார்கள் என்று. அப்புறம் அங்கே போய்த் தகராறு பண்ணலாம், இங்கே போகலாம், அங்கே வரலாம். காவல் துறையிடம் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் அவர்கள் போராட்டம் பண்ணும்போது அவர்களைச் சுற்றி நின்று அவர்களை எழுந்திருக்கவே விட்டிருக்கக்

கூடாது. ஒருநாள் பூரா உட்கார வைத்து இருக்க வேண்டும். ஏனென்றால் பாதி பேருக்கு sugar. அவர்கள் சாப்பிடாமல் எப்படி உட்காருவார்கள். அவர்களை உட்கார வைத்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டார்கள். இவர்கள் போராடுகிற மாதிரி அங்கே போய் இங்கே போய் என்ன பண்ணினார்கள் என்றால், காரில் போகும்போது தின்றுவிடுவது. இது யாருக்கும் தெரியாது. அப்படி ஏமாற்றி, அவர்கள் தெம்பாகி, சுற்றிக்கொண்டே இருந்தார்கள்.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இப்போதுகூட கவர்னர் மாளிகைக்குப் போயிருக்கிறார்கள். போய் ஏதோ மனு கொடுத்திருக்கிறார்கள் என்று பேப்பரிலே படித்தேன்; அராஜகம் நடக்கிறது என்று. முதலில் இவர்கள்மீது நாம் போய் மனு கொடுக்க வேண்டும். இவர்கள் பண்ணுவதுதான் அராஜகம். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் போய்க் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன்.

காலியான Chair ஆக இருக்கிறதே, நாம் எப்படிப் பேசப் போகிறோம் என்று நினைத்தேன். இருந்தாலும் என்னுடைய தந்தையார் நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்கள் திராவிட இயக்கத்திற்காக அப்போதெல்லாம் பெரிதாக நாடகம் நடத்திக்கொண்டு இருந்தபோது அந்தப் பெரிய போராட்டக் காலங்களிலே எப்போதும் நிறைய டிக்கெட் எல்லாம் விற்காது அப்போது. காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிடக்காரர்களுக்கும் தகராறு நடந்த காலங்கள்; அப்போது எல்லாம் தி.மு.க.வும் பிறக்கவில்லை. அந்தத் தலைவரும் பிறக்கவில்லை என்று நினைக்கிறேன். அதனால், அந்தமாதிரி நேரங்களில்—அந்தமாதிரி போராட்டங்களில் seat எல்லாம் காலியாக இருக்கும். அப்போது எங்கள் அப்பா சொல்வாராம், கேள்வி; முதலில் seat எல்லாம் காலியாக இருக்கிறது, எப்படி நாடகம் 3 மணி நேரம் நடத்தப் போகிறீர்கள் என்று கேட்டால், 'ஆமாம் நடத்தப் போகிறேன்' என்பார். 3 மணி நேரம் ஏன் என்று கேட்டதற்கு 'முதலில் seat-க்கு அறிவு வரட்டும், அப்புறம் உட்காருபவருக்கு அறிவு வரட்டும்' என்று சொல்வாராம் அவர்; எனக்குத் தெரியாது. அதனால், ஒருவேளை அந்தமாதிரி அடிப்படையிலே அதைத் தெரிந்துகொண்டுதான் நானும் சரி, முதலில் அதற்காவது வரட்டும் அதனால்தான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

முதலில் இந்தக் கால்நடை வளர்ச்சித் திட்டம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிநடை போட்டு வரும் எங்களது அன்னையின் ஆட்சியில் கால்நடைத் துறை எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை பட்டியலிட்டுக் காட்ட விரும்புகிறேன். டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய



கால்நடை வளர்ச்சித் திட்டம்; 49 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 644 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இத்தொடர்புப் பணியாளர்கள் 25,588 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்து உள்ளனர். இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு, இத்திட்டத்தினைப் போன்ற மற்றொரு திட்டம் 5 ஆண்டுகளில் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தி உள்ளதைக் கண்டு, மகிழ்ச்சியடைகின்றனர்.

மேலும், சிறிய கோரிக்கைகள், என்னவென்றால்; கடந்த ஆண்டு 73 கால்நடை மருந்தகங்கள் உருவாக்கப்பட்டன. இன்னும் எத்தனையோ கிராமங்களில் கால்நடை மருத்துவ வசதி தேவைப்படுகிறது. முன்புபோல் இல்லாமல் ஏராளமான கலப்பினக் கன்றுகள் உற்பத்தி அதிகமாகி வருவதால் அவற்றிற்குச் சிகிச்சை அளிக்க ஏராளமான கிளை நிலையங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அமைச்சர் அவர்கள் இங்கே சில கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது புதியக் கிளை நிலையங்கள் துவக்க வேண்டாமென்று அரசு முடிவெடுத்ததாகச் சொல்லி இருக்கிறார்கள். பல கிராமங்களில் உள்ள மக்களின் வசதியைக் கருதி அம்மா அவர்கள் எத்தனையோ நல உதவிகளைச் செய்து வருகிறார்கள். அதனைத் தொடர்ந்து இந்த வாயில்லா ஜீவன்களுக்கு வாழ்வளிக்க நிறைய கிளை நிலையங்களைத் துவக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர், எனக்கு முன்னால் பேசும்போது லாரியிலே மாடுகளை ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்றார். கோழியைத் தலைகீழாக சைக்கிளிலே கட்டிக்கொண்டு போகிறார்கள். இதையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். அதற்கு SPCA மூலமாக — மாநிலம் முழுவதும் ஏராளமான சொத்து இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அந்தக் குழுவிற்குத் தலைவர் — அவர்களும், போலீஸ்காரர்களும் சேர்ந்து மாடு கடத்தல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அம்மா அவர்கள் ஆணையிட வேண்டுமென்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆணையிட வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். அதற்கு அம்மா அவர்களும், கால்நடைத் துறையும் எடுத்த சிறப்புக் கவனம்தான் காரணம் என்று கருதுகிறேன். இந்தியாவில் தமிழகம், முதன்மை மாநிலமாகச் சென்றுகொண்டிருக்கிறது. அதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

கோழிக்காய்ச்சல் நோய் நம் ஊரில் இல்லை. அது ஆறுதல் அளிக்கும் விஷயம். கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஆடு வளர்க்கக் கடன் வழங்க அம்மா அவர்கள் உத்தரவு வழங்க வேண்டும். ஏற்கெனவே அது இருந்தது. இப்போது ஊராட்சி ஒன்றியத்தில் கேட்டால் இல்லை என்று சொல்கிறார்களாம். அதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா 6-7-2003 அன்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது. மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் திரு. செகாவத் அவர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்தார்கள்; நூற்றாண்டு அருங்காட்சியகத்தைத் திறந்துவைத்தார்கள். மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவுத் தூணைத் திறந்துவைத்தார்கள். நமது அன்னையின் ஆட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சிறப்போடு செயல்பட்டு வருவதற்கு இவையெல்லாம் ஓர் அத்தாட்சியாகும்.

அதோடு மட்டுமல்ல. ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையில் மிகவும் சிறப்பாக நாம் செயல்படுகிறோம் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் என்னவென்றால், மாடு கத்தும்போதுகூட 'அம்மா' என்றுதான் கத்துகிறதேயொழிய அப்பா என்று கத்துவதே இல்லை. அதனால் சொல்லிக்கொள்கிறேன், மாட்டுக்குத் தெரிந்ததுகூட மற்றவர்களுக்குத் தெரியவில்லையே (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நினைத்து வருத்தப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கைமீது எனது கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி,
எங்கள் தென்னாட்டில் எந்நாளும்
கொண்டாடும் சேலையடி'



என்ற பாடலுக்கேற்ப கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில் செய்து பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இது பாரம்பரிய, கலை நுணுக்கம் பொருந்திய புராதனமான குடிசைத் தொழிலாகும். ஒரு மோதிரத்திற்குள் நுழையக்கூடிய அளவிற்கு சேலைகளை உருவாக்கித் தயாரித்த வரலாறு தமிழக நெசவாளர்களுக்கு உண்டு.

இன்று தமிழகத்தில் வாழும் சுமார் 12 இலட்சம் நெசவாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 3 ஆண்டுகளாகச் செய்த சாதனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இலவச வேட்டி, சேலைத் திட்டத்தில் ஈடுபட்டுவந்த 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு 20 கிலோ அரிசி வீதம், மொத்தம் 1,324.48 மெட்ரிக் டன் அரிசி ரூபாய் 11.9 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில் மலிவு விலை வேட்டி, சேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சேலை ஒன்றினை ரூபாய் 40–க்கும், வேட்டி ஒன்றினை ரூபாய் 30–க்கும் விற்பனை செய்து, தேங்கியிருந்த 57 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூபாய் 40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டன; ஒரு பெரிய சாதனை அம்மாவின் ஆட்சியில் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு 2004 ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல் 111 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 111 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் ரூபாய் 173 கோடி செலவில் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2005 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். 20,000 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை அளிக்கும் வகையில் இலவச சீருடை உற்பத்தித் திட்டம் 25 கோடி ரூபாய் செலவில் 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

நெசவாளர்களின் நலன் கருதித் தள்ளுபடி மானியம் 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 88 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு சுயமாக வேலை செய்து வருவாயை ஈட்டும் வகையில் பயிற்சி அளிக்க அரசு 20 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இதுவரை 4,930 மகளிர் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடாக் மற்றும் வெங்கடகிரியில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் தமிழக மாணவர்களுக்கு 2002–2003 ஆம் ஆண்டில் உதவித் தொகையாக ரூபாய் 81,000

வழங்கப்பட்டுள்ளது. பல் மருத்துவக் கல்லூரியில் B.D.S., பட்டப் படிப்பு பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு ரூபாய் 3,000/– வீதம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகையாக 2002–2003 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்படுகிறது.

விசைத்தறி நெசவாளர்களின் குறைகளைக் களையவும் ஆலோசனைகளை வழங்கவும் சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகங்களிலும் விசைத்தறி வளர்ச்சிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

மேலும் மீன்வளத் துறையில் இம்மாநிலத்திலுள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட அரசு கீழ்க்காணும் நலத் திட்டங்களை முக்கியமானதாகக் கருதுகிறது:

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம், தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம், ஈமச் சடங்குக்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி; இவற்றைவிட எவ்வளவு நல்ல விஷயங்கள் இருக்கின்றன — எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், எதற்காகச் சொல்லிக்கொள்கிறேன் என்றால் — என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட—ஒரேயொரு நன்றியை மட்டும் சொல்லிக் கொண்டு — என்னுடைய தொகுதியான சைதை தொகுதிக்கு 11 கோடி ரூபாய் செலவில் மேலேயிருந்த cable-களை எல்லாம் பூமிக்கு அடியில் பதித்து, தொகுதி மேம்பாட்டிற்காக உதவிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-15)

ஒரேயொரு கோரிக்கை. என் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் ரோட்டில் பாலம் கட்டிக் கொடுக்கும்படி தொகுதி மக்கள் சார்பிலே மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதை அதிகாரிகளிடம் போய்க் கேட்டோம்; கேட்டவுடன், அதையெல்லாம் ready பண்ணியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், விரைவில் முடித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், கோடைகாலத்தில் தீ விபத்து ஏற்படுகிறது. கோடைகாலத்தில் பல இடங்களிலே குடிசைப் பகுதிகளிலே தீ விபத்து



ஏற்படுகிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அப்படி எரியும்போதெல்லாம் நாம் போய் உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதற்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும். ஏனென்றால் ஏழைகளுக்காக வாழும் ஒரே தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் உதவித் தொகை அதிக அளவிலே தருகிறார்கள், யார் போய்க் கேட்டாலும். Doctor seat என்றாலும் seat; 3 இலட்சம், 2 இலட்சம் என்று அப்படி அள்ளிக் கொடுக்கக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏனென்றால், இதையெல்லாம் நாம் முன்னாலே பார்த்திருக்க முடியாது; இப்போது பார்க்கலாம்; கொடுக்கிறதை இப்போதுதான் பார்க்க முடியும்; இதை முன்னாடியெல்லாம் பார்த்திருக்க முடியாது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்த எரியாத வீடுகள் கட்ட, அதாவது கல்நார் வீடுகளைக் கட்ட 13 ஆயிரம் ரூபாய்தான் ஆகும். குடிசை மாற்று வாரியத்தில் தனி வீடு கட்ட வேண்டுமென்றால், 1¼ இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதனாலே அதற்குக் கல்நார் வீடுகளே கட்டிக் கொடுத்துவிடலாம். ஏனென்றால், என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; என்னுடைய அருகிலே அமர்ந்திருக்கும் தம்பி சேகர்பாபு தொகுதியிலேகூட அப்படித்தான்; நிறையக் குடிசைப் பகுதிதான். அதனாலே, அங்கெல்லாம் கட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். சென்னை மாநகர் பூராவும் இருக்கிறது. மாண்புமிகு திருமதி வளர்மதி அவர்களுடைய தொகுதி; எல்லோருடைய தொகுதியும்தான்; ஆமாம். அதனாலே இந்தக் கல்நார் வீடு கட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதனாலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டித் தர வேண்டும்; வேறு யாராலும் முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டிலே அதிக நிதியை அதற்கு ஒதுக்கித் தரவேண்டும். அதிலும் என்னுடைய தொகுதியில் ஆற்று ஓரத்திலே நிறையக் குடிசை வீடுகள் இருக்கின்றன. அதனாலே, அதையெல்லாம் மாற்றிக் கொடுத்தால், கல்நார் வீடுகளாகக் கட்டிக் கொடுத்தால், 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்தால் ஒரு குடும்பமே வாழும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைக் குடும்பங்களை நிச்சயமாக வாழ வைப்பார்கள் என்ற எண்ணத்திலே இதைச் சொல்கிறேன்.

அடுத்தது, சட்ட திட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் அரசு நம்முடைய அரசு; வேறு எந்த அரசாங்கமும் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன்; ஏனென்றால், இப்போது இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் போய் complaint கொடுத்திருக்கிறார்கள்.

அதற்காகச் சொல்கிறேன் இதை. சட்ட திட்டத்திற்குக் கட்டுப்பட்ட அரசு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டும்தான். 137–வது Division, என் தொகுதிக்குட்பட்ட Division. அங்கே போய் ஒரு சமூக நலக் கூடம் கட்டினேன்; கட்டிவிட்டு திறக்கும்போது நான் ரொம்ப ஆசையாய்ப்போய், அதற்கு அம்மா அவர்களுடைய பெயரை வைக்கவேண்டும்; 'ஜெ.ஜெ. சமூக நலக் கூடம்' என்று சொன்னேன். 'இல்லைங்க, சட்டம் அதற்கு இடம் கொடுக்காது' என்று சொன்னார்கள்; நியாயமான விஷயம். 'சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்றால் வேண்டாம், எனக்கு ஏன் அந்தத் தொல்லை?' அப்படியென்று சொல்லிவிட்டு, சுற்றிப் பார்க்கும்போது, அங்கே ஏற்கெனவே ஜாபர்கான்பேட்டையிலும், தாடண்டர் நகரிலும் இரண்டு சமூக நலக் கூடங்கள்; பார்த்தால், தி.மு.க. தலைவர் பெயரிலே இருக்கிறது. 'இது எப்படி அய்யா வந்தது?' என்று கேட்டேன். 'அதை அவர்கள் சட்டத்தை உடைத்துவிட்டுச் செய்திருப்பார்கள், நாம் சட்டத்தை உடைக்க மாட்டோம்' என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்காக இதை உதாரணமாகச் சொல்கிறேன் என்றால், இதை மாநகராட்சியிலே சொன்னார்கள் என்று நான் சொல்லிவிட்டால், அதிகாரிகள் பெயரைச் சொன்னால், நாளைக்கு, அங்கே போய்த் தொல்லை பண்ணிக்கிட்டு இருக்கக்கூடாது. அதனாலே நான் சொல்லவில்லை. இருந்தாலும் சொல்லிக்கொள்கிறேன்; அப்புறம், அவ்வளவு தூரம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, அம்மாவினுடைய பெயரை வைக்கவில்லை. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், நம்முடைய அரசாங்கம்தான் தாயுள்ளத்தோடு இருக்கும் அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மஸ்தான் தோட்டம்; எங்களுடைய area–விலே இருக்கிறது; அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஏனென்றால், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் பாவம்; பெரிய போராட்டத்திலே இருக்கிறார் அதிலே. மாண்புமிகு அம்மா அவர்கள் நான் தேர்தலிலே நிற்கும்போது வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதியை அளித்ததற்கேற்ப அதிலே 50 allottees-க்கு அதைச் சொந்தமாக்கித் தர வேண்டுமென்று சொன்னார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். அதேமாதிரியே 18–10–2002–ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி குடிசை மாற்று வாரியமும் 26 பேர்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வேறு வாங்கிவிட்டார்கள். இதை வாங்கி ஒரு வருடம் ஆகிவிட்டது. இப்போது திடீரென்று வீட்டு வசதித் துறை அதிகாரிகள், என்ன சொல்கிறார்கள் என்றால், 9 allottees–க்குத்தான் வீடுகள் தரமுடியும்



என்று சொல்கிறார்கள். 1956–லே கொடுத்தது; அங்கே உண்மையாகவே இருப்பவர்களுக்குத்தான் கொடுப்பதாக இருந்தால், மேலேதான் போய்த் தேடவேண்டும் அவர்களையெல்லாம்; ஏனென்றால், 1956. அவர்களெல்லாம் போய் ரொம்ப காலம் ஆகிறது; அவர்களுடைய படம்தான் இருக்கிறது; அதைத்தான் காட்டலாம்; படத்திற்குத்தான் வீட்டை allot பண்ணமுடியும். ஆனால் அதை எப்படி select செய்தார்கள் என்று தெரியவில்லை, இவர்கள்தான் original allottees என்று. அது அந்த அதிகாரிகளுக்குத்தான் வெளிச்சம். நான் அதிகாரிகளைத் தவறாகச் சொல்லவில்லை. வேறேதேனும் சொல்லி, ராதாரவிதான் சொல்லிவிட்டார் என்று நினைக்கக் கூடாது. இருந்தாலும் ஏழை மக்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வாங்கியிருக்கிறார்கள் என்பதற்காக வருத்தப்படுகிறேன். ஏனென்றால், இதற்காக அமைச்சர் அவர்கள் வந்து ஒரு பெரிய போராட்டமே பண்ணிவிட்டார்கள் அன்றைக்கு. இதற்குமேலே ஒருவர்; ஒரு அமைச்சர் போராட முடியாது என்று. அதுவும் புதிதாகப் போட்ட தலைவரும் வந்து இரண்டு நாட்களாகப் போராடி இருக்கிறார்கள். அப்படிப் போராடியும்கூட அதிகாரிகள் சொல்கிற ஒரே வார்த்தை, அந்த ஆறு பேர்தான் allottees என்பது. I was not able to converse with them. ரொம்ப harsh ஆக சில time சொல்கிறார்கள். அதனால் அம்மா அவர்கள் நினைத்தால் ஒரே நாளில் முடிக்க வேண்டிய விஷயம். அதை அதிகாரிகள் ஒரு வருஷமாக நீடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தயவு செய்து தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த 50 பேருக்கும் வீடு தர அவர்கள்தான் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

அதேபோல ஒரு பொது நலக் கோரிக்கை. இது என்னுடைய தொகுதி என்பதற்காக அல்ல. இது ஒரு பொது நலக் கோரிக்கை. ஏனென்றால் கும்பகோணத்திலே school எரிந்தது. தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே போனார்கள். அங்கே போய்ச் செத்த குழந்தைகள் பூராவும் பாவம், அவர்கள் அழுத காட்சிகளையெல்லாம் பார்க்கும்போது நிச்சயமாக மனமே இல்லாதவர்கள்கூடக் கொஞ்சம் கண்ணீர்விட்டிருப்பார்கள். அந்தளவுக்கு அம்மா அவர்கள் ரொம்ப தளர்ந்து போய்விட்டார்கள். அந்த இறந்த குழந்தைகளைப் போய்ப் பார்த்து, எல்லோருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள்; தாயுள்ளத்தோடு கொடுத்தார்கள். அதுமட்டுமல்லாமல் அதிக அளவில் அவர்களை Apollo Hospital–லில்

கொண்டு வந்தெல்லாம் treatment பண்ணினார்கள். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன்? அதையெல்லாம் தப்பாகக் காண்பிக்கிறார்கள். அம்மா வந்தாலே traffic jam என்று சொல்கிறார்கள். அம்மா போனாலும் தப்பு; போகவில்லை என்றாலும் தப்பு. அதற்காகத்தான் நான் சொன்னேன். நாடு நன்றாக இருந்தது முன்னாடி எல்லாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 'எச்' கார்டு போட்டார்கள் அம்மா. கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆகா, இவையெல்லாம் ஏழைகளை பாதிக்கின்றன என்று கத்தினார்கள். சரி, எடுத்துவிட்டார்கள் இப்போது அம்மா. பாராட்டவே மாட்டேன் என்கிறார்கள் யாரும்; அதை ஏன் எடுத்தார்கள் இப்போது. ஏனென்றால் தேர்தலில் தோற்றுவிட்டார்கள். அதனால் எடுத்துவிட்டார்கள். அதற்குத்தான் சொன்னேன், நாடு நன்றாக இருந்தது முன்னாடி, காரணம் சிங்கத்திற்குத் தலையாகவும், நாய்க்கு வாலாகவும் இருந்தார்கள் தலைவர்கள். ஆனால் இப்போது எப்படி என்றால் எதிர்க்கட்சித் தலைவர்கள் பூராவும் சுமக்கப் போகின்ற கழுதை மாதிரி, முன்னாடி போனால் கடிக்கிறார்கள், பின்னாடி வந்தால் உதைக்கிறார்கள். ஒத்துக்கொள்ளவும் மாட்டேன் என்கிறார்கள். அதுதான் கஷ்டமாக இருக்கிறது.

ஏனென்றால் இவர்கள் சொல்கிறார்கள் இல்லையா, 40 தொகுதிகளில் ஜெயித்துவிட்டோம் என்று? இருந்தாலும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், கும்பகோணத்திற்குப் போன அம்மா அவர்கள் எல்லோருக்கும் அள்ளிக் கொடுத்தார்கள். ஆனால் 40 கோடி ரூபாய் வசூல் பண்ணியது ஒரு கட்சி; தேர்தலைச் சந்திக்கப் போகிறோம் என்று சொல்லி, 40 தொகுதிகளிலும் நிற்கப் போகிறோம் என்று சொல்லி, தமிழ்நாட்டு மக்களிடமிருந்து 40 கோடி ரூபாயை வசூல் பண்ணிய கட்சி 15 தொகுதிகளில் நின்று மீதிப் பணத்தை உள்ளே எடுத்துக்கொண்டார்கள். அந்தக் கணக்கை நான் கேட்கவில்லை. இருந்தாலும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், 25 இலட்ச ரூபாய் போய்க் கொடுத்தார்கள் எரிந்ததற்காக. அதை, தலைக்கு 25 இலட்ச ரூபாய் கொடுத்த மாதிரியாக்கிவிட்டார்கள் இப்போது. ஆனால் தலைக்குப் பார்த்தால் 5,000 ரூபாய்தான் தேறும். (குறுக்கீடு) 25,000 ரூபாய் தேறுமா ஒரு ஆளுக்கு? ஆம், 25,000 ரூபாய் தேறும் . இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் 25,000 ரூபாய் தேறுவதைப் போய் 25 இலட்சம் ஆக்கி, அப்படி பேனைப் பெரிதாக்கி, பெரியதைப் பெருமாளாக்கி விடுவார்கள் அவர்கள். அதனால் அப்படிச் சொல்லி



ரொம்ப பெரிய சாதனை பண்ணியது மாதிரி கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் வசூல் பண்ணியவர்கள் 25 இலட்சம் ரூபாய் தருகிறார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படி எரிந்ததற்கு அப்புறம், அது யாரோ கொடுத்த permission, அண்ணா திமுக அரசாங்கத்திலே இல்லை அது. அதற்குப் போய் உடனே நம்ம அம்மா தப்பு பண்ணியது மாதிரி, நம்மதான் போய் நேரா போய்த் தீக்குச்சி கிழித்து மேலே வைத்த மாதிரியே ஒரு தொலைக்காட்சியிலே காண்பிக்கிறார்கள்.

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன்? இப்படியெல்லாம் இருக்கும் நேரத்தில் சென்னை மாநகரத்திலே பல பணக்காரப் பிள்ளைகள் படிக்கும் — எல்லா பணக்கார பிள்ளைகளும் படிக்கின்ற — school இருக்கிறது. உதாரணத்திற்கு Education Minister கேட்டுவிட்டார்கள் என்றால், அதற்காகச் சொல்கிறேன். செட்டிநாடு ஆஸ்ரம் இருக்கிறது; பத்மா சேஷாத்திரி இருக்கிறது; செயின்ட் மைகேல்ஸ் இருக்கிறது; ரோசரி மெட்ரிக் இருக்கிறது, நீங்கள் இங்கெல்லாம் போய்ப் பார்த்தால் காரை வெளியிலே நிறுத்துகிறார்கள். செட்டிநாடு ஆஸ்ரம் உள்ளே இடமில்லாமல் இல்லை. பெரிய கிரவுண்டு எல்லாம் இருக்கிறது. எல்லா கார்களையும் உள்ளே நிறுத்தலாம். போதாக் குறைக்கு அந்த ஊரிலே போகிற கார்களை எல்லாம் நிறுத்த உள்ளே இடமிருக்கிறது. ஆனால் எல்லா கார்களையும் வெளியிலே நிறுத்துகிறார்கள். அமைச்சர்கள் போகிற இடம் இது; Judges போகிற தெரு அந்த main road; அதிலும் all the bureaucrats, அரசாங்க உயர் அதிகாரிகள் போகிற வழி அது. அந்த இடத்தில் வந்து single ஆக நிறுத்தினாலே தப்பு. ஆனால் double ஆக நிறுத்தி ரோடு பூராவையும் அடைத்து, போகவே முடியவில்லை அந்த வழியில். அதுமட்டுமல்ல main road-ஐயே one way ஆக்கிவிட்டார்கள் இப்போது. Gandhi Nagar Fourth Main Road-ஐ one way ஆக்கிவிட்டார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் குழந்தைகள் வெளியே வந்து ஏறுகிறார்கள். பாதுகாப்புக் கிடையாது குழந்தைகளுக்கு. Road-ஐ cross பண்ணும்போது அடிபட்டுவிடுகிறார்கள். அடிபட்டதற்குப் பிறகு அப்புறம் நாம் போய் அழுது புரளுவதைவிட, முன்னாடியே தயவுகூர்ந்து ஒரு hard and fast rule நிச்சயமாக வர வேண்டும். இல்லையென்றால் traffic ரொம்ப nuisance ஆகிவிடும், இதை public grievance என்பதற்காகச் சொல்கிறேன். எங்கள் ஏரியாவிலே நான் காந்தி நகரில் இருக்கிறேன். Fourth Main Road-ஐ one way ஆக்கிவிட்டார்கள். Cancer Institute

போய்ச் சேர வேண்டியவர்கள் போகமுடியவில்லை; கஷ்டப்படுகிறார்கள். அதுபோல செயின்ட் மைக்கேல்ஸ் உள்ளே இருக்கிறது. அந்த ஸ்கூலுக்குப் பெரிய கிரவுண்டு இருக்கிறது. 1,000, 2,000 கார்கள் நிறுத்தக்கூடிய அளவிலே இடம் இருக்கிறது. ஆனால், அங்கேகூட கார்களை நிறுத்தாமல் road-லே நிறுத்தியிருக்கிறார்கள். அதனால் தயவு செய்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் — ஏனென்றால் வேறு எந்த ஆட்சியினாலுமே dare-devil –ஆக எந்த முடிவையும் எடுக்க முடியாது. Correct–ஆன முடிவை, அற்புதமான முடிவை எடுக்க வேண்டுமென்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் மட்டும்தான் எடுக்க முடியும், அதனால் சொல்கிறேன். ஆகவே, தயவு செய்து இதையெல்லாம் மனதில் வைத்து, நீங்கள் நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் *11–55*

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லதொரு அற்புதமான பாடலைப் பாடியிருக்கிறார்கள்.

"தாயில்லாமல் நானில்லை; தானே எவரும் பிறந்ததில்லை"

என்று. அதில், அப்படியே ஒருசில வார்த்தைகளை மாற்றினாலே, அது இந்தக் காலத்திற்கே அவர் பாடியிருக்கிற மாதிரி இருக்கிறது.

"தாயில்லாமல் நாமில்லை; தானே எவரும் பிறந்ததில்லை.

நமக்கொரு தாய் இருக்கின்றார்; என்றும் நம்மைக் காக்கின்றார்."

(மேசையைத் தட்டும் ஒலி)

"ஜீவ நதியாய் வருகின்றார்; நம் தாகம் தீர்த்தே மகிழ்கின்றார்.

தவற்றினை எதிர்ப்பார்; தருமத்தை வளர்ப்பார்.

தமிழகத்தைத் தினம் காத்திடுவார்."

அந்தத் தாய்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்பேர்ப்பட்ட தாயைப் பார்த்து, அதுவும் இப்போது வந்து, பஸ் பாஸ் இலவசம், கரண்ட் இலவசம் விவசாயிகளுக்கு என்றெல்லாம் கொடுத்ததற்குப் பிறகு தேர்தலிலே தோற்றுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். 40 தொகுதிகளிலும் நிச்சயமாக நாம் தோற்கவில்லை. ஏனென்றால், நாம் actual –ஆக ஒரே மாணவனின்



மார்க்கை வைத்து pass, நாம் இந்தத் தேர்தலில். ஆனால், அவர்கள் 7 மாணவர்கள் mark–ஐச் சேர்த்து 40 என்று சொல்கிறார்கள். ஆளாளுக்கு 15, 10, 7, 6 என்று சேர்த்து, மொத்தமாக 40 என்று சொல்கிறார்கள். ஆக, ஒவ்வொரு மாணவனும் தனியாக எடுத்தால் fail தான். அதனால், இந்த மாணவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், அடுத்த தேர்தலில், வருகின்ற தேர்தலிலே எல்லோரும் தனியாக 234 தொகுதிகளிலேயும் நின்று, தனியாக pass mark யார் வாங்குகிறார்களோ, தமிழ்நாடு அவர்கள் பக்கம் இருக்கிறது என்பதை நம்பலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சேலை கட்டிய பெண்மணி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இருக்கும் தைரியம், ஆண் மகனுக்கு இல்லை என்பது எனக்குத் தெரியும். நிற்க மாட்டார்கள் என்று தெரியும். இருந்தாலும் எதற்குச் சொல்கிறேன் என்றால், இந்த 40 தொகுதிகளிலும் அம்மா அவர்களுக்குப் பெரியதொரு தோல்வி; அதனால்தான் பயந்து இதை இலவசம், அதை இலவசம் ஆக்கிவிட்டார்கள் என்று நினைக்கிறார்கள். மக்களுக்கு எது எது பாதிக்கிறதோ, மக்கள் எதனால் பிரச்சினை என்று சொல்கிறார்களோ அதையெல்லாம் தளர்த்தியிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் நான் சொல்கிறேன்? ஒரே ஒரு கதையைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அம்மா அவர்கள் 40 தொகுதிகளிலும் தோற்றதற்குப் பிறகுகூட, நாம் தோல்வியடைந்துவிட்டோம் என்று தெரிந்துகூட, இந்தச் சலுகைகளையெல்லாம் ஏன் கொடுத்திருக்கிறார்களென்றால், இது எப்படி இருக்கிறது என்றால், ** என்பதைக் கூறி எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்குத் தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி நளினி மனோகரன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

***திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் வெள்ளத்திற்கு இடையே மாபெரும் சக்தியாய், நிலையான, நிறைவான வாழ்வளிக்க வந்த இறையாய், இயற்கையாய், ஏழ்மை இருள் நீக்கும் ஒளிவிளக்கே, பசிப்பிணி தீர்க்கும் எங்கள் மாமருந்தே, ஆலயம்தோறும் அன்னமிடும் எங்கள் அன்புத் தாயே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா, உங்கள் பொற்பாதக் கமலங்களை வணங்குகின்றேன்.

நண்பகல் 12-00

மக்கள் இன்னல்களைப் போக்க வந்த மாமணியே, வற்றிய நிலம், மாறாத வளம் காண மழை நீரைச் சேகரிக்க வைத்த தாயே, மாதர்தம் மேம்பாடு காண சுயவேலைவாய்ப்புக் குழுக்கள் தந்து, சுதந்திர உணர்வு தந்தாய்! உணவும் தந்தாய். தோன்றும் அநாதைக் குழந்தைகளைத் தொட்டிலில் அலங்கரித்து ஆராதனை செய்யும் தாயே. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளமாக்க சாதனைத் திட்டங்களை ஏற்படுத்தி ஏழை மக்கள் முகத்தில் வெற்றிப் புன்னகை தவழும் நாளே என் வாழ்வின் திருநாள் என்ற உன்னத குறிக்கோளைச் சுமந்து பீடுநடை போடுபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா. மக்கள் நலனில் அக்கறை காட்டுவதோடு, இந்த நாட்டில் நடமாடும் எண்ணில் அடங்காக் கால்நடைகள் மீதும் கனிவான பார்வையினைக் காட்டும் கருணை நோக்கம் கொண்டவர், நமது அம்மா அவர்கள். கால்நடைகளே இந்திய வேளாண்மைக்கு அடிப்படை ஆதாரம். கிராமப்புறங்களில் வாழும் 75 விழுக்காட்டுக்கு மேலான மக்கள், அன்றாட ஜீவனத்திற்கு கால்நடை, அதனைச் சார்ந்த தொழில்கள் மற்றும் வேளாண்மை ஆகியவற்றை நம்பியுள்ளனர். கால்நடைப் பராமரிப்பு என்பதன் மூலம் எண்ணற்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள் இலாபகரமான வேலைவாய்ப்பைப் பெறுகின்றார்கள். தேசிய பொருளாதாரத்திற்கும் மற்றும் குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பை பெருகச் செய்வதற்கும் கால்நடைப் பிரிவின் பங்களிப்பு பெரிதும் பங்கு வகிக்கின்றது. இயற்கை மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காதவண்ணம் கால்நடைகள் மற்றும் இயற்கை ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்தியதால் மாநிலத்தில் கால்நடைப் பிரிவின் பங்கு குறிப்பிடத்தக்க நிலைக்கு உயர்ந்துள்ளது.

குறிப்பாக, 2003–2004 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி மதிப்பீடு 47.53 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இனிவரும் காலத்திலும் மாண்புமிகு அம்மா அரசின் எழுச்சிமிகு செயல்பாட்டால் உற்பத்தி மதிப்பீடு 100 விழுக்காட்டை எட்டிவிடும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அதிகப்படியான கால்நடைகளின் பராமரிப்புச் செயலை மேலும் மேம்படுத்தும் பொருட்டு பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க இவ்வரசு கனிவான கவனத்தைக் காட்டி வருகின்றது. நிலமற்ற மற்றும் ஏழை விவசாயக் குடும்பங்களைக் கால்நடைப் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்த சமுதாய தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி, தீவன வசதிகள் பெருக்க ஊக்குவித்தல், தீவன விதைகள் அடங்கிய சிறு பைகளை இலவசமாக வழங்குதல், புரதச்சத்து மிக்க சூபாபுல் மரக்கன்றுகளை வளர்த்தல், கால்நடை நிலையங்களில் கற்றாழையைப் பயிர் செய்யவும், விநியோகிக்கவும் ஊக்குவித்தல் என்று பல்வேறு கோணங்களில் அபிவிருத்திக்கான ஏற்றமிகு செயல்கள் நடைபெறுகின்றன.

போளூர் தொகுதி, படவேடு ஊராட்சியில் துணைக் கால்நடை மருந்தகம் உள்ளது. அதை மக்கள் நலன் கருதி கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தரவும், சேதரம்பட்டு ஊராட்சிக்குக் கிளை கால்நடை மருந்தகம் அமைத்துத் தரவும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன். கால்நடை நலம் என்பது தேசத்தின் சொத்து. இவற்றுக்கு நோய் ஏற்படுமானால், விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும். இதனால் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினரே பாதிப்புக்குள்ளாகின்றனர். குறிப்பாக, ஆடுகளுக்கு ஏற்படும் பெரும்பாலான உடல்நலக் குறைவுகளுக்கு அவற்றைத் தாக்கும் குடல் புழுக்களே முக்கிய காரணமாகும். 2003–2004 ஆம் ஆண்டில் செம்மறி ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்வதற்கு ரூ.10 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் மாண்புமிகு அம்மா அரசால் தரப்பட்டுள்ளன என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்படிக் கால்நடைகள் நோயால் பாதிக்கப்படாதவண்ணமும் இறப்பு ஏற்படாதவண்ணமும் கால்நடைகளின் பராமரிப்பிலும், ஆரோக்கியமான வளர்ச்சியிலும் மாண்புமிகு அம்மா அரசு எப்பொழுதும் அதிக கவனம் செலுத்துகிறது.

மாநிலத்தில் மொத்த பறவை இனங்களில் கோழியினம் 98 விழுக்காடாக உள்ளது. நமது மக்களும் கோழி வளர்ப்புத் தொழிலில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இதனால் முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. கால்நடைகளுக்கு முழுமையான சுகாதார பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் கால்நடை மருத்துவப் பணிகளைக் கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களிலேயே வழங்கவும், கிராம மக்களின் மருத்துவப் பட்டதாரிகளுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கவும் மாண்புமிகு அம்மா அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவின் மூலம் குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கும் மருத்துவ உதவி போய்ச் சேரும் வகையில் பல்வேறு செயல்திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் பல்வேறு தொற்று நோய்களான, தொண்டை அடைப்பான், துள்ளுமாரி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சாதனை செய்ததோடு மாடுகள், ஆடுகள் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்து, 2001 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோய் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்பட்டது வரவேற்கத்தக்கதாகும்.

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்யும் முயற்சிகள் போற்றத்தக்கவை.

பிற்பகல் 12–05

கடந்த ஆட்சியின் முறையற்ற, நெசவாளர் விரோதக் கொள்கையால் எரியாத விளக்கும், எரிகின்ற வயிறுமாய் வாழ்ந்து மரணத்தின் தலைவாசலில் வாழ்ந்த நெசவாளர்கள், இந்திய தேசத்தின் தாய் மணிக்கொடியைத் தயாரித்த தமிழக நெசவாளர் சமுதாயம் இன்று எழுந்து நடமாட, நெசவாளர் சமுதாயம் தழைத்தோங்க அதிரடி வாய்ப்பாடுகளைக் கண்டுபிடித்து நாசித் துவாரங்களுக்கு நகர்த்தி வந்திருக்கின்ற அம்மா அவர்களின் பாதக் கமலத்தில் நன்றிப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

அம்மாவின் அருளாட்சியில், அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் வருவதற்கு முன்பே முந்திக்கொண்டு வரும் கண்ணீர்போல் நெசவாளர் சமூகத்தின் வேதனைகளை நெஞ்சில் தத்தெடுத்துக் கொண்டுள்ள அம்மா அவர்கள், நெசவாளர் சமுதாயத்திற்கோர் விடியல் வானம், அள்ளிச் சுரக்கும் அமுதசுரபி; அம்மாவின் அருள்புரியும் சிறகுகளால் அரவணைக்கப்பட்டு, மழை மறைவுப் பிரதேசம்போல கடந்த ஆட்சியில் கவனிக்கப்படாத கண்ணீர் சமூகத்தைக் கரையேற்றி வாழவைக்க, அம்மாவின் அறிவிப்புகள் விழுந்த வேகத்தைவிட எழுந்த வேகம்தான் பெரிது என்பது உலகிற்கு உணர்த்தும் வரலாறு; இதனை வாய் மணக்க உலகிற்கு உணர்த்திய அன்னை நெசவாளர்களின் வாழ்விற்கு ஒரு துளி தாய்ப்பால்.



தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஜவுளித் தொழிலானது தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற மக்களுக்குப் பெருமளவு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது.

நூற்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழில் ஆகியவை இம்மாநில ஜவுளித் தொழிலின் நான்கு தூண்களாக விளங்குகின்றன. மாண்புமிகு அம்மாவின் அரசு 11.64 இலட்சம் நெசவாளர்களுக்கும் மற்றும் 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

31–05–2004 அன்று நடைபெற்ற, அரசு மூலதனங்களைத் திரும்பப் பெறுதல் தொடர்பான அமைச்சரவைக் கூட்டத்தில் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. மேற்படி நூற்பாலைகளைக் குறைந்த அளவு செலவில் நவீனப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜவுளித் தொழிலில் வேகமாக வளர்ந்துவரும் தொழிலான ஆடை உற்பத்தித் தொழில், பன்னாட்டு வணிகத்தில் பெரும்பான்மையான பங்கினை வகிப்பதோடு தமிழ்நாட்டில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவில் அமைந்துள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் அதிக அளவிலான நெசவாளர்களை, சந்தையில் எளிதில் விற்பனை ஆகக்கூடிய இரகங்களான வீட்டு உபயோகத் துணிகள், மிதியடிகள், ஆயத்த ஆடைகள், சமையலறைத் துணிகள் போன்ற இரகங்களின் உற்பத்திக்கு மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. புரட்சித் தலைவி அம்மா அரசு பொறுப்பேற்றபின் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் 320–லிருந்து 487–ஆக உயர்ந்துள்ளன. நெசவாளர் ஓய்வூதியம் ரூ.250–லிருந்து ரூ.350–ஆக உயர்ந்துள்ளது. நெசவாளர் வாரிசுதாரர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/— ஆக உயர்த்தி 15–09–2001 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றிடும் வகையில் இலவச வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் ரூ.40.84 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்

கூட்டுறவுச் சங்கங்களில் பட்டு இரகங்களுக்கு சிறப்புக் கழிவு வழங்கியதன் மூலம் ரூ.60.60 கோடி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஏற்றுமதி உற்பத்தியில் 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.179.00 கோடியும் நடப்பாண்டில் ரூ.122.00 கோடியும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 31–12–1998 முதல் 31–12–2001 வரை வழங்கப்படாமலிருந்த வட்டி மானியத் தொகையை ரூ.27.50 கோடி மாண்புமிகு அம்மா அரசு வழங்கியது.

சென்னிமலை நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய நெசவாளர் காலனி ஏற்படுத்தியதுபோல திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஆரணியை மையமாகக் கொண்டு ரூ.1 கோடி செலவில் நெசவாளர் காலனி அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

திருவண்ணாமலை மாவட்ட பட்டு நெசவாளர்களுக்குத் தேவையான 'ஜக்கார்டு' மற்றும் தள்ளு மெஷின், பட்டு சேலைகளின் கரையில் டிசைன் செய்ய டிசைன் அட்டை பஞ்சிங் மெஷின், பட்டு சேலைக் கணினி வடிவமைப்பு ஆகியவற்றை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட நெசவாளர்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாநிலத்திலேயே முதன்முறையாக, திருவண்ணாமலை மாவட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழு இணையம் மேற்பார்வையில், மாவட்டத் தோட்டக் கலை பண்ணை அமைத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு மகளிர் சுய உதவிக் குழு சார்பில், அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தாயுள்ளத்தோடு ஜமுனாமரத்தூர் மலைவாழ் மக்களுக்காக, அவர்கள் சிரமத்தைப் போக்கும்வகையில், பிரேதப் பரிசோதனை ஆய்வகம் அமைத்திட அனுமதி அளித்ததற்கு, மலைவாழ் மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



போளூர் தொகுதியில், பெரும்பாலான மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள்; படித்த மாணவ, மாணவிகள் நிறைந்த பகுதியாகும்; வாழ்க்கைத் தரம் உயர, தொழிற்சாலைகள் எதுவும் இல்லை; அரசுக் கல்லூரி இல்லை; ஆதலால், விவசாயக் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

தாயே, சுமார் 3,800 ஏக்கர் வேளாண்மை நிலம் பாசன வசதி பெறும்பொருட்டு, அமிர்தி அருகே, நாகநதி ஆற்றின் குறுக்கே, அமிர்தி அணை கட்டித் தருமாறும், குப்பம் ஊராட்சியில், குதிரைபாஞ்சான் ஓடையின் குறுக்கே, ஏரிக்கரை உடைந்து, பாழடைந்துள்ளது; இதனால் சுமார் 2,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி இல்லாமல் ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். இந்த ஏரியை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட படவேடு ஊராட்சியில், டி.வி.எஸ். நிறுவனமும், மகளிர் சுய உதவிக் குழுவின் பெண்களும், வாழை நாரிலிருந்து, வாழை நார்க் கயிறு, வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பலவகைக் கூடை வகைகள் தயாரிக்கிறார்கள். அவை கர்நாடக மாநிலத்தில் விற்பனையாகின்றன. இவற்றை அம்மாவின் அரசு படவேடு மற்றும் பிற பகுதிகளில் உள்ள அரசு கைவினைப் பொருட்கள் விற்பனை அங்காடிகளின் மூலம் விற்பனை செய்ய அனுமதி வழங்கி, மகளிர் வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்ய அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

போளூரில் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தவும், வணிக வளாகம் அமைக்கவும் சுமார் ரூ.2 கோடி அளித்தமைக்கு, போளூர் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

போளூர் பேரூராட்சி ஊராட்சியாகத் தரம் குறைக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 25,492 எனத் தவறுதலாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், 10,000—க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் 22,000 பேர் வாக்காளர்கள். பேரூராட்சிக்கு ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சம் ஆகும். எனவே, நகராட்சியாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்குமாறு அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

போளூரில் பேருந்து பணிமனை, திறந்த மந்தைவெளியில், மயானப் பகுதியில், வாடகை இடத்தில் இயங்கி வருகிறது. போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான அரசு நிலம் உள்ளது. அந்த இடத்தில், பேருந்துப் பணிமனை அமைத்துத் தர, மாண்புமிகு அம்மா அவர்களைத் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜமுனாமரத்தூர் மலைவாழ் மக்களுக்காக, நம்பியம்பட்டு முதல் வேலூர் வரை அரசுப் பேருந்து இயக்கித் தருமாறு அம்மா அவர்களை, மலைவாழ் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் வட்டத்திற்குட்பட்ட தனியார் சர்க்கரை ஆலை, விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கரும்புச் சாகுபடித் தொகையினை, உரிய காலத்தில் பட்டுவாடா செய்யாமல், காலந்தாழ்த்தி வருவதை மாற்றி, உடனடிப் பட்டுவாடா செய்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிபுரியுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் பன்முக வளர்ச்சிக்காகப் பல நல்ல திட்டங்களை வாரி வழங்கும் தாயுள்ளமே, எங்கள் மக்கள் சக்தியே, அறிவியல் தமிழை மாணவர்கள் அனைவருக்கும் உரியதாக்கி ஆணையை பிறப்பித்த, தமிழ் தரணிப் பெற்ற எங்கள் பெரும் தவமே! கருணையற்ற கயவர்களால் விளைந்த நிதிவறட்சியிலும், வான் பொய்த்தும் தான் பொய்யா ஜீவநதியாய், ஏழையின் தேவைக்கு நல்ல திட்டங்களை நன்கு செயல்படுத்தி, ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பரை, உழைப்பவராக்கி, ஓடப்பர், உயரப்பர் என்ற நிலை மாறி, ஒப்பப்பர் ஆக்கிடும் எங்கள் சமத்துவ நாயகியே! உங்களால் மக்கள் மகிழ்கின்றனர்; மக்களாட்சியும் மணம் வீசுகின்றது. இந்நன்னாளில், உங்களின் இந்த விசுவாசிக்கும் ஒரு வாய்ப்பளித்த தாயே! மீண்டும உங்களை வணங்கி, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி மல்லிகா சின்னசாமி.

***திருமதி மல்லிகா சின்னசாமி:** நான் அனுதினமும் வணங்கும் எங்களின் இதய தெய்வம், எங்களை எல்லாம் வாழவைக்கும் கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதம் தொட்டு வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கும் கால்நடை பராமரிப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கைகளிலே உரையாற்ற வாய்ப்பினை வழங்கியமைக்கு நன்றிகூறித் தொடங்குகிறேன்.

பிற்பகல் 12–15

கடமையாற்றும் இமயம்! கழகம் காத்திடும் காவல் தெய்வம்! கனல் வீசும் பகைமைகளை அமைதியாய்க் கடந்து கழகத்தைக் காக்கின்ற காவியத் தலைவி, எங்கள் தலைவி. தடைகளைத் தகர்த்து தமிழகத்தைக் காக்கின்ற தானைத் தலைவி எங்கள் தலைவி, புரட்சித் தலைவி. அன்று மயிலுக்குப் போர்வை தந்து மனம் குளிர்ந்தான் பேகன். இன்று பெண் மயிலுக்குத் தொட்டில் தந்து மகிழ்ந்திட்டார் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அன்று முல்லைக்குத் தேர் தந்து முகம் மலர்ந்தான் பாரி. இன்று பிள்ளைக்கு உணவு தந்து உள்ளம் மகிழ்ந்திட்டார் எங்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அஞ்சாமையின் தொகுப்பே எங்கள் தலைவி புரட்சித் தலைவி. அறிவாற்றலின் இருப்பே எங்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முட்டுக்கட்டை போட்டே முடக்க நினைக்கும் தட்டுக் கெட்ட கூட்டம்; அதைத் தவிடு பொடியாக்கி, தமிழ்நாட்டைக் காக்கின்ற தங்கத் தலைவி எங்கள் புரட்சித் தலைவி. விடியலைத் தேடிய மக்களை, விஞ்ஞான உலகிற்கு இட்டுச் சென்ற விவேகத் தலைவி எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தரணியிலே தமிழகத்தை உயர்த்துகின்ற தங்கத் தலைவி எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சோதனைகளைச் சாதனைகளாக்கிய சிங்கத் தலைவி எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கால்நடைகளே இந்திய வேளாண்மைக்கு அடிப்படை ஆதாரமாய் அமைந்துள்ளது. கால்நடைப் பராமரிப்புத் துறை, மாநிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதி மற்றும் மரபியல்ரீதியாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றது. இதுமட்டுமின்றி ஏழை, எளிய அடித்தளத்து மற்றும் நலிவுற்ற சமுதாயப் பிரிவினைச் சேர்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நலனிற்கும் பயன்தரும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

1998–1999 ஆம் ஆண்டில் 42.73 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த பால் உற்பத்தி 2003–2004 ஆம் ஆண்டில் 47.53 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

ஆட்சியிலே. அதேபோன்று முட்டை உற்பத்தியும் தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியும் அதிகரித்தது நம் அம்மாவின் ஆட்சியிலே.

நமது மாநிலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் வியக்கத்தக்க அளவிற்கு வளர்ந்துள்ளது. முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் நாட்டில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இதுவரை குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது.

புறக்கடை வான்கோழி வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், வான் கோழிப் பிரிவு ஒன்று ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் ரூ.1.21 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது நம்முடைய அம்மாவின் ஆட்சியிலே.

சிறப்புத் திட்டமாக மலைப் பகுதி மேம்பாடுத் திட்டத்திற்காக ரூ.23.50 இலட்சம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது நம்முடைய அம்மாவின் ஆட்சியில்.

கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிறதுப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளுபடி மானியத் தொகையாக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.75 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2003–2004 ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கென ரூ.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிறதுப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது நம் அம்மாவின் ஆட்சியிலே. இது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

கோ ஆப்டெக்ஸ் மற்றும் பிறதுப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1998 முதல் 2001 வரை வழங்காமல் இருந்த வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடி வழங்கப்பட்டுள்ளது நம்முடைய அம்மாவின் ஆட்சியில். மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கைகளாலும், இன்று நிதிநிலை சீரடைந்து, நிர்வாகத்தை செம்மைப்படுத்தி, நிறுத்தி வைக்கப்பட்ட சலுகைகளையும், நலத்திட்டங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அறிவித்து, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் உத்தரவு, விவசாயிகளுக்கு வட்டி, அபராத வட்டித் தள்ளுபடி, அனைத்து பொது மக்களுக்கும் குடும்ப அட்டைகளுக்கு ரேஷன் அரிசி வழங்கும் உத்தரவு, ஏழை ஆதி திராவிடர்



மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் உத்தரவு, சத்துணவுத் திட்டத்தைச் சீரமைத்து ஊட்டச்சத்து வழங்கும் உத்தரவு இதுபோன்ற எண்ணற்றச் சலுகைகளை அறிவித்து மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்களின் நன்றியினைக் காணிக்கையாக்குகிறோம்.

பிற்பகல் 12–20

எனது தொகுதியின் ஒருசில கோரிக்கைகளை எடுத்துக்கூறி விடைபெறுகிறேன். முசிறி தொகுதி; முசிறியில் சேலம் சாலையில் நீண்ட காலமாகப் பழைய பேருந்து நிலையம் செயல்பட்டு வந்தது. தற்போது அப்பழைய பேருந்து நிலையம் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. 3–1–2004 அன்று முதல் முசிறியில் புதிதாகக் கட்டப்பட்ட புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இப்புதிய பேருந்து நிலையத்திற்கும், பழைய பேருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2.5 கிலோ மீட்டர் ஆகும். ஆனால் பழைய பேருந்து நிலையம் அருகில் 90 சதவிகித அரசு அலுவலகங்கள் உள்ளன. இதனால் முசிறி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 50–க்கும் மேற்பட்ட கிராம பொது மக்களும், பள்ளி, மாணவ, மாணவியரும், அரசு அலுவலர்களும் பயன்பெற்று வந்தனர். எனவே, பொது மக்கள் நலன் கருதி இப்பழைய பேருந்து நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடும், தாயுள்ளத்தோடும் நகரப் பேருந்து நிலையமாக இயக்குவதற்கு வழிவகை செய்துதர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

முசிறி ஒன்றியத்தில் காவிரி கரைபோரப் பகுதி விவசாயிகளைக் காப்பாற்றி வருவது குளித்தலை–முசிறி பாலத்தின் அருகில் அமைந்துள்ள குரம்பு; பாசனத்துக்குத் தண்ணீர் வழங்கும் வகையில் குரம்பு கட்டும் பணியை நிரந்தரமாக்கினால் காவிரியில் தண்ணீர் மிகக் குறைவாக வந்தாலும் முசிறி, உமையாள்புரம், வெள்ளூர், அய்யம்பாளையம், ஆமூர், குணசீலம், கோட்டூர் பகுதிகளில் உள்ள நன்செய் நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயம் செழிக்க உதவும்.

முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான முசிறி–புலிவலம் வரையுள்ள 24 கிலோ மீட்டர் தூரம் சாலையில் 4 கிலோ மீட்டர் தூரச் சாலையினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதன்மூலமாக 4 கிலோ மீட்டர் தூரம் உள்ள சாலை மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள 20 கிலோ

மீட்டர் தூரச் சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. இச்சாலையினை மேம்படுத்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முசிறி சட்டமன்றத் தொகுதி, முசிறி, மண்ணச்சநல்லூர் ஒன்றியங்கள் நன்செய் நிலம் குறைந்த நிலப்பகுதி ஆகும். வான் மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகள் கடந்த இரண்டாண்டுகால வறட்சியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே முசிறி, மண்ணச்சநல்லூர் ஒன்றியப் பகுதிகளில் உள்ள பாசனத்திற்குப் பயன்படும் ஏரிகள், தூர்வாரும் பணியைப் பொதுப் பணித் துறை மூலம் செயல்படுத்தி, மழைக்காலத்தில் கிடைக்கும் தண்ணீரைச் சேமித்து விவசாயம் செய்து, விவசாயிகள் பயன்பெறச் செய்ய பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முசிறி, மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களின் வடக்குப் பகுதியில் காட்டாற்று ஓடைகள் நிறைய உள்ளன. மழைக்காலத்தில் நிறையத் தண்ணீர் வரும். ஆனால் எதற்கும் பயன்படாமல் வீணாகி விடுகிறது. மேற்கண்ட ஓடைகளின் குறுக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் அல்லது மூன்று கிலோ மீட்டருக்கு ஒன்று வீதம் தடுப்பு அணைகள் கட்டித் தண்ணீரைத் தேக்கினால் அதன்மூலம் நிலத்தடி நீர்வளம் பெருக அரிய வாய்ப்பாக அமையும்.

பிற்பகல் 12–25

முசிறி தொகுதி மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் காவிரிப் பாசனப் பகுதியில் பாயும் பெருவளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால், பங்குனி வாய்க்கால், அய்யன் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்கள் மற்றும் அதன் கிளை வாய்க்கால்களும் மேடிட்டு இருப்பதால் விவசாயிகளுக்குப் போதிய தண்ணீர் கிடைக்காமல் பயிர் காயும் நிலை ஏற்படுகிறது. எனவே இவற்றைப் பொதுப் பணித் துறை மூலமாக தூர் வாரிப் பாசன வசதி செய்து கொடுத்து ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் சென்னை நெடுஞ்சாலையிலிருந்து கொணலை ஆயக்குடிக்கு இடையில் உள்ள காட்டாற்று ஓடையில் ஒரு



பாலம் கட்டித் தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் நெடுஞ்சாலையில் இருந்து சிறுகாம்பூர், செல்லும் சாலையில் பெருவளை வாய்க்காலின் குறுக்கே பழுதடைந்த பழைய பாலம் ஒன்று உள்ளது. இது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதன் வழியாக துறையூர் வரையிலும் பேருந்துகளும், விவசாய விளைபொருட்களை ஏற்றிச்செல்லும் லாரிகளும், நூற்றுக்கணக்கில் சென்று வருகின்றன; எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே இந்த இடத்தில் புதிய பாலம் கட்டித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூர் எதுமலை பாலையூர் செல்லும் நெடுஞ்சாலையில் குறுக்கே ஓடும் காட்டாற்று ஓடையில் மழைக்காலங்களில் நீர் பெருக்கெடுத்து ஓடும்பொழுது போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது. பொதுமக்களும் மாணவ, மாணவியர்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த இடத்தில் ஓடையின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறை மூலமாகப் பாலம் ஒன்று கட்டித் தருமாறு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முசிறி தொகுதியில் மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து தேர்ச்சி விகிதாச்சாரம் 96%, 98% என்று பெற்றுத் தருகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளி மாணவிகள் மரத்தடியில் தங்கிப் படிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடத்தையும் அங்கு குறைவாக இருக்கக்கூடிய ஆசிரியர்களையும் நியமனம் செய்து தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்கள் பவள விழாவினைக் கடந்து பொன் விழாவினைக் கண்டு, வைர விழாவினை நோக்கி நூற்றாண்டுகள் நன்மை நிலைக்கப் பெறுவது எங்கள் அன்னையின் தலைமையிலேயே என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கு. கலாவதி.

**திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்றார் கவிமணி. ஆனால் நாங்கள் எல்லாம் செய்த தவப் பயனாக இந்த மண்ணுலகில் இதய தெய்வமாகப் பிறந்து, தமிழகத்து

மக்களை எல்லாம், தாயாக இருந்து காப்பாற்றி வருகிறார் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கால்நடைத் துறை மற்றும் கைத்தறித் துறை மானியத்தில் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்ததற்கு தலைவணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், கால்நடைகளை முறையாகப் பராமரிப்பு செய்வதற்கும் தீவன அபிவிருத்தி செய்வதற்கும் ஒவ்வொரு ஊராட்சியின்கீழ் அரசின் உதவியுடன் கால்நடை வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வருகிறார் என்பதை நல்ல உள்ளம் கொண்ட எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ்நாட்டில் கால்நடை சந்தைக்குரிய அடிப்படை உள்ளிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஒரு சந்தைக்கு ரூ.2.61 இலட்சம் வீதம் 10 சந்தைகளைத் தரம் உயர்த்துவதற்கு மொத்தம் ரூ.26.10 இலட்சம் செலவு செய்ய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.

2004-2005 ஆம் ஆண்டில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.336.75 இலட்சம் செலவில் 75 கால்நடை கிளை நிலையங்களை, கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியதை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது

பிற்பகல் 12–30

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வட்டாரத் தலைமையிடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு வசதியை அளிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டில் 50 கால்நடை நிலையங்களுக்கு தகவல் தொடர்பு வசதி (தொலைபேசி) ரூ.2.50 இலட்சம் செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு மக்கள் சார்பாகப் பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2004–2005 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக உயிர்த்



தொழில்நுட்பவியலில் M.Phil. பட்டப் படிப்பு மற்றும் உயிர் நுட்பத் தகவலியலில் முதுகலைப் பட்டப் படிப்பு ஆகிய இரண்டு பாடப்பிரிவுகளும் துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சீரிய முயற்சி கொண்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேக்க நிலையில் இருந்த கைத்தறித் துணிகளை, பல்வேறு முயற்சிகள் எடுத்து சரக்கு இருப்பினை ரூ.242.21 கோடியாகக் குறைத்து, மூன்றாண்டு காலத்தில் ரூ.1639.86 கோடி அளவிற்கு விற்பனையும் மேற்கொண்டுள்ளதை நல்ல மனம் கொண்ட உள்ளங்கள் பாராட்ட வேண்டும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளை மாவட்ட அளவில் நடத்தப்படும் கண்காட்சியின் மூலம் ரூ.360.23 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்தமைக்கு மக்கள் சார்பாக இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டு, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி, 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.225.00 கோடி அளவிற்கு ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது எல்லோராலும் பாராட்டப்படும் செயலாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, தாங்கள் நெசவாளர் குடும்பங்கள் மீது கொண்டுள்ள பற்றினை எவராலும் மறக்க முடியாது. 2004–2005 ஆம் ஆண்டில் நெசவாளர்கள் சார்பில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு முனைமைத் தொகையான ரூ.130/–ஐ மாநில அரசே செலுத்தும் என்று அறிவித்ததை நல்லவர்கள் பாராட்டியே ஆக வேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2004–2005 ஆம் ஆண்டில் 100 தொழிற்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்ட ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்தது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மக்கள் சார்பாக அம்மாவிற்கு இதயபூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ரூ.202 இலட்சம் செலவில் 5,000 மகளிர் நெசவாளர்களுக்குத் தையல் மற்றும் இயந்திர வேலைகளில் பயிற்சி அளித்தது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

கொல்லிமலையில் வலப்பூர் முதல் குழி வளவு வரை தார்ச் சாலை அமைக்க ரூ.44 இலட்சம் நிதி ஒதுக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேளாண்மைத் துறையில் இருந்து கொல்லிமலை, மலைவாழ் மக்களுக்கு ரூ.93 இலட்சம் நிதி ஒதுக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மலைவாழ் மக்களுக்குத் தொகுப்பு வீடு, கறவை மாடு, வெள்ளாடு என மலைவாழ் மக்களின் தரத்தை உயர்த்துவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-35*

எனது தொகுதியில் உள்ள கொல்லிமலைக்குச் செல்வதற்கு ஒரு வழிப்பாதைதான் உள்ளது. அது, 72 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட மலைப்பாதையாகும். அந்த கொண்டை ஊசி வளைவுப் பாதைகளில் பஸ், லாரி சென்று வரும்பொழுது நிறைய விபத்துகள் ஏற்பட்டு உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளின் விளைபொருட்களைக் குறைந்த வாடகையில் எடுத்துச் செல்லவும், மலைவாழ் மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் பயன்பெறவும், முள்ளுக்குறிச்சி முதல் நரியன்காடு வரை உள்ள இடைப்பட்ட சாலை — மலைப்பாதையாகும். அதன் இடையில் — 3 கி.மீ. சாலை அமைக்கப்படாமல் உள்ளது. ஆகவே, அம்மா அவர்கள், முள்ளுக்குறிச்சி — நரியன்காடு சாலை — அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியிலுள்ள ஊனாந்தாங்கல் ஊராட்சியில் உள்ள
செக்கடி கிராமம் அருகில், வாச்சுக்கல் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை
அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள
புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு, பட்டணம் — சீராப்பள்ளி கூட்டுக்
குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துமாறு இதய தெய்வம் அம்மா
அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். பாலப்பட்டியில் இருந்து
பெரியகோம்பை செல்வதற்கு பாலம் அமைத்துக் கொடுக்குமாறு இதய
தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மங்களபுரம் முதல்
தாண்டக்கவுண்டன்பாளையத்தின் வழியாக நாகப்பட்டினத்திற்குத் தார்ச்
சாலை அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன். சிங்கலியன்கோம்பை முதல் நாரைக்கிணறு வரை
தார்ச் சாலை அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிங்கலியன்கோம்பை, இராமநாதபுரம்
புதுக்காடு கிராம மக்களுக்கு நிலப்பட்டா வழங்குமாறு இதய தெய்வம்
அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.
வரகூர்கோம்பையில் இருந்து கொலக்கமேடு கிராமத்திற்குத் தார்ச் சாலை
அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆலத்தூர் குண்டுனி முதல் கீரக்காடு வரை தார்ச் சாலை அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புளியம்பட்டி முதல் வாழூகுழி வரை தார்ச் சாலை அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வெள்ளக்கல் ஆறு முதல் வீரகனூர் வரை தார்ச் சாலை அமைத்துக் கொடுக்குமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலைக்குக் கூடுதலாக 2 பேருந்துகள் இயக்க உதவிடுமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலையில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபைக்கு வாராமல் இருந்துகொண்டு, இதய தெய்வம் அம்மாவைக் குறை சொல்லிக்கொண்டு அப்பனுக்குப் பதவி, மகனுக்குப் பதவி, மாமனுக்குப் பதவி, பேரனுக்குப் பதவி, பாட்டாளியா? நீங்க வாங்க, காங்கிரசா? நீங்க வாங்க, கம்யூனிஸ்ட்டா? நீங்க வாங்க என்று

சுட்டிட்டு பதவிச் சுகம் அனுபவிப்பவர்கள் நீங்கள். எங்கள் அம்மா அப்படியில்லை. தன்னந்தனியாக நின்று போட்டியைச் சந்தித்து வெற்றி பெறுபவர் எங்கள் அம்மா. எங்கள் அம்மாவைப்போல் தனியாக நின்று நீங்கள் வெற்றி பெற்றிருந்தால், நீங்கள் வீராப்புப் பேசினால் நாங்கள் அதை ஒத்துக்கொள்வோம். பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட, நிறம் மாறும் பச்சோந்திகளை மக்கள் மாமன்றத்தில் தோலுரித்துக் காட்டும் காலம், மிக விரைவில் அரங்கேறத்தான் போகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதுபோல, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டும்; தமிழ்நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் இரவு பகல் பாராமல் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார். எனக்கு இந்த வாய்ப்புக் கொடுத்ததற்கு, இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு'

என்னும் வள்ளுவர் நெறி தவறாது ஆட்சி புரிகின்ற நல்லவரே, நானிலம் முதல்வரே, நற்றவத் தாயே!

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்ற குறள்வழி நின்று, நாளெல்லாம், 20 மணி நேரமாய், குன்றாது உழைத்து மக்கள் துயர் துடைக்கும் மனித தெய்வமே!

பிற்பகல் 12-40

வரலாறு படைப்பதாய் வாய்ச் சவடால் பேசும் சில்லறைத் தலைவர்கள் மத்தியில், வரலாறாய் வாழ்ந்துவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் நினைத்தால் நடவாதது ஒன்றும் இல்லை. எண்ணற்ற தேவைகள் மக்கள் மனதில் ஏராளம்; பொன்மனத் தாயே!



பூர்த்தி செய்தீர்கள் தாராளம். விலைவாசி உயர்ந்தால் மக்கள் துன்புறுவர் என்று உணர்ந்து விலையேற்றிடாமல் அரிசியை விநியோகம் செய்திட்ட தர்மத் தலைவியே, தங்கமனத் தலைவியே!

விவசாயம் நாட்டில் செழித்தால், மக்களுக்கு விடிவுகாலம் பிறந்திடும் என உணர்ந்து, இந்தியாவே வியந்திடும்வண்ணம் இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கிட்ட இந்திய மாநிலங்களின் முதல் மாநில முதல்வரே, 'செய்யும் தொழிலைச் சீர்தூக்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்பது சான்றோர் வாக்கு. வேளாண் தொழிலுக்கு இணையான மேலான தொழிலாம், நெய்யும் தொழில். அத்தகைய சீர்பெறும் நெசவாளர்கள் வாழ்வில் ஒளியேற்றிட, தனிப் பெரும் தலைவியாய், தகைமைசால் உள்ளத்துடன் புதுப் புதுத் திட்டங்கள், பல பல தந்த தாயுள்ளத் தலைவியே! தமிழகத்தின் விடிவெள்ளியே! நெசவாளர்கள் துன்பம் தீர, நல்ல முடிவெடுத்து நேர்த்தியுடன் ஆணையிட்டீர்கள், மீண்டும் இலவச வேட்டி சேலைத் திட்டத்தை அமல்படுத்த! அதுமட்டுமா? 81 இலட்சம் என்றிருந்த அளவை மாற்றி, 111 இலட்சம் வேட்டி சேலைகளை வழங்கி, பத்தோடு பதினொன்றாய, வாழும் தலைவர்கள் அதிர்ந்திட, கோடியில் ஒரு தலைவியாய் ஆணையிட்டீர்கள், தாயே! அறிவு ஜீவிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் அரைவேக்காட்டுத் தலைவர்களும் வியந்திட நீங்கள் ஆணையிட்டீர்கள், குறைவில்லாது பருத்தியுடன் பாலியஸ்டர் இழை சேர்த்து இலவச வேட்டி சேலைத் திட்டத்தை நிறைவேற்றுக என்று. இன்று அந்த வேட்டி சேலைகள் தமக்கும் வேண்டும் எனச் சீமான்களும், சீமாட்டிகளும் விரும்புகின்றனர், சீர்மிகு தரத்தை உறுதி செய்த காரணத்தால். ஆடைகளின் அணி வகுப்பு அணிபவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அந்த ஆடை நெய்யும் நெசவாளிகளும் நேர்த்தியாய் வாழவே அரும்பெருந் திட்டங்கள் அருள் வெள்ளமாய்த் தீட்டி, அற்புத வாழ்வுதன்னை நெசவாளருக்கு அளித்திட்ட தாயே!

இறந்த நெசவாளர்கள் குடும்பம் தவித்திடக் கூடாது என்று இரக்க மனதாய் அறிவித்தீர் நெசவாளர்கள் இன்ஸ்யூரன்ஸ் திட்டம், இரட்டிப்புப் பயன் பெற்றிடவே; புதிய காப்பீட்டுத் திட்டம் கண்ட ஆற்றல்மிக்க அன்னையே, அருந்தமிழே, நெசவாளர்களுடைய குல தெய்வமே! தங்களுடைய பொற்பாதங்களை வணங்கி என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் இங்கே வரவில்லை. இந்த அவையிலே இருந்து மக்களின் பிரச்சினையைப் பேசவேண்டியவர்கள் நடு ரோட்டில் அமர்ந்துகொண்டு போட்டி சட்டமன்றத்தை நடத்துகிறார்கள். யார் யார் எங்கு பேசவேண்டும் என்பது காலத்தினுடைய கட்டாயமாகும். ஆகையால்தான், நாங்கள் அவையிலே இருந்து மக்களின் பிரச்சினையைப் பேசுகிறோம்; அவர்கள் மயிலை மாங்கொல்லையிலிருந்து புழுதி வாரித் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவைக்கு வரவேண்டியவரும் வருவதில்லை; வரவேண்டிய சட்டமன்ற உறுப்பினர்களையும் வரவிடுவதில்லை; புதிதாகக் கூட்டணியில் சேர்ந்தவர்களையும் வரவிடுவதில்லை. பன்றியோடு சேர்ந்த கன்றுபோல அவர்களோடு இவர்களும் சேர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) கோட்டைக்கும், கவர்னர் மாளிகைக்கும் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சேர்ந்துகொண்டு எங்கு சுற்றித் திரிந்தாலும், எங்களது தலைவியைத் தமிழக மக்களின் மனதிலிருந்து நீக்கிவிடவும் முடியாது; அகற்றிவிடவும் முடியாது; வீழ்த்திவிடவும் முடியாது என்பதை இந்தநேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும், இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்குவேன் எனச் சபதம் செய்து, ஒவ்வொரு துறையிலேயும் முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சபதம் ஈடேறும்வகையில், தமிழகத்தின் கைத்தறி மற்றும் துணித் தொழில், பல்வேறு இனங்களிலே இந்தியாவிலேயே முதன்மைபெற்று விளங்குகிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அம்மா அவர்கள் பல்வேறு சீரிய திட்டங்களை வகுத்துள்ளார்கள்.

பிற்பகல் 12-45

கடந்த 5 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் செய்த திட்டங்களை, எங்களது தாய் மாண்புமிகு அம்மா அவர்கள், 3 ஆண்டுக் கால ஆட்சியில் செய்து சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வதிலே எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்மீது கொண்ட அக்கறையின் காரணமாக, பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 285 கோடியே 59 இலட்சமாக இருந்த



நிதியொதுக்கீட்டினைத் தற்போது நெசவாளர்களின் நலனை மனதில் கொண்டு, கைத்தறித் துறையின் வரலாற்றிலே இதுவரை கண்டிராத அளவில் ரூபாய் 304 கோடியே 50 இலட்சம் அளவிற்கு நிதியொதுக்கீட்டினை உயர்த்தி வழங்கி, நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளுபடி மானியமாக ரூபாய் 268 கோடியே 72 இலட்சம் மட்டுமே வழங்கினார்கள். நெசவாளர்களின்மீது உண்மையான அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த 3 ஆண்டுக் காலத்தில் தள்ளுபடி மானியத்திற்கென 306 கோடி ரூபாயை வாரி வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோ-ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையை அதிகரிக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு, ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி 31 ஆம் தேதிவரை 20 சதவிகிதம் தள்ளுபடி மானியத்தோடு கூடுதலாக 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி மானியம் வழங்கியதால், 2002-2003 ஆம் ஆண்டில் ரூபாய் 116 கோடியே 28 இலட்சம் மதிப்பிற்கும் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 173 கோடியே 81 இலட்சம் மதிப்பிற்கும் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு மாவட்டங்களில் கடந்த 2 ஆண்டுகளிலே 19 மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூபாய் 6 கோடியே 81 இலட்சம் மதிப்பிற்குக் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன. கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கும்வகையில், இந்த ஆண்டில் 15 மாவட்டத் தலைநகரங்களிலே மாவட்ட அளவிலான கண்காட்சிகள், ரூபாய் 30 இலட்சம் செலவில் நடத்தப்படும் என்பதை இம் மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் கடைசி 3 ஆண்டுக் காலத்தில் ரூபாய் 58 கோடி மட்டுமே மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 3 ஆண்டுக் காலத்தில் மட்டும் மைய அரசிடமிருந்து 85 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி பெற்று நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைத்தறித் துணிகள், ரூபாய் 1,251 கோடி அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, ரூபாய் 1,523 கோடிக்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் நிர்வாகத் திறமையினால் 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 1,320 கோடி ரூபாய் அளவிற்குத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு 1,640 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001 ஆம் ஆண்டில் தி.மு.க., ஆட்சியைவிட்டு இறங்கும்போது, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, ரூபாய் 61 கோடியாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், இன்று 6 கோடி ரூபாயாக அது குறைக்கப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலை சீரடைந்து, நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தி.மு.க. அரசு, ஆட்சியைவிட்டு இறங்கும்போது, ரூபாய் 442 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடந்தன. மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரைப்படி, கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு, ரூபாய் 212 கோடியே 21 இலட்சமாகக் குறைக்கப்பட்டு, சரக்குத் தேக்கம் என்ற நிலை, தற்போது இல்லை என்பதை இம்மாமன்றத்தின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டிக்குப் பணம் வாங்கி அட்டிகை செய்து, அட்டிகையை விற்று, வட்டிகட்டிய கதைபோல கடந்த தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் வாங்கிய கடனுக்கு வட்டிகூடக் கட்டமுடியாத சூழ்நிலையையும், நெசவாளர்களுக்குக் கூலிகூட தரமுடியாமல் இருந்ததையும் எந்த ஒரு நெசவாளரும் மறந்துவிட மாட்டார்கள். 1995-1996 ஆம் ஆண்டு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில், சுமார் 851 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கி வந்தன. 2001-லே தி.மு.க. ஆட்சியைவிட்டு இறங்கும்பொழுது, அவர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டினாலும், ஊழல் செய்ததினாலும், 320 கூட்டுறவுச் சங்கங்கள்தான் இலாபத்திலே இயங்கி வந்தன. ஆனால், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால், இன்றையதினம் சுமார் 527-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு



இறுதிக்குள் சுமார் 700-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கக்கூடிய நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், ஏற்றுமதி விற்பனை 117 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி, இந்த 3 ஆண்டுக் காலத்தில் மட்டும் 520 கோடியே 27 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டிற்கு ஏற்றுமதியாளர்கள்மூலம் 225 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி விற்பனையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், தொடர்ந்து நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள், இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ இறக்க நேரிட்டால், அவர்களுக்குக் கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்கும் நோக்கத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசால், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த, சுய காப்பீட்டுத் திட்டத்திற்கு மாற்றாக, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து 'புங்கர் பீமா யோஜனா' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், 2004-2005 ஆம் நிதியாண்டு முதல், நெசவாளர்கள் சார்பில் ஒவ்வொரு நெசவாளரும் இந்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்தவேண்டிய ஆண்டுக் காப்பீட்டுக் கட்டணம் ரூ.130-ஐ மாநில அரசே செலுத்தும் எனவும், நெசவாளர்கள்மீது என்றென்றும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், 15-6-2004 அன்று அறிவித்துள்ளார்கள். இப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர்கள் இயற்கை மரணம் எய்தினால், ரூபாய் ஐம்பதாயிரமும், விபத்தினால் மரணமடைந்தால், ரூபாய் எண்பதாயிரமும் நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும். இதுதவிர, கருணைத் தொகையாக கோ-ஆப்டெக்ஸ் சார்பில் ரூபாய் பதினைந்தாயிரம் வழங்கப்படும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, புதிய காப்பீட்டுத் திட்டமான 'புங்கர் பீமா யோஜனா' திட்டத்தில், 76,096 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டிலே 76,096 நெசவாளர்களுக்கு ரூபாய் 130 வீதம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குக் காப்பீட்டுக் கட்டணமாகச் செலுத்துவதற்காக ரூபாய் 98,93,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் ஒன்பதாம் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலும் கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு அதிகபட்சமாக நான்கு ஆண்டுகளுக்கு, ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூபாய் 1,200 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இவ்வாண்டில் 8,550 நெசவாளர்களின் குழந்தைகள் கல்வி உதவித் தொகை பெறும்வகையில், ரூபாய் ஒரு கோடியே பதினான்கு இலட்சம் வழங்குவது தொடர்பான முன்மொழிவுகள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மொத்தம் 3,622 தறிக் கூடங்கள் மட்டுமே நெசவாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டன. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு, மூன்று ஆண்டுகளில் மட்டும் வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாதவகையிலே, சுமார் 12,812 தறிக் கூடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டு, முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல ஆலோசனையைப் பெற்று, இந்த ஆண்டு சுமார் பத்தாயிரம் நெசவாளர்களுக்குத் தறிக் கூடங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

நெசவாளர் மக்களின்மேல், மாறாப் பற்றுக்கொண்ட தமிழக முதல்வர் அம்மா அவர்கள், இந்தியாவிலேயே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாதவகையில், 19,500 நெசவாளர்களுக்கு, எளிதில் விற்பனை ஆகக்கூடிய இரகங்களையும், ஏற்றுமதி இரகத் துணிகளையும் உற்பத்தி செய்யும் வகையில் நெசவாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 4,500 மகளிருக்கு தையல் பயிற்சி வழங்குவதற்கும் ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சிறப்புத் திட்டம், ரூபாய் 25 கோடியே 30 இலட்சம் மதிப்பில் தொடங்கி வைத்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்தப் பயிற்சிபெறும் நெசவாளர்களுக்கு, 9 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்குவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.



அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம்மூலம், ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் மாறிவரும் சந்தை நிலவரத்திற்கேற்ப புதிய வண்ணங்களுடன்கூடிய, புதிய வடிவமைப்புகள் கொண்ட இரகங்களை உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், ஈரோடு, கரூர், கோயம்புத்தூர் மற்றும் பரமக்குடி ஆகிய பகுதிகளில் வாழும் நெசவாளர் மக்கள் பயனடைவார்கள்.

புதிய வடிவமைப்புகளைக் கைத்தறித் துணிகளில் புகுத்த ஏதுவாக, நடப்பாண்டில் 750 நெசவாளர்களுக்கு வடிவமைப்புப் பயிற்சியும், ஒரு நெசவாளருக்கு ரூபாய் இரண்டாயிரம் வீதம் 15 இலட்சம் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைத்திடும்வகையில், 2 கோடியே 22 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயன்பெறும்வகையிலே, ஒரு கோடியே 11 இலட்சம் வேட்டிகளையும், ஒரு கோடியே 11 இலட்சம் சேலைகளையும் பருத்தி இழையுடன் பாலியஸ்டர் இழை கலந்து நேர்த்தியுடன் உற்பத்தி செய்து வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, இந்த மாபெரும் திட்டத்தில் நூலிழை அளவுகூடத் தவறுகள் நடக்காமல் நல்ல தரத்துடன் வழங்கப்பட்டு, பொது மக்களின் பாராட்டுதலை இத்திட்டம் பெற்றுள்ளது. இந்த ஆண்டிலும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை, ரூபாய் 187 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டிலே நடைமுறைப்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, சேலையின் தரத்தினை, மேலும் உயர்த்தும்வகையிலே பதனீடு — heat setting — செய்து வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், 2003-2004 ஆம் கல்வியாண்டிலே, ரூபாய் 50 கோடியே 35 இலட்சம் மதிப்பிலுள்ள 136.65 இலட்சம் மீட்டர் துணிகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு சமூக நலத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தினை, தொடர்ந்து செயல்படுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளதற்கிணங்க, பருத்தி இழைகளுடன்

பாலியஸ்டர் இழை கலந்து 109 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 40 கோடியே 11 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்காகக் கடந்த மூன்று ஆண்டுகளிலே பல்வேறு பகுதிகளிலே 259 ஆழ்துளைக் கிணறுகள், ரூபாய் 90 இலட்சத்து 65 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், கைத்தறி நெசவாளர்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் பூர்த்தி செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி, 150 ஆழ்துளைக் கிணறுகள், 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலே அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பது முதுமொழி. ஆனால், ஒரு சில தலைவர்கள் வினையை விதைத்துவிட்டு தினையைத் திருட்டுத்தனமாக அறுவடை செய்துகொண்டு, கள் உண்ட மந்தி போலக் குதியாட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்களுடைய முக்கிய பிரச்சினையாக இருந்த CENVAT வரியை நீக்கிவிட்டோம் என்று கும்மாளம் போடுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த CENVAT வரியை முதலில் போட்டவர் யார் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 2003 ஆம் ஆண்டு மத்திய அரசானது, 10 சதவீதம் மத்திய மதிப்புக் கூட்டு வரியை — CENVAT — விதித்தபோது, ஆரம்பத்திலேயே இதை எதிர்க்காமல் மத்திய அரசிலே அங்கம் வகித்துக்கொண்டு, அமைச்சர்கள் என்ற பதவிச் சுகத்தை அனுபவித்தவர்கள், தங்கள் சுய இலாபத்திற்காக வாய்மூடி மௌனிகளாக இருந்துவிட்டு, நெசவாளர்களின் வயிற்றிலே அடித்துவிட்டு, இன்றையதினம் வரியை நீக்கிவிட்டோம் என்று வாய் கிழிய பேசிக்கொண்டிருக்கிறார்கள். நெசவாளர் மக்கள் படும் துன்பத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், 28-3-2003-ல் அன்றைய மத்திய அரசுக்கு CENVAT வரியை நீக்கவேண்டுமெனக் கடிதம் எழுதி, இந்தியாவிலேயே முதன்முதலில் கோரிக்கை வைத்தவர் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை நெசவாளர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

பட்டு இரகங்களில் உள்ள சரிகைகளின் தரத்தினைத் துல்லியமாக அறிய X Ray ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் 14-8-2003 அன்று



மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பயன் பெறும்வகையிலே, இவ்வியந்திரம் காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டுப் புடவைகளின் தரம் அறியப்பட்டுள்ளது.

அம்மா அவர்களுடைய ஆலோசனைக்குப்பின், மேலும் ஒரு X Ray ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரத்தை, கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருபுவனத்திலே, ரூபாய் 20 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, திருப்பூரிலே ரூபாய் 15 கோடியே 51 இலட்சம் செலவில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பதற்கும், கோவை மாவட்டத்திலுள்ள பல்லடத்தில் ரூபாய் 159 கோடி செலவிலும், நாமக்கல் மாவட்டத்திலே இருக்கின்ற கொமாரபாளையத்திலே ரூபாய் 94 கோடியே, 27 இலட்சம் செலவிலும், ஆண்டிப்பட்டியில் ரூபாய் 125 கோடி செலவிலும், நாடா இல்லா விசைத்தறிப் பூங்காக்கள் நிறுவுவதற்கும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் நலிவடைந்து செயலிழந்ததால், அவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலன் காக்கும்வகையில், தன்விருப்ப ஓய்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்மூலம், இதுவரை 8,509 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு ரூபாய் 100 கோடி அளவிற்குப் பணப் பயன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அண்ணா, பாரதி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி கூட்டுறவு நூற்பாலைகளை, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று முழுத் திறனுடன் இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கடந்த ஆண்டில் ரூபாய் 112 கோடியே 23 இலட்சம் மதிப்புள்ள துணிகளைச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து, ரூபாய் 342 கோடியே, 6 இலட்சம் மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது. நெசவாளர் சேவை மையம் மற்றும் தேசிய ஆடை வடிவமைப்பு மையம் ஆகிய நிறுவனங்களின் துணையுடன், 500 புதிய வடிவமைப்புடன்கூடிய இரகங்களை, வரும் தீபாவளிப் பண்டிகைக்கு அறிமுகப்படுத்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம்

திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாலோசனையைப் பெற்று, விரைவில் மகளிருக்கென பிரத்யேகமாக கோ-ஆப்டெக்ஸ் சிறப்பு விற்பனை நிலையங்களை 3 இடங்களிலே தொடங்கவும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 10 விற்பனை நிலையங்கள் கணினி மயமாக்கப்படுவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சரிகை நிறுவனம் ISO 9001 பெற்ற நிறுவனமாகும். கடந்த ஆண்டில் சரிகை ஆலை 67 ஆயிரத்து 662 மார்க்குகள் சரிகையினை விற்பனை செய்து, ரூபாய் 38 இலட்சத்து 61 ஆயிரம் நிகர இலாபம் ஈட்டி, தொடர்ந்து இலாபத்திலே இயங்கி வருகின்றது. இந்த ஆண்டில் இந்த நிறுவனம் 84 ஆயிரம் மார்க்குகள் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, கடந்த ஆண்டில் ரூபாய் 14 கோடி அளவிற்கு வியாபாரம் மேற்கொண்டு, ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் உத்தேச நிகர இலாபம் ஈட்டி, தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. இவ்வாலை ISO 14001 தரச் சான்றிதழைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நட்டத்திலே இயங்கிவந்த தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இலாபத்திலே இயங்கி வருகிறது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கடந்த ஆண்டில் ரூபாய் 8 கோடியே 87 இலட்சம் அளவிற்கு விற்பனை மேற்கொண்டு, ரூபாய் 31 இலட்சத்து 85 ஆயிரம் உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசு தன்பால் இயன்ற அனைத்தையும் செய்து வருவதுடன், இன்னும் பல அரிய திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியுள்ளது என்பதனை மகிழ்வுடன், மிகுந்த மனத் திருப்தியுடன் கூற விழைகின்றேன். மாண்புமிகு முதல்வர் அம்மாவின் அரிய திட்டங்கள், கைத்தறி நெசவாளர்களுக்குப் புதிய தெம்பையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வரசின் பல்வேறு திட்டங்களுக்கு அனைத்து ஒத்துழைப்பையும் நல்கி, பல்வேறு ஏற்றமிகு கருத்துகளை எடுத்துரைத்த இம்மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பாகவும் மற்றும் நெசவாளர்களின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 1-05

கைத்தறித் துறைக்கென அறிவிப்புகள் இல்லை என மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதங்கப்பட வேண்டாம். 'பாவு நூலுடன் ஊடுநூல் புகுந்து வருவது போல' எனது பதிலுரையிலேயே அறிவிப்புகளும் புகுந்துள்ளன என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே என்னுடைய கருத்துகளை முடிந்த அளவுக்கு எடுத்துரைத்திருக்கிறேன். வெட்டுத் தீர்மானங்களைத் தந்த மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வதுடன், கைத்தறி நெசவாளர்களின் இன்னலைப் போக்குவதற்கும், வாழ்வில் வளம் பெறுவதற்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நெசவாளர்களுடைய குல தெய்வமாக இருந்து வழிநடத்துவார்கள் என்பதை இம்மாமன்றத்துக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசுகின்ற தெய்வமாய், என்றும் ஏழைகளின் நெஞ்சில் வீசுகின்ற தென்றலாய், என்றும் அஞ்சாத சிங்கமாய், ஏழைகளுக்கு ஏறுமுகம் காட்டி அன்பு செய்யும் அன்னையாய், எதிரிகளுக்குச் சீறுமுகம் காட்டும் சிங்கமாய், அன்பு காட்டுபவர்களுக்குத் தாய்முகம் காட்டும் தங்கமாய், எங்கள் வாழ்வாய், எங்கள் வளமாய், மங்காத சங்கத் தமிழாய் விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களே, தங்களுடைய பொற்பாதங்களை வணங்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.

**திரு. ராதாரவி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன திருத்தம். நான் இன்று விவாதத்தில் பேசியபோது, தேர்தலுக்குப் பிறகு, அம்மா அவர்கள் சலுகைகள் வழங்கியது தொடர்பாக நான் கூறிய ** பற்றிய அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு — ** குறித்து, அதைமட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு — மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவியின் வேண்டுகோளுக்கிணங்க, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகளும் அதைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்றியில் அறிவைத் தேக்கி, நெஞ்சத்தில் வீரம் தேக்கி, வற்றாத நாவில் நாளும் வளமுறும் கருத்தைத் தேக்கி, சுற்றாமல் சுற்றும் கண்ணில் கனிவினைத் தேக்கி, மண்ணில் கற்றவர் திகைக்கும் வண்ணம் மக்கள் பணியாற்றுபவர் ஒருவர்! அவர்தான் "அம்மா"; எங்களின் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

எங்களின் உணர்வு நாளமெல்லாம், எங்களின் உதிரத் துளியிலெல்லாம் உறைந்து கிடக்கின்ற தாயின் உன்னதத் திருவடிகளை வணங்கி, அவர்களின் நல்லாசியோடு எனது உரையைத் தொடங்குகிறேன்.

கடந்த ஆண்டு காளை மாட்டோடு எனது உரையைத் தொடங்கினேன். இந்த ஆண்டு ஒரு குரங்கைச் சுட்டிக்காட்டி எனது உரையைப் பணிவோடு தொடங்குகிறேன். ஏனென்றால், இன்றைய காலம், குரங்காட்டி வித்தையைக் காட்டி, குதர்க்க அரசியல் புரிவோரின் காலமாக — ஒரு தற்காலிகக் காலமாக — உள்ளது.

ஒரு குரங்கின் அச்சம் குறித்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தமது படைப்பில் ஓர் அருமையான, நகைச்சுவையான பாடல் ஒன்றைத் தந்துள்ளார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



"கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை எல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்" என்று.

ஓர் ஆலமரம். அந்த மரத்திலே ஒரு பாம்பு தொங்கிக் கொண்டிருக்கிறது. அது ஒரு விழுது எனத் தவறாகக் கருதி, ஒரு குரங்கு தொட்டுவிடுகிறது. உடனே அதற்கு ஒரு shock, ஒரு அதிர்ச்சி, எரிகின்ற விளக்கைத் தொட்ட சிறிய குழந்தை கையைச் சுட்டுக்கொண்டு, வெடுக்கென்று எடுத்து, துடித்துக் குதிப்பதைப்போல, அந்தக் குரங்கு கிளைகளிலெல்லாம் தாவிக் குதிக்கிறது. ஏனென்றால், கிளையிலிருந்து தொங்குகின்ற விழுதுகளெல்லாம், 'பாம்பு', 'பாம்பு' என்ற பயம் அந்தக் குரங்குக்கு.

நாட்டிலுள்ள நாமெல்லாம் நன்றி விசுவாசத்தோடு, நாளும் பொழுதும் இதய தெய்வம் அம்மா அவர்களை உள்ளத்தில் வைத்து வணங்குகிறோம். பாம்பு, பாம்பு என்று அந்தப் பிராணி அஞ்சி, அஞ்சிக் குதித்ததைப்போல, இன்றைக்கு ஒருசிலர் அம்மா என்றாலே அலறித் துடிக்கிறார்கள். அம்மா என்றாலே எதிரே அமர்வதற்கே அஞ்சுகிறார்கள்.

தீயிலே பிஞ்சுக் குழந்தைகள் கருகிய நெஞ்சைப் பிழிகிற நிகழ்ச்சியிலிருந்து, தாயுள்ளத்தோடு இதய தெய்வம் அம்மா அவர்கள் நல்ல ஏற்பாட்டைச் செய்தது முதல், காவிரி நீர்ப் பிரச்சினை வரை, ஏட்டிக்குப் போட்டியாகப் பேசிட ஏதாவது பிரச்சினை கிடைக்காதா என்று, தினம் தினம் அலைகிறார்கள்.

பிற்பகல் 1-10

மக்களின் விருப்பத்தை ஏற்று, அதற்கேற்ப தனது அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அமைத்துக்கொள்ளும் பண்பு மிக்கவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. கோயில்களே வேண்டாம் என்று கூறவில்லை. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்றெல்லாம் சிலர் முழங்கினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், அந்தக்



226218
சென்னை-600 008

கோயில்கள், கொள்ளைக்காரர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதற்காகவும், வாயில்லாப் பிராணிகளைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கருணை உள்ளத்தோடும், தாயுள்ளம் கொண்ட கருணை தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், கோயில்களில் ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிடுவதைத் தடுப்பதற்காக, ஏற்கெனவே இருந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டார்கள். ஆனால், தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களின் விருப்பத்திற்கேற்ப, அவர்களின் கருத்தை ஏற்று, முழுமனதோடு ஏற்று, அந்தச் சட்டத்தையே முழுமையாக நீக்கிய பெருந்தன்மை மாண்புமிகு அம்மா அவர்களுக்கே உண்டு.

சொன்னதையே பிடிவாதமாகப் பிடித்துக்கொள்ளும் குரங்குப் புத்தியாளர்களின் மத்தியிலே, மக்களின் விருப்பத்திற்கேற்ப செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான பண்பை, மக்கள் உணர்ந்துகொண்டு, இன்று நெஞ்சார நன்றி பாராட்டியிருக்கின்றார்கள்.

நொறுக்குகின்ற நிதிச்சுமை, நெருக்குகின்ற தட்டுப்பாடு ஆகிய அத்தனையையும் அகற்றி, அஞ்சாமல் புறந்தள்ளி, தடைகள் அத்தனையையும் தவிடு பொடியாக்கிவிட்டு, தமிழகத் தேரினை தடம் புரளாமல் செலுத்தி, ராஜபாட்டையில் தமிழ்நாட்டைக் கம்பீரமாக அழைத்துச் செல்வதால்தான், இன்று மாண்புமிகு அம்மா அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை உட்பட அனைத்துத் துறைகளுக்கும் தாராளமாக நிதியை ஒதுக்கி, மக்கள் நலத் திட்டங்களைத் தொய்வில்லாமல் தொடரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளார்கள். இருப்பினும், கட்டுக்கோப்பான நிர்வாகம், சிலரின் கண்களை உறுத்தியதால், தூண்டிவிட்டு, குறுகிய எண்ணமுடைய அரசியல்வாதிகள், அந்த ஒருசில கட்டுப்பாடுகளைத் தளர்த்த முற்பட்டார்கள். ஆனால், அந்தத் தீய சக்திகளின் எண்ணங்கள் ஈடேறவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் கிடைத்திருப்பது வெறும் முதலமைச்சர்தான். நமக்கு மட்டும்தான், பாரதி சொன்னது போல, மாநிலத் தாய் கிடைத்திருக்கிறார்கள். அந்த மாநிலத் தாயை வணங்கி, அவர்களது ஆசியுடனும், உங்கள் அனுமதியுடனும், கால்நடைத் துறையின் சிறப்பு அம்சங்கள் பொருந்திய பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, இந்த மாமன்றத்தின்முன் சமர்ப்பிக்கிறேன்.

மக்களிடம் உள்ள செல்வங்களிலெல்லாம் தலையானது, கால்நடைச் செல்வங்களே. நமது மாநிலத்தின் உண்மையான செல்வங்களான



கால்நடைச் செல்வங்களைப் பேணிக் காப்பதற்கு, கால்நடைத் துறை அமைச்சராக எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தினரின் நன்றியும், எங்கள் தொகுதி மக்களின் நன்றியும், எங்கள் மாவட்ட மக்களின் நன்றியும், என்றென்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை நோக்கியே இருக்கும்.

தமிழ்நாட்டில் கால்நடைச் செல்வங்கள் அதிகம். பெற்ற குழந்தையின்மீது காட்டும் பரிவை, தாங்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளின்மீதும் காட்டும் குணம், நம் மக்களுக்கு இயற்கையிலேயே உண்டு. தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை மொத்தம் 259 இலட்சம். கோழிகளின் எண்ணிக்கை 365 இலட்சம் ஆகும். கால்நடைச் செல்வங்களைப் பேணிக் காக்கவும், கிராமப்புற ஏழை விவசாயிகளை, குறிப்பாக, பெண்களின் வருமானத்தைப் பெருக்கும் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தவும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் 15 அம்ச திட்டங்களில், கால்நடை வளர்ப்பை ஒரு திட்டமாக அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

கால்நடைச் செல்வங்களைப் பேணிக் காப்பதற்கு, இத் துறையில் 6 பன்முக மருத்துவமனைகள், 22 முதன்மை மருத்துவமனைகள், 129 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 922 கால்நடை மருந்தகங்கள்மூலம், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைக் கொண்டு, சிறப்பான சேவை செய்யப்பட்டு வருகின்றது. 2,043 கிளை நிலையங்களில் முதலுதவி அளித்து வரப்படுகின்றது.

கடந்த ஆண்டு மட்டும் இந்நிலையங்கள் மூலம், 164.46 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, 5.88 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 238.22 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசியும், 168.64 இலட்சம் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கப் பணியும், 31.02 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அம்பாசமுத்திரம் திரு. சக்திவேல் முருகன் அவர்களும், சகோதரர் நிலக்கோட்டை திரு. அன்பழகன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் பாராட்டுதலுடன் சொன்னார்கள். அவர்களுக்கு என் நன்றி.

கால்நடைச் செல்வங்களுக்குத் தரமான, மேலான சிகிச்சை மற்றும் பாதுகாப்பு, கால்நடை மருத்துவப் பட்டதாரிகள்மூலம் அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஓர் ஆணை வெளியிட்டார்கள். தகுதியின் அடிப்படையில், 73 கிளை

நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்கிற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை, முறைப்படி நிறைவேற்றப்பட்டு, இன்று மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

*பிற்பகல் 1-15*

இந்த ஆண்டு அதிகப்படியான கால்நடைக் கிளை நிலையங்களை, கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கால்நடைச் செல்வங்களைக் காப்பதிலும், கிருஷ்ண பரமாத்மாவாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்றுவதும் எங்கள் துறையில் நன்றாகவே நடந்து வருகிறது.

பெருந்தவப் புதல்வியான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1993 ஆம் ஆண்டு கால்நடைத் துறையின் 100-வது ஆண்டுவிழா மற்றும் அகில இந்திய கால்நடைக் கண்காட்சியைத் தலைமையேற்று நடத்தி, இத்துறையின் மூலம் அதிக அளவில் கலப்பினப் பசு மற்றும் எருமை இனங்களை அதிகரிக்கச் செய்து, பால் உற்பத்திப் பெருகிட வழி செய்தார்கள். மேலும், 20 கோடி ரூபாய் செலவில் கால்நடை மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்தி, பசு மற்றும் எருமை இனங்களைத் தரம் உயர்த்த ஆணையிட்டார்கள். இத் திட்டம் நல்ல நிலையில் இயங்கி, தமிழ்நாடு பால் உற்பத்தியில் முதலிடம் பெற்றுள்ளது.

கிராமப்புற ஏழைகளின் வருவாயைப் பெருக்கும் நோக்கோடு, பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தி, வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்கள், சென்ற ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், கால்நடை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி, விவசாயிகள் பயனடையும்வகையில், பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வலியுறுத்தினார்கள். அந்த வகையில், ஆணையிட்டார்கள்.

வந்தாச்சு வந்தாச்சு தமிழகம் முதலிடத்துக்கு வந்தாச்சு!
மாண்புமிகு அம்மா அவர்களின் கனவு நனவாச்சு !
பால் உற்பத்தியைப் பெருக்கியாச்சு!
இந்தியாவில் தமிழகம் முதல் இடத்தைப் பிடிச்சாச்சு!
செய்தாச்சு, செய்தாச்சு, வெண்மைப் புரட்சியை
கால்நடைத் துறை மூலம் செய்தாச்சு!



மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் உள்ள நல்லாட்சியில், இன்று தமிழகம் கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தியில், இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இன்றைக்கு வெகு சுலபமாக குக்கிராமங்களிலும், முட்டை மலிவாகக் கிடைக்கின்றது. மேலும், சத்துணவுத் திட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, குழந்தைகளுக்கு சத்துணவில் முட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

சமீபத்தில், கோழிக் காய்ச்சல் — வைரஸ் நோய் — தாக்கப்பட்டு, மேலை நாடுகளில், கோடிக்கணக்கில் கோழிகள் இறந்து, அவை எரித்து அழிக்கப்பட்டன. ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், கால்நடை மருத்துவ நிபுணர்களின் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கோழி இனங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டன. கோழி வளர்ப்போர் நிம்மதி அடைந்தனர்.

8-2-2004 ஆம் தேதி அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், தமிழகத்தில் கோழிக் காய்ச்சல்—வைரஸ் நோய்—தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியைப்பற்றி நல்ல வார்த்தைகள் பேசினார்கள். அவர்கள் மனசாட்சிப்படி பேசிக்கொண்டு இருந்த காலம் அது. அதனால் உள்ளதை உள்ளபடி எடுத்துச் சொன்னார்கள். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள், 5-2-2004 ஆம் தேதி பேசும்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் கால்நடைத் துறையில் செய்த சாதனைகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்கள். அவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பா.ம.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆறுமுகம் அவர்கள், 6-2-2004 அன்று பேசும்பொழுது, கால்நடைத் துறையின் நடவடிக்கைகளையும், செயல்பாடுகளையும் பாராட்டிப் பேசியுள்ளார்கள். அவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைச் செல்வங்களுக்குத் தேவையான தீவன உற்பத்தியைப் பெருக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், மேய்ச்சல் நிலங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதோடு, தரிசு நில மேம்பாட்டுத்

திட்டத்தின்மூலம் கால்நடைத் தீவன உற்பத்திப் பெருக்கம் பெருமளவு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம், இதர துறைகளுடன் சேர்ந்து சேலம், நாமக்கல், வேலூர், தேனி, தஞ்சாவூர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டின்கீழ், தரிசு நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைத் துறைக்கு இதற்குமுன் எப்போதும் வழங்காதவகையில் 20 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். அதன்மூலம் கால்நடை மருத்துவமனைகளில், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, தண்ணீர்த் தொட்டிகள் அமைத்து, கால்நடைகளுக்குக் குடிநீர் ஆதாரம் முழுமையாக ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மாநிலத்தின் 8 கால்நடைப் பண்ணைகளில் தீவன உற்பத்திப் பெருக்கத்திற்காக, 560 ஏக்கர் நிலங்கள் புதிதாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன. கிராமங்களில் கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையைப் போக்க, 2,725 ஏக்கர் நிலப்பரப்பில் கோவை, திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 57 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ், 4 கோடியே 11 இலட்சம் ரூபாயை இத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

தேர்தல் நேரத்தில், ஓட்டுக்காகத் தமிழகத்தில் உலாவரும் அரசியல்வாதிகளின் மத்தியில், மக்கள் நலம் காப்பதே என் கடமை என்று செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைகளின் நலம் காக்க, கடந்த ஆண்டில் இத் துறை மூலமாக 4,812 கால்நடை பாதுகாப்பு முகாம்கள், 1 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட ஆணையிட்டார்கள்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், நடப்பு ஆண்டு 5,005 கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்துவதற்கு, 1



கோடியே 85 இலட்சம் ரூபாய்க்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 20-7-2004 ஆம் தேதியன்று ஒப்புதல் அளித்து ஆணையிட்டுள்ளது. இத்தொகையில் ஒவ்வொரு ஒன்றியத்திலும், மாதம் ஒரு முகாம் வீதம், ஆண்டு முழுவதும் நடத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் பகுதியில் நடக்கும் முகாம்களில் கால்நடைகளை பெருமளவில் கலந்துகொள்ளச் செய்து, அந்தக் கால்நடைகளைப் பாதுகாக்க உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் 56 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் உண்மையிலேயே மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகத்தான்; ஓட்டுக்காக அல்ல.

டென்மார்க் நாட்டின் உதவியுடன் தமிழகத்தில் டேனிடா கால்நடை வளர்ச்சித் திட்டம் புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஐந்து மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தது, அவை உறுப்பினர்களுக்குத் தெரியும். இத்திட்டத்தில் இணைப்பு தொடர்பு தம்பதிகள் மற்றும் இலக்கு விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றி விழிப்புணர்வும், முறைசாராக் கால்நடை முதலுதவியும் செய்வது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில் இத் திட்டத்தை மாநிலத்தின் பிற மாவட்டங்களான கோவை, சேலம், ஈரோடு, நீலகிரி, விழுப்புரம், தருமபுரி மற்றும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி, அந்த மாவட்டங்களிலுள்ள 103 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 2,844 ஊராட்சிகளில் செயல்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கால்நடைகளைத் துன்புறுத்துவது, பட்டினி போடுவது, வேறு மாநிலங்களுக்கு இறைச்சிக்காகக் கடத்திச் செல்வது போன்ற கால்நடைகளை வதை செய்யும் செயல்களைத் தடுக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் கடுமையான உத்தரவுகளின்பேரில், மேற்படி செயல்களால் பறிமுதல் செய்யப்பட்ட கால்நடைச் செல்வங்கள் 'கோசாலைகள்' என்ற பசு மடங்களில் சேர்க்கப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நிகழ்வைச் சொல்கிறேன். கடந்த 17-7-2004 அன்று கோவை, சூலூர் பகுதியில், நான் செல்லும்போது, லாரி ஒன்றில், ஏராளமான கால்நடைகள் கொடூரமாகத் திணிக்கப்பட்டு, பசு மாடுகள் கேரளாவுக்குக் கடத்தப்பட்டதைச் சோதனை செய்து கண்டறிந்தேன். பாதிக்கப்பட்ட

பசு மாடுகளை, கோவை அருகில் உள்ள மைலேரிபாளையத்தில் உள்ள கோசாலையில் விட்டுவிட ஏற்பாடு செய்தேன். விதிமுறையை மீறியவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரர் ஜெக. வீரபாண்டியன் அவர்கள் இன்று பேசும்போது, 12 இலட்சம் பசு இனங்கள் 90 ஆயிரமாகக் குறைந்து விட்டன; ஏனென்றால் கொடூரமான முறையில் அவை கொண்டு செல்லப்பட்டு, மாமிசத்திற்காகக் கொல்லப்படுகின்றன என்று சொன்னார்கள். அண்ணன் ராதாரவி அவர்களும், மாடு கடத்தல்பற்றிச் சொன்னார்கள். இது உண்மையிலேயே வருத்தத்திற்குரிய விஷயம்தான். இதுகுறித்துக் கவனிக்க பல மாவட்டங்களில் S.P.C.A. அமைப்பும், ஜீவகாருண்ய சங்கங்களும், கால்நடை வதை தடுப்புச் சட்டத்தை நடைமுறைபடுத்தி வருகின்றன. இவை அனைத்தும் ஒருங்கிணைப்பில் நல்லமுறையில் செயல்பட விரைவில் அதற்கெனத் தனியாக கால்நடை நல வாரியம் அமைப்பது குறித்து, தேசிய கால்நடை நல வாரியத்தின் தலைவர் நீதியரசர் குமான் மால் லோடா அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியுடன் இவ்வாண்டு புதிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும். இதுகுறித்து, மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. ராதாரவி அவர்கள் கூறிய கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்தந்த மாவட்டங்களிலுள்ள S.P.C.A. நிறுவனத்துடன் வருவாய்த் துறை அதிகாரிகள், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் உதவி கொண்டு நிச்சயமாக தயவுதாட்சண்யமின்றிக் கட்டுப்படுத்தப்படும்.

கால்நடை மருந்தகங்கள் பற்றியும், ஆடு வளர்க்க அளிக்கும் கடனுதவி பற்றியும், அண்ணன் ராதாரவி அவர்களும், மற்றவர்களும் கேட்டார்கள். இந்த ஆண்டு, அதிகப்படியான கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட வாய்ப்பிருக்கிறது. இதுதவிர, மாண்புமிகு அமைச்சர்கள் பலரும், பல்வேறு உறுப்பினர்களும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பது குறித்தும், மருத்துவமனைகள், மருந்தகங்கள் அமைப்பது குறித்தும், என்னிடம் நிறைய அளவில் மனுக்கள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, அவர்களின் எண்ணங்கள் ஈடேற்றப்படும் என்று அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்நாட்டு இனங்களான காங்கேயம் காளை, ஓசூர் பண்ணையிலும், உம்பலாஞ்சேரி காளை இனம், கொறுக்கை பண்ணையிலும்



பராமரிக்கப்படுகின்றன. உறை விந்துக் குச்சிகள் அங்கே பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது, முயல் வளர்ப்போருக்கு ஆங்காங்கே பயிற்சி வகுப்புகள் கால்நடைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுகின்றன.

மாதிரிப் பண்ணைகள் ஊட்டியிலும், காட்டுப்பாக்கத்திலும் உள்ளன.

மானியம் வழங்குவது பற்றியும் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் கேட்டார்கள். அந்தக் கோரிக்கையை அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும்.

நடப்பாண்டில், வெறிநாய்த் தடுப்பூசித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் வெறும் 3.5 ரூபாய்க்குத் தடுப்பூசி வழங்கப்படுகிறது என்பதையும் அவருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு உறுப்பினர் சகோதரி திருமதி நளினி மனோகரன் அவர்கள் பேசும்போது, கால்நடை பராமரிப்புத் துறை நடவடிக்கைகள்மூலம் பால் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும், பசுந் தீவன உற்பத்தியில் நல்ல கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்கள். பாராட்டியதற்கு நன்றி. படவேடு கால்நடை கிளை நிலையம், மருந்தகமாக உயர்த்தப்படுமா எனவும் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் ஏற்படுத்துவதுபற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகக் கோயில் யானைகளுக்கு நோய் நொடி வராமலிருக்க, மருத்துவ முகாம் நடத்தினோம். ஆனால், நம் நாட்டில் மதம் பிடித்த மனித யானைகள் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த மனித யானைகளுக்கு யார் மருத்துவம் பார்ப்பது? மக்கள்தான் பார்க்க வேண்டும்! (மேசையைத் தட்டும் ஒலி) 2006 தேர்தலில் நல்ல தீர்ப்பளித்து மருத்துவம் பார்ப்பார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில்களில் வளர்க்கப்படும் யானைகளையும், தனியார் வளர்க்கும் யானைகளையும் கொடுமைப்படுத்தி, துன்புறுத்தி சிலர் வருமானம் ஈட்டுவதைத் தடுக்கவும், யானைகளுக்கு ஓய்வும், புத்துணர்வும் அளிக்கும் நோக்கத்திலும், கடந்த ஆண்டு யானைகளுக்கு மருத்துவம் மற்றும் புத்துணர்வு முகாம் ஒன்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணைப்படி, ஊட்டி, முதுமலை தெப்பக்காட்டில் கடந்த 2003 நவம்பர் மாதம் 16 ஆம் தேதி துவக்கப்பட்டு, டிசம்பர் 2003, 15 ஆம் தேதி முடிய ஒருமாத காலம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 100 யானைகள் கலந்துகொண்டு பயன்பெற்றன.

சரியான கணக்கு வேண்டுமென்றால், 37 கோயில் யானைகள், 18 தனியார் யானைகள், 26 வனத் துறை யானைகள் மற்றும் ஆனைமலை டாப்சிலிப்பில் உள்ள 19 யானைகளையும் சேர்த்து, மொத்தம் 100 யானைகள் பயன்பெற்றன. அதில் மதுரையைச் சேர்ந்த சீதா யானை, மீனாட்சி, குஸ்மா யானைகள், பழனியில் இருந்து இந்திரா, திருவண்ணாமலை ருக்மணி, பேரூர் கல்யாணி, ராமேஸ்வரம் பவானி, விருதுநகர் சுலோசனா, திருக்கடவூர் அபிராமி, மன்னார்குடி செங்கமலம், திருத்தணி வள்ளி, ஸ்ரீரங்கம் ஆண்டாள், மயிலாடுதுறை அபயாம்பாள் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் கோதை ஆகிய பெண் யானைகளோடு அல்லாமல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயபுரம் - மாரியப்பன், சுசீந்திரம் - கோபாலன், சென்னை அஹோபிலமடம் - மாலோலன், ஊட்டியைச் சேர்ந்த விஜய், சுஜய், கம்பேஷ், பழனி, சந்தோஷ், விலசன், சேரன், பொம்மன், ஜப்பு, சங்கர், போன்ற ஆண் யானைகளும் கலந்துகொண்டு பயன்பெற்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஆணுக்கும் பெண்ணுக்கும் சரியான சமத்துவம் வழங்கியிருக்கிறீர்கள். மிக்க நன்றி!

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடைத் துறையின் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள், வனத் துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் ஆகியோர் சிறப்பான முறையில் பணியாற்றி, முகாம் வெற்றிபெற உறுதுணையாக இருந்தார்கள். அதேநேரத்தில், யானைகளைச் சிறந்த முறையில் பராமரிக்கும் முறைகள்பற்றி, யானைப் பாகன்களுக்கும், கால்நடைத் துறை வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.



யானைகள் முகாமிற்கு வரும்பொழுதும், முகாம் முடிந்து திரும்ப யானைகள், சொந்த இருப்பிடத்திற்குச் செல்கின்றபொழுதும், தொற்றுநோய் ஏற்படாவண்ணம் பாதுகாத்து, தேவையான மருத்துவ சிகிச்சை ஏற்பாடுகள் செய்து, கால்நடை பராமரிப்புத் துறையின் கோவை மண்டலத்தின் அலுவலர்கள் ஒரு மாதகாலம் முகாமிலேயே தங்கி சிறப்போடு பணியாற்றினார்கள்.

வெள்ளம் வரும் முன்பு அணை கட்ட வேண்டும். நோய் வரும் முன்பு தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற குறளுக்கேற்ப, கால்நடைச் செல்வங்களுக்கு வரும் பல்வேறு தொற்று நோய்களை முன்கூட்டியே அறிந்து, தடுப்பூசிகள் போட பல்வேறு திட்டங்கள், தடுப்பு நடவடிக்கைகள், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், மிகச் சிறப்பான முறையில் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் கால்நடைகளுக்கு வெக்கை நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நமது மாநிலம் வெக்கை நோய் இல்லா மாநிலமாக, சர்வதேச நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான தகவலை இம் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதேபோல் கோமாரி நோயையும் ஒழிக்க, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையின்பேரில், தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் 34.55 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், சுமார் 50 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டு முழுமையாகப் பாதுகாக்கப்படும்.

அதேபோல, ஆடுகளுக்கு ஏற்படும் நீலநாக்கு நோயும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். கிராமப்புறங்களில் ஆடுவளர்ப்பு என்பது ஏழை எளிய விவசாயப் பெருமக்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்கு ஒரு முக்கியமான தொழிலாகும். இந்த ஆடு வளர்க்கும் தொழிலை ஊக்கப்படுத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு வகைகளில் திட்டங்களை அறிவித்து ஊக்கப்படுத்தி வருகின்றார்கள்.

ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் என்பது, மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனைத் தமிழக அரசு சிறப்பாகச் செய்து வருகின்றது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், ஆடுகளுக்குத் தொடர்ந்து கட்டணமில்லாத குடற்புழு நீக்க பணி செய்ய, கோரிக்கை வைத்தார்கள். அதேபோன்று, கிராமப்புறங்களில், பொருளாதார நோக்கோடு அல்லாமல் காவலுக்காக வளர்க்கப்படுகின்ற செல்லப் பிராணிகளான நாய் மற்றும் பூனைகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்க கோரிக்கை வைத்துள்ளார்கள்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு மருந்துகள் வாங்கியதில் பல்வேறு ஊழல்கள் நடந்ததாக, இராசிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் தொடர்ந்த வழக்கில், தி.மு.க.-வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்மீதும், துறை சார்ந்த அதிகாரிகள் சிலர்மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சிலர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். வாயில்லா ஜீவராசிகளின் நலப் பணிகளிலேயே இத்தனை தில்லு முல்லுகள் செய்ய முடிந்தவர்களால், மனிதர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் என்னவெல்லாம் செய்திருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.

மகனின் மேம்பாடு, மருமகன் மேம்பாடு, மருமகனின் மகன் மேம்பாடு என்றெல்லாம் யோசித்துச் செயல்பட்டவர்கள் இருக்கின்ற மாநிலத்தில், மாநில மக்களின் மேம்பாடு குறித்து மட்டுமே சிந்தித்துச் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி நடக்கின்ற காரணத்தினால்மட்டுமே இது சாத்தியமாகிறது.

தற்சமயம், இத்துறைக்குத் தேவையான மருந்துகள், தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தின்மூலம் தேவையான அளவு, உரிய நேரத்தில் எந்தவித புகாருக்கும் இடமில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும் நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் 5-2-2004 அன்று பேசும்பொழுது கிட்டத்தட்ட, கிட்டத்தட்ட என்று சில புள்ளிவிவரங்களை எல்லாம் ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் சொன்னார்கள். கிட்டத்தட்ட நெருப்புக் கோழிக்கு ஈடான அளவில் ஈமு என்ற கோழி இனத்தை, நமது பல்கலைக்கழகம் 26.82 இலட்சம் ரூபாய் செலவில் அறிமுகப்படுத்தி இருக்கின்றது. அந்த ஈமு கோழியின் முட்டை விலை கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய். ஈமு கோழி இறைச்சியின் விலை கிட்டத்தட்ட ஒரு கிலோ 450 ரூபாய். இதன் தோல் கிட்டத்தட்ட 5 ஆயிரம் ரூபாய். இதன் எண்ணெய் கிட்டத்தட்ட 2 ஆயிரம் ரூபாய். இதன் இறகுகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட பத்து மணித் துளிகள் எடுத்துக்கொள்வீர்களா? *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** இதன் இறகுகள் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய். எல்லாமே கிட்டத்தட்ட நல்ல விலைமதிப்புள்ளவை.

ஈமு கோழி இனம் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தது. உலகமெங்கும் வளர்க்கப்படும் இக்கோழி இனத்தால், நல்ல இலாபம் கிடைப்பது உறுதி என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தமிழகத்தில் கோழி வளர்ப்போரிடம் ஈமு கோழியை அறிமுகப்படுத்துவதால், கிராமப்புறத் தொழில் மேம்பாடு அடைவதுடன், பொருளாதார உயர்வை ஏற்படுத்துவதில் ஒரு மைல் கல்லாக இத்தொழில் அமையும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இந்தத் துறையின் அமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று சின்னசேலம், முகுந்தராயபுரம், ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, செட்டிநாடு, ஓசூர், உதகை, திருநெல்வேலி, அபிஷேகப்பட்டி, சாத்தூர், படப்பை, காட்டுப்பாக்கம் போன்ற பல்வேறு பண்ணைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன். அங்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, பல்வேறு ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளேன்.

செஞ்சி தொகுதியில் உள்ள வல்லம் ஒன்றியத்தில், இல்லோடு கிராமத்தில் கால்நடைகள், நோய் தாக்கி இறந்ததாக, செஞ்சி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை அவர்கள், அரசுக்குத் தகவல்

அளித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், திண்டிவனத்திலிருந்து மருத்துவர்கள் குழு, உடனடியாக இல்லோடு கிராமத்திற்குச் சென்று ஆய்வு செய்தது. அந்த ஊரில், மூன்று கன்றுக் குட்டிகளும், பத்து ஆட்டுக் குட்டிகளும் தாடை வீங்கியும், பேதி ஏற்பட்டும் இறந்திருக்கின்றன. பசுக்களோ, காளைகளோ இறந்ததாகத் தகவல் இல்லை. காரணத்தைக் கண்டறிய, மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பரிசோதித்ததில், மேய்ச்சல் நிலமருகே, பல மாதங்களாக தேங்கியிருந்த அசுத்த நீரைக் குடித்ததால் இப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்தது. இதுபற்றிய விழிப்புணர்வு உண்டாகும் விதத்தில், கூடியவரையில் கால்நடைகளுக்குச் சுத்தமான நீரைக் குடிப்பதற்கு வழங்குமாறு மக்களுக்குத் தெரிவிக்க, துறை அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், அங்கேயுள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் உடனடியாகக் குடற்புழு நீக்கம் மற்றும் கால் நோய் மற்றும் வாய் நோய்த் தடுப்பூசி போடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கால்நடை மருத்துவர்கள் கிராமங்களுக்கு வரும்போது, அவர்களின் பணியை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு, விவசாயப் பெருமக்கள், தங்கள் கால்நடைகளைப் பாதுகாத்துக்கொள்ளும்படி கால்நடை வளர்ப்போரையும், விவசாயப் பெருமக்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

இந்தத் துறையின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்பற்றி, ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப் பல்கலைக்கழகம் ஆசியாவிலேயே கால்நடை மருத்துவ அறிவியலுக்கு எனத் தொடங்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் ஆகும்; உயர் கல்வி அளிக்கவும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டும் செயல்பட்டு வருகிறது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் கடந்த ஆண்டு, இதே ஜூலை மாதத்தில் நடந்தது. மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஷெகாவத் அவர்கள் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த விழாவில் பேசும்போது, நீடித்த வேளாண் முறையையும், கால்நடைத் தீவன உற்பத்தியையும் ஒருங்கிணைத்துச் செய்யவேண்டியது அவசியம்



என்றும், இதற்கு முறையான திட்டங்களை வகுக்காவிட்டால், ஏழை விவசாயிகளுக்கு சமூகப் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்தார்கள். கால்நடை அறிவியல் ஆராய்ச்சியில் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தாலும், ஏழை விவசாயிகளுக்கு நேரடியாகப் பலனளிக்கக்கூடியதாக, வறுமையை ஒழிப்பதாக அந்த ஆராய்ச்சிகள் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். அந்த அறிவுரையின்படி, கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழகம் தனது பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது. அந்தவகையில், நோய் எதிர்ப்புச் சக்தி மிகுந்த மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் நோயற்ற கால்நடைகளை நாம் பெருமளவில் உற்பத்தி செய்துகொண்டு இருக்கிறோம்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தநேரத்தில் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நாமக்கல் மாவட்டம், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் சொந்த மாவட்டம். அந்த மாவட்டத்தில் உள்ள வேட்டாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, மிகப் பிற்படுத்தப்பட்ட ஏழை அரசு ஊழியர் திரு. இராமசாமி என்பவரின் மகள் செல்வி டி.ஆர். கண்ணகி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவி; 2003-2004 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில், 31 தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று, பல்கலைக்கழகத்தின் முதல் மாணவியாகத் திகழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அவர் புதுதில்லியில் உள்ள இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு படித்து வருகிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி, கோழிகளிலிருந்து யானைகள் வரை, எல்லாவற்றிற்கும் முதல்தரமான கவனிப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் எங்களது நிலைப்பாடு. கவனிப்புத் தரத்தில் நாங்கள் துளி சமரசமும் செய்துகொண்டது கிடையாது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான், கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன். கொங்கு தமிழில் பேசினேன். எனது உரையில் பிழையிருப்பின், மன்னிக்க வேண்டுகிறேன். அதேநேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொங்கு தமிழ் நல்ல தமிழ்தான். *(சிரிப்பு)* கொங்கு தமிழ், கொஞ்சு தமிழ்!

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** அதேநேரத்தில், மன்னிப்பீர்களா! மன்னிப்பீர்களா! இந்த மாமன்றத்தை மறந்தவர்களை மன்னிப்பீர்களா! தொகுதி மக்களை மறந்து சாலையோரம் உட்காருபவர்களை மன்னிப்பீர்களா! மத்திய மந்திரி பதவிகளுக்கு மன்றாடியவர்களை மன்னிப்பீர்களா! குடும்ப அரசியல் நடத்துபவர்களை மன்னிப்பீர்களா! காவிரி நீருக்குக் குரல் கொடுக்காதவர்களை மன்னிப்பீர்களா! மாட்டார்கள். இவர்களைத் தமிழக மக்கள் 2006-ல் மன்னிக்கவே மாட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அவை நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, தங்களின் அனுமதியோடு, 2004-2005 ஆம் ஆண்டில் இத் துறையினால் செயல்படுத்தப்பட இருக்கும் சில முக்கியத் திட்டங்கள் குறித்த புதிய அறிவிப்பினை இம் மாமன்றத்தில் சுருக்கமாகத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாண்டும், 75 கால்நடைக் கிளை நிலையங்கள் 336.75 இலட்சம் ரூபாய் செலவில், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும். வட்டத் தலைமையிடங்களில் உள்ள 50 கால்நடை நிலையங்களில் 2.50 இலட்சம் ரூபாய் செலவில் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்படும்.

அரசு சாரா அமைப்புகளின் உதவியோடு, நகர்ப்புறங்களில் உள்ள 18,180 நாய்களுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பூசி போட்டு வெறிநாய்க்கடி நோய் கட்டுப்படுத்தப்படும். உள்ளாட்சி அமைப்புகளின் ஆலோசனையுடன் 10 கால்நடை சந்தைகளில், 20 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை முதலுதவி நிலையங்கள் கட்டப்படும்.

இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் ஆய்வகங்கள், சர்வதேசத் தரத்திற்கு நிகராக மாற்றப்படும். அதேபோல், சென்னை, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மண்டல ஆய்வுக் கூடங்களும், சர்வதேசத் தரத்திற்கு நிகராகத் தரம் உயர்த்தப்படும்.

செம்மறி ஆட்டம்மைக்கு, திசு வளர்ப்பு முறை சார்ந்த தடுப்பூசி, 10 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். கோழிப் பண்ணைகளில் ஈக்களைக் கட்டுப்படுத்த 12 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு திட்டம்



மேற்கொள்ளப்படும். 26.82 இலட்சம் ரூபாய் செலவில் ஈமு கோழி ஆராய்ச்சி அலகு நிறுவப்படும்.

இந்திய கெண்டை மீன்களின் மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, மீன் விந்தணுக்கள் குளிர்பதனிட ஆய்வுக்கூடம் ஒன்று 17.51 இலட்சம் ரூபாய் செலவில், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நிறுவப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியுடனும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடனும் ஓரிரு வார்த்தைகளைத் தெலுங்கில் பேசிக்கொள்ள அனுமதி வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிவிட்டு, தமிழ் மொழி பெயர்ப்பையும் தயவுசெய்து சொல்லிவிடுங்கள் என்னவென்று. *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** பசி வந்தால் பத்தும் போய்விடும் என்பார்கள். ஆனால், பசி நேரத்திலே தெலுங்கிலே பேசினால், பசி கொஞ்சம் குறைந்துவிடும் என்பது எங்களுடைய ஆசை. நம்முடைய...

*(தெலுங்கில் பேசினார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அவரே இப்போது தமிழிலே பேச ஆரம்பித்துவிட்டார். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *(தெலுங்கில் பேசினார்.)*

*பிற்பகல் 1-40*

**திரு. கே.வி. முரளிதரன்:** *(தெலுங்கில் பேசினார்)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** முரளிதரன் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டசபை ஏதோ ஆந்திராவிற்கு மாறியதுபோலத் தெரிகிறது! *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** இந்தியப் பொருளாதாரம் என்பது உண்மையில் கிராமப் பொருளாதாரமே ஆகும். கிராமப்புற மேம்பாடு என்பது, விவசாயத்தையும், கால்நடை வளர்ச்சியையுமே

பெருமளவு சார்ந்தது. இதனை முழுஅளவில் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைத் துறையின்மீது காட்டும் அக்கறையும் கனிவான கவனமும், உண்மையில் இந்நாட்டுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சி நண்பர்களுக்கு இது புரியாமல் போனாலும், தமிழக மக்களுக்குப் புரிந்திருக்கிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்." உள்ளத்தில் உண்மை இருந்தால்தான், பேச்சில் ஒளி இருக்கும். உண்மையை, யதார்த்த உண்மையை, வாழ்வில், நாட்டில், உலகில் காணும் உண்மையை ஆதாரமாக வைத்துத்தான், கொள்கையிலும் சரி, மற்றவற்றிலும் சரி, வெளிச்சத்தை உண்டாக்க முடியும் என்பதை மட்டும் எதிர்க்கட்சி அன்பர்களுக்கெல்லாம் கூறி, இந்த அவையைப் புறக்கணித்தவர்களுக்கும், இதையே பதிலாகக் கூறுகிறேன்.

சூழ்ச்சிதனை வஞ்சகத்தை பொறாமைதனை
தொகை தொகையாக எதிர்நிறுத்தி — தூள்தூளாக்கும்
வலிமைதனைப் பெற்றவரே!
முட்டவரும் மாடுகளை......
சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த ஈடற்ற தாயே!
இமைப்பொழுதும் கண்ணுறங்கா அன்னையே!
எங்களின் அம்மாவே!

உங்கள் பொற்பாதங்களை வணங்கி,

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தங்களையும் வணங்கி, சான்றோர்கள் பலர் வீற்றிருக்கும் இப் பேரவையில், கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பதிலளிக்கும் பெருமைமிகு வாய்ப்பினை, மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு அளித்துள்ளதை, என் வாழ்நாளில் எனக்குக் கிட்டிய மிகப் பெருமையாகக் கருதுகிறேன். இத்தகைய வாய்ப்பளித்து என்னைப் பெருமைப்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில், எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



எனக்கு இந்தப் பொன்னான வாய்ப்பினை அளித்த எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், நாங்கள் அன்றாடம் வணங்கும் இஷ்ட தெய்வம், இந்த நாட்டின் தலைசிறந்த குடிமகளாகச் சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்கி, எனது இந்த பதிலுரையை நிறைவு செய்ய விழைகிறேன்.

கொள்கை பற்றி விவாதிக்கவும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தரப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் குறித்தும், நான் ஏற்கெனவே போதிய அளவிற்குப் பதிலளித்திருப்பதாகக் கருதுகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, இங்கே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையை முழுமனதோடு நிறைவேற்றித் தருமாறு, இந்த மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர் பெருமக்களையும் அன்போடும், பண்போடும், பணிவோடும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.164,31,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.17,51,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணி நூல். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.304,50,50,000/- மற்றும் கடன் கணக்கில்



ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 1-45

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

### மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, விதிகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். பேரவைக் குழுக்களின் பணிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானங்கள். முன்மொழிதல், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற

1. மதிப்பீட்டுக் குழு
2. பொதுக் கணக்குக் குழு
3. பொது நிறுவனங்கள் குழு
4. விதிகள் குழு
5. அலுவல் ஆய்வுக் குழு

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 30

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3), 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக் குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்றவேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)-னைத் தளர்த்தி, அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப் பெறும்வரை பணியாற்றவேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## (ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

### அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இன்னொரு தனித் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற

1. அவை உரிமைக் குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக் குழு



2004 ஜூலை 30] [திரு. சி. பொன்னையன்]

3. அரசு உறுதிமொழிக் குழு
4. அவைக் குழு
5. மனுக்கள் குழு
6. நூலகக் குழு
7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227(2), 239(2), 248(2), 253(2), 261(3), 264(2), 268(4) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே, தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய அக்குழுக்களில் பணியாற்றவேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 8. அரசினர் தனித் தீர்மானம்

### 'தி ஹிந்து' மற்றும் பிற நாளிதழ்கள் குறித்து உரிமைக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 7-11-2003 அன்று பேரவையில் நிறைவேற்றிய தீர்மானங்களை இரத்து செய்தல் மற்றும் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கைவிடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“அவை நிகழ்ச்சிகள் குறித்து பத்திரிகைகள் செய்தி வெளியிடும்போது, நாட்டின் நலன் கருதியும், மக்களின் நலன் கருதியும், நடுநிலையுடன் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டும், உண்மையை உள்ளபடி சரியாக வெளியிடவேண்டும். பேரவை நடவடிக்கை நிகழ்ச்சிகளை எந்த ஒரு பத்திரிகையும் உண்மைக்கு மாறாகத் திரித்து செய்தியாக வெளியிடுகின்ற போக்கு தடுக்கப்படவேண்டும் என்பதே அவையின் விதிமுறையும், நெறிமுறையும் ஆகும். அவ்வாறு இல்லாவிடில், இது மக்களை விரும்பத்தகாத முடிவுகளுக்கு அழைத்துச் செல்லுகின்ற ஒரு தவறான வழிகாட்டுதலாக அமைந்துவிடும். எனவே, எக்காலத்திற்கும் ஏற்ற இந்த மிக முக்கியமான நெறிமுறைகளை, அனைத்துப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் சற்றும் வழுவாது பின்பற்றும் என்ற நம்பிக்கையுடனும், அவையின் கௌரவம், கண்ணியம் மற்றும் உரிமைகளுக்கு உரிய மதிப்பளிக்கும் வகையில், “தி ஹிந்து” மற்றும் பிற நாளிதழ்கள், பேரவை நடவடிக்கைகள் குறித்த உண்மைத்தன்மை வாய்ந்த செய்திகளை வெளியிடும் என்ற நம்பிக்கையோடும், “தி ஹிந்து” மற்றும் பிற பத்திரிகைகள் குறித்து, உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 7-11-2003 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இரத்து செய்வதுடன், அத்தீர்மானங்களின் அடிப்படையில் “தி ஹிந்து” மற்றும் பிற நாளிதழ்கள்மீது எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் கைவிடப்படவேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-07-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

91. 11-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (பி), 202 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட எஸ்.ஆர்.ஓ.பி. 117/98 ஆம் எண்ணுள்ள பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்தும் மற்றும் 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் (1987 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடைமுறை நூல்–தொகுதி–I) திருத்தங்கள் செய்தும், அரசுப் பணியாளர் நடைமுறை நூல்–தொகுதி–I) திருத்தங்கள் செய்தும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின், 10-6-2003 ஆம் நாளிட்ட 62 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

92. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் (1987 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடைமுறை நூல்–தொகுதி–I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10-6-2003 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

93. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் (1987 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடைமுறை நூல்–தொகுதி–I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10-6-2003 ஆம் நாளிட்ட 64 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

94. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் (1987 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடைமுறை நூல்–தொகுதி–I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10-6-2003 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

95. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் (1987 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் நடைமுறை

நூல்-தொகுதி-I திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10-6-2003 ஆம் நாளிட்ட 66 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

96. 2002-2003 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

97. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

98. 2002-2003 ஆம் ஆண்டிற்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

99. 2002-2003 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

100. 2002-2003 ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

101. 2002-2003 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

102. 2002-2003 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்



சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

103. 2002-2003 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

104. 2002-2003 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

105. 2002-2003 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

106. 2002-2003 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

107. 2002-2003 ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

108. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

109. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ்)

110. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை. (1970 ஆம்

ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

140. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2002-2003 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

141. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — கால்நடை பராமரிப்பு பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

142. மானியக் கோரிக்கை எண் 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

143. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய செயல்முறைத் திட்டம், 2003-2004.

144. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை கைத்தறி மற்றும் துணி நூல் குறித்த மக்கள் சாசனம், 2004 (தமிழ், ஆங்கிலம்)

145. மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

146. கால்நடை பராமரிப்புத் துறையின் மக்கள் சாசனம், 2004 (தமிழ், ஆங்கிலம்)

147. வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (தமிழ்)

148. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மை மற்றும்





ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (தமிழ்)

149. சிறு தொழில்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (தமிழ்)

150. மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் திருத்தம் வெளியிடப்பட்டது குறித்து.

151. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி ஆறாவது அறிக்கை. (2003-2004)

152. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி ஏழாவது அறிக்கை. (2003-2004)

153. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி எட்டாவது அறிக்கை. (2003-2004)

154. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

155. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2003-2004)

---

## இணைப்பு – I

(43 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 6

## கால்நடைப் பராமரிப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2004–2005


**முன்னுரை**

நம் நாட்டின் பொருளாதாரம் பெரும்பாலும், வேளாண்மை அடிப்படையிலானதாகும். கிராமப்புறங்களில் வாழும் 75 சதவீதத்திற்கும் மேலான மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திட வேளாண்மை, கால்நடை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களையே நம்பியுள்ளனர். உண்மையில் இந்திய வேளாண்மை, பயிர் விளைச்சல் மற்றும் கால்நடை உற்பத்தி ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று இணைந்த பொருளாதார அமைப்பாக விளங்குகிறது. கால்நடைகளே இந்திய வேளாண்மைக்கு அடிப்படை ஆதாரமாய் அமைந்துள்ளது. இது மாநிலத்தின் 65 சதவீத மக்களுக்கு வாழ்வளிப்பதுடன் இம்மாநிலத்தின் வேலை வாய்ப்பில் 62 சதவீத பங்களிக்கிறது. மாடுகள் இழுவைத் திறனையும், வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யக்கூடிய இயற்கை உரத்தையும் அளிக்கின்றன. கால்நடைப் பராமரிப்பு சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு துணை வருவாய் ஈட்ட உதவுவதுடன், பெரும் எண்ணிக்கையிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதில் கணிசமான பங்கினை அளிக்கிறது. இவர்களில் பெரும்பாலோர்கள் பெண்கள் ஆவர். இவர்கள் கால்நடைகளைப் பராமரிப்பதிலும், கால்நடைகளை மேலாண்மை செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றனர். கால்நடைகள் சத்தான புரதச்சத்து அதிகம் கொண்ட சமச்சீரான உணவை, பால், முட்டை, இறைச்சி மற்றும் ஊட்டம் மிக்க பொருட்கள் ஆகிய வடிவில் அளிக்கின்ற இன்றியமையாத ஆதாரமாக விளங்குகின்றன. அதுமட்டுமின்றி அப்பகுதிகளில் நிலவும் சமூக, கலாச்சார மற்றும் பாரம்பரிய மதிப்புகளில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

[2004 ஜூலை 30

கால்நடைத் துறை மதிப்பு வாய்ந்த பொருட்களை கணிசமான அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதன் பங்காக அளித்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.51 சதவீதமாகவும், வேளாண்மைப் பிரிவின் மொத்த உற்பத்தியில் 22.17 சதவீதமாகவும் உள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.82 சதவீதமாக இருந்த கால்நடைகளின் பங்கு 1999-2000 ஆம் ஆண்டில் 5.51 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது தேசிய பொருளாதாரத்திற்கும் மற்றும் குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பை பெருகச் செய்வதிலும் கால்நடைப் பிரிவின் பங்களிப்பின் முக்கியத்தையும் பிரதிபலிக்கிறது. பால் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிக்கின்ற மிகப்பெரிய வேளாண்மைப் பொருளாக விளங்குகிறது.


கால்நடைப் பராமரிப்புத் துறை, மாநிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதி மற்றும் மரபியல் ரீதியாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இது மட்டுமின்றி, ஏழை, எளிய அடித்தள மற்றும் நலிவுற்ற சமுதாயப் பிரிவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நலனிற்கும் பயன்தரும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாநிலமெங்கிலும் பரந்த அளவில் அமைந்துள்ள பல்வேறு கால்நடை நிலையங்கள் இச்சேவையை அளித்து வருகின்றன. பல்வேறு பயனாளிகள் முன்னிறுத்தத் திட்டங்களை இத்துறை அர்ப்பணிப்புடனும், அயராதும் நிறைவேற்றியதாலும், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் இயற்கை ஆதாரங்களை நல்லமுறையில் பயன்படுத்தியதாலும், மாநிலத்தில் கால்நடைப் பிரிவின் பங்கு குறிப்பிடத்தக்க நிலைக்கு உயர்ந்துள்ளது.






2004 ஜூலை 30]

1983-84 ஆம் ஆண்டில் 25.62 இலட்சம் மெட்ரிக் டன்னாக மதிப்பிடப்பட்டிருந்த பால் உற்பத்தி, 1998-99 ஆம் ஆண்டில் 4273 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2003-2004 ஆம் ஆண்டில், 47.53 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் அதிகரித்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டில், ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு 145 கிராமாக இருந்தது 1998-99 ஆம் ஆண்டில் 191 கிராமாகவும், 2003-04 ஆம் ஆண்டில் 209 கிராமாகவும் அதிகரித்துள்ளது.




இதே காலகட்டத்தில், 1983-84-ல் 996 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி, 1998-99 ஆம் ஆண்டில் 3,588 மில்லியனாகவும், 2003-04 ஆம் ஆண்டில் 3,784 மில்லியனாகவும் அதிகரித்தது. இதுபோன்றே ஒருவருக்கு ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 21-லிருந்து 59-ஆகவும், பின்னர் 2003-04 ஆம் ஆண்டில் 61-ஆகவும் அதிகரித்துள்ளது. கலப்பினக் கருத்தரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமும், நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், ஒருவர் ஒரு நாளைக்கு 220 கிராம் பால் அருந்த வேண்டும்; ஒரு வருடத்திற்கு 183 முட்டைகள் உட்கொள்ள வேண்டும் என்ற இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் பரிந்துரைத்துள்ள அளவை எய்த இயலும்.

2003-04 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில், 24.05 இலட்சம் கால்நடைகள் வெட்டப்பட்டு, 46.67 மில்லியன் கிலோ இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் துறைமுகங்கள் வாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்கள் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.22,115.54 மில்லியனாக இருந்தது. இது 2002-03 ஆம் ஆண்டில் ரூ.37,183.80 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது மெச்சத்தகுந்த 59.48 சதவீதம் அதிகரிப்பாகும்.

[2004 ஜூலை 30

பெருகிவரும் மக்கள் தொகை, நகரமயமாக்கல், குறைந்துவரும் வேளாண் நிலங்கள், அதிகரித்துவரும் தரிசு நிலங்கள், குறைவான மகசூல், விரைவாய் நிலங்கள் துண்டு துண்டாக ஆகுதல், பருவப் பயிர் சாகுபடி பொய்த்தல், பெருகிவரும் வருவாயால் மாறிவரும் வாழ்க்கைத்தரம் அகியவைகளால் கால்நடைகள் மூலமாகக் கிடைக்கும் சத்தான புரதச்சத்து மிக்க பால், முட்டை மற்றும் இறைச்சியின் தேவை அளவிலும் தரத்திலும் அதிகரித்துள்ளது. தனியார், கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை, அடித்தள மக்கள் பயன்பெறும் வகையிலான பல்வேறு பயனாளிகள் முன்னிறுத்தத் திட்டங்களுக்கு அரசு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவினால், கால்நடை வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை முழுமையாக வெளிப்படுத்த இயலும். ஆகையால், கால்நடைப் பராமரிப்பு பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், வறுமை மற்றும் வேலை இல்லாமையை ஒழிப்பதுடன் கிராமப்புற மக்களின் முழுமையான சமூக பொருளாதார மாற்றத்திற்கு வலிமைமிக்க கருவியாகவும் செயல்படுகிறது. மொத்தத்தில், கால்நடைப் பராமரிப்பு தனிநபரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதுடன், வளர்ச்சிக்குக் காரணமாகவும், பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டி விடுவதாகவும் செயல்பட இயலும்.

**பொது நிர்வாகம்**

கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்கும் உரிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலம் 25 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல இணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. 25 மண்டலங்களும் 65 ஆட்சிக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கால்நடை உதவி இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது. இவர் அக்கோட்டத்தில் துறையால் நடத்தப்பெறும் அனைத்துப் பணிகளுக்கும் பொறுப்பானவராவார்.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பலவகை தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. நோய் பற்றிய ஆய்வு செய்யவும், அதனை




2004 ஜூலை 30]

உறுதிப்படுத்துவதுடன் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்தொடர்பு ஆய்வுக் கூடம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ள உதவி இயக்குநர் தலைமையில் இயங்கிவரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணியை ஒருங்கிணைத்து வருகிறது.

இத்துறையில் உள்ள 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், 20 கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் 2 கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் ஆகிய ஒவ்வொன்றும் ஒரு துணை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

2003-04 ஆம் ஆண்டில் திட்டச் செலவினங்களுக்கு ரூ.27.72 கோடியும், திட்டமில்லாச் செலவினங்களுக்கு ரூ.149.27 கோடியும், ஆக மொத்தம் ரூ.176.99 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. திருத்திய நிதி ஒதுக்கீட்டில் திட்டச் செலவினங்களுக்கு ரூ.26.20 கோடியும், திட்டமில்லாச் செலவினங்களுக்கு ரூ.128.91 கோடியும் உள்ளடக்கி மொத்தம் ரூ.155.11 கோடி ஒதுக்கப்பட்டது.


**நிதி ஒதுக்கீடு 2003–2004**



[2004 ஜூலை 30

## கால்நடை எண்ணிக்கை


மாநிலத்தில் உள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 259.39 இலட்சம் ஆகும். இது நாட்டிலுள்ள மொத்த கால்நடைகளில் 5.40 சதவீதமும், உலக அளவிலான கால்நடைகளில் 0.60 சதவீதமும் ஆகும். நாட்டிலுள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கையில் மாநிலத்தில் 4.58 சதவீதம் பசுவினமும், 3.08 சதவீதம் எருமையினமும், 9.27 சதவீதம் செம்மறியாடுகளும் மற்றும் 5.32 சதவீதம் வெள்ளாடுகளும் உள்ளன. பதினாறாவது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பின்படி (1997) மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் இனவாரியான எண்ணிக்கை விவரங்களும், மொத்த கால்நடை மற்றும் கோழியின எண்ணிக்கையில் அவற்றின் விழுக்காடு மற்றும் அடர்த்தி பற்றிய விவாம் கீழ்வருமாறு:






2004 ஜூலை 30]

| இனம் | எண்ணிக்கை | அடர்த்தி |
|---|---|---|
| பசுவினம் | 90,46,542 | 70 |
| எருமையினம் | 27,41,263 | 21 |
| செம்மறியாடுகள் | 52,58,884 | 40 |
| வெள்ளாடுகள் | 64,16,204 | 49 |
| நாய்கள் | 17,96,216 | 14 |
| பன்றிகள் | 6,09,176 | 5 |
| கழுதைகள் | 43,197 | 1 |
| குதிரைகள் மற்றும் மட்டக் குதிரைகள் | 11,003 | |
| முயல்கள் | 16,909 | |
| மொத்த கால்நடைகள் | 2,59,39,394 | 200 |




| இனம் | எண்ணிக்கை | அடர்த்தி |
|---|---|---|
| கோழிகள் | 3,57,92,376 | 276 |
| வாத்துகள் | 7,15,153 | 5 |
| இதர இனம் (வான்கோழி, கின்னிக்கோழி) | 3,546 | - |
| மொத்த கோழியினங்கள் | 3,65,11,075 | 281 |

கால்நடைகள் குறைந்த ஆண்டுகளே உயிர் வாழ்வதைக் கருத்திற் கொண்டு கால்நடைக் கணக்கெடுப்பு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 17-வது கால்நடைக் கணக்கெடுப்புப் பணி தற்போது இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்**

அதிதீவிர மக்கட் தொகைப் பெருக்கமும் மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரம் குறித்த விழிப்புணர்வு ஆகியனவும், பெருகிவரும் தொழிற்சாலைகள், வணிகம், போக்குவரத்து ஆகியவையும் நிலத்தின் தேவையை அதிகரித்துள்ளன. இதனால் கால்நடைகளுக்கான தீவனம், பசுந்தீவன உற்பத்தி மற்றும் மேய்ச்சல் வசதி பாதிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் பசுந்தீவன உற்பத்தி இன்றும் வேளாண்மை உற்பத்திக்குத் துணையானதாகவே கருதப்படுகிறது. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம், புல்வெளிகள் மற்றும் புல் தரைகளில் மேய்வதாலும், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் வளரும் பசுந்தீவனப் பயிர்கள், களைகள், வரப்புகளிலுள்ள புற்கள், மர இலைகள் மற்றும் கலப்பட தீவனப் பயிர்கள் மூலமாகவும் கிடைக்கின்றன. ஊட்டச் சத்து குறைவாக உள்ள அறுவடைக் கழிவுகளான சோளம் மற்றும் வைக்கோல் கதிர்களே கால்நடைகளுக்கு பெரும்பான்மை உணவாக அமைந்துள்ளது. சாதாரணமாக பசுந்தீவனம் கறவை மாடுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மிகச் சுருங்கிய அளவில் மட்டுமே கிடைக்கின்றது. பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மட்டுமின்றி கருத்தரிப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கும் அளிக்கப்படவேண்டும். பண்ணையில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் பெரும் பங்கு வகிக்கிறது. கால்நடைப் பராமரிப்பு பொருளாதார ரீதியாக வெற்றி பெறுவதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் ஆகியவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது. ஏனெனில், கால்நடைப் பண்ணையின் மொத்தச் செலவினத்தில் தீவனச்செலவு 65-70 சதவீதமாக அமைகிறது.

மாநிலத்தில் உள்ள மொத்த மாட்டினத்திற்கு ஒரு வருடத்திற்கு 172.10 இலட்சம் மெட்ரிக் டன்கள் உலர்தீவனமும் 645.38 இலட்சம் மெட்ரிக் டன்கள் பசுந்தீவனமும் தேவைப்படுகிறது. பொதுச் சொத்து ஆதாரங்களில் 16.99 இலட்சம் ஹெக்டேரும், திறந்தவெளிக் காடுகளாக





16.20 இலட்சம் ஹெக்டேரும் மேய்ச்சலுக்குக் கிடைக்கின்றன. உலர் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைப்பதற்கும் அவற்றின் தேவைக்கும் உள்ள இடைவெளி முறையே 27 சதவீதம் மற்றும் 79.60 சதவீதமாக உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த நிலப்பரப்புடன் ஒப்பிடும்போது மேய்ச்சல் நிலம் மற்றும் நிரந்தரமான புல்வெளிகள் மற்றும் இதர மேய்ச்சல் நிலங்களின் விகிதம் மிகக் குறைவாகவே உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டும் வருகிறது. மாநிலத்தில் உள்ள மொத்த மேய்ச்சல் நிலப் பரப்பளவு 1.18 இலட்சம் ஹெக்டேராகும். இதில் சாகுபடி செய்யப்படாத பயனற்ற நிலங்கள் மற்றும் நிரந்தர புல்வெளிகளும் அடங்கும். கிடைக்கக்கூடிய மேய்ச்சல் நிலங்களும் மிகுதியாக பயன்படுத்தப்படுவதால் அவை வளம் குன்றியுள்ளன. மேய்ச்சல் நிலங்களை எந்தவித வேற்றுமையுமின்றி வேறு வகையான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதால் அவை தரங்குறைந்து போவதுடன் ஒன்றுமில்லாமற் போவதைத் தவிர்க்கும் பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்தவகையான பயன்பாட்டிற்கும் மாற்றக் கூடாது என்றும், அவ்வாறு மாற்ற வேண்டுமெனில், அதே மாவட்டத்தில், மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்குச் சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்தி ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக் கூடாது என்ற நிபந்தனையை அரசு விதித்துள்ளது. மாற்று நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்துவதற்காகும் செலவினமாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- அதாவது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/- உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வைப்பு நிதியாக செலுத்தப்படவேண்டும்.

மேய்ச்சல் நில வசதிகளை அதிகரிக்க இத்துறை இதர துறைகளுடன் சேர்ந்து சேலம், நாமக்கல், வேலூர், தேனி, தஞ்சாவூர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க இத்துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன் கீழ்க்காணும் இடங்களில் பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது:-

1. படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)
2. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)

3. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)

4. ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)

5. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)

6. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)

7. புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)

கீழ்க்காணும் பசுந்தீவன அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- நிலமற்ற மற்றும் ஏழை விவசாய குடும்பங்களை கால்நடை பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த, சமுதாய தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி தீவன வசதிகளைப் பெருக்க ஊக்குவித்தல்;
- நீண்ட கால பசுந்தீவன வகையைச் சார்ந்ததும் அதிக மகசூல் அளிக்கக்கூடியதுமான நேப்பியர், உயர் ரக கோ.1, கோ.3, பாராபுல் மற்றும் கினியா புல் வகை ஆகியவற்றைப் பயிரிட ஊக்குவித்தல்;
- காராமணிப் பயறு வகை, ஸ்டைலோ, கோ.3 புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடு பயிராக விளைவிக்க ஊக்குவித்தல்;
- தீவன விதைகள் அடங்கிய சிறு பைகளை இலவசமாக வழங்குதல்;
- அதிக அளவிலான இரும்பு மற்றும் புரதச் சத்து கொண்டுள்ள அகத்தி மரக்கன்றுகளை விநியோகித்தல்;
- புரதச் சத்து மிக்கதும் அதிக அளவில் வறட்சித் தன்மையைத் தாங்கக் கூடியதுமான சூபாபுல் மரக்கன்றுகளை விநியோகிப்பதுடன், சூபாபுல் மரக்கன்றுகளை வளர்த்தல்;
- கால்நடை நிலையங்களில் கத்தாழையை பயிர் செய்யவும் விநியோகிக்கவும் ஊக்குவித்தல்;




- வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ், பசுந்தீவனப் பற்றாக்குறையை எதிர்கொள்ள 8 கால்நடைப் பண்ணைகளிலும், கிராம மேய்ச்சல் நிலங்களிலும் பசுந்தீவனம் பயிரிடப்பட்டது. கால்நடைப் பண்ணைகளில் மொத்தம் 560 ஏக்கரில் 35,980 மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. கிராமங்களில் ஏற்கனவே உள்ள 2,725 ஏக்கர் மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தி 25,500 மெட்ரிக் டன்கள் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது.

## கால்நடை அபிவிருத்தி

### பசுவினம் மற்றும் எருமையினம் – இனப்பெருக்கம்

மாநிலத்தில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் பசுவினம் 77 சதவீதமும், எருமையினம் 33 சதவீதமும் உள்ளது. மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினத்தின் அடர்த்தி முறையே 70 மற்றும் 21 ஆக உள்ளது. இனப்பெருக்கத்திற்கு உகந்த வயதுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளின் இனவாரியான எண்ணிக்கை மற்றும் அதன் விழுக்காடு கீழ்வருமாறு:-



[2004 ஜூலை 30

| இனம் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் விழுக்காடு | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் இனவிருத்திக்கு உகந்த பெண்மாட்டின எண்ணிக்கை விழுக்காடு |
|---|---|---|---|---|
| *1. பசுவினம்* | | | | |
| அயலினம் | 37,053 | 0.31 | 20,230 | 0.33 |
| கலப்பினம் | 21,41,483 | 18.17 | 12,40,306 | 20.00 |
| உள்நாட்டு தூய்மை மரபினம் | 13,27,117 | 11.26 | 6,37,100 | 10.27 |
| நாட்டினம் | 55,40,889 | 47.01 | 25,64,884 | 41.37 |
| மொத்தம் | 90,46,542 | 76.75 | 44,62,520 | 71.97 |
| **2. எருமையினம்** | | | | |
| முர்ரா | 46,490 | 0.39 | 30,718 | 0.50 |
| தரம் உயர்த்தப் பட்டவை | 5,57,552 | 4.73 | 3,42,890 | 5.53 |
| நாட்டினம் | 21,37,221 | 18.13 | 13,64,411 | 22.00 |
| மொத்தம் | 27,41,263 | 23.25 | 17,38,019 | 28.03 |
| **3.மாட்டினம்** | 1,17,87,805 | 100.00 | 62,00,539 | 100.00 |



2004 ஜூலை 30]

நாட்டினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் அதிக வெப்ப நிலையைத் தாங்கக் கூடியவையாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாகவும், பால் கொடுக்கும் காலம் குறைவாகவும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மறு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட காலம் அதிகமாகவும் உள்ளனவாக இருக்கின்றன. ஆனால் அயலினங்கள் நீண்ட காலத்திற்குப் பால் தருவனவாகவும், விரைவில் பருவமடைவதுடன் கூடுதலாகப் பால் தருவனவாகவும், குறுகிய வற்றுக்காலம் மற்றும் குறுகிய இடைவெளியில் கன்று ஈனும் காலம் உடையனவாக விளங்குகின்றன. ஆனால் இவற்றிற்கு நோய் எதிர்ப்புத் திறனும் தட்ப வெப்ப நிலையைத் தாங்கும் தன்மையும் குறைவாக உள்ளன. நாட்டினங்களில் காணப்படும் இப்பொருளாதார அம்சங்களை மேம்படுத்துவதுடன் அவற்றில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்ப வெப்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைக் குறுகிய காலத்தில், ஏற்கத்தக்க செலவில் பாதுகாப்பதற்கு கலப்பினப் பெருக்கம் செய்வது ஒன்றே மாற்று வழியாகும். நாட்டினங்கள் வலிமையாகவும், நோய் எதிர்ப்புத்திறன் வாய்ந்தவையாகவும், கடுமையான தட்பவெப்ப நிலைகளைத் தாங்கிகொள்வனவாகவும் குறைந்த ஊட்டச்சத்தில் உயிர்வாழ்வனவாகவும் உள்ளன. நாட்டினங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி அவற்றின் சொந்த பிறப்பிடங்களிலேயே வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

நம் மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினப் பெருக்கத்திற்கு கீழ்க்காணும் கொள்கை பின்பற்றப்படுகிறது:-

* ஜெர்சி மற்றும் ப்ரிசியன் போன்ற அயலின பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கத்திற்குத் தகுதியுள்ள நாட்டினப் பசுக்களில் கலப்பினப்பெருக்கம் செய்தல்;
* முர்ரா இனப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு நாட்டின எருமைகளை இனப்பெருக்கம் செய்தல்;
* கலப்பினப் பசுக்களை கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்தல்;
* காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களை அவை வளர்க்கப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

[2004 ஜூலை 30

இனப்பெருக்கத்திற்கு மேற்கூறிய கொள்கையைக் கடைப்பிடித்ததின் விளைவாக 1989 ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கெடுப்பின்படி 11.24 இலட்சமாக இருந்த கலப்பினப் பசுவினங்கள் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 21.11 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 90 சதவீத அதிகரிப்பாகும். இதே காலகட்டத்தில் உள்நாட்டினங்கள் 69.51 இலட்சத்திலிருந்து 55.41 இலட்சமாகக் குறைந்துள்ளன. இது 20 சதவீதம் குறைவாகும். குறைந்த அளவே கருவூட்டும் திறனுள்ள உள்நாட்டினக் காளைகளின் எண்ணிக்கை 32 சதவீதம் குறைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். உழவு மற்றும் வேலைகளுக்கு அதிகம் பயன்படுத்தப்படும் உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்கள் 12.57 இலட்சத்திலிருந்து 13.27 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 6 சதவீத அதிகரிப்பாகும். 1989 ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கெடுப்பின்படி 31.28 இலட்சமாக இருந்த எருமையினம் 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 27.11 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 12 சதவீதம் குறைவாகும். குறைந்த அளவே கருவூட்டும் திறனுள்ள நாட்டுப்புற எருமைகள் 18 சதவீதம் குறைந்ததே இதற்குக் காரணமாகும். ஆனால் இதே கால அளவில் தரம் உயர்த்தப்பட்ட எருமையினங்களின் எண்ணிக்கை 4.72 இலட்சத்திலிருந்து 5.58 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 18 சதவீத அதிகரிப்பாகும்.

பசுவினம் மற்றும் எருமையினங்களின் இனப்பெருக்க நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஒரே குடையின்கீழ் கொண்டுவர, "தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை" என்ற அமைப்பை தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அரசு ஏற்படுத்தியுள்ளது.

## உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்

செயற்கை முறைக் கருவூட்டல் மாட்டினங்களில் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்களை உருவாக்குகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, பசு மற்றும் எருமையினத்தின் மரபுத் திறனை அதிகரிக்க அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்தைக் கொண்டு செயற்கை முறைக் கருவூட்டல் பணி 1948 ஆம் ஆண்டில் இத்துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் உறைவிந்தைக் கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் பணி அறிமுகப்படுத்தப்பட்டது. 1993 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களும் உறைவிந்தை மட்டுமே பயன்படுத்துகின்றன. 3,569 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் கீழ்க்காணும் 4 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.




2004 ஜூலை 30]

- ஈச்சங்கோட்டை – தஞ்சாவூர் மாவட்டம்
- அபிசேகப்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்
- ஓசூர் – கிருஷ்ணகிரி மாவட்டம்
- உதகமண்டலம் – நீலகிரி மாவட்டம்

இந்த நிலையங்களில் ஜெர்சி, ஹோல்ஸ்டைன், ப்ரிசியன், கலப்பினங்கள், காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் முர்ரா இனங்களைச் சேர்ந்த மொத்தம் 286 பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த அனைத்து உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலும் நடுத்தர உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

உறை விந்துக் குச்சிகளை உறைய வைக்கவும் அவற்றை சேமித்து வைக்கவும் ஈச்சங்கோட்டையில் மூன்றும், அபிசேகப்பட்டி மற்றும் ஓசூரில் தலா இரண்டும், உதகமண்டலம் (நீலகிரி), சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ஆக மொத்தம் 10 திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் செயல்படுகின்றன. மாநிலத்தில் வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய 12 இடங்களில் உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்தினை சேமித்து வைப்பதும், அவற்றை பல்வேறு கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியை நிறைவேற்றும் பொருட்டு வழங்குவதும் இவ்வங்கிகளின் முக்கிய பணியாகும்.

**இனவாரியான உறைவிந்து உற்பத்தி 2003–04**



[2004 ஜூலை 30

இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்கள், திரவ நைட்ரஜன் ஆலைகளில் 2003–04 ஆம் ஆண்டில் 33.82 இலட்சம் உறைவிந்துக் குச்சிகளும், 1.93 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும் உற்பத்தி செய்யப்பட்டன. அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் பணிகளையும் ஒரே குடையின்கீழ் கொண்டுவரும் நோக்குடன், மேற்கண்ட நான்கு உறைவிந்து உற்பத்தி நிலையங்களையும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைக்கு மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

## செம்மறியாடு பெருக்கம்

செம்மறியாடுகள், மொத்தம் உள்ள ஆடுகளில் 45 சதவீதமாக உள்ளது. இதில் கலப்பினம் 5 சதவீதமும் உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்கள் 95 சதவீதமாகவும் உள்ளது. செம்மறியாடு வளர்ப்பு, மாநிலத்தின் கால்நடை பராமரிப்பில் முக்கியமான அம்சமாக விளங்குவதுடன் பெரும்பான்மையான நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வாழ்விற்கான ஆதாரத்தை அளிப்பதாகவும், பிழைப்பிற்குப் பயனுள்ள வேலைவாய்ப்பையும் அளிப்பதாக விளங்குகிறது. இறைச்சி மற்றும் தோல் ஆகியவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர, வயல்களுக்கு உரமிடுவதற்காக செம்மறியாடுகளை "கிடை" அடைப்பதன் மூலமும் சிறு வருவாய் கிடைக்கிறது. கிராமப்புற வறுமை ஒழிப்பிற்கு செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களிலும் செம்மறியாடு வளர்ப்பு மிகச் சிறந்த பலன்களை அளிக்கிறது.

துறையிலுள்ள பண்ணைகளில் பராமரிக்கப்படும் செம்மறியாடு இனங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | கீழக்கரிசல் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கீழக்கரிசல் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | இராமநாதபுரம் வெள்ளை |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | மாண்டியா, கோரிடேல் கலப்பினம் |
| 5 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | வேம்பூர் |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | மேச்சேரி |
| 7 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் | சென்னை சிகப்பு |



2004 ஜூலை 30]

இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு உள்ளூர் ஆடுகளின் ஈற்றின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இனப் பெருக்கத்திற்காகவும் ஆடுகள் விற்கப்படுகின்றன.

அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம், தீவனம் மற்றும் மேலாண்மை யுக்திகளைக் கையாள்வதன் மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்கிடவும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரவும், புதுக்கோட்டை கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 567 தொடர்பு பணியாளர் தம்பதியினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் 4 மாதங்கள் ஆன 1 கிடாக் குட்டிகள் மொத்தம் ரூ.18.14 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. ஓராண்டுக்குப் பின்னர் இந்த ஆட்டுக் குட்டிகள் அப்பகுதியில் உள்ள செம்மறியாடு வளர்ப்போருக்கு இனப்பெருக்கம் செய்யும் பொருட்டு விற்கப்படும்.

## வெள்ளாடு இனப்பெருக்கம்

வெள்ளாடு ஒரு முழு நிறைவான கால்நடை ஆகும். இது மாநிலத்தில் உள்ள மொத்த செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளில் 55 சதவீதமாக உள்ளது. விரைவில் இனப்பெருக்கம் ஆகும் தன்மை, கூடுதல் வளர்ச்சி விகிதம் மற்றும் எளிதில் சந்தையில் விலை போகுதல் ஆகியவை இதற்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. மேலும் பல்வேறு கால்நடைப் பண்ணை பராமரிப்பு முறைகளில் வெள்ளாடு வளர்த்தல் மிகச் சிறந்த இலாபம், குறைந்த செலவு விகிதம் கொண்ட தொழிலாக விளங்குகிறது. 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 64.16 இலட்சம் வெள்ளாடுகள் உள்ளன.

துறையிலுள்ள பண்ணைகளில் கீழ்க்காணும் வெள்ளாட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:

[2004 ஜூலை 30

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | கொடிவள்ளி |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | ஜமுனாபாரி |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | தெல்லிசேரி, ஜமுனாபாரி |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | கொடிவள்ளி,ஜமுனாபாரி |
| 5 | கால்நடைப் பண்ணை, கொருக்கை | ஜமுனாபாரி |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | ஜமுனாபாரி |
| 7 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | கன்னி வெள்ளாடு, ஜமுனாபாரி |

உள்ளூரிலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை அதிகரிக்கும் பொருட்டு இந்த ஆடுகள் ஈன்ற குட்டிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

ஆடுகளுக்கு ஏற்படும் பெரும்பாலான உடல் நலக் குறைவுகளுக்கு அவைகளைத் தாக்கும் குடற்புழுக்களே முக்கிய காரணம் ஆகும். செம்மறியாடுகளுக்கு ஏற்படும் குடற்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இத்துறை 1982–83 முதல் தீவிர உடல் நலம் பேணும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளால் வளர்க்கப்படும் செம்மறியாடுகளுக்கு ஒட்டுண்ணியால் ஏற்படும் பிரச்சினைகளை மேற்கொள்ள காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.



2004 ஜூலை 30]

புன்செய் சாகுபடி மண்டலங்களில் பண்ணை மேலாண்மையை வெள்ளாடு வளர்ப்புடன் ஒருங்கிணைக்கும் நோக்குடன் முன்னோடித் திட்டமொன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையுடன் சேர்ந்து தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, பெண்ணாகரம், நல்லாம்பள்ளி, பாலக்கோடு, மொரப்பூர் மற்றும் அரூர் ஆகிய பகுதிகளில் ரூ.22.81 இலட்சம் செலவில் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

## இதர கால்நடை அபிவிருத்தி

முந்தைய ஆண்டுகளில் பன்றி வளர்ப்பு அறிவியல் முறைப்படி செயல்படாமலிருந்திருந்தாலும், அண்மைக் காலங்களில் இது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பன்றி வளர்ப்பு சுய தொழிலையும், சத்தூட்டம் மிக்க உணவையும், கூடுதல் வருவாயையும் அளிக்கிறது. பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நகர்ப்புறத்தில் நிலவும் கணிசமான தேவையை நிறைவு செய்ய இத்துறை பன்றி வளர்ப்பை ஊக்குவித்து வருகிறது.

பெரிய வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் சென்னை சைதாப்பேட்டை பன்முகக் கால்நடை மருத்துவமனை வளாகத்திலும், ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, ஒரத்தநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. இதுவுமன்றி, லாண்ட்ரேஸ் இனமும் செட்டிநாடு பண்ணையில் வளர்க்கப்படுகின்றது. உள்ளினச் சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசு உதவியுடன் வெளி மாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கப்பட்டு மேற்கண்ட அலகுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

குதிரையினங்களின் இனப்பெருக்கத்தைப் புனரூட்டவும் அவற்றைப் பாதுகாக்கவும் குதிரை வளர்ப்பு பிரிவு ஒன்று ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. 10 பெண் குதிரைகளும் 3 ஆண் குதிரைகளும் 11 இளங் குதிரைகளும் இப்பிரிவில் உள்ளன. இப்பிரிவில் உள்ள குதிரைகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 30

சென்னை, சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று 1980–81 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை ஆகிய நாட்டின நாய் இனங்களை வளர்த்து வந்தது. மற்ற இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கும் நல்ல தேவை இருந்ததால் லாப்டார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் 1997–98 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன. தற்சமயம் இப்பிரிவில் 10 ஆண் நாய்களும், 17 பெண் நாய்களும், 9 குட்டிகளும் உள்ளன. இந்நாய்க் குட்டிகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

**கோழியினப் பெருக்கம்**

மாநிலத்தின் மொத்த பறவையினங்களில் கோழியினம் 98 சதவீதமாக உள்ளது. நமது மாநிலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் வியக்கத்தக்க அளவிற்கு வளர்ந்துள்ளது. முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் நாட்டில் இரண்டாம் இடம் வகிக்கிறது. வெறும் புழக்கடை கோழி வளர்ப்பாக மட்டுமிருந்த கோழி வளர்ப்பு தற்போது சுறுசுறுப்பான, வர்த்தக ரீதியான உயிர்த்துடிப்புள்ள நன்கு செயற்படக்கூடிய தொழிலாக 1960 ஆம் ஆண்டில் ஆழ்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தொழில் முறை மாற்றம் பெற்று முன்னேற்றமடைந்துள்ளது. 1970 ஆம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள், புதிய இனக்கோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டு முறைக் கோழி வளர்ப்பு போன்றவை இத்தொழிலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. கோழி விரிவாக்க நிலையங்கள் இச்செயல்முறையை விரைவுபடுத்தியதுடன் அவை செயல் விளக்கப் பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, கோழிப்பண்ணைத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்கு பயிற்சி நிலையமாகவும் விளங்கின. மேலும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் தோற்றுவிப்பு, கோழி வளர்ச்சிக் கூட்டங்களைத் தோற்றுவிக்க அரசின் உதவி, வெள்ளைக்கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல், தரமான தீவனம் எளிதில் கிடைத்தல் ஆகியவை கோழி வளர்ப்பிற்கு பெரும் பங்காற்றி இது ஓர் தொழிலாக மேன்மையடையச் செய்தது. இதனால் இதுவரை குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது.



2004 ஜூலை 30]

கிராமப்புறங்களில் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காவண்ணம புறக்கடையில் 5 முதல் 10 கோழிகள் சிறிய முதலீட்டில் வளர்க்கப்படுகின்றன. குடும்பத்திற்குத் தேவையான இறைச்சி மற்றும் முட்டைகள் இக்கோழிகளிலிருந்து கிடைக்கின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் கோழிகள் பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டை மற்றும் இறைச்சியாக மாற்றித் தருகின்றன. இந்தக் கோழிகள் இறப்பை உண்டு பண்ணக் கூடிய வெள்ளைக்கழிச்சல் என்ற நோய் தாக்குதலுக்கு ஆளாகி இறக்க நேரிடுகின்றது. கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாப்பதற்கு இத்துறை அனைத்து கால்நடை நிலையங்களில் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு குறிப்பிட்ட நாளிலும், கால்நடை கிளை நிலையங்களில் இரு வாரங்களுக்கு ஒரு முறையும் தடுப்பூசி போட்டு வருகின்றன. இந்நோய் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டும் இத்துறையால் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவைதவிர 24 கோழி விரிவாக்க நிலையங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் காட்டுப்பாக்கத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூரிலுமாக இரு கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையங்களும் உள்ளன. இவை விவசாயிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கி வருகின்றன. விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்பு பற்றி பிரபலப்படுத்த வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புறக்கடை வான் கோழி வளர்ப்பு ஒரு இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், வான்கோழிப் பிரிவு ஒன்று ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் ரூ.4.24 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையில் ஏற்கெனவே உள்ள உள்ளிருப்பு வசதிகளைப் பயன்படுத்தி அரசிற்கு எவ்வித செலவும் இல்லாமல் மேலும் 4 வான்கோழிப் பிரிவுகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வான்கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள உள்ளூர் விவசாயிகளுக்கு வான்கோழிக் குஞ்சுகள் விற்கப்படும்.

[2004 ஜூலை 30

குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு கூடுதலாக தொழில்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பையும், துணை வருவாய் ஈட்டவும் இதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், வனராஜா மற்றும் கிரிராஜா இனக் கோழிகளை வளர்க்க "மாநிலத்தில் கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு மத்திய அரசின் உதவி" என்ற திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற மத்திய அரசு அணுகப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் பறவை ப்ளு காய்ச்சல் நோய்க்கிளர்ச்சி தெற்கு ஆசிய நாடுகள் மற்றும் பாகிஸ்தானை தாக்கியது. இந்நோய் நமது நாட்டில் உள்ளதாகத் தகவல் இல்லாவிட்டாலும் இந்நோய் வராமல் தடுக்கவும் அதனைக் கட்டுப்படுத்தவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு களப்பணியாளர்கள் முடுக்கி விடப்பட்டனர். மேலும் கோழிகள் பெரும் அளவில் வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நாமக்கல்லில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து விழிப்புணர்வு முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இதுமட்டுமின்றி, இந்நோய் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் பொது மக்களுக்கு, குறிப்பாக கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் விநியோகிக்கப்பட்டன. முட்டைகள் அழுகிப்போவதை தவிர்க்கவும், ஏற்றுமதிக்குத் தகுதி வாய்ந்த முட்டைகளை உற்பத்தி செய்யவும் கோழி வளர்க்கும் விவசாயிகள் மற்றும் முட்டைத் தூள், முட்டைப் பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு முகாம் ஒன்றும் நாமக்கல்லில் நடத்தப்பட்டது.


**கால்நடைப் பண்ணைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட இன கால்நடைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் செயல் விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 ஆட்டுப்பண்ணைகளாகும்.



2004 ஜூலை 30]

தமிழ்நாடு




கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் இனவாரியான மாட்டினங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் மாட்டினம் |
|---|---|---|
| 1. | அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை | ஜெர்சி, ஹோல்ஸ்டியன் பிரிசியன், ஜெர்சி கிராஸ், உம்பளாச்சேரி, ஹோல்ஸ்டியன் பிரிசியன் கிராஸ், முர்ரா |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | ஜெர்சி, கலப்பினம், சிந்தி, காங்கேயம் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | முர்ரா, ஜெர்சி, கலப்பினம் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | ஜெர்சி, ஹோல்ஸ்டியன் பிரிசியன், கலப்பினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | கலப்பினம் |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கலப்பினம், தார்பார்க்கர் |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | முர்ரா |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை | உம்பளாச்சேரி |

கருமாற்றல் தொழில்நுட்பத்தை செயற்படுத்த இத்துறை முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. கருமாற்று தொழில்நுட்பப் பிரிவுகள் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள கால்நடைப் பெருக்கப் பண்ணை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### சிறப்புத் திட்டம்

பழங்காலந்தொட்டே கிராமப்புற குடும்பங்களில் கால்நடைகளும், அவர்களின் வாழ்க்கையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையதாக இருந்து வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகை, நகர மயமாக்கல் சாகுபடி நிலங்கள் மற்றும் மிகக் குறைந்த வேளாண் வருவாய் ஆகியன விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவது ஒரு கால்நடை வளர்ப்பிற்கு மாறச் செய்துவிட்டன. எனவே, ஏழை எளிய மற்றும் நலிவுற்ற மக்களின் நலம் மற்றும் பொருளாதாரத்தினை மேம்படுத்தவும் இப்பிரிவினருக்கு பிழைப்புக்கு ஆதாரமாகவும், வாழ்க்கை



நடத்தவும், வேலைவாய்ப்பினை அளிக்கவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இத்துறை பல்வேறு பயனாளிகள் முன்னிறுத்தத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையமும் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் கோத்தகிரி மற்றும் கூடலூரில் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2003–04 ஆம் ஆண்டில் உத்கமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து உற்பத்தியைப் பலப்படுத்துவதற்கு பல்வேறு உபகரணங்களை வாங்க ரூ.12.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவுமன்றி திட்டப் பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்தவும் மற்றும் கால்நடை நோய் புலனாய்வு பிரிவை பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் ரூ.9.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உதகமண்டலம் கால்நடை நோய் புலனாய்வு பிரிவில் பணிபுரிவோரின் ஊதியத்திற்காக ரூ.2.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.23.50 இல்ட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

### ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்மூலம் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில் தற்போது இயங்கி வரும் உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் வேட்டைக்காரன்புதூரிலும் தேனி மாவட்டம் உத்தமபாளையத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளும் திண்டுக்கல்லில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.


2003–04 ஆம் ஆண்டில் மேற்கூறிய நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவிலும் உள்ள பணியாளர்களின் ஊதியத்திற்கும்; இத்திட்டப் பகுதியில் உள்ள 300 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவுமன்றி இத்திட்டப் பகுதியில் வளமற்ற நிலங்களில் தீவனம் உற்பத்தி செய்ய ரூ.30.00 இலட்சமும், இத்திட்டத்திற்காக வாங்கப்பட்ட வாகனங்களைப் பராமரிப்பதற்காக

[2004 ஜூலை 30

ரூ.1.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.46.00 இலட்சம் மேற்காண் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

## இ) கால்நடை பாதுகாப்புத் திட்டம்

கால்நடை பாதுகாப்பு வசதிகள் பற்றாக்குறையுள்ள குக்கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் மருத்துவ பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் இத்திட்டம் 1999–2000 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நடத்தப்பெறும் சிறப்பு முகாம்களில், உடல்நலம் பேணுதல், நோய் தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, மலட்டுத் தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள், தீவன உற்பத்தி முறைகள் பற்றிய விவரங்களைக் கூறும் விளக்கக் கண்காட்சியும், செயல் விளக்கத்துடன்கூடிய கன்றுகள் பேரணி போன்றவை நடத்தப்பட்டு, கிராம மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது.




கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 14,237 முகாம்கள் நடத்தப்பட்டு 167.34 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.



2004 ஜூலை 30]

## டேனிடா உதவிபெறும் கால்நடை வளர்ச்சித் திட்டம்

டேனிடா உதவிபெறும் கால்நடை வளர்ச்சித் திட்டம் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் நடத்தப் பெற்றது. இதன் பிரதிபலிப்புத் திட்டம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கரூர், திண்டுக்கல், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் நாமக்கல் ஆகிய 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. தொடர்பு பணியாளர் தம்பதிகள் மற்றும் இலக்கு விவசாயிகளுக்கு பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகளைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களின் வருவாயைப் பெருக்கிக்கொள்ளவும் மற்றும் முறை சாரா கால்நடை மருத்துவ சேவையை அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் தொடர்பு பணியாளர் தம்பதிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பலவகைப்பட்ட கால்நடை பராமரிப்பு முறைகள், தீவன அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விரிவாக்க தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற இத்தொடர்புப் பணியாளர் தம்பதியினர் விவசாயிகளைப் பயிற்றுவிக்கிறார்கள். விவசாயிகள் சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள், மகளிர் அமைப்புகள் மற்றும் கால்நடை நிலையங்கள் ஆகியவற்றால் இலக்கு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டது. இத்திட்டம் 31–01–2004 உடன் முடிவடைந்தது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் மற்றும் பயிற்சி பெற்ற தொடர்புப் பணியாளர் தம்பதிகள் மற்றும் இலக்கு விவசாயிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| திட்டம் | செயல் படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | செயல் படுத்தப்பட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற தொடர்பு பணியாளர் தம்பதிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற இலக்கு விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிலை - 1 | 3 | 123 | 157 | 7,526 |
| நிலை - 2 | 26 | 988 | 931 | 36,409 |
| திட்டப் பகுதிகளில் பிரதிபலிப்பு | 5 | 201 | 161 | 3,220 |
| பிரதிபலிப்பு 2001-02 | 67 | 2,071 | 2,071 | 41,420 |
| பிரதிபலிப்பு 2002-03 | 68 | 1,278 | 1,255 | 25,100 |
| **மொத்தம்** | **169** | **4,661** | **4,575** | **1,13,675** |

[2004 ஜூலை 30

2003–04 ஆம் ஆண்டில் ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, விழுப்புரம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 1,835 ஊராட்சிகளில் இதன் பிரதிபலிப்புத் திட்டத்தை ரூ.91.10 இலட்சம் செலவில் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கால்நடைகள் பயனடைந்தது மட்டுமின்றி கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளும் பயன் அடைந்ததே இத்திட்டம் ஏற்படுத்திய தாக்கமாகும். மேற்காண் திட்டத்தைச் செயற்படுத்தியதால் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு பயிற்சி பெற்ற தொடர்புப் பணியாளர் தம்பதியினர் உள்ளனர். இவர்கள் அடிப்படை கால்நடை பராமரிப்பு முறைகளையும் முறைசாரா கால்நடை மருத்துவ வசதிகளை 24 மணி நேரமும் அளித்து வருகின்றனர்.

**மாதிரி வரைவுத் திட்டம்**

ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 1977–78 ஆம் ஆண்டு முதல் கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, இறைச்சி ஆகியவை பற்றி நம்பகமான புள்ளி விவரங்களை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்கிறது. மேலும் இது கால்நடை மேலாண்மை முறைகளை ஆண்டுதோறும் மற்றும் பருவம் வாரியாக தொடர்ந்தாற்போல் விவரங்களைப் பெற்று ஆய்வு செய்து வருகிறது. இவ்வாறு களத்திலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் பால் உற்பத்தி மற்றும் இதர கால்நடை பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்கிறது. இது இத்துறையினால் தொடங்கப்பெற்று செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு கால்நடை மேம்பாடு பற்றிய செயல்பாடுகளின் தாக்கத்தை கணக்கிடவும் கண்காணிக்கவும் உதவுகின்றது. இந்த ஆய்வு அளிக்கும் அடிப்படைப் புள்ளி விவரங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் திட்டமிட உதவுகின்றது.

2003–04 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு பின்வருமாறு:–



2004 ஜூலை 30]

| பொருட்கள் | கோடைக் காலம் | மழைக் காலம் | குளிர் காலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | 15.34 | 16.42 | 15.77 | 47.53 |
| முட்டை (மில்லியன்களில்) | 1,271.00 | 1,240.50 | 1,272.08 | 3,783.58 |
| இறைச்சி (மில்லியன் கிலோ) (பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்கள் மட்டும்) | 16.83 | 15.98 | 13.86 | 46.67 |

கால்நடைக் கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. இரு கணக்கெடுப்புக்குட்பட்ட காலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வதற்கு கால்நடை இடைக்கால கணக்கெடுப்புப் பிரிவு ஒன்று 1981 ஆம் ஆண்டு முதல் இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுச் சங்கங்கள்**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல் முறைப் பதிவாளராக கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரை சங்கத்தின் உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே சங்கங்களின் நோக்கமாகும். 2003–04 ஆம் ஆண்டில் இத்துறையில் மொத்தம் 848 சங்கங்கள் இருந்தன. அதில் 277 சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன. தற்போது நிலவிவரும் வறட்சியின் காரணமாகவும், வெள்ளாடு வளர்ப்பிற்கு வங்கிகள் கடன் உதவி வழங்காததாலும் செயல்படாமல் உள்ள பெரும்பாலான சங்கங்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்க இயலவில்லை. செயல்படாமல் உள்ள 571 சங்கங்களில் இதுவரை 40 சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளன.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான திறன்வாய்ந்த கால்நடை மருத்துவ வசதிகளை வழங்குவதின்மூலம், கால்நடை உற்பத்தியை மாநிலத்தில் பெருக்குவதில் கால்நடை பராமரிப்புத் துறை

[2004 ஜூலை 30

திடமான அடித்தளத்தை அளித்துள்ளது. இத்துறை அளித்துவரும் சேவைகளில் உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய்த்தடுப்பு, நோயை அறவே ஒழித்தல், இனப்பெருக்கப் பணிக்கு உதவிடல், விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் போன்றவையும் அடங்கும்.

### கால்நடைகளின் உடல் நலன் பேணுதல்

### கால்நடை நிலையங்கள்


கால்நடைகளின் உடல்நலம் பேணும் பணிகளை 1,089 கால்நடை நிலையங்கள் அளித்து வருகின்றன. இவற்றில் உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 6 பன்முக மருத்துவமனைகள், முதன்மை மருத்துவர் (உதவி இயக்குநர்) கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 22 முதன்மை மருத்துவமனைகள், கால்நடை மருத்துவர் (உதவி இயக்குநர்) கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 139 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 922 கால்நடை மருந்தகங்கள் இதில் அடங்கும்.

பன்முக மருத்துவமனைகள் சென்னையில் சைதாப்பேட்டையிலும், மதுரையில் தல்லாகுளம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாநகராட்சிகளில் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. இவை உள் நோயாளி வசதிகள், ஈனியல் மருத்துவ சிகிச்சை, மருந்து, எக்ஸ்ரே வசதி போன்ற சிறப்பான மருத்துவ வசதிகளை அளித்து வருகின்றன. இந்த 6 நிலையங்கள் மட்டுமின்றி பொள்ளாச்சி, வேலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை நிலையங்களும் எக்ஸ்ரே வசதிகளைக் கொண்டுள்ளன. இக்கால்நடை நிலையங்கள், கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கின்றன. கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதுடன் நாட்டின பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின் தரத்தை உயர்த்தும் பொருட்டு செயற்கை முறை கருவூட்டல் பணியையும், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் ஆகியவற்றின் மூலம் உடல்நலம் பேணும் பணியையும் ஆற்றி வருகின்றன. இந்நிலையங்களில் மலட்டுத் தன்மை நீக்கப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 30]

### கால்நடை நிலையங்களின் வளர்ச்சி




கால்நடைகளுக்கு முழுமையான சுகாதார பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு 2000 ஆண்டு வாக்கில் ஒவ்வொரு 5,000 கால்நடைகள் கொண்ட அலகுகளுக்கு ஒரு கால்நடை மருத்துவர் இருத்தல் வேண்டும் என்று தேசிய வேளாண் குழுமம் பரிந்துரைத்துள்ளது. தமிழ்நாட்டில் 134.96 இலட்சம் கால்நடை அலகுகள் உள்ளன. தேசிய

வேளாண் குழுமம் பரிந்துரைத்துள்ள அளவினை நிறைவேற்றுவதற்கு தமிழ்நாட்டிற்கு 2,699 கால்நடை நிலையங்கள் தேவைப்படுகின்றன. 2003–04 ஆண்டில் தேசிய வேளாண் குழுமத்தின் பரிந்துரைகளின்படி கால்நடை மருத்துவப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக 73 கால்நடை கிளைநிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தற்போது 1,328 கால்நடை மருத்துவர்கள் உள்ளனர். ஒவ்வொரு கால்நடை மருத்துவரும் சுமார் 10,163 கால்நடை அலகுகளுக்கு மருத்துவம் செய்கின்றனர்.

கால்நடை மருத்துவப் பணிகளை கால்நடை வளர்ப்போர்களின் இருப்பிடங்களிலேயே வழங்கவும், தேசிய வேளாண்மைக் குழுமத்தின் அளவு விகிதத்தை நிறைவேற்றவும் இக்கிராமங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கவும் 101 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு, துறை நடவடிக்கைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய வங்கிகளின் உதவியுடன் அவர்களின் நிதித் தேவை சந்திக்கப்படும். இவர்கள் அன்றாடப் பணிகளைச் செய்வதற்குமன்றி, திரவ நைட்ரஜன் குடுவை மற்றும் இதர சாதனங்களை துறை கட .ன் அடிப்படையில் அவர்களிடம் பிணை முறை பெற்றுக்கொண்டு வழங்கும்.

திறமையான மேலாண்மைக்கும், திடீரென ஏற்படும் நோய்க்கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பேரழிவு மற்றும் இயற்கைச் சீற்றங்களின்போது உ...னடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தகவல் தொடர்பிற்கும் தொலைபேசி மிகவும் இன்றியமையாததாகவுள்ளது. தொலைபேசி வசதிகள் தற்சமயம் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் உள்ளதால் கால்நடை. மருத்துவப் பணிகள் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் பணிகளை கால்நடை வளர்ப்போரின் வீடுகளுக்கே சென்று வழங்க தொலைபேசி வசதி பெரிதும் உதவியாக இருக்கும். எல்லா கால்நடை நிலையங்களுக்கும் படிப்படியாக தொலைபேசி வசதி ஏற்படுத்துவது என்ற நோக்குடன் 2003–04 ஆம் ஆண்டில் தொலைபேசி வசதி இல்லாத 15 மாவட்ட தலைமையிடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கால்நடை நிலையங்களில் 939 ஆழ்துளை கிணறுகள் ரூ.469.50 இலட்சம் செலவில் தோண்டப்பட்டு, குடிநீர் வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது.



**அ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு**

மாநிலம் முழுவதிலும் குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம், இனவிருத்திக்காக செயற்கை முறை கருவூட்டல் போன்ற மருத்துவ உதவிகள் பெற கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாததால், கால்நடை மருத்துவப் பணிகளை வழங்க 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

நடமாடும் பிரிவுகளின் முக்கிய நோக்கங்களாவன:

- ➢ கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் அவற்றின் இருப்பிடங்களிலேயே உடல் நலப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவி அளித்தல்;
- ➢ தடுப்பு நடவடிக்கையாக தடுப்பூசிப் பணியையும், தொற்று நோய் தாக்குவதால் கிளர்ச்சியினையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்;
- ➢ ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து கால்நடைகளைக் காத்திட பெரும் அளவிலான குடற்புழு நீக்கப் பணி மேற்கொள்ளுதல் மற்றும்
- ➢ பசுவினங்களுக்கும் எருமையினங்களுக்கும் செயற்கைமுறை கருவூட்டல் பணியை மேற்கொள்ளுதல்.

**ஆ) கிளை நிலையங்கள்**

கால்நடை ஆய்வாளர்களின் தலைமையில் 2,043 கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவியையும், பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியையும் அளித்து வருகின்றன. மேலும் இவை சினைப் பரிசோதனையையும் கிளைநிலையப் பகுதியில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திர கணக்கெடுப்புப் பணியினையும் மேற்கொண்டுள்ளன. கால்நடை உதவி மருத்துவர் மற்றும் உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஆகியோர்களின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி தடுப்பூசிப் பணி மற்றும் குடற்புழு நீக்கப் பணிகளைச் செய்வதற்கும் இவர்களின் பணி பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

[2004 ஜூலை 30

*2003-04* ஆம் ஆண்டு *164.46* இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. 5.88 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது. 238.22 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 168.64 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கப்பட்டது. 31.02 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் பணியும் நிறைவேற்றப்பட்டது.

பணி விவரம் (இலட்சத்தில்)

| வருடம் | சிகிச்சை அளித்தல் | ஆண்மை நீக்கம் | குடற்புழு நீக்கம் | தடுப்பூசி | செயற்கை முறை கருவூட்டல் |
|---|---|---|---|---|---|
| 1983-84 | 88.48 | 3.84 | 49.02 | 82.31 | 17.02 |
| 1993-94 | 150.45 | 6.11 | 126.98 | 193.18 | 25.24 |
| 1998-99 | 146.40 | 7.66 | 100.14 | 189.30 | 29.66 |
| 2002-03 | 167.21 | 6.23 | 154.44 | 225.78 | 32.28 |
| 2003-04 | 164.46 | 5.88 | 168.64 | 238.22 | 31.02 |

## நோய்த்தடுப்பு, கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்

"கால்நடை நலம் தேசத்தின் சொத்து". நோய்க்கிளர்ச்சி ஏற்படுவதால் கால்நடைகள் இறக்க நேரிடுகின்றன. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகிறது. நோய்க்கிளர்ச்சிகள் வசதியானவர்களைத் தாக்குவதைக் காட்டிலும், சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினரையே பாதிப்பதாய் அமைகின்றது. பல்வேறு கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல் இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு அவசியமானது மட்டுமின்றி நமது கால்நடைகளும் கால்நடைப் பொருட்களும் உலக அளவில் ஏற்றுக்கொள்வதாய் அமைவதற்கும் இது இன்றியமையாததாகிறது. பொதுவாக விவசாயிகள், நோய் வராமல் தடுப்பதிலும் தடுப்பூசி போட்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டாமல், நோய் கண்டபின் சிகிச்சை மூலம் நோயைக் குணப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டுவதால், இத்துறை, நோய் வராது தடுப்பதிலும், அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்காற்றியுள்ளது. நோய்களை முறையாக கட்டுப்படுத்துவதிலும் படிப்படியாக நோய்களைக் குறைப்பதிலும், இறுதியாக அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்கேற்றுள்ளது.



2004 ஜூலை 30]

### அ) நோய்த் தடுப்பு

நோய் வருமுன் காத்தல், குணப்படுத்துதலை விட சிறந்தது. ஆரம்ப காலங்களில் "ஊநீர் நிலையம்" என்று அழைக்கப்பட்ட இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் 1932 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காப்பாற்றுவதற்கு தடுப்பூசிகளையும், உயிர் காக்கும் பொருட்களைத் தயாரிப்பதும் இந்நிலையத்தின் தலையாய நோக்கமாகும். இந்நிலையத்தில் தற்போது 8 வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளும், 9 வகையான நச்சுயிர்த் தடுப்பு மருந்துகளும், 8 வகையான உயிர் காக்கும் பொருட்களும் மற்றும் 9 வகையான மருந்துப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

### ஆ) நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் நோய்த் தொற்று கண்டறிதல்

நோய்க் கிளர்வுகள் பற்றி முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை அளிக்க ஓர் நோய் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகும். அதே வேளையில் நோய்த் தொற்று அறிவியல் முறையாக நோய்கள் பற்றிய பகிர்வு மற்றும் உடல் நலக் கேட்டிற்கான பிரச்சினைகள் எவற்றில் உண்டாகின்றன என்பதை உறுதி செய்திட உதவுகிறது. இதன் பொருட்டு மாநிலத்தில் 15 கால்நடை நோய் புலனாய்வு அலகுகள் செயல்படுகின்றன. ஏற்கெனவே, நிகழ்ந்த நோய்க் கிளர்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதன் மூலம் அவை உண்டாகக் கூடிய இடங்கள் கண்டறியப்படுகின்றன. இவை கால்நடை பணியாளர்களுக்கு நோய் பற்றி அறிவிக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் உதவுகின்றன. இயக்குநரகத்தில் கால்நடை நோய் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கால்நடை மற்றும் கோழியின நோய்கள் மற்றும் நோய்க்கிளர்ச்சி குறித்து மதிப்பாய்வு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

### இ) நோய் கண்டறிதல்

துல்லியமாக நோய் கண்டறிதல், குறிப்பிட்ட நோய்களை தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள்,

[2004 ஜூலை 30

ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவைமூலம் நோய் பற்றிய தகவல்கள் முன்னதாகவே அளிப்பதுடன் தீவனம், நீர் ஆய்வு சோதனைகளை நடத்தியும் காலத்திற்கேற்ப ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. 2003–04 ஆம் ஆண்டில் 1,270 கோழிப் பண்ணைகளும் 1,144 கிராமங்களும் பார்வையிடப்பட்டன. 8,512 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று நோய்களைக் கண்டறிய நோய் புலனாய்வுப் பிரிவுடன் இணைக்கப்பட்ட நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப்பணியாளர்களுக்கு நோய் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும், ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டையில் பன்முக மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகின்றது. நீலநாக்கு நோய் பற்றி முன்னதாக விரைந்து துல்லியமாகக் கண்டறிய நீலநாக்கு ஆய்வுப்பிரிவு இவ்வாய்வுக் கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஈ) நோய்க் கட்டுப்படுத்துதல்**

இந்தியக் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள், ஏற்றுமதியை பெருக்க “Office International Epizootics” என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்யும் போதுதான் அவை உலகச் சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும். மேலும், பன்னாடுகளின் தரத்தில் இப்பொருட்கள் கோமாரி, வெக்கைநோய் மற்றும் மாட்டினத்தைத் தாக்கக் கூடிய தொற்று நுரையீரல் அழற்சி நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவை எனக் கருதப்படும்.

**ii) கோமாரி நோய்**

கோமாரி நோய் நச்சுயிரிக் கிருமிகளினால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். இந்நோய் மாட்டினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கி அதிக அளவில் இறப்பை உண்டாக்குகிறது. இதனால் பால் உற்பத்திக் குறைவு, மலட்டுத் தன்மை மற்றும் இளங்கன்றுகள் இறப்பு போன்றவை ஏற்படுகின்றன. இன்னும்



2004 ஜூலை 30]

சொல்லப்போனால், கோமாரி நோய் தாக்குதலினால் மட்டும் பால் உற்பத்தியில் ரூ.1,650 கோடியும், நிரந்தர ஊனம் மற்றும் இறப்பினால் ரூ.1,800 கோடியும் இழப்பு ஏற்படுகிறது என சமீப கால மதிப்பீடு தெரிவித்துள்ளது. இந்த கோமாரி நோயின் தாக்குதலிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இத்துறை தடுப்பூசி போடும் ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. 2003–04 ஆம் ஆண்டில் 6.38 இலட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இத்துடன், வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் 27.20 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. மத்திய அரசு உதவியுடன் நடத்தப் பெறும் கோமாரி நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் அனைத்து கால்நடைகளையும் கோமாரி நோயிலிருந்து காத்திட தடுப்பூசி போடப்பட்டது. இதற்காக மத்திய அரசு 97,000 டோஸ் மருந்துகளை வழங்கியுள்ளது.

அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் மண்டல நிலையம் ஒன்று இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் கோமாரி நோய் பற்றிய தொற்று நோய் மற்றும் நச்சுயிர் வகைகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

**உ) நோயை அறவே ஒழித்தல்**

பல்வேறு தொற்று நோய்களான தொண்டை அடைப்பான், சப்பை நோய், அடைப்பான், துள்ளுமாரி மற்றும் வெள்ளைக் கழிச்சல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இத்துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளது. மாடுகள் மற்றும் ஆடுகள் மிகப் பெரிய அளவில் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்தது, அடையாளம் கண்டுகொள்ளத்தக்க மிக முக்கியமானதாகவும், பெரும் திருப்பு முனையாகவும் அமைந்தது. 1993–94 ஆம் ஆண்டு முதல் தேசிய வெக்கைநோய் ஒழிப்புத் திட்டத்தினை செயல்படுத்தியதன் விளைவாகவே இச்சாதனையை அடைய முடிந்தது. 2004 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோய் இல்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நோயைத் திறமையுடன் கட்டுப்படுத்த இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது. மாநிலத்தில் தற்சமயம் 16 வெக்கைநோய் குழுக்களும், 10 வெக்கைநோய் கண்காணிப்பு பிரிவுகளும், 10 வெக்கை நோய் சோதனைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன. 1998–99 ஆம் ஆண்டு முதல் பிணி சார்ந்த கடுங்கண்காணிப்பு மற்றும் ஊநீரில் கடுங்கண்காணிப்பு சோதனைகளை மேற்கொள்வதன்

[2004 ஜூலை 30

மூலம் வெக்கை நோய்க்கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்றும், வெக்கை நோய் எதிர்ப்புத் திறன் வாய்ந்த நோய் எதிர்ப்பான்கள் காணப்படுகிறதா என்பது போன்ற சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறது.

ஒன்பதாவது திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்ட கால்நடை நோய்கள் கடுங்கண்காணிப்பு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நோய்கள் மற்றும் இதனைச் சார்ந்த இதர இனங்களைப் படிப்படியாகக் கட்டுப்படுத்துதல், மற்றும் கோமாரி நோய்த் தடுப்புத்திட்டம் ஆகியவை கைவிடப்பட்டு, கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவி (Assistance to States for control of Animal Diseases) என்ற பெயரில் இத்திட்டங்களை ஒன்று சேர்த்து மாற்றியமைக்கப்பட்ட ஒரு திட்டத்தை பத்தாவது திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசு உதவியுடன் மேலோட்ட மேலாண்மைத் திட்டம், கால்நடை நலம் மற்றும் நோய்க்கட்டுப்பாடு என்ற பெயரில் செயல்படுத்தப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.209.36 இலட்சம் விடுவித்துள்ளது. இதில் 2003–04 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வழங்கப்பட்ட ரூ.63.60 இலட்சமும் முந்தைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழங்கப்பட்ட தொகையில் ரூ.14.576 இலட்சத்தை மறு செல்லுபடியாக்கம் செய்ததும் அடங்கும்.

### விரிவாக்கப்பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்

முறையான விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் இன்றி புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் கண்டுப்பிடுப்புகளை முழுவதுமாக பயன்படுத்த இயலாது. சிறந்த விரிவாக்கப் பணிகளால் கால்நடை பராமரிப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் இத்துறையின் திட்டங்களும், செயல்முறைகளும் பற்றி பொது மக்கள் வெளிப்படையாக தெரிந்து கொள்ளவும் இயலுகிறது.

"காண்பதே கற்றல்" என்ற கொள்கையின்படி, கண்காட்சிகளை நடத்தி, உள்ளூர் விழாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடைபெறும்போது கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில் நுட்பங்களையும் கால்நடை பொது சுகாதாரம் குறித்த அணுகுமுறையும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சியிலும் மற்றும் கூட்டுறவு வார விழாவிலும் இத்துறை கலந்து கொள்கிறது. பலவகையான மக்கள் தொடர்பு சாதனங்களான



2004 ஜூலை 30]

தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு தேவையான தற்கால தகவல்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதுமட்டுமின்றி, மாநிலமெங்கும் நடைபெறும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களின்போது கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய நோய்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம் மூலமாக கால்நடை பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் தொடர்பான 28 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

இத்துறைக்கு தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணிகளான துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுவரொட்டிகள், புத்தக குறிப்புகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை அச்சடிக்க சென்னை சைதாப்பேட்டையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது.

மனிதனுக்கு பரவும் தொற்று நோய்களில் 4/5 பங்கு விலங்குகளிலிருந்து பரவுகின்றன. இவை மனித விலங்கினத்திற்கிடையே நோய் பரவுதல் எனப்படும். பல இலட்சக் கணக்கான கிராம மக்கள் வாழ்க்கை நடத்திட கால்நடை வளர்ப்பு முக்கிய ஆதாரமாக உள்ளதால், மனித விலங்கினத்திற்கிடையே நோய் பரவுவதைத் தடுப்பதில் கால்நடை பொது சுகாதாரம் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடுங்கண்காணிப்பும், கண்டுப்பிடித்தலும் மனித விலங்கினத்திற்கிடையே நோய் பரவுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் கூடுமானால் அறவே ஒழிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றது. இதுதொடர்பாக நடைபெறும் சில பணிகள் பின்வருமாறு:

### வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் 17.96 இலட்சம் நாய்கள் உள்ளன. இதில் வீட்டு நாய்கள் மட்டும் 8.5 சதவீதம் ஆகும். மனிதர்களுக்கு வெறிநாய்க்கடி நோய் பரப்புவதில் நாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வெறிநாய்க்கடிக்காக சிகிச்சைக்கு வரும் மக்களில் 96 சதவிதம் பேர் நாய்க்கடிக்காளானவர்களாவர். மேலும், கால்நடைகளுக்கு இந்நோயைப் பரப்புவதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையால் வெறிநாய்க்கடியை ஒழிப்பதின் மூலம் மனிதர்கள் மற்றும் இதர

[2004 ஜூலை 30

கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் சிறந்த வழியாகும். இக்குறிக்கோளுடன், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இத்திட்டப்பிரிவுகளின் முக்கிய பணிகள்:

- முறையான மற்றும் காலமுறைப்படி வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு உரிய கட்டணம் வசூலிப்பதன்பேரில் வெறி நாய்த் தடுப்பூசி போடுதல்;
- நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி போடுதல்; மற்றும்
- பொதுமக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் விநியோகித்தல் மற்றும் நாய்க் கண்காட்சி நடத்துதல் மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

இத்திட்டம் மக்களிடையே வெகுவான வரவேற்பினைப் பெற்றுள்ளது. மனிதர்கள் மற்றும் நாய்களைத் தாக்கக்கூடிய வெறிநாய்க்கடி நோய் இந்நிலையங்களின் அருகில் உள்ள இடங்களில் கணிசமான அளவு குறைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2003–04 ஆம் ஆண்டில் 10,949 தடுப்பூசிகள் போடப்பட்டன.

## பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்

கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாக தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளை இலவசமாக செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு மற்றும் நாடாப்புழு, ஸ்ட்ராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis), ஒட்டுண்ணிகள் (Hydatidosis) போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.



2004 ஜூலை 30]

2003–04 ஆம் ஆண்டில் 56.93 இலட்சம் கால்நடைகள் மற்றும் 181.29 இலட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும், 21.25 இலட்சம் பசுவினம், 6.15 இலட்சம் எருமையினம், 86.49 இலட்சம் செம்மறியாடுகள், 49.69 இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் 2.39 இலட்சம் கோழிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

## இறைச்சித் தரம் ஆய்வு

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 119 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சியை உண்ணும் பொது மக்கள் நாடாப்புழு மற்றும் தசைப்பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

2003–04 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில், 1.66 இலட்சம் மாடுகள், 22.26 இலட்சம் ஆடுகள் மற்றும் 0.13 இலட்சம் பன்றிகள் வெட்டப்பட்டு, 194.64 இலட்சம் கிலோ மாட்டிறைச்சி, 265.33 இலட்சம் கிலோ ஆட்டிறைச்சி மற்றும் 6.73 இலட்சம் கிலோ பன்றி இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டது.

## பிராணி நலத் திட்டங்கள்

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு கீழ்க்காணும் மூன்று வழிகளில் இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகிறது:

* சந்தை இடங்களில்
* பயணத்தின்போது
* இறைச்சிக் கூடங்களில்

**சந்தை இடங்களில்:**

தமிழ்நாட்டில் உள்ள 263 கால்நடைச் சந்தைகளில், கீழ்க்கண்ட 10 சந்தைகள் தரம் உயர்த்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன:

[2004 ஜூலை 30

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் |
| 2. | பல்லாவரம் | காஞ்சிபுரம் |
| 3. | திருக்கழுக்குன்றம் | காஞ்சிபுரம் |
| 4. | பொய்கை சத்தியமங்கலம் | வேலூர் |
| 5. | மேலப்பாளையம் | திருநெல்வேலி |
| 6. | திங்கள் சந்தை | கன்னியாகுமரி |
| 7. | செக்காவூரணி | மதுரை |
| 8. | நல்லம்பள்ளி | தர்மபுரி |
| 9. | அருப்புக்கோட்டை | விருதுநகர் |
| 10. | பெருந்துறை | ஈரோடு |

மேற்கண்ட கால்நடைச் சந்தைகளில் அடிப்படை உள்ளிருப்பு வசதிகளான கால்நடைகளை சுமை ஊர்திகளிலிருந்து ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் வசதியாக திண்காரை சாய்வு மேடை, ஆழ்துளைக் கிணறுகள், நீர்த்தொட்டிகள், கால்நடை முதலுதவி நிலையம், கால்நடைகளை மனிதாபிமான முறையில் நடத்துவதற்கு செய்ய வேண்டியவை / செய்யக்கூடாதவை ஆகியவற்றைப் பற்றி விளக்கும் விவரப் பலகை போன்ற வசதிகளை, ஒரு கால்நடை சந்தைக்கு ரூ.2.64 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.26.40 இலட்சம் செலவில் செய்து தரம் உயர்த்தப்பட உள்ளது. இதற்கான நிதி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

**பயணத்தின்போது:**

கால்நடைகளை ஏற்றிச் செல்லும்பொழுது மனிதாபிமான முறையில் அவற்றை நடத்திட, இது பற்றிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் பற்றி கால்நடைகளை ஏற்றிச் செல்லும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமை ஊர்தி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், வேலையாட்கள் மற்றும் சுமை ஊர்தி உரிமையாளர்கள் இணையம் போன்றோர் அறிவுறுத்தப்பட்டனர். அவர்களும் அவற்றை கடைப்பிடிப்பதாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

பிராணிகள் வதைத் தடுப்புச் சங்க அலுவலர்கள் உதவியுடன் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் வணிக சோதனைச் சாவடிகளில் உள்ள அலுவலர்கள் கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களை சோதிக்கின்றனர். குற்றம் புரியும் ஊர்திகளில் இருந்து கைப்பற்றப்படும்



2004 ஜூலை 30]

கால்நடைகள், அவற்றைப் பராமரிப்பதற்காக கால்நடை நல அமைப்பு மற்றும் பசு மடங்களில் ஒப்படைக்கப்படுகின்றன.

**இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்கல்**

மாநிலத்தில் உள்ள 119 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில், கீழ்க்காணும் நகரங்களில் உள்ள இறைச்சிக் கூடங்கள் நவீனமயமாக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | நகரத்தின் பெயர் | இறைச்சிக் கூடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | சென்னை | பெரம்பூர் |
| 2. | திருச்சிராப்பள்ளி | காந்தி சந்தை |
| 3. | மதுரை | வெத்திலைப் பேட்டை |
| 4. | சேலம் | சேலம் |
| 5. | கோயம்புத்தூர் | உக்கடம் |

இறைச்சிக் கூடங்களில் சுகாதாரமான முறையில் இறைச்சி உற்பத்தி செய்ய சாய்வு மேடை, வெட்டுவதற்கு முன் அவற்றைப் பார்வையிட இடம், நீர் வசதி, தண்ணீர் ஊடுருவ முடியாத தரை மற்றும் சுவர்கள், மின்சார வசதி, ஒரு கால்நடை வெட்டப்படும்போது மற்றவை அதனைப் பாராவண்ணம் தனியான இடம் மற்றும் குளிர்சாதனம் போன்ற வசதிகள் ஏற்படுத்தி நவீனமயமாக்கப்படும். ஒரு இறைச்சிக் கூடத்தை நவீனமயமாக்க ரூ.10.00 இலட்சம் செலவாகும். 5 இறைச்சிக் கூடங்களையும் நவீனப்படுத்த மொத்தம் ரூ.50.00 இலட்சம் வழங்கக்கோரி கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்க அரசு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது.

**பசு மடங்கள்**

பசுமடங்கள் பதிவு செய்யப்பட்ட பொது நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. அவை மாநில அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பசுக்களைப் பாதுகாக்கவும், பேணவும் அதனை முன்னேற்றவும் பாடுபடுகின்றன.

[2004 ஜூலை 30

பசு மடங்களின் முக்கிய நோக்கங்களாவன:

◇ இந்தியப் பசுக்கள் மற்றும் வம்சாவழியினைப் பாதுகாத்து, இனப்பெருக்கம் மற்றும் தரம் உயர்த்துதல்.

◇ சிறந்த மரபுவழி கொண்ட இந்தியக் காளைகளைத் தயார் செய்து, உள்ளூர் விவசாயிகளின் பசுக்களை இனப்பெருக்கம் செய்வதற்கும், தரம் உயர்த்துவதற்கும் வழங்குதல்.

◇ உழவுத் தொழிலுக்கு உகந்த ஆரோக்கியமான சிறந்த காளைகளை உற்பத்தி செய்தல்.

கவனிப்பாரற்ற, அனாதையாக, கொடுமைப்படுத்தலில் இருந்தும் இறைச்சிக்காக வெட்டப்படுதலில் இருந்தும் விடுவிக்கப்பட்ட பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் மற்றும் கால்நடை நல அமைப்பு அலுவலர்களால் காப்பாற்றப்பட்ட பசுக்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## தெரு நாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம்

நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அவற்றைப் பிடித்துக் கொன்று வருகின்றன. இதனைத் தவிர்க்க, மத்திய அரசு கால்நடை பிறப்பு தடுப்பு (நாய்கள்) விதிகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தலும் குறைத்தலும்.
- வெறிநாய்க்கடி நோய் ஏற்படும் நிகழ்வுகளை குறைத்தல்.
- ஆரோக்கியமான தெரு நாய்கள் கொல்லப்படுவதைத் தடுத்தல்.

இத்திட்டத்தின்கீழ் தெரு நாய்கள் மனிதாபிமான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய்த் தடுப்பூசி போடப்பட்டு அவை பிடித்து வரப்பட்ட பகுதியிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.



2004 ஜூலை 30]

## 2004-05 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1) 75 கால்நடை கிளைநிலையங்களை ரூ.336.75 இலட்சம் செலவில் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2) வட்டார தலைமையிடங்களில் உள்ள 50 கால்நடை நிலையங்களில் ரூ.2.50 இலட்சம் செலவில் தகவல் தொடர்பு வசதி (தொலைபேசி) ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3) அரசு சாரா அமைப்புக்களின் உதவியோடு நகர்ப்புறங்களில் உள்ள 18,180 நாய்களுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் தடுப்பூசி போட்டு வெறிநாய்க்கடி நோயைக் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4) உள்ளாட்சி அமைப்புக்களின் ஆலோசனையுடன் 10 கால்நடை சந்தைகளில் ரூ.20.00 இலட்சம் செலவில் கால்நடை முதலுதவி நிலையங்கள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மத்திய அரசின் தேசிய பசு மற்றும் எருமை இனங்களின் இனப்பெருக்கத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்த ஏற்படுத்தப்பட்ட சுயமாகச் செயல்படும் ஓர் நிறுவனமாகும்.

## இத்திட்டத்தின் ஒரு சில முக்கியக் குறிக்கோள்கள்

⇦ விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல் பணியை மேற்கொள்ள வகை செய்தல்.

⇦ பாரம்பரிய கால்நடை இனங்களைப் பாதுகாத்தல்.

⇦ கால்நடைப் பட்டதாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சியும் கால்நடை அலுவலர்கள் மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த மறுபயிற்சியும் அளித்தல்.

⇦ தரம் வாய்ந்த உறைவிந்து உற்பத்தியை பெருக்குதல்.

[2004 ஜூலை 30

தேசிய பசு மற்றும் எருமை இனங்களின் இனப்பெருக்கத் திட்டத்தைச் செயல்படுத்தும் மாநில நிறுவனங்களுக்கு மத்திய அரசு 100 சதவிகித மானியம் வழங்குகிறது. அதன்படி 2002–03 ஆம் ஆண்டு முதல் 2004–05 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைக்கு ரூ.20.28 கோடி நிதியினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

முதலாம் ஆண்டில் ரூ.5.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டக் குறிக்கோள்களை அடையும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் விவசாயிகளுக்குச் சென்றடையும் வகையில் 385 சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு விவசாயிகளின் பேராதரவைப் பெற்றுள்ளது. 675 கால்நடை மருத்துவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும், 130 வேலையில்லா கால்நடை பட்டதாரிகளுக்கு வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளும் பொருட்டு அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கால்நடை இனங்களை பாதுகாத்தலின் கீழ் உம்பளாச்சேரி இனக் கால்நடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தேசிய அளவிலான பசு மற்றும் எருமை இனங்களின் இனப்பெருக்கத் திட்டம் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட்டு அதன் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2004–05 ஆம் நிதியாண்டிற்கு ரூ.8.56 கோடிக்கான நிதி ஒதுக்கீட்டினை வழங்கும்பொருட்டு உரிய கருத்துருக்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

இந்தியா போன்ற வேளாண் நாடுகளில், உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதில் கால்நடை, கோழி மற்றும் மீன்சார்ந்த துறைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. கால்நடைத் துறையானது வசதி குறைந்த ஏழை கிராமப்புற பெண்களிடையே ஓய்வுநேர வேலை வாய்ப்பை ஏற்படுத்தி அவர்களது வருவாயைப் பெருக்கி, பொருளாதார சுதந்திரத்தை அடைய வழிவகை செய்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக வேளாண் துறையின்



2004 ஜூலை 30]

வளர்ச்சியில் நெருக்கடி ஏற்படுகின்ற சூழலில், கால்நடைப் பராமரிப்பு மற்றும் தீவன உற்பத்தியை ஊக்கமூட்டுவதன்மூலம் அடித்தட்டு மக்களின் வருவாய்த் தரத்தை சீர்ப்படுத்த இயலும். உழவு அல்லாத துறைகளை மேம்படுத்துவதன் மூலமே வறுமையைக் கட்டுப்படுத்துவதோடு வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள 10 சதவிகிதத்தினரும் பயன் பெறும்படி செய்ய இயலும். கால்நடை சார்ந்த தொழில்கள் என்றும் நீடித்து நிலைத்து நிற்பதோடு பல்வேறு கால மாறுபாட்டினை ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையனதாகவும் உள்ளன. கால்நடை சார்ந்த தொழில் துறைகள் மட்டுமே சீரான வளர்ச்சி பெற்று வளர்ந்து வரும் தொழிலாக உருவெடுத்துள்ளன. மாறி வரும் உலக வர்த்தக சூழலில் உலக வர்த்தக நிறுவனத்தின் நவீன வழிமுறைகளுக்கேற்ப சர்வதேசச் சந்தையில் ஈடுகொடுக்கும் வகையில் நமது உள் நாட்டு உற்பத்திப் பெருக்கம், தர மேம்பாடு, வர்த்தக முறை மற்றும் தொழில் நுட்பக் காப்பீடு போன்றவற்றில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. எனவே, தொழில் துறைகளை துவக்குதல் என்ற ஒரே நோக்கோடு செயல்படாமல் தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு பல்முனை தொழில் அமைப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் நோக்கத்துடன் 20-09-1989 இல் உருவாக்கப்பட்டது.

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கின மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்
- கால்நடை மற்றும் மீன் வள உற்பத்தி, ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும்
- கால்நடை, கோழியினம் மற்றும் மீன்வள வளர்ச்சிக்கான தொழில்நுட்பக் கல்வியை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புற பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல்

கடந்த 14 ஆண்டுகளாக, இப்பல்கலைக்கழகம் கால்நடை, கோழியின மற்றும் மீன் வள மேம்பாட்டில் கிராமப்புற பண்ணையாளர்களின் பங்களிப்போடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நிகழ்த்தியுள்ளது. அவையாவன: இன மேம்பாடு, அயல்நாட்டின கலப்பின மேம்பாடு,

[2004 ஜூலை 30

உற்பத்தி முறை ஆய்வு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவினை அதிகரித்தல். மேலும் கல்விப் பிரிவில் பாடத்திட்டங்களை திருத்தியமைத்தல், பொது நுழைவுத் தேர்வு, வெளிப்புற தேர்வு முறை, அகில இந்திய அளவில் மாணவர் சேர்க்கைக்கான இட ஒதுக்கீடு, ஆசிரியர்களை மாணவர்கள் மதிப்பிடுதல் போன்றவை கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டன. இப்பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் முகமாக கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பணி செய்யும் பொருட்டு கூடுதல் சேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் லெப்டோஸ்பைரா நோயறி ஆய்வகம், கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் மற்றும் இறால் நோயறி ஆய்வகம் ஆகியவை சுயநிதிப் பிரிவுகளாக கால்நடை மற்றும் மீன் பண்ணையாளர்களுக்கென செயல்பட்டு வருகிறது. மாதவரத்திலுள்ள லெப்டோஸ்பைரா நோயறி ஆய்வகமானது, நோயறிதலில் தரமான சேவையைச் செய்வதனால் ISO-9001 என்ற தரச்சான்றிதழ் பெற்றமை இவ்வாண்டின் முக்கிய சாதனைகளின் மைல்கல்லாகும். கால்நடைத் துறையை மேம்படுத்த பல புதிய மையங்களை உருவாக்குதல் அவசியம் என்றறியப்பட்டு இவ்வாண்டு பறவையின நோய் ஆய்வகம் ஒன்று தலைவாசலிலும் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்று மேல்மருவத்தூரிலும் துவக்கப்பட்டுள்ளது.

## நூற்றாண்டு விழா

இப்பல்கலைக்கழகத்தின் ஆணிவேரான சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியானது 2003 ஆம் ஆண்டு தனது நூறாண்டு கல்விப்பணியை செவ்வனே நடத்தியுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ் இப்பல்கலைக்கழகம் இக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை 06-07-2003 அன்று கொண்டாடியது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கால்நடை மற்றும் பிராணிகள் தொடு திரைக் கணினியையும் துவக்கி வைத்தார்கள். மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைத் துவக்கிவைத்து நூற்றாண்டு விழா அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தார்கள். மேலும் அவர் நூற்றாண்டு விழா சிறப்புமலரை வெளியிட்டு, முதல் பிரதியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவுத் தூணை திறந்து வைத்தார்.



2004 ஜூலை 30]

கால்நடை கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள், கல்லூரிகளுக்கிடையிலான கலைநிகழ்ச்சிகள், கால்நடை கண்காட்சி, தொழில்முனை கண்காட்சிகள், தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கு மற்றும் பணியரங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நூற்றாண்டு வருடத்தில் நடத்தி நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் 2003-04 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:

| பாடப்பிரிவு | சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.விஎஸ்சி., | 134 | 72 | - | 206 |
| பி.எஃப்.எஸ்சி., | - | - | 29 | 29 |
| எம்.விஎஸ்சி., | 59 | 17 | - | 76 |
| எம்.எஃப்.எஸ்சி., | - | - | 19 | 19 |
| பி.எச்டி (கால்நடை) | 26 | - | - | 26 |
| பி.எச்டி (மீன்வளம்) | - | - | 2 | 2 |
| மொத்தம் | 219 | 89 | 50 | 358 |

தமிழக அரசு, இந்திய அரசு, இந்திய வேளாண் அறிவியல் கழகம் மற்றும் இதர முகமைகள் உதவியுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு உதவித் தொகைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## புதிய முதுகலை மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

உயிர்த் தொழில்நுட்பவியலில் எம்.ஃபில் பட்டப்படிப்பு மற்றும் உயிர்நுட்பத் தகவலியலில் முதுகலை பட்டயப் படிப்பு ஆகிய இரண்டு புதிய பாடப் பிரிவுகள் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு 2004-05 இல் துவக்கப்பட உள்ளது. இவையிரண்டின் கல்விக்காலம்

[2004 ஜூலை 30

ஓராண்டு மற்றும் ஆண்டு மாணவர் சேர்க்கை 6 ஆகும். அறிவியலை மட்டுமே பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெற்ற முதுகலைப் பட்டதாரிகளுக்கு உயிர்த்தொழில்நுட்பவியலின் நவீன முறைகளைக் கற்றுக் கொடுப்பதற்கென்றே உயிர்த்தொழில்நுட்பவியலில் எம்.ஃபில் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயிர்நுட்பத் தகவலியலில் முதுகலை பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம், மாணவர்களுக்கு உயிர்நுட்பத் தகவலியலில் தரமான பயிற்சி அளிப்பதன்மூலம் உயிர்த் தொழில்நுட்பவியல், மருந்தகங்கள், மரபியல், உயிர்வேதியில் மற்றும் பால் சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றின் தேவையை அறிந்து ஆராய்ச்சியை மேம்படுத்துவதே ஆகும். தொழிற்கல்வியில் இளங்கலை பட்டம் அல்லது அதற்கு சமமான அறிவியலில் முதுகலை பட்டம் பெற்றவரே இப்பட்டயப் படிப்பிற்கு தகுதியுடையவர்.

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் உயர்கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள வளாக வசதியை வலுப்படுத்த 88 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில், 5 திட்டங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்காகவும், 50 திட்டங்கள் துறை மேம்பாடு மற்றும் புதிய துறைகள் உருவாக்குவதற்காகவும், பண்ணையாளர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முகமாக 20 ஆராய்ச்சித் திட்டங்களும், 13 மீன்வளத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர 2003–04 ஆம் ஆண்டில் தமிழக அரசு ரூ.33 இலட்சம் மதிப்பீட்டின்கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. தர்மபுரி மாவட்டத்தில் தரிசு நில பராமரிப்புடன் வெள்ளாட்டு வளர்ப்பினை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது குறித்த பொருளாதார முன்னோடி ஆய்வு

2. தேனி மாவட்டத்திலுள்ள சுய உதவிக் குழுக்களின் மூலம் புழக்கடை வான்கோழி வளர்ப்பில் பெண்களை ஊக்குவித்தல்

இப்பல்கலைக்கழகத்தில் 76 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.1,448.08 இலட்சம் மதிப்பீட்டில் செயல்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 30]

**கால்நடை அறிவியலில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி சாதனைகள் உற்பத்தி**

**பயன்பாடு மாற்றக்கூடிய தொழில்நுட்பங்கள்**

◇ ஹேம்ஸ்டர் (ஆய்வக விலங்கினம்) முட்டையினைத் துளைக்கும் பரிசோதனை இப்பரிசோதனை மூலம் விந்தணுவின் கருத்தரிக்கும் திறனை கணிக்க இயலும். மனித இனம், மாட்டினம், எருமை, விந்தணுக்களின் திறனை பரிசோதிக்க இந்த ஆய்வக முறை பெரிதும் உதவும். இம்முறையில் சிறந்த பொலிக் கிடாக்களைத் தேர்ந்தெடுக்க உதவும். விந்து தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தில் இம்முறை முக்கிய அங்கமாக விளங்கும்.

**முதன்மை தொழில்நுட்பங்களில் ஆய்வு**

**இனப்பெருக்க தொழில்நுட்பங்களில் உதவுதல்**

◇ வெள்ளாட்டு கரு முட்டைகளை ஆய்வகத்தில் வளர்த்து, கருத்தரித்து, கருவினை வளர்த்தலில் சாதனை நிகழ்த்தியுள்ளது

**மரபியல் நுண்ணறிவியல் மற்றும் மரபியல் பொறியியல்**

◇ லெப்டோஸ்பைரா நோயினை நுண்ணிய அளவில் கண்டறிய மரபிழைச் சீரமைப்பு (LipL 32 Protein) நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி சார்ந்த மரப்பால் வகை சிறிய அணுக்களின் திரள்வு சோதனை முறை இந்தியாவிலேயே முதன் முறையாக கண்டறியப்பட்டு உள்ளது.

◇ பால் புரத மரபணுக்களாக பீ–லேக்டோ குளோபுலின் மற்றும் கே/கேசின் மரபணுக்கள் மாடுகளிலும், எருமைகளிலும், வரிசைப்படுத்தப்பட்டு, அவற்றில் இன வேறுபாட்டினை அறிய உதவவும், மாடுகளிலும், எருமைகளிலும், நோய் எதிர்ப்புத்திறனைக் கண்டறியும் பெரிய திசு ஒருங்கிணைப்பு மரபணுக்கள் ப்ளோரசென்ட் முறையில் கண்டறியப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 30

**நாட்டின கால்நடைகளை தரம் ஆய்ந்து செழிக்கச் செய்தல்**

◇ தமிழ்நாட்டைச் சேர்ந்த மேச்சேரி செம்மறியாட்டினத்தின் மதிப்பீடு மற்றும் குணாதிசயம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த இனம் அதிக விழுக்காடு இறைச்சியை தரத்தக்கதாகவும், தரமுள்ள தோல் கொண்டதாகவும், அதிகவெப்பத்தைத் தாங்கும் குணம் உள்ளதாகவும், தீவனப் பற்றாக்குறையைத் தாங்கி வளரக் கூடியது என்றும் தெரியவந்துள்ளது.

◇ தமிழகத்தின் தென் மாவட்டங்களில் காணப்படும் கன்னியாடு என்ற வெள்ளாட்டினத்தின் குணாதிசயங்கள் மற்றும் உற்பத்திக் குறியீடுகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இவ்வாடுகளில் 60 சதவிகிதம் இரண்டு குட்டிகள் ஈனும் தன்மையுடனவாகவும் வறட்சி காலங்களிலும் ஓராண்டில் 22 கிலோ உடல் எடையை அடையும் தன்மையுடையது எனவும் கண்டறியப்பட்டுள்ளதால், வறட்சி உள்ள பகுதிகளில் இதனை வளர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

◇ தென்னிந்திய மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஓங்கோல், அம்ரித்மகால் போன்றவற்றில் மரபியல் நுண்பொருள் குறிப்பிடத்தக்க டி.என்.ஏ. மூலக்கூறு கண்டறியப்பட்டு நுண் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன நிர்ணயம், தர நிர்ணயம் ஆகியன பல்வேறு மரபியல் பொறியியல் முறைகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டது.

**ஒருங்கிணைந்த பண்ணை முறை மேம்படுத்துதல்**

◇ வாத்து மற்றும் மீன்களை சேர்த்து வளர்க்கும் முறையில் மீன் உற்பத்தி, மீன் மட்டும் வளர்க்கும் முறையினை விட 1.5 டன் அதிகம் கிடைப்பது தெரியவந்துள்ளது. 500 வாத்துக்களைச் சேர்த்து வளர்க்கும்பொழுது ஆண்டொன்றிற்கு கூடுதல் வருவாயாக ரூ.12,000/- பெறலாம் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**விலை குறைந்த தீவன முறை தொழில்நுட்பம்**

◇ மரபுசாரா தீவனங்களான கரும்பு மேற்பகுதிகள், வாழைத் தண்டு, புளியங்கொட்டை விதைகள் மற்றும் மாம்பழத்தோல், மரவள்ளிக் கிழங்குத் திப்பி, யூரியா உப்புக் கலவை போன்றவற்றைத் தீவனப் பொருட்கள் மற்றும் தானியங்களுக்கு மாறுதலாக அசைபோடும் கால்நடைகளுக்குப் பயன்படுத்த தக்க சிபாரிசுகள் செய்யப்பட்டன.



2004 ஜூலை 30]

**கால்நடை நலம்**

பல்கலைக்கழகம், கால்நடை மற்றும் கோழியினத்தினைத் தாக்கும் பல்வேறு நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர் நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்த துல்லியமான நோய் கண்டறியும் முறைகளை உருவாக்கியுள்ளது.

**நோய்க் கணிப்பு**

செம்மறியாடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோய் பற்றிய கணிப்பும், அதனைப் பரப்பும் க்யூளிகாய்டஸ் பூச்சி நாட்டில் பரவலாக உள்ளது என்றும், இவை நோய் பரவ வழிவகுக்கும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்நோய்க்கான நோய் எதிர்ப்புப் பொருட்கள், செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் மாடுகளில் அதிகம் காணப்படுவது வயல்வெளிகளில் இக்கிருமி உள்ளது என்பதைக் குறிக்கிறது.

**நோய் கண்டறியும் முறைகள்**

■ காமா இண்டர்ஃபெரான் அளவீடு முறை மூலம், மாடுகளில் காச நோயினை 100 சதவிகிதம் துல்லியமாகக் கண்டறிதல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

■ நீலநாக்கு நோய் எதிரணு உற்பத்தி ஊக்கியைக் கண்டறிய ஒரு செல் நோய் எதிரணு கொண்ட நோயறி சாதனம் கண்டுபிடிக்கப்பட்டு நோய் பாதிக்கும் வாய்ப்பு மற்றும் குறிப்பிட்டுத் தாக்கும் திறன் முறையே 88.24 மற்றும் 87.5 சதவிகிதம் உள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

■ கோழிகளைத் தாக்கும் நோய்களைக் கண்டறியவும் நோய் எதிர்ப்புத் திறனை அளவிடவும். ஐ.ஜி.எம். எலிசா முறை உருவாக்கப்பட்டுள்ளது

[2004 ஜூலை 30

- அப்ளோ நச்சு பி–1 கண்டறிய மறைமுக எலிசா முறை செயல்படுத்தப்பட்டுள்ளது
- முட்டை வீழ்ச்சி நோய்–76 நோய் எதிர்ப்புப் பொருளைக் கண்டறிய எலிசா சார்ந்த சாதனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவிலேயே முதன் முறையாக முட்டை வீழ்ச்சி நோய்–76 நோய் எதிர்ப்புப் பொருளைத் துல்லியமாகக் கண்டறிய தொடர் தொழில்நுட்ப முறைப்படி முட்டை வீழ்ச்சி நோய்–76 தரமான நோய் நுண்ம எதிரி அறியும் சாதனம் கண்டறியப் பட்டுள்ளது.
- எருமைக் கன்றுகளில் சீம்பாலின் மூலம் உட்செல்லும் எதிர்ப்புப் புரதத்தினை அறிய இம்யூன் 'ஓ' செக் என்ற சாதனம் கண்டறியப்பட்டுள்ளது. இது இளம் கன்றுகளில் சீம்பாலின் செரிப்புத் தன்மையின் அளவை அறிந்து கொள்ள உதவுகிறது.
- ஈகேனிஸ் எனப்படும் ஒட்டுண்ணியினை ஆய்வகத்திலுள்ள ஒரு சோதனைக் குழாய் வழி பிசிஆர் முறை நிர்ணயம் செய்யப்பட்டது. இம்முறையைப் பயன்படுத்தி நாய்களில் ஈகேனிஸ் நோயின் தாக்கத்தை எளிதாகவும் மிக துல்லியமாகவும் கண்டுபிடிக்க இயலும்.

## நோய்த்தடுப்பு / தடுப்பூசிகள்

- வெளிப்புற ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்த அவற்றின் நடுப்புற வயிற்றுப்பகுதிப் பொருளினைப் பயன்படுத்தி ஒரு தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டது. தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட கால்நடைகளில் குறிப்பிடத்தக்க அளவு நோய் எதிர்ப்பு சார்ந்த வெளிப்புற ஒட்டுண்ணிகளை எதிர்த்தும் நோய் எதிர்ப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- புறக்கடை கோழிகளைத் தாக்கும் வெள்ளைக் கழிச்சல் நோய்க்காக உருண்டை வடிவ வாய்வழித் தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 30]

- கோழிகளைத் தாக்கும் கொழுப்புச் சத்துள்ள சிறு மூச்சுக் குழல் நோய்க்கெதிரான தடுப்பூசி (வீரியம் அழிக்கப்பட்டது) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி 10 வார வயது வரை நோய்த் தடுக்கும் திறனுடையது.
- இரட்டை உயிரணுக் கலவை நீலநாக்கு தடுப்பூசி இப்பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டு இராணிப் பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பியல் மருத்துவ நிலையத்தால் பாதுகாப்பானது; ஆற்றல் மிக்கதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## கால்நடை மூலிகை மருத்துவம்

இப்பல்கலைக்கழகம், மூலிகை மருத்துவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உண்டாக்கியுள்ளது. மூலிகைச் சாற்றின் செயல் பொருட்களை பிரித்தெடுத்து கால்நடைகளைத தாக்கும் நோயினைக் குணப்படுத்த செயல்படுத்தப்படுகின்றன. குமுட்டிப் பழக்கூழ், வேப்பெண்ணெய் கலவை புழுக்களால் ஏற்படும் புண்களைக் குணப்படுத்தவும், சப்போட்டா மற்றும் பலாப்பழ இலைகள் கழிச்சலுக்கும், வேப்பிலை குடற்பூச்சி அகற்றவும், அகால்பா இண்டிகா மற்றும் செஸ்பேனியா செஸ்பான் இனப்பெருக்கக் கட்டுப்பாடு மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டது.

## கால்நடைப் பொருட்கள்

- மாடு, எருமை, செம்மறியாடு, பன்றி மற்றும் கோழியின இறைச்சி அறுவை முறையில் தர நிர்ணயம், பாதிப்பு, பகுப்பு போன்றன ஆய்வு செய்யப்பட்டன.
- கோழித் தீவனத்தில் பிளாக்ஸ் விதை செலினியம், உயிர்ச்சத்து ஈ, மீன் எண்ணெய் மற்றும் ஸ்பருலினா ஆகியன சேர்க்கப்பட்டு உண்போர் விருப்பப்படி, வடிவமைக்கப்பட்ட முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் பயன்படும் ஒமேகா–3 கொழுப்பு அமிலம் முட்டை மஞ்சள் கருவில் அதிகரிக்கப்பட்டு, பாதிக்கும் அடர்த்தி கொழுப்பு புரதம், மிகக் குறைந்தும் கோழிகளின் ஊநீரில் கண்டறியப்பட்டது.

[2004 ஜுலை 30

- கோழிப்பண்ணைகளில் இருந்து நீக்கப்பட்ட உற்பத்தித் திறனற்ற கோழிகளைப் பயன்படுத்தி மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்களான சிக்கன் அப்பம், சிக்கன் சாசேஜ், புகையூட்டப்பட்ட கோழி இறைச்சி போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டது

- மதிப்பூட்டிய மீன் பொருட்களான புளிப்புச்சுவை மீன் ஊறுகாய், சாங் மீட் ஃவேபர்ஸ், மீன்ஃவேபர்ஸ் மற்றும் மீன் சூப் பொடி ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டது. இவை அதிக புரதச் சத்து மற்றும் கனிமச் சத்து கொண்டவையாகவும் உள்ளன.

**தனி உரிமை பதிவு**

- லெப்டோஸ்பைரா நோயினை நுண்ணிய அளவில் கண்டறிய மரபிழைச் சீரமைப்பு (LipL 32 Protein) நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி சார்ந்த மரப்பால் வகை சிறிய அணுக்களின் திரள்வு சோதனை முறை இந்தியாவிலேயே முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாண்டு இக்கண்டுபிடிப்பினை அறிவு சார் சொத்துரிமை கொண்டாடும் பொருட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சோதனை மூலம் நோயை உண்டாக்கும் லெப்டோஸ்பைரா கிருமியோடு மட்டும் எதிர்வினை புரிந்து அதனை மட்டும் தனித்துக் காட்டும் தன்மையுடையது.

- மாணவர் தகவலாக இருப்பினும் அல்லது ஒரு துறையின் ஆராய்ச்சித் தகவல்களாக இருப்பினும் அவற்றைக் கணினியில் சேமித்து அவற்றிலிருந்து குறிப்பிட்ட தகவல்களை திரும்பப்பெறும் கணினி தொகுப்பு ஆவணம் ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வாண்டு இதனை அறிவுசார் சொத்துரிமை கொண்டாடும் பொருட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜுலை 30]

**கால்நடை அறிவியலில் விரிவாக்கம்**

**கிராமப்புறங்களில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்துதல்**

இப்பல்கலைக்கழகம் வேலூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் மூன்று கிராமப்புற தகவல் தொடர்பு மையங்களை உருவாக்கி உள்ளது. இம்மையங்கள், அச்சிடுதல், ஒலி, ஒளி மற்றும் மின்னணு தகவல் தொடர்பு சாதனங்களைக் கொண்டு கால்நடை பராமரிப்பு மற்றும் அதனைச் சார்ந்த தகவல்களைப் பெற உதவுகின்றன. இவ்வகை மையங்களை பொது இடங்களில் நிறுவி, மக்கள் சிரமமின்றி இவற்றினை அணுகிடவும், கிராமக் குழுக்கள் இவற்றினை வெற்றிகரமாக செயல்படுத்திடவும் உதவப்பட்டது.

**தகவல் தொடர்பு மற்றும் வணிகத் தொழில்கள் மூலம் மகளிர் மேம்பாடு**

- ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் நிதி உதவியுடன், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக்குழு இல்லங்களில் ஆறு தகவல் தொடர்பு மையங்கள் நிறுவப்பட்டு, மகளிர் மேம்பாட்டிற்கு வழி வகுக்கப்பட்டது. தகவல் கருவிகளைக் கொண்டு மகளிரின் அறிவு மற்றும் செயல் திறனை வளர்த்து, அவர்களது வருமானத்தை பல்வேறு கால்நடை பராமரிப்பு செயல்களின் மூலமாக அதிகரிக்க உதவுகிறது

**விவசாய தொலைத் தகவல் மையம்**

- வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையின் நிதியுதவியுடன் விவசாய தொலைத் தகவல் மையம் ஒன்று விரிவாக்கக் கல்வி மையத்தில் 21-01-2004 அன்று முதல் துவக்கப் பட்டுள்ளது. இதன்கீழ் தொலைபேசி ஒன்று கால்நடைப் பண்ணையாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இயங்கி வருகிறது. இத்தொலைபேசியைத் தொடர்பு கொள்ள கட்டணம் ஏதுமில்லை. இதுவரை 58 கால்நடைப் பண்ணையாளர்களுக்கு கால்நடை பராமரிப்பு தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 30

## தொலைத் தொடர்பு கல்வி

- இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை உற்பத்தி வல்லுநர்களின் செயல் திறன் உயர, தொலைத் தொடர்பு மூலமாக, கனடா நாட்டின் காமன்வெல்த் கற்கும் குழு உதவியுடன் ஒரு கல்விமுறையைச் செயல்படுத்தியது. மேலும் பிராணிகள் நலத்திற்காக, அச்சு ஊடகம் வழியாக, தொலைத்தொடர்பு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

## இதர வெளிப்புற செயல்முறைகள்

- உள்நாட்டுத் தொழில்நுட்ப அறிவுத் திறன்: கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயை, கற்பூரம் மற்றும் கத்தரிக்காய், தேங்காய் மற்றும் நெய் ஆகியவற்றை உபயோகப்படுத்தி குணப்படுத்துதல்; விலங்கினங்களில் ஏற்படும் புண்களைக் குணப்படுத்த பங்காரியாவை உபயோகப்படுத்துதல்; கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயைக் குணப்படுத்த ஹரிடா மற்றும் பகாடாவைப் பயன்படுத்துதல்; ப்ளாண்டுல்சி இலைக் களிம்புகளைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் எருமைகளைத் தாக்கும் கோமாரி நோயைக் குணப்படுத்துதல் போன்ற நான்கு உள்நாட்டுத் தொழில்நுட்ப அறிவுத் திறன்களை ஊர்ஜிதம் செய்யும் பணியினை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி இவ்வாண்டு மேற்கொண்டுள்ளது.

## பயிற்சித் திட்டங்கள்

- கறவை மாடு வளர்ப்பு, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி, வான்கோழி, கறிக்கோழி, முயல் மற்றும் காடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, காளான் உற்பத்தி, ஒருங்கிணைந்த பண்ணை முறை, தீவன உற்பத்தி போன்றவற்றில் உள் மற்றும் வெளிப்புறப் பயிற்சிகள் இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பிரிவுகளான வேளாண் கல்வி மையம் (Krishi Vigyan Kendra) மற்றும் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் வாயிலாக கால்நடைப் பண்ணையாளர்களின் நன்மைக்காக அளிக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சிகளின் வாயிலாக



2004 ஜூலை 30]

இவ்வாண்டு பயனடைந்தோர் எண்ணிக்கை 31,282 ஆகும். இதில் 12,296 ஆண்களும் 18,986 பெண்களும் அடங்குவர். பல்கலைக்கழகத்தின் இத்தகைய விரிவாக்கப் பணியின் மூலம் 6,756 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெற்றனர்.

## மீன் வள அறிவியலில் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்

மீன் வள அறிவியலில் சில குறிப்பிடத்தக்க ஆய்வு சாதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அறிக்கை ஆண்டில் மீன் உற்பத்தி பல்வேறு ஆய்வுகள் மூலம் அதிகரிக்கப்பட்டு, புதிய மதிப்பு கூடிய மீன் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வகை ஆய்வு மற்றும் உற்பத்தி மூலமாக சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோர் பயன் பெற்றனர்.

## மீன் உற்பத்தி

- லேக்டோபேசில்லஸை தீவனப் பொருட்களாக நன்னீர் இறால்களுக்கு அளிப்பதன் மூலம் அவை 45 நாட்களில் அதன் முழு வளர்ச்சியை அடைய துரிதப்படுத்துப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.
- அலங்கார மீன் உற்பத்தி வெள்ளி மோலி, வாள் போன்ற வால் கொண்ட மீன், தங்க மீன், கோய் கார்ப், கௌரமி, சண்டை மீன் போன்றனவற்றை கடின நீரில் வளர்த்து சாதனை செய்யப்பட்டது. இது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாற்றப்பட்டு அவர்களின் குடும்ப வருவாயை உயர்த்த வழிவகை செய்யப்பட்டது.

## மீன் நலம்

இறால் நோய் ஆய்வகம், இறால் பண்ணையாளர்களுக்கு சேவை செய்து வருகிறது. இந்த ஆய்வகம் இவ்வாண்டில், 1,244 இறால் மாதிரிப் பொருட்களை சோதனை செய்து, பாலிமரேஸ் சங்கிலித் தொடர் சோதனை மூலமாக வெள்ளைப் பன்றி நோய், நுண் பெருக்கி உதவியாக மோனாடான் பேகுலா நுண் கிருமி நோயினையும், முறையே 40.50 சதவிகிதம், 6 சதவிகிதம் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

[2004 ஜுலை 30

**மீன் பொருட்கள்**

மீன் நூடுல்ஸ் தயாரிக்கும் முறை, சுரிமி தர மேம்பாடு போன்றன குறிப்பிடத்தக்க ஆய்வு சாதனைகளாக உள்ளது. மீன் நூடுல்ஸ் தயாரிக்கும் முறை மகளிர் சுய உதவிக்குழுவிற்கு மாற்றப்பட்டு வணிக ரீதியாக பயன்பெற உதவப்பட்டுள்ளது.

**மீன்வள விரிவாக்கமும், பொருளாதாரமும்**

மீனவ சமுதாயத்தினரிடம் அவர்களது வாழ்வியல் முறைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. வேலைவாய்ப்பு, கடன் பெறுதல், கடன் திரும்பக் கட்டுதல் போன்ற பொருளாதார குணங்கள், மீன் பிடிக்க கட்டுமர மற்றும் விசைப்படகு உபயோகிப்போர் ஆகியோரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் கட்டுமரத்தில் மீன் பிடிப்போரில் 40.80 சதவிகிதத்தினரும் விசைப்படகில் மீன்பிடிப்போரில் 63.43 சதவிகிதத்தினரும் மீன் பிடிப்பு சம்பந்தமான தொழில்களுக்குக் கடன் பெற்றுள்ளனர். இவர்களது வருமானம் பற்றி ஆய்ந்த போது கட்டுமரம் ஓட்டுபவர்கள் 18.87 சதவிகித வருமானத்தையும் விசைப்படகு செலுத்துவோர் 8.44 சதவிகித வருமானமும் பெறுகிறார்கள் என அறியப்பட்டுள்ளது.

2003–04 ஆம் ஆண்டில் 10 வெவ்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அலங்கார மீன் வளர்ப்பு, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள், நோய் கண்டறிதல் போன்றவற்றில் சுய உதவிக்குழுக்கள், மீனவ மகளிர் மற்றும் தொழில் நிலையங்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வருமானம் பெற நான்கு நாட்கள் அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சித் திட்டம் தூத்துக்குடியில் உள்ள ரெடின் மீன் அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்கள், நகர்ப்புற மக்களிடையே பிரபலமடைவதால், மதிப்பூட்டிய மீன் பொருட்கள் செய்யும் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டதன் வாயிலாக 39 பேர் பயனடைந்துள்ளனர்.



2004 ஜுலை 30]

## நடப்பிலுள்ள (2004–05) கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்கள்

■ **புதிய முதுகலை / முதுகலை பட்டயப் படிப்பு ஆரம்பித்தல்**

உயிர்த் தொழில்நுட்பவியலில் எம்.ஃபில் பட்டப் படிப்பு மற்றும் உயிர்நுட்பத் தகவலியலில் முதுகலை பட்டயப் படிப்பு ஆகிய இரண்டு புதிய பாடப் பிரிவுகள் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்வாண்டு 2004–05 இல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

■ **உயிர்த் தொழில்நுட்பவியல் வாயிலாக கிராமப்புற மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்**

'கறவை மாடுகளில் சினைப் பருவத்தை ஒருமைப்படுத்தி குறிப்பிட்ட இனப் பெருக்கக் காலத்தை நிர்ணயம் செய்யும் முறையை பின்பற்றுவதன் மூலம் கிராமப்புற மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற ஒரு சிறப்புத் திட்டமானது திருவாரூரில் உள்ள வேளாண் பயிற்சி மையத்தில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கால்நடைப் பண்ணையாளர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு கறவை மாடுகளில் அறிவியல் சார்ந்த இனப்பெருக்க மேலாண்மை முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பயனடைந்தோர் எண்ணிக்கை 205 ஆகும்.

■ **தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டுமுறையை கிராமப்புற ஏழை மகளிரிடையே ஊக்குவித்தல்.**

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் நிதி உதவியுடன், 'தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டுமுறையை கிராமப்புற ஏழை மகளிரிடையே ஊக்குவித்தல்' எனும் திட்டம் விரிவாக்கக் கல்வி இயக்குநகரத்தில் செயல்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அனைத்து வகை கணினி சாதனங்களுடன் ஆறு தகவல் தொடர்பு மையங்கள் நிறுவப்பட்டு, மகளிரிடையே கணினி அறிவினை மேம்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 30

## ■ தர்மபுரி மாவட்டத்தில் தரிசு நில பராமரிப்புடன் வெள்ளாட்டு வளர்ப்பினை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது குறித்த பொருளாதார முன்னோடி ஆய்வு

2003–04ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களை நன்கு உபயோகப்படுத்துதலை ஊக்குவிக்கும் முகமாகவும், வெள்ளாட்டு வளர்ப்பின் மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும் அரசு 'தர்மபுரி மாவட்டத்தில் தரிசு நில பராமரிப்புடன் வெள்ளாட்டு வளர்ப்பினை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது குறித்த பொருளாதார முன்னோடி ஆய்வு' என்ற திட்டத்தினை ரூ.22.814 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தரிசு நிலத்தைச் செழுமைப் படுத்தவும், தரிசு நிலத்தில் ஒருங்கிணைந்த வெள்ளாடு வளர்ப்பின் மூலம் வருவாயைப் பெருக்குவதுமே ஆகும். இந்த முன்னோடி ஆய்வுத் திட்டத்தின் வாயிலாக வெற்றிகரமான மற்றும் பயன்பாட்டிற்கு உகந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கருத்தரங்கு மற்றும் தன்னார்வப் பயிற்சி முகாம்கள் மூலமாக பரவச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களின் தரிசு நிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி அவர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் தீவன மரங்கள் வளர்ப்பதற்கான மரக் கன்றுகள் மற்றும் விதைகளும் 50 சதவிகித மானியத்தில் வெள்ளாடுகளும் தரப்பட்டு ஒருங்கிணைப்பு வளர்ப்பு முறையை ஊக்குவித்து அந்த தரிசு நிலங்களை இத்திட்டத்தின் மாதிரிப் பண்ணைகளாக உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ■ தேனி மாவட்டத்திலுள்ள சுய உதவிக் குழுக்களின் மூலம் புழக்கடை வான்கோழி வளர்ப்பில் பெண்களை ஊக்குவித்தல்

கிராமப்புறப் பெண்களின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு அவர்களது வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன், அரசு 'தேனி மாவட்டத்திலுள்ள சுய உதவிக் குழுக்களின் மூலம் புழக்கடை வான்கோழி வளர்ப்பில் பெண்களை ஊக்குவித்தல்' எனும் திட்டத்தினை ரூ.10.195 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்த இவ்வாண்டு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக மாவட்ட கிராமப்புற மேம்பாட்டு வாரியம் மற்றும் திட்ட செயல்பாட்டு பிரிவு, தமிழக மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் தேனி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் 20 சுய உதவிக் குழுக்கள் தெரிவு செய்யப்பட உள்ளன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குழுக்களுக்கும் 50 குஞ்சுகள் கொண்ட



2004 ஜூலை 30]

வான்கோழிப் பிரிவு ஒன்றினையும் 250 கிலோ தீவனத்தையும் மானிய அளவில் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த வான்கோழிப் பிரிவுகள் மற்றும் தீவனச் செலவு ரூ.11,000/– இதில் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு ரூ.5,500/– (50 சதவிகித மானியம்). பண்ணை அமைக்கத் தேவையான பொருட்கள் மற்றும் மருந்துகள் இலவசமாக அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் பயிற்சிகள் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ■ மாட்டினப் பெருக்கத்தில் புனர் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

2003–04 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த 675 கள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நவீன இனப்பெருக்கத் தொழில்நுட்பத்தினை அறிந்துகொள்ளச் செய்யும் பொருட்டு ஐந்து நாட்களுக்கு மாட்டினப் பெருக்கத்தில் புனர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. காமன் வெல்த் ஆப் லெர்னிங், கனடாவின் நிதியுதவியுடன் 'இந்தியாவில் கால்நடை அறிவியல் மருத்துவர்களுக்கு கால்நடை மருத்துவக் கல்வியில் புனர்வகுப்புகள்' என்ற திட்டம் ரூ.6.25இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக தமிழக களக் கால்நடை மருத்துவர்களுக்கென 'மாட்டினங்களின் இனப்பெருக்கத் திறனை மேம்படுத்துதல்' மற்றும் 'சிறுபிராணிகளின் நோயறிதல் மற்றும் சிகிச்சையளித்தலில் தற்கால முறைகள்' பற்றிய இரண்டு தொலைக்கல்வி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது

## ■ தர்மபுரி மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்

அலங்கார மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தில் விழிப்புணர்வு முகாம் 40 மீன்வளப் பண்ணையாளர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் பாப்பிரெட்டிபட்டியிலுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 15 உறுப்பினர்களும் ஒசூர் மாவட்டத்தைச் சார்ந்த 25 பேரும் அடங்குவர். இம்முகாமில் பெற்ற தொழில்நுட்ப ஆலோசனைகளின் வாயிலாக திரு. கணேசன், பாப்பிரெட்டிபட்டி அலங்கார மீன் வளர்ப்பு பண்ணை ஒன்றினையும் திரு. என். வடிவேல் முருகன், தர்மபுரி புழக்கடை அலங்கார மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்றினையும் ஆரம்பித்துள்ளனர். இத்திட்டமானது சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிப்ப தாகவும் குடும்ப வருவாயைப் பெருக்கவும் உதவிகரமாக இருக்கும்.

[2004 ஜூலை 30

**திட்டம்**

இப்பல்கலைக்கழகத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களான வளாக வசதி மேம்பாடு, தரமான உயர்கல்வி அளித்தல், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதோடு கால்நடை உற்பத்தியை உயர்த்தி கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை உடனுக்குடன் வழங்குதல் போன்றவை ஆகும். பத்தாவது ஐந்தாண்டு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.22,908.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. அவற்றுள், இப்பல்கலைக்கழகத்தின் நடப்பிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்த ரூ.17,232.28 இலட்சமும், புதிய ஆராய்ச்சித் திட்டங்களை வகுக்க ரூ.5,675.88 இலட்சமும் ஒதுக்கீடு செய்யவும் கோரப்பட்டுள்ளது.

**2004–2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்**

1. செம்மறி ஆட்டம்மைக்கு திசு வளர்ப்பு முறை சார்ந்த தடுப்பூசி ரூ.10.00 இலட்சம் செலவில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கோழிப் பண்ணைகளில் பி. துருஞ்சியன்சிஸ்—ஐப் பயன்படுத்தி ஈக்களை ரூ.12.00 இலட்சம் செலவில் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. ஈமு ஆராய்ச்சி அலகை ரூ.26.82 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.
4. இந்திய கெண்டை மீன்களின் மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மீன் விந்தணுக்கள் குளிர்பதனிடும் ஆய்வுக் கூடம் ஒன்று ரூ.17.51 இலட்சம் செலவில் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நிறுவ உத்தேசிக்கபட்டுள்ளது.



2004 ஜூலை 30]

## இணைப்பு – II

(43 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**மானியக் கோரிக்கை எண் 16**

## கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணிநூல்

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005**

**1. முன்னுரை**

ஜவுளித் தொழில் இந்திய பொருளாதாரத்தில் தனித்தன்மை பெற்று விளங்குவதோடு அதன் ஜவுளி உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், ஜவுளித் தொழிலானது தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற மக்களுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது. நூற்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழில் ஆகியவை இம்மாநில ஜவுளித் தொழிலின் நான்கு தூண்களாக விளங்குகின்றன.

கைத்தறி நெசவாளர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளை ஒருங்கிணைத்து செம்மைப்படுத்துவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கங்களாகும். இம்மாநிலத்தில் நூற்புத் தொழில் மற்றும் துணிநூல் ஆலைகள், ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழில்கள் நன்முறையில் செயல்படுவதையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை கவனித்து வருகின்றது. மாநிலத்தில் உள்ள கூட்டுறவின்கீழ் செயல்படும் நெசவுத் தொழில் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் செயற்பதிவாளராகச் செயல்பட்டு வருகின்றார். கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் மாநிலத்தின் "துணிநூல் அதிகாரி"யாகவும் செயல்பட்டு வருகின்றார். ஜவுளித் தொழிலின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப் பொருட்கள் கிடைப்பதை உறுதி

செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்தி செய்வதும் இத்துறையின் பொறுப்பாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப் பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சொந்த விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்புக் கவனம் செலுத்தும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்துத் திட்டங்களை முறைப்படுத்துதல், கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரைச் சார்ந்ததாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:–

- 18 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள் அலுவலகங்கள்
- 6 அமலாக்க அலுவலகங்கள் (சென்னையில் தலைமையிடம் மற்றும் 5 சரக அலுவலகங்கள்)
- 1,286 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
- 133 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
- 18 கூட்டுறவு நூற்பாலைகள்
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை
- தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு
- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்



- தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், (டான்ஸ்பின்) சென்னை

## 2. கைத்தறித் தொழில்

கைத்தறித் தொழிலானது இந்தியாவில் மிகப்பெரிய மற்றும் முக்கிய குடிசைத் தொழிலாக இருந்து, கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் பெரிய பொருளாதார செயல்பாடுகள் கொண்ட தொழில்களில் ஒன்றாக இருப்பதோடு, 11.64 இலட்சம் நெசவாளர்கள் மற்றும் 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. தமிழகத்தில் 31–3–2004–ல் 1286 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2.17 இலட்சம் கைத்தறிகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள தறிகள், கூட்டுறவு அல்லாத அமைப்பின்கீழ் உள்ளன. மொத்தமுள்ள 1,286 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1,202 சங்கங்கள் பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் மீதமுள்ள 84 சங்கங்கள் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் உள்ளன. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மைய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.467.61 கோடி மதிப்புள்ள 914.74 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் 2003–2004 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.574.61 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2002–2003 ஆம் ஆண்டு விற்பனையைவிட 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.2.94 கோடி அளவிற்கு கைத்தறித் துணிகள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2002–2003 ஆம் ஆண்டில் 487–ஆக இருந்த இலாபம் ஈட்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2003–2004 ஆம் ஆண்டில் 527 ஆக உயர்ந்துள்ளது.

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அம்சங்களில் விற்பனை அம்சம் ஒரு முக்கிய காரணியாகும். சந்தையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களையும்/ஏற்றுமதி இரகங்களையும்

உற்பத்தி செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இத்துறை ஊக்குவித்து வருவதோடு, சந்தை நிலவரத்திற்கேற்ப தகுந்த செயல்திட்டத்தினை வழங்கி விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், 2003–2004 ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் கண்காட்சிகள் நடத்தியது மட்டுமின்றி, கைத்தறித் துணி வகைகளின் விற்பனைக்கு சிறப்புக் கழிவு / கூடுதல் தள்ளுபடியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 31–3–2003–ல் கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.248.70 கோடியாக இருந்த சரக்கிருப்பு 31–03–2004–ல் ரூ.221.65 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## 3. விசைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் மக்களின் துணித்தேவையினைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் விசைத்தறிகள் உள்ளன. இந்தியாவில் மொத்தமுள்ள 16.66 இலட்சம் விசைத்தறிகளில், 4.00 இலட்சம் விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. மேலும் தமிழ்நாட்டில் உள்ள 4.00 இலட்சம் விசைத்தறிகளில், 3.20 இலட்சம் தறிகள் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் ஆகும். இந்த விசைத்தறிகள் கூட்டுறவின்கீழும் தனியாரிடத்திலும் உள்ளன. தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் நாமக்கல், ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, கரூர், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் போன்ற மாவட்டங்களில் பெரும்பான்மையாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சேலம், கரூர், திருப்பூர், திருவள்ளூர், பள்ளிப்பாளையம், கொமாரபாளையம் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான விசைத்தறிகள் ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான விசைத்தறிகள் சாதாத் தறிகளாகவும், ஒரு சில தறிகள் மட்டுமே நாடா இல்லாத தறிகளாகவும் உள்ளன.

கூட்டுறவு பிரிவைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் 133 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 23,000 விசைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் முக்கியமாக பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும்





திட்டத்திற்கு தேவையான துணிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.99.58 கோடி மதிப்புள்ள 471.12 இலட்சம் மீட்டர் துணிகள் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## 4. துணித் தொழில்

### அ) துணிநூல் ஆலைகள்

துணித்தொழில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, மாநிலத்தில் பெருமளவு வேலைவாய்ப்பும் அளித்து வருகின்றது. இவைகளில் பெரும்பான்மையானவை நூற்பு தொழிலுக்கு தொடர்புடையதாகும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் மாநிலத்தின் துணித் தொழில் தனிச் சிறப்பு பெற்று முக்கிய பங்கு வகித்து வருகின்றது. இந்தியாவிலுள்ள 1,875 பெரிய மற்றும் நடுத்தர துணிநூல் ஆலைகளில், 858 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அதேபோன்று இந்தியாவிலுள்ள 1146 சிறிய ஆலைகளில் 904 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் அமைந்துள்ள 858 பெரிய மற்றும் நடுத்தர துணிநூல் ஆலைகளில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளும், 13 தேசிய துணிநூல் கழக ஆலைகளும் மற்றும் 20 கூட்டு ஆலைகளும் அடங்கும். மாநிலத்தில் உள்ள ஆலைகள் 15.52 மில்லியன் கதிர்களுடன் 1.99 இலட்சம் தொழிலாளர் திறன் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தின் மொத்த நூல் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 1,164 மில்லியன் கி.கி.க்கும் மேற்பட்டதாக உள்ளது. இது நாட்டின் மொத்த நூல் (Spun Yarn) உற்பத்தியில் (3081.37 மில்லியன் கி.கி.) மூன்றில் ஒரு பங்குக்கும் சற்று அதிகமானதாகும். பருத்தி நூல் உற்பத்தி மற்றும் பருத்தி நூல் அல்லாத நூல் உற்பத்தியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக இம்மாநிலம் விளங்குகிறது. தனியாரிடத்திலுள்ள துணித் தொழில் வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளினால் தொழில் துறையில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தொழிலின் மூலம் கணிசமான வருவாய் ஈட்டுவதுடன், ஏற்றுமதிவாயிலாக அன்னியச் செலாவணியை ஈட்டவும் இத்தொழில் உறுதுணையாக உள்ளது.

பொதுவாக, துணித் தொழிலில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை, தாராளமயமாக்கப்பட்ட துணிநூல் கொள்கை, சந்தையில் நிலவும் மந்த நிலை, நிச்சயமற்ற சந்தை நிலவரம், போதுமான அளவு தரமான பஞ்சு

[2004 ஜூலை 30

கிடைக்காதது, நிதிப் பற்றாக்குறை, நவீனமயமாக்கப்படாத ஆலைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தால் ஏற்படக்கூடிய தாக்கம் போன்ற காரணங்களினால் மாநிலத்தின் ஜவுளித் தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் துணித் தொழில் நல்ல முறையில் இயங்க இயலாமல் பெரும்பான்மையான ஆலைகள் நலிவடைந்துள்ளன. குறிப்பாக, மாநிலத்தில் உள்ள மொத்த நூற்பாலைகளில் 392–க்கும் மேற்பட்டவை தற்சமயம் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளன. துணித் தொழில் சந்தித்து வரும் நெருக்கடிகளால் மாநிலத்தில் உள்ள ஆலைகள் மட்டுமின்றி நாட்டின் இதர பகுதிகளில் உள்ள ஆலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

துணித் தொழில் சந்தித்து வரும் பிரச்சினைகளைத் தமிழ்நாடு அரசு உன்னிப்பாகக் கவனித்து வருவதுடன், இத்தகைய நெருக்கடியான சூழலில் துணித் தொழிலானது வளம் பெற்று நிலைத்து இயங்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுத்தும் வருகிறது. இதுதவிர, நூற்பாலைகளின் தேவைகளைப் பரிசீலித்து அவற்றை ஊக்குவிக்க ஆவன செய்யும் வகையில் "துணிநூல் இயக்ககம்" ஒன்றினை அமைப்பதும் அரசின் பரிசீலனையில் உள்ளது. துணிநூல் இயக்ககமானது ஜவுளித் தொழிலின் அனைத்து விதமான செயல்பாடுகளையும் கவனிக்கும்.

### ஆ) கூட்டுறவு நூற்பாலைகள்

கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான சிட்டா நூலினை சலுகை விலையிலும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோன் நூலினையும் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்துடனும், கிராமப்புற பகுதிகளிலுள்ள நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும், தாயகம் திரும்பியோர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கத்துடனும் தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 வரை 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.70 இலட்சம் கதிர் திறனுடன் நிறுவப்பட்டன.

கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள், எதிர்மறையான சந்தை நிலவரம், பஞ்சு விலை ஏற்றம், பழமையான இயந்திரங்களின் நிலைமை, அதிகப்படியான நூல் உற்பத்தி, நடைமுறை மூலதனக் குறைவு, புதிய ஜவுளிக் கொள்கை, உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தந்தால் ஏற்படக்கூடிய



2004 ஜூலை 30]

தாக்கம் போன்றவை இவை செயலற்றுப் போனதற்கான முக்கிய காரணங்களாகும். மேற்கூறிய காரணங்களால் இலாபகரமாகச செயல்படும் தன்மை பாதிக்கப்பட்டது. அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளிலும் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.3.00 கோடி அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது. 18 கூட்டுறவு நூற்பாலைகளின் ஒட்டுமொத்த குவிந்த நட்டம் 31–3–2004–ல் ரூ.470.49 கோடிகளாகும்.

அரசால் நட்டமடைந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய அரசு மூலதனங்களைத் திரும்பப் பெறுதல் தொடர்பான அமைச்சரவைக் குழுவினை அரசு அமைத்தது. அதன்படி கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்து மூலதனங்களைத் திரும்பப் பெறுதல் தொடர்பான அமைச்சரவை குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்து 31–12–2002 அன்று நடைபெற்ற அரசு மூலதனங்களைத் திரும்பப் பெறுதல் தொடர்பான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, நட்டத்தில் இயங்கும அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் தனியார் மயமாக்கலாமெனவும், 18 கூட்டுறவு நூற்பாலைகளிலும் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்தலாமெனவும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 2003–2004 ஆம் ஆண்டில் இயங்காத 4 கூட்டுறவு நூற்பாலைகளான மதுரை, விழுப்புரம், வேலூர் மற்றும் மிசோரியர் கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் நலிவடைந்த 7 கூட்டுறவு நூற்பாலைகளான நாகப்பட்டினம், திருச்செந்தூர், கரூர், இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஈரோடு மற்றும் காஞ்சீபுரம் ஆகிய கூட்டுறவு நூற்பாலைகளின் பணியாளர்களுக்கு தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ரூ.36.32 கோடியினை முதற்கட்டமாக விடுவித்தது. இதனைத் தொடர்ந்து இவ்வாலைகள் செயல்படவில்லை. இதனிடையில், சேலம் மற்றும் தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டதுடன் இவற்றின் நட்டம் குவியத் தொடங்கியது. எனவே, அரசு தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினை மேற்காணும் இரண்டு ஆலைகளிலும் செயல்படுத்த முடிவெடுத்து, சேலம் கூட்டுறவு நூற்பாலை மற்றும் பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையின் தொழிலாளர்கள்/பணியாளர்களுக்கு தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்த இரண்டாம் கட்டமாக ரூ.27.40 கோடியினை ஏப்ரல் 2004–ல் விடுவித்தது. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்திற்கென அரசால் இரண்டு கட்டமாக விடுவிக்கப்பட்ட தொகையினைப் பயன்படுத்தி 3520

[2004 ஜூலை 30

தொழிலாளர்கள்/பணியாளர்கள் தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டு, அவர்களுக்கு பணப் பயனாக மொத்தம் ரூ.56.68 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் / கூட்டுறவு நூற்பாலைகளைத் தனியார் மயமாக்குதல் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்கீழ் உள்ள பிரிவு 137–ல் நலிவடைந்த பதிவுபெற்ற சங்கங்களுக்கென 137–A என்ற பிரிவினைச் சிறப்பு இனமாகச் சேர்த்து சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரிவு 137–A–ன்கீழான விதிகள் வரையறுக்கப்பட்டு வருகின்றன.

31–05–2004 அன்று நடைபெற்ற அரசு மூலதனங்களைத் திரும்பப் பெறுதல் தொடர்பான அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் அண்ணா, பாரதி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரி ஆகிய ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இதனடிப்படையில், கைத்தறி நெசவாளர்களின் சிட்டா நூல் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு, மேற்படி 5 கூட்டுறவு நூற்பாலைகளை குறைந்த அளவு செலவில் நவீனப்படுத்துவதற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர வழிகளில் கடன் பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5. ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில்

ஜவுளித் தொழிலில் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக ஆடை உற்பத்தித் தொழில் அமைந்துள்ளதுடன், பன்னாட்டு வணிகத்தில் பெரும்பான்மையான பங்கினையும் இத்தொழில் பெற்று விளங்குகின்றது. தமிழ்நாட்டில், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பெருமளவில் மையமாகக் கொண்டு, பருத்தி இழை ஆடை தொழில் அமைந்துள்ளது.

நமது நாட்டில் பின்னலாடைத் தொழில் நிறுவனங்கள் கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் அமைந்துள்ளன. இந்தியாவில் மொத்தம் உள்ள 6000 பின்னலாடை நிறுவனங்களில் 2,900 நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளதுடன், 1.50 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் இவை அளித்து வருகின்றன. ஆண்டு ஒன்றுக்கு ரூ.9500 கோடியாக உள்ள இந்தியாவின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூரின் ஏற்றுமதி மட்டும் ரூ.4500 கோடிகளாகும்.



2004 ஜூலை 30]

மேலும், ஆண்டு ஒன்றுக்கு 23 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 400 ஆயத்த ஆடைத் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன. இவை இரண்டு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கின்றன. நம் நாட்டிலிருந்து 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.2777.32 கோடி மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## 6. பதனிடும் தொழில்

தமிழ்நாட்டில் பதப்படுத்தும் வசதி, முக்கியமாக கைகளால் சாயமிடுதல்/கைகளால்அச்சிடுதல் போன்றவை முறைப்படுத்தப்படாத நிறுவனங்கள் வசம் உள்ளன. ஜவுளித் தொழிலின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு நெய்வதற்கு முந்தைய மற்றும் நெய்ததற்குப் பிந்தைய வசதிகள் வளர்ச்சியடையவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்கெனவே இரசாயன சாயங்களைப் பயன்படுத்துவதை நெறிமுறைப்படுத்த அசோ (Azo) மற்றும் மிதமான சாயங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளது. எனவே, இத்தொழிலுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது மிகவும் இன்றியமையாததாகும். இத்தொழில், துணியின் மதிப்பு, அதன் தரத்தினை நிர்ணயிப்பதோடு அல்லாமல் துணியின் தரத்தை மேம்படுத்துவதற்கு நிறைய வாய்ப்பு மற்றும் உத்திகள் கையாள்வது போன்றவற்றை உள்ளடக்கியது. துணி பதப்படுத்துதல் என்பது 1) வீட்டு உபயோக துணி வகைகள் மற்றும் நூல் சாயமிட்ட துணி ரகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு நூலினை வெளுத்தல் மற்றும் சாயமிடுதல் 2) துணிகளை வெளுத்தல், சாயமிடல் மற்றும் காடா துணிகளை அச்சிட்டு, சேலைகள், லுங்கிகள் மற்றும் இதர வீட்டு உபயோக துணி வகைகளாக மாற்றுவது ஆகிய இரண்டு வகைகளை உள்ளடக்கியதாகும். தற்போதுள்ள பதனிடும் வசதிகள் போதுமானதாக இல்லாததால், பதனிடும் வசதிகள் பெரிய அளவில் அமைத்தால் இத்தொழில் மாநிலத்தில் படிப்படியாக வளர உதவிகரமாக இருக்கும்.

இம்மாநிலத்தில் 2,500 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் 757 மின்விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் உள்ளன. எனினும், மொத்தமுள்ள 757 மின்விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் துணிகளையோ நூலையோ பதனிடுவதில்லை. இதில் 531 நிறுவனங்கள் பின்னலாடைத் துணிகளைப் பதனிடும் பணியினை மட்டுமே செய்து வருகின்றன.

[2004 ஜூலை 30

## 7. 2003–2004 ஆம் ஆண்டில் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2004–2005 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

### 7.01 இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை மீண்டும் அறிமுகம் செய்தல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15–08–2003 அன்று நடைபெற்ற 57–வது சுதந்திர தின விழாவின்போது நிலமற்ற கிராமப்புற விவசாய தொழிலாளர்களுக்கும் மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கும் இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி, 2004 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது செயல்படுத்தப்படுமென்றும் அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற, கிராமப்புற ஏழை மக்களுக்கும் 2004 பொங்கல் பண்டிகையின்போது வழங்குவதற்காக 81 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகள் உற்பத்தி செய்ய ஆணையிடப்பட்டது. பின்னர், பயனடைவோரின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு, பொது விநியோக முறையின்கீழ் அரிசிக் கூப்பன் வைத்திருக்கும் அனைவரும் பயனடையும் வகையில் 111.00 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 111.00 இலட்சம் பாலிகாட் வேட்டிகள் உற்பத்தி செய்ய ஆணையிடப்பட்டது.

இத்துறை, பாலிகாட் சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்வதற்கு 350 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் மற்றும் 85 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் ஈடுபடுத்தியது. மொத்தத் தேவையான 111.00 இலட்சம் பாலிகாட் சேலைகளில், 88,72,096 பாலிகாட் சேலைகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், மீதமுள்ள 22,27,904 பாலிகாட் சேலைகள் தனியாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலும் கொள்முதல் செய்யப்பட்டன. அதுபோன்று, 2,29,795 பாலிகாட் வேட்டிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், மீதமுள்ள 1,08,70,205 பாலிகாட் வேட்டிகள் தனியாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலும் கொள்முதல் செய்யப்பட்டன.

பொங்கல் 2004 பண்டிகைக்காக ரூ.187.48 கோடி மதிப்புள்ள 1.08 கோடி பாலிகாட் சேலைகளும், 1.08 கோடி பாலிகாட் வேட்டிகளும் வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. எஞ்சிய



2004 ஜூலை 30]

வேட்டி சேலைகள் கோ–ஆப்டெக்ஸ் கிடங்குகளில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது விநியோகம் செய்வதற்காக 1.11 கோடி பாலிகாட் சேலைகளும், 1.11 கோடி பாலிகாட் வேட்டிகளும் உற்பத்தி செய்து வழங்கப்படும். 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்குத் தேவைப்படும் சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பொங்கல் 2005–க்கான இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.173.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.02 பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்

பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் கல்வி ஆண்டில் ரூ.50.35 கோடி மதிப்புள்ள 136.65 இலட்சம் மீட்டர் துணிகள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, 2003–2004 ஆம் கல்வி ஆண்டிற்கு 22.75 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் பின்வரும் துறைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன:

| வ. எண் | துறைகளின் பெயர் | அளவு (இலட்சம் மீட்டரில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் நலத் துறை | 17.59 | 617.36 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 1.20 | 41.60 |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை | 3.96 | 149.50 |
| | மொத்தம் | **22.75** | **808.46** |

[2004 ஜூலை 30

இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 250 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 12,000 கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

2004–2005 ஆம் கல்வி ஆண்டிற்கும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தவும் பருத்தி இழையுடன் பாலியஸ்டர் இழை கலந்த 109.00 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை துணைக் குழுவின் முடிவிற்கிணங்க, 34.00 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருவதோடு, மீதமுள்ள 75.00 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாலும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த தொடக்கக் கல்வித் துறையின் 2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.13.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.03 கைத்தறி துணி விற்பனைக்கு கூடுதலாக 10 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்குதல்

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் தேங்கியுள்ள கைத்தறி துணிகளின் தேக்கநிலையினைக் குறைக்கும் பொருட்டு, 15–09–2003 முதல் 31–01–2004 முடியவுள்ள காலத்திற்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியத்துடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மானியம் அனைத்து பருத்தி மற்றும் பட்டுத் துணி வகைகளின் விற்பனைக்கு வழங்க பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் அரசு சிறப்பு இனமாக அனுமதி வழங்கியது. இச்சிறப்புத் தள்ளுபடி மானியத்தைப் பயன்படுத்தி பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் ரூ.173.81 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு துணிகளின் தேக்கம் கணிசமான அளவில் குறைக்கப்பட்டது.



2004 ஜூலை 30]

### 7.04 தள்ளுபடி மானியம்/விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்குதல்

2003–2004 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, 2003–2004 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.88.00 கோடி அளவிற்கு தள்ளுபடி மானியம்/விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 7.05 வட்டி மானியம் வழங்குதல்

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் 31–3–2002 முதல் 30–9–2002 முடிய உள்ள காலாண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய வட்டி மானிய நிலுவைத் தொகையின் ஒரு பகுதி ரூ.2.00 கோடி 2003–04 ஆம் ஆண்டில் வட்டி மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### 7.06 மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்த இத்துறையானது மாவட்ட அளவிலான கண்காட்சிகளை சேலம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மைய அரசின் நிதியுதவியுடன் 2003–2004 ஆம் ஆண்டில் நடத்தியுள்ளது. மாவட்ட அளவிலான கண்காட்சிகளின் மூலம் மொத்தம் ரூ.360.23 இலட்சத்திற்கு ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சேலம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, ஈரோடு, தேனி, நாகர்கோவில் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மத்திய அரசின் நிதியுதவியுடன் 2004–2005 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.07 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்றுமதி இரக உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. தற்போது 328 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 21,399 தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.200.00 கோடியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் படுக்கை

[2004 ஜூலை 30

விரிப்புகள், மேசை விரிப்புகள், ஏப்ரான், திரைச்சீலைகள், டெரிடவல்கள், சமையலறை துணி வகைகள், சிறு கைத்துண்டுகள், தரைவிரிப்புகள் போன்ற ஏற்றுமதி இரகங்களை ரூ.195.02 கோடி அளவிற்கு ஏற்றுமதியாளர்கள் மூலமாக ஏற்றுமதி செய்துள்ளன.

2004–2005 ஆம் ஆண்டில் அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடுத்தி, ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி விற்பனையினை ரூ.225.00 கோடி அளவிற்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.08 "லூம்வேர்ல்டை" பிரபலப்படுத்த நிதியுதவி

கண்காட்சிகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் "லூம்வேர்ல்டு" விற்பனை நிலையத்தினை பிரபலப்படுத்த 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் 05–06–2004 மற்றும் 06–06–2004 ஆகிய தேதிகளில் கண்காட்சி நடத்தப்பட்டு, இக்கண்காட்சியில் ரூ.8.89 இலட்சம் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் மீதமுள்ள 4 இடங்களில் கண்காட்சிகள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.09 இரக மாற்றம்

சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய துணி வகைகள் மற்றும் விலை மதிப்புமிக்க இரகங்களான வீட்டு உபயோகத் துணிகள், மிதியடிகள், ஆயத்த ஆடைகள் மற்றும் சமையலறை துணி போன்ற துணி வகைகள் உற்பத்தி செய்ய நெசவாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

2004–2005 ஆம் ஆண்டில் அதிக அளவிலான நெசவாளர்களை சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களான வீட்டு உபயோகத் துணிகள், மிதியடிகள், ஆயத்த ஆடைகள், சமையலறை துணிகள் போன்ற இரகங்களின் உற்பத்திக்கு மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.10 புள்ளிவிவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம் நிறுவுதல்

கைத்தறித் துணி வகைகளின் விற்பனைத் திறனை அதிகரித்து அதன் மூலம் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தையில் போட்டியிடும் வகையில்



2004 ஜூலை 30]

ஏற்றுமதித் திறனை அதிகரிக்க ஒரு நம்பகமான தகவல் முறையை உருவாக்கும் நோக்கோடு கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் புள்ளிவிவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.11 விசைத்தறி வளர்ச்சிப் பிரிவு நிறுவுதல்

விசைத்தறி நெசவாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகவும் ஆலோசனைகள் வழங்குவதற்காகவும், சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்திலும் 18 சரக அலுவலகங்களிலும் விசைத்தறி வளர்ச்சிப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

### 7.12 ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைத்தல்

சென்னைக்கு அருகில் உள்ள இருங்காட்டுக்கோட்டை, திருப்பூர் மற்றும் மதுரைக்கு அருகில் உள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஆயத்த ஆடைப் பூங்காக்களை அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மைய அரசு திருப்பூரில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பது தொடர்பான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளதோடு, இதுவரை ரூ.4.21 கோடி விடுவித்துள்ளது. இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பதற்கு மத்திய அரசினால் ரூ.17.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பது தொடர்பான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

### 7.13 ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்

காஞ்சிபுரம், சேலம், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய முக்கிய ஜவுளி நகரங்களில் சாலை, மின்சாரம், தண்ணீர் வசதி, பயிற்சி நிலையங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாடு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரத்தில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

[2004 ஜூலை 30

### 7.14 துணிநூல் இயக்ககம் அமைத்தல்

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துணிநூல் தொழிலை மேம்படுத்திடவும், சீரிய முறையில் வழிகாட்டிடவும் துணிநூல் இயக்ககம் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணிநூல் தொழிலின் பல்வேறு பிரிவுகளுக்கு துணிநூல் இயக்ககத்திற்கான பணிக் குழுக்கள் நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. துணிநூல் இயக்ககமானது துணிநூல் தொழிலின் அனைத்து செயல்பாடுகளையும் ஆய்வு செய்வதுடன், இத்தொழிலைச் சீரமைக்கத் தேவையான வழிவகைகளையும் வழங்கிடும்.

### 7.15 ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்டம்

மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தின் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 19,500 நெசவாளர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த 4,500 மகளிருக்கு சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களையும், விலை மதிப்புள்ள இரக துணிகளையும் உற்பத்தி செய்யும் வகையில் ஊக்குவிப்பதற்கென ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சிறப்புத் திட்டம் ரூ.2530.36 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் 2003–2004 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க நிதியுதவி, வடிவமைப்பினை மேம்படுத்துதல், திறனை மேம்படுத்துதல், கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல், தொழில் முனைவோர் மூலம் அதிக வேலைவாய்ப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், விற்பனைக்கு வழிவகை செய்தல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருதுநகர் மாவட்டத்தில் 22–10–2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்த 50 வடிவமைப்பாளர்கள், 5 வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒரு தலைமை வடிவமைப்பாளர் ஆகியோர் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம்மூலம் தெரிவு செய்யப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ளனர். வடிவமைப்பாளர்கள் இலவச வேட்டி சேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் அடிப்படை நிலை தொடர்பான கணக்கெடுப்பினை மேற்கொண்டுள்ளனர். ஐதராபாத்திலுள்ள தேசிய



2004 ஜூலை 30]

ஆடை வடிவமைப்பு நிறுவனம் மூலமாக வடிவமைப்பாளர் மற்றும் வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுதவிர, கைத்தறி நெசவாளர்களுக்கு விருதுநகர், நாகர்கோவில், வேலூர் மற்றும் திருச்செங்கோடு ஆகிய சரகங்களில் ஊக்குவிப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின்போது கைத்தறி நெசவாளர்கள் சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய மாற்று இரகங்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் அதிக கூலி பெறுவதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தில் புதிய வடிவமைப்புகளை உருவாக்க "கணினி வடிவமைப்பு மையம்" ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் நெசவாளர்களுக்கு தையல் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தறிகளை ரூ.975.00 இலட்சம் செலவில் மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2003–2004ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.579.16 இலட்சம் (மத்திய அரசு பங்கு ரூ.434.37 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ.144.79 இலட்சம்) விடுவிக்கப்பட்டுள்ளது.

### 7.16 சென்னிமலையில் பெரிய அளவிலான வீடு கட்டும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, நெசவாளர்களின் தறிக்கூடத்துடன்கூடிய வீடுகட்டும் திட்டத்தினை மத்திய, மாநில அரசுகளின் மானிய உதவியுடனும், ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவியுடனும் அரசு செயல்படுத்தி வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலைப் பகுதியைச் சார்ந்த 25 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 1,010 தொழிற்கூடத்துடன்கூடிய வீடுகள் மொத்தம் ரூ.686.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. சென்னிமலையில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் ஆசியாவிலேயே மிகப் பெரிய வீட்டு வசதிக் காலனியாகும். இவ்வீடுகள் பயனாளிகளிடம் 2004 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 30

## 7.17 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கான பயிற்சி

மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் 5,000 மகளிர் நெசவாளர்களுக்கு தையல் மற்றும் இதர வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி ரூ.20.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

## 7.18 நாடா இல்லா நெசவு பூங்காக்கள் நிறுவுதல் (ஹைடெக் பூங்கா)

தமிழ்நாட்டில் விசைத்தறிகள் அதிகமுள்ள 4 பகுதிகளான கோவை மாவட்டத்தில் உள்ள பல்லடம், தேனி மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி, நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொமாரபாளையம் மற்றும் ஈரோட்டில் நாடா இல்லா நெசவு பூங்காக்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்லடத்தில் அமைக்கப்படவுள்ள விசைத்தறி பூங்காவினைப் பொறுத்தவரையில், ரூ.2586.66 இலட்சத்திற்கு (மத்திய அரசு பங்கு ரூ.2000.00 இலட்சம் மற்றும் மாநில அரசு பங்கு ரூ.586.66 இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கையும் நிலம் கொள்முதல் செய்ய பத்திரப் பதிவிலிருந்து 50 விழுக்காடு விலக்களிக்கவும் தமிழ்நாடு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொமாரபாளையத்தில் அமைக்கப்படவுள்ள காவேரி விசைத்தறி பூங்காவினைப் பொறுத்தவரையில், ரூ.1977.91 இலட்சத்திற்கு (மத்திய அரசு பங்கு ரூ.1515.87 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.462.04 இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கையும், நிலம் கொள்முதல் செய்ய பதிவு செய்வதற்கான பத்திரப் பதிவு செலவிலிருந்து முழு விலக்களிக்கக் கோரிய முன்மொழிவும் பரிசீலனையில் உள்ளன. ஆண்டிப்பட்டி மற்றும் ஈரோட்டில் விசைத்தறி பூங்கா நிறுவுவதற்கான திட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## 7.19 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆலைகள் மற்றும் விசைத்தறி தொழிலின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. ஜனவரி 2005 முதல் தடையற்ற வர்த்தகம் மேற்கொள்ளப்படும்போது இச்சங்கங்கள் உலக சந்தையில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்படும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி வகைகளில் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தோடு புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் ரூ.48.50 இலட்சம் மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.



2004 ஜூலை 30]

இத்திட்ட அறிக்கையின் அடிப்படையில் மாறிவரும் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப நுகர்வோரின் இரசனைக்கு உகந்த வகையில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி 2004-2005ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.20 நெசவுத் திறன் மேம்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளை நெசவு செய்ய பயிற்சி அளித்தல்

ஆலைகள் மற்றும் விசைத்தறி பிரிவுகளுடன் போட்டியிட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தயார் செய்யும் நோக்கத்தோடு நெசவுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளை நெசவு செய்தல் ஆகியவற்றில் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்பயிற்சி அளிப்பதற்கென 1,061 நெசவாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, முதற்கட்டமாக, தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் மூலமாக 55 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அந்த பயிற்சித் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு, எஞ்சியுள்ள 1,006 நெசவாளர்களுக்கு பல்வேறு கட்டங்களில் பயிற்சி அளிக்க திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக்கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக, திண்டுக்கல் மற்றும் கரூர் சரகத்தை சார்ந்த 200 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக, தற்போது 100 நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டத்திற்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ.13.83 இலட்சம் விடுவித்துள்ளது.

## 7.21 நெசவாளர்களுக்கு கடன் அட்டை வழங்குதல்

ஸ்வரோஜ்கார் கடன் அட்டை திட்டம் என்ற திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள் ஆகியவர்களுக்கு கடன் அட்டை வழங்கப்படும் என 15-08-2003 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் நெசவாளர்களுக்கு கடன் அட்டை முதன்மை வங்கிகள் மூலம் 19-12-2003 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் வங்கிகள் மூலம் நேரடியாகவும், தேவையான நேரத்திலும் எளிதில் கடன் பெறுவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடன் பெறுபவருக்கு இத்திட்டத்தின்மூலம் ரூ.25,000/- வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

## 8. துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 8.01 தள்ளுபடி மானியத் திட்டம்/விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

கைத்தறித் துணிகளை விசைத்தறி மற்றும் ஆலை துணிகளுடன் போட்டியிட்டு சந்தையில் விற்பனை செய்ய உதவும் வகையில் துணிகளின் விலையினைக் குறைத்து விற்பனை செய்யும் நோக்கத்தோடு மாநில அரசு தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களின் துணித் தேக்கத்தினை குறைக்க முடிகிறது. இத்திட்டம் கைத்தறித் தொழிலை கடுமையான போட்டியிலிருந்து பாதுகாப்பதுடன், கைத்தறி நெசவாளர்களை ஆலை மற்றும் விசைத்தறி தொழில்களால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும் வழிவகுக்கின்றது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதேபோன்று பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை என்று வரையறைக்குட்பட்டு தள்ளுபடி வழங்கப்படுகிறது. மாநில அரசின் கொள்கையின்படி, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின் (தள்ளுபடி மானியம்) கீழ் மத்திய அரசினால் வழங்கப்படும் தொகையினைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் 2003-2004 ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியமாக ரூ.88.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி 2003-2004 ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியம்/விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் மத்திய அரசுப் பங்கு ரூ.2040.30 இலட்சம் என கணக்கிடப்பட்டு, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் 2003-2004ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் பங்கினை விடுவிக்கக் கோரி உரிய முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு





அனுப்பப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தள்ளுபடி மானிய திட்டம்/விற்பனை ஊக்குவிப்பு திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.92.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.02 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம்

நெசவாளர்களுக்கென மத்திய அரசு தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டத்தை 01-04-2000 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் (i) விளிம்புத் தொகை, புதிய தறிகள், ஜக்கார்டு, டாபி, தறி உபகரணங்கள், பயிற்சி போன்ற அடிப்படை வசதிகளுக்கும், (ii) பொது வசதி மையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளுக்கும் (iii) வடிவமைப்பு உள்ளீடு, (iv) விளம்பரம், (v) விற்பனை ஊக்கத்தொகை (தள்ளுபடி) (vi) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் 264 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு ரூ.382.41 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, முதல் தவணை மானியத் தொகையாக ரூ.189.85 இலட்சம் விடுவித்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 5 இனங்களுக்கு (விற்பனை ஊக்குவிப்பு இனம் தவிர) ரூ800.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.03 கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல் (வட்டி மானியத் திட்டம்)

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (நபார்டு) மறு நிதியுதவி திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கும் சலுகை வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வழக்கமான வட்டி விகிதங்களிலேயே நடைமுறை மூலதனம் வழங்கப்படுவதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3

சதவிகித வட்டி மானியம் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) 1 சதவிகித வட்டி மானியம் வழங்கப்பட்டு வந்தது.

2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ரூ.430.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) ஆகியவற்றிற்கு ரூ.377.57 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது.

### 8.04 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்

மத்திய ரிசர்வ் வங்கியின் கைத்தறி நிதியுதவித் திட்டத்தின்கீழ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பில்லாத நிலையால் ஏற்படும் இழப்பில் 90 விழுக்காடு அரசினால் ஈடு செய்யவும், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பொறுப்புறுதி வழங்கும் நோக்கத்துடனும் 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டத்தினை 1956-ல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காலப்போக்கில் நலிவடைந்து கலைக்கப்படும் சூழ்நிலையில் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அச்சங்கங்கள் கொடுபட வேண்டிய கடன் தொகையை வசூலிக்க இயலாத நிலையில் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் நட்டத்தில் 90 விழுக்காடு தொகை அரசால் வங்கிகளுக்கு திரும்ப வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், அடையாள ஒதுக்கீடாக ரூ.1000/- ஒதுக்கப்பட்டுள்ளது.

### 8.05 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை 15-12-1975 முதல் அறிமுகப்படுத்திய





முதன்மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால் அதற்கு ஈடாக மாநில அரசு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்குகின்றது. மேலும், இத்திட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் பங்கு பெற்று நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வீதம் மைய அரசு பங்காக வழங்கி வருகின்றது. இவ்வாறு பெறப்படும் மொத்த சந்தாவான 16 பைசா அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் 9.5 விழுக்காடு வட்டித் தொகையில் 6.5 விழுக்காடு வட்டி நேரிடையாக நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, எஞ்சிய 3 விழுக்காடு வட்டித்தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் மற்றும் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 31-3-2004 ஆம் தேதியில் 76,336 நெசவாளர் உறுப்பினர்கள் உள்ளனர். மாநில அரசின் 4 விழுக்காடு பங்காக ரூ.214.25 இலட்சம் 2003-2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் 4 விழுக்காடு பங்குத் தொகைக்காக ரூ.248.75 இலட்சம் 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.06 மைய சிக்கன நிதித் திட்டம்

மைய சிக்கன நிதித் திட்டத்தினை மத்திய அரசு 1985-86 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு இணையாக மைய அரசுப் பங்காக நெசவாளர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்கு மைய அரசு ரூ.248.75 இலட்சம் வழங்கியுள்ளது.

மைய சிக்கன நிதித் திட்டத்திற்கு 2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.515.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 30

### 8.07 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கென "தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற புதிய நலத் திட்டத்தினை 1-1-1992 முதல் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தில் நெசவாளர் உறுப்பினர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுக்கு நெசவாளர் இறந்த தேதியிலிருந்து மாதம் ரூ.350/- வீதம் பத்து ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 652 பயனாளிகளுக்கு ரூ.42.27 இலட்சம் அளவிற்கு குடும்ப ஓய்வூதியமாக மாநில அரசு வழங்கியுள்ளது. குடும்ப ஓய்வூதியத் தொகையானது சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படுகிறது.

### 8.08 கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டில் கூட்டுறவின்கீழ் உள்ள நெசவாளர்களுக்காக கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் மாதந்தோறும் ரூ.200/-வீதம் முதியோர் ஓய்வூதியமாகப் பெற தகுதி பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டி தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 10,333 நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக ரூ.286.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 8.09 புங்கர் பீமா யோஜனா திட்டம் (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)

மாநில அரசு கைத்தறி நெசவாளர்களுக்கான சுய காப்பீட்டுத் திட்டத்தினை 1998-99 ஆம் ஆண்டு முதல் தனது சொந்த நிதியிலிருந்து செயல்படுத்தி வந்தது. நெசவாளர்கள் 60 வயதினை அடையும் முன்னர் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- மாநில அரசால் வழங்கப்பட்டு வந்ததோடு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கருணைத் தொகையாக ரூ.15,000/-ம் வழங்கப்பட்டு வந்தது.



2004 ஜூலை 30]

நெசவாளர்களுக்காக சிறப்பு பங்களிப்பு காப்பீட்டுத் திட்டமாக "புங்கர் பீமா யோஜனா" என்ற புதிய திட்டத்தினை மத்திய அரசு தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ இறக்க நேரிட்டால் அவர்களுக்குக் கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நெசவாளர் உறுப்பினர்களின் 9-வது முதல் +2 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாநில அரசால் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த சுய காப்பீட்டுத் திட்டம் நிறுத்தப்படும் எனவும், தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்டமான "புங்கர் பீமா யோஜனா" திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், 2004-2005 ஆம் நிதியாண்டு முதல் நெசவாளர்கள் சார்பில் ஒவ்வொரு நெசவாளரும் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்தப்படவேண்டிய ஆண்டு காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/-ஐ மாநில அரசே செலுத்தும் எனவும் 15-06-2004 அன்று அறிவித்துள்ளார்கள்.

"புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணம் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் பெறும் பயன்களின் விவரங்கள் பின்வருமாறு:

**அ) காப்பீட்டுக் கட்டணம்**

| | பங்களிக்கும் அமைப்புகள் | ஒரு ஆண்டுக்கான காப்பீட்டுக் கட்டணம் |
|---|---|---|
| 1) | மத்திய அரசு | ரூ.150/- |
| 2) | இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் | ரூ.100/- |
| 3) | மாநில அரசு (நெசவாளர்கள் சார்பில்) | ரூ.130/- |
| | மொத்தம் | ரூ.380/- |

[2004 ஜுலை 30

### ஆ) காப்பீட்டுத் தொகை

"புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அ) | இயற்கை மரணம் | ரூ.50,000/- |
| ஆ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.80,000/- |
| இ) | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் (இரு கண்கள்/இரு கால்கள்/இரு கைகள் அல்லது ஒரு கண் மற்றும் ஒரு கை/ஒரு கண் மற்றும் ஒரு கால்) | ரூ.50,000/- |
| ஈ) | விபத்தினால் ஒரு கண்/ஒரு கால்/ஒரு கை ஊனமடைதல் | ரூ.25,000/- |

### இ) நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ.300/– வீதம் (இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

### ஈ) இதரப் பயன்கள்

கணினி மென்பொருள் உருவாக்கவும், நெசவாளர்கள் குறித்த விவரங்களை கணினி மயமாக்கவும், நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவும் மத்திய அரசு நிதியுதவி வழங்கும். இதுதவிர, விளம்பரத்திற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, புதிய காப்பீட்டுத் திட்டமான "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தில் 76,096 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டிற்கு 76,096 நெசவாளர்களுக்கு ரூ.130/– வீதம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகையாக ரூ.98,92,480/– ஒப்பளிப்பு செய்வது தொடர்பான முன்மொழிவு அரசின் பரிசீலனையில் உள்ளது.



2004 ஜுலை 30]

### 8.10 தொழிற்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979–80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவன கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மைய அரசும் 1985–86 ஆம் ஆண்டு முதல் பங்கு பெற்று நெசவாளர் தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் மானியம் வழங்குகிறது. தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தில் வீடு ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| விவரம் | கிராமப்புறம் ரூ. | நகர்ப்புறம் ரூ. |
|---|---|---|
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| பயனாளியின் பங்கு | 3,000 | 5,000 |
| மொத்தம் | **68,000** | **72,000** |

மைய அரசு 113 தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்ட ரூ.20.76 இலட்சம் 2003–2004 ஆம் ஆண்டுக்கு ஒப்பளிப்பு செய்து, அதில் முதல் தவணையாக ரூ.10.38 இலட்சம் விடுவித்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென 2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் 100 தொழிற்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.11 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்

நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் மைய அரசு நெசவாளர்களின் வீடுகளுக்கு தறிக்கூடம் கட்ட நிதியுதவி வழங்குகிறது. தறிக்கூடம் அமைக்கும் திட்டமானது 1997–98 ஆம் ஆண்டு முதல் 100 விழுக்காடு மானியத்துடன் மைய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 30

| விவரம் | கிராமப்புற தறிக்கூடம் ரூ. | நகர்ப்புற தறிக்கூடம் ரூ. |
|---|---|---|
| மைய அரசின் மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளியின் பங்கு | 2,000 | 4,000 |
| **மொத்தம்** | **9,000** | **14,000** |

2003–2004 ஆம் ஆண்டுக்கு 7572 தறிக்கூடங்கள் கட்ட மைய அரசு ரூ.567.27 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, முதல் தவணையாக ரூ.283.64 இலட்சம் விடுவித்துள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.600.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் 5000 தறிக்கூடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.12 நல்வாழ்வு செறிவுத் திட்டம்

கைத்தறி நெசவுத் தொழிலால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு, நல்வாழ்வு செறிவுத் திட்டத்தினை மைய அரசு 1992–93 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. 2001–2002 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் மாநில அரசும் பங்கேற்று, மைய அரசால் வழங்கப்படும் மருத்துவத் தொகைக்கு ஈடான தொகையினை வழங்கி வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு மாநில அரசு வழங்கும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து இத்திட்டத்தின் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் மருத்துவ செலவினங்களைத் திரும்ப வழங்குதல், கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வாங்குதல், மகப்பேறு உதவி, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கான ஈட்டுத் தொகை, குடிநீர் வசதி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

2003–2004 ஆம் ஆண்டிற்கு மைய அரசு ரூ.122.64 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. மாநில அரசும் 2003–2004 ஆம் ஆண்டில்



2004 ஜூலை 30]

இத்திட்டத்தின்கீழ் தனது பங்காக 2002–2003 ஆம் ஆண்டுக்குரிய தொகை ரூ.52.11 இலட்சத்தை விடுவித்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8.13 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி அவர்களை மேல்நிலைக் கல்வி பயில்வதில் ஊக்குவிக்கும்பொருட்டு டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளையை நிறுவ பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தமது பொது நிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து நன்கொடை வழங்கியுள்ளன. இத்தொகை நிரந்தர வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு மேற்படி உதவித் தொகை வழங்குவதற்கான செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

## 8.14 இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களைத் தேர்வு செய்யும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்கு கீழ்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது:

முதலாம் ஆண்டு ரூ.400/– மாதமொன்றுக்கு

இரண்டாம் ஆண்டு ரூ.450/– மாதமொன்றுக்கு

மூன்றாம் ஆண்டு ரூ.500/– மாதமொன்றுக்கு

இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கென மாதமொன்றுக்கு ரூ.60/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ,

[2004 ஜூலை 30

மாணவியர்களுக்கு சுற்றுலா செல்வதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.200/- அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

கூடாக் மற்றும் வெங்கடகிரி ஆகிய இடங்களிலிலுள்ள பயிலகங்களில் மூன்று வருட கைத்தறித் தொழில்நுட்ப பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ மாணவியர்க்கு கல்வி உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டது. அதனைத் தொடர்ந்து 2002-2003 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ.81,000/- ஒப்பளிப்பு செய்து வழங்கியுள்ளது.

### 8.15 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறித் துணி விற்பனையினை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. 1975 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க அரசு இத்திட்டத்திற்கான தொகையை ரூ.30,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தியுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ரூ.50,000/- விடுவித்து வழங்கியுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.16 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 30]

பருத்தி, பட்டு போன்ற பல்வேறு இரகங்களில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு இரகங்கள் வாரியாக கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.3,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000 |

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களில் புதிய வடிவமைப்புகள் கிடைப்பதோடு, ஏற்றுமதிக்கும் புதிய வடிவமைப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

## 9. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985-இல் மத்திய அரசினால் இயற்றப்பட்டு, அனைத்து மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மத்திய அரசு 11 இரகங்கள் கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்கள் விவரம் பின்வருமாறு:

1. சேலை, 2. வேட்டி, 3. டவல் / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் 4. கைலி, 5. கேஸ் / பெட்சீட் / பெட்கவர் / கவுண்டர்பேன் / பர்னிசிங் 6. ஜமுக்காளம் / டர்ரி அல்லது டர்ரட் 7. டிரஸ் மெட்டீரியல் 8. பாரக் பிளாங்கெட், கம்பள் அல்லது கம்பளீஸ் 9. ஷால், லோய், மப்ளர், பங்கி, 10. உல்லன் டுவீடு, 11. சத்தர், மேக்லா / பானக்.

இந்த கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேக அமலாக்கப் பிரிவு ஒன்று சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர்/ அமலாக்க அலுவலர் அலுவலகமும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு,

திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர்/உதவி அமலாக்க அலுவலர்களின்கீழ் சரக அளவிலான அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2003–2004 ஆம் ஆண்டிற்கு 50000 விசைத்தறிகளை ஆய்வு செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 50,360 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, 2003–2004 ஆம் ஆண்டில் 9 விசைத்தறி உரிமையாளர்கள்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதில், 6 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்கும்பொருட்டு, விசைத்தறியாளர்கள் அதிக அளவில் உள்ள பகுதிகளில் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தைச் செயல்படுத்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதுடன், 2004–2005 ஆம் ஆண்டிற்கு 50,000 விசைத்தறிகள் ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. 2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 16–ன்கீழ், பல்வேறு நல மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.30450.52 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ. | திட்டத்தில் சேராதது | 990.15 |
| ஆ. | மாநிலத் திட்டம் | 20755.28 |
| இ. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 1289.13 |
| ஈ. | மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 7325.04 |
| உ. | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (நிர்வாக செலவுகள்) | 90.92 |
| | **மொத்தம்** | **30450.52** |



## 11. 2004-2005 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டங்கள்

2004–2005 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் விவரம் | 2004-2005 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | வடிவமைப்பு மேம்பாட்டிற்காக நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்க நிதியுதவி | 15.00 |
| 2. | மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்த நிதி உதவி | 10.00 |
| | மொத்தம் | **25.00** |

## 12. துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### (அ) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்)

"கோ–ஆப்டெக்ஸ்" என்று அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலைமைச் சங்கமாக இயங்கி 68 ஆண்டுகளாகத் தனது சேவையைச் செய்து வருகின்றது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டுவரும் துணிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தனது 272 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதனைத் தவிர, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நூலினை கொள்முதல் செய்து உறுப்பினர்களாக உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஒவ்வொரு நெசவாளருக்கும் விநியோகம் செய்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள்

[2004 ஜூலை 30

மூலமாக கைத்தறி துணிகளை சில்லறை விற்பனை மேற்கொள்வது மட்டுமல்லாமல், அரசின் பல்வேறு நலத் திட்டங்களான சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை வழங்குதல், முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு சேலைகள், வேட்டிகள் வழங்குதல், இலங்கை அகதிகளுக்கு துணி வழங்குதல் போன்ற திட்டங்களுக்குரிய கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து வழங்குவதன்மூலம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழக அரசுக்கு உதவி புரிந்து வருகிறது. இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சேலைகள் மற்றும் வேட்டிகளைக் கொள்முதல் செய்து, விநியோகம் செய்யும் முகவராகவும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

# கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.342.06 கோடி அளவிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது.

# கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.112.33 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்துள்ளது.

# கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.1.31 கோடி மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி விற்பனை செய்துள்ளது.

# பட்டு மற்றும் பருத்தி சேலைகளில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் 300 புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

# வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் பல வடிவமைப்புகளில் துணி இரகங்களை வழங்குவதற்கும், நெசவாளர்கள் தங்கள் நெசவுத்திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும், நயமான நூல்களைக் கொண்டு நேர்த்திமிகு புதிய மற்றும் கலை நயமிகு வடிவமைப்புகளை உருவாக்கி புதிய வண்ணங்களில் புத்தம் புது இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. (அ) கோரா x டஸ்ஸார் என்னும் சாதா வடிவமைப்பு, உள்ளடக்க, வடிவமைப்பு மற்றும் எம்பிராய்டரி வடிவமைப்பு சேலைகள், (ஆ) NID வடிவமைப்புகளைக் கொண்ட பருத்தி சேலைகள், (இ) NID வடிவமைப்புகளைக் கொண்ட படுக்கை விரிப்புகள், (ஈ) NID வடிவமைப்புகளைக் கொண்ட மேஜை விரிப்புகள், (உ) காஞ்சிபுரம் மற்றும் ஆரணி பகுதியில் உற்பத்தி செய்த குறைந்த விலை பட்டு சேலைகள் போன்ற இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.



2004 ஜூலை 30]

# நெசவாளர்களின் நெசவுத் திறனை மேம்படுத்தவும், சந்தையில் விற்பனையாகக்கூடிய துணிவகைகளை உற்பத்தி செய்யவும் 550 நெசவாளர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

# வடிவமைப்பு வசதியினை மேம்படுத்தி கைத்தறி நெசவாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கணினி வடிவமைப்பு மையங்களை அமைத்துள்ளது.

# கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் அதிக விற்பனை மேற்கொள்ளும் 15 விற்பனை நிலையங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

# கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தும்பொருட்டு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சந்தை நிலவர ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையிடம் சந்தை நிலவர ஆய்வு மேற்கொள்ளும் பணியினை ஒப்படைத்துள்ளது.

# ஆண்டிப்பட்டியில் திருவள்ளுவர் சாலியர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான 3000 சதுர அடி பரப்புள்ள காலி-நிலத்தினை சமூக நலக்கூடம் கட்டுவதற்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தெரிவு செய்துள்ளது. கட்டுமானப் பணியினை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

[2004 ஜூலை 30

## கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைத்தல்

சந்தை நிலவர தகவலின்மையே (Marketing Intelligence) கைத்தறித் தொழிலின் முக்கிய பிரச்சினை ஆகும். மேலும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தற்போது வலுவிழந்த நிலையில் உள்ளதால், தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவருகிறது. எனவே, தமிழகத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்கு உறுதுணையாக இருக்கும்பொருட்டு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை மைய அரசின் நிதியுதவியுடன் ரூ.73.00 கோடி செலவில் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைக்க மைய அரசும், மாநில அரசும் சமமாக பங்கு அளிக்கும் வகையில் ரூ.73.00 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைப்பதற்கு நிதியுதவி வழங்கக் கோரிய முன்மொழிவுகள் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன.

### கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள்:

- பல்வேறு இரகங்களில் 365 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- மகளிருக்கென பிரத்யேகமாக குறிப்பிட்ட இரகங்கள் அடங்கிய 3 சிறப்பு விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 10 விற்பனை நிலையங்கள் கணினிமயமாக்கப்படும்.
- புதிய வகை வீட்டு உபயோக துணி இரகங்களை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதி விற்பனைக்காக தன்னிச்சையான வடிவமைப்பாளர்களையும், ஏற்றுமதி விற்பனைக்கென தனியே உலக அளவிலான வடிவமைப்பாளர்களையும் பணியமர்த்த திட்டமிட்டுள்ளது.
- வாங்குவோர் - விற்போர் கூட்டங்களிலும், மற்ற நாடுகளில் நடைபெறும் உலக வர்த்தகப் பொருட்காட்சிகளிலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கலந்து கொண்டு ஏற்றுமதி விற்பனையை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.
- தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது.



### (ஆ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடை துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் அதிகபட்சமாக ஒரு நெசவாளருக்கு ரூ.3.00 இலட்சம் வரை கடன் வழங்கி வருகிறது.

இக்கழகம் நெசவாளர்களுக்கு உதவி புரியும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 7 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது கழகத்தில் 11,896 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 2003-2004 ஆம் ஆண்டில் 706 உறுப்பினர்களுக்கு ரூ.212.41 இலட்சம் அளவிற்கு கடனுதவி வழங்கியுள்ளது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.252.23 இலட்சம் அளவிற்கு கடன் வசூல் செய்துள்ளது.

இக்கழகம் 2004-2005 ஆம் ஆண்டில் வழங்கும் கடன் அளவை ரூ.368.00 இலட்சம் அளவிற்கு உயர்த்தவும், ரூ.340.00 இலட்சம் அளவிற்கு கடன் வசூலை எய்தவும் திட்டமிட்டுள்ளது.

### (இ) தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ஓர் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகிறது. இந்நிறுவனம் சர்வதேச தரச்சான்று [ISO 9001] பெற்ற நிறுவனமாகும்.

இந்நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டில் 74,268 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து 67,662 சரிகை மார்க்குகளை விற்பனை செய்து ரூ.38.61 இலட்சம் உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சரிகை மார்க் சப்ளை செய்யும் சூரத் சரிகை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட 4,325 சரிகை மாதிரிகளை பரிசோதனை செய்துள்ளது.

வாடிக்கையாளர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் வாங்கும் பட்டு இரகங்களில் உள்ள சரிகையின் தாத்தினை பரிசோதனை செய்து கொள்ளும் பொருட்டு, எந்தவித சேதாரமும் இன்றி தரப் பரிசோதனை முறையினை மேம்படுத்த வேண்டும் என துறை கருதியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு சரிகை நிறுவனம், டி.ஐ.எப்.ஏ.சி நிறுவனத்துடன் இணைந்து ரூ.22.84 இலட்சம் மதிப்பீட்டில் "எக்ஸ்-ரே-ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகை இரகங்களை பிரத்தியேகமாக பரிசோதனை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியந்திரம், சரிகை உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய உலோகங்களின் உள்ளடக்கத்தினை (contents) மிகத் துல்லியமாகத் தெரிவிக்கும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" 14-8-2003 அன்று சென்னையில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. இவ்வியந்திரம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 31-10-2003 முதல் காஞ்சிபுரம் 503, காந்தி சாலையில், நிறுவப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் எக்ஸ்-ரே-ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் மூலம் 9,116 சரிகை மாதிரிகள் மற்றும் சேலைகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பரிசோதனை கட்டணமாக ரூ.3.32 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

சூரத் சரிகை உற்பத்தியாளர்களால் மட்டுமே சரிகை சப்ளை செய்யப்பட்டு வருவதனைக் கட்டுப்படுத்தும் வகையில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஒரு முன்னோடி திட்டமாக என்.எப்.டி.டி.சி., ஐதராபாத் எனும் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் வெள்ளி இழை தயாரிக்கும் பிரிவை அமைத்துள்ளது. மேற்படி திட்டம், நல்ல முன்னேற்றத்துடன் செயல்பட, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சித் துறையினால் ரூ.19.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இது சூரத் சரிகை உற்பத்தியாளரிடமிருந்து தமிழ்நாடு சரிகை ஆலையில், சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கப் பெறுவதற்கான சுமையைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு சரிகை ஆலையின் வளர்ச்சியினையும் மேம்படுத்துகிறது.

இந்நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி அரசின் பங்கு மூலதனத்திற்கு ஈவுத் தொகையினை வழங்கி



வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2001-2002 மற்றும் 2002-2003) இந்நிறுவனம் ஈவுத் தொகையினை 50 விழுக்காடு என அறிவித்து, செலுத்தப்பட்ட பங்கு மூலதனமான ரூ.34.40 இலட்சத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.17.20 இலட்சம் வீதம் செலுத்தியுள்ளது.

## தமிழ்நாடு சரிகை ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்

- 2004-2005 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 84000 மார்க்குகள் சரிகையினை உற்பத்தி செய்து, விற்பனை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதுடன், வெள்ளி இழை உற்பத்தியில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நுணுக்கத்துடன் ஆரம்ப நிலையிலிருந்து செயல்படுத்தி, மேலும் தரமான சரிகையினை உற்பத்தி செய்யவும் கவனம் செலுத்தவுள்ளது.
- இந்நிறுவனம், சரிகையினைப் பரிசோதனை செய்யவும், எந்தவித சேதாரமும் இன்றி தரத்தினை அறியவும், "எக்ஸ்-ரே-ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" திருபுவனத்தில் அமைக்க திட்டமிட்டுள்ளது.
- இந்நிறுவனம், சரிகையின் தரப் பரிசோதனை முறைக்காக தேசிய அங்கீகரிப்பு சான்றிதழினைப் பெற திட்டமிட்டுள்ளது.
- இந்நிறுவனம் கூடுதலாக ஒரு வெள்ளி இழை இழுவை இயந்திரம் நிறுவ நடவடிக்கை மேற்கொண்டு வருவதோடு, வெள்ளி இழை உற்பத்தியினைத் தொடங்கி பரிசோதனை முறையில் 6 மாதத்திற்கு உற்பத்தி செய்யவும் உத்தேசித்துள்ளது.

## (ஈ) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு ஒரு கூட்டுறவு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வாலை மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலை ஆகும். இவ்வாலை பருத்தி மற்றும் செயற்கை இழை துணிகளையும், பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினையும் வெளுத்தல், சாயமிடல், மெர்சிரைசிங் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பதனிடும் மற்றும் அச்சிடுதலுக்குத் தேவையான துணி வகைகளை இவ்வாலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில்

வாரியம், மத்திய சிறைச் சாலை கோயம்புத்தூர், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடக கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற்று வருகின்றது. அரசு திட்டமான பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துணிகளையும் இவ்வாலை பதனிட்டு வருகிறது.

பதனிடும் ஆலையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான மொத்த விற்பனை அளவு ரூ.1379.17 இலட்சம் ஆகும். தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.270.08 இலட்சம் (தோராயமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**பதனிடும் ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்**

- இவ்வாலை 2004–2005 ஆம் ஆண்டில் 20.00 இலட்சம் கிலோ அளவிற்கு பாலியெஸ்டர் மற்றும் பருத்தி நூலினைப் பதனிடவும் மற்றும் 20.00 இலட்சம் கிலோ அளவிற்கு சாயம் தோய்க்கவும். அது தவிர 1.00 இலட்சம் மீட்டர் துணிகளை அச்சிடவும் திட்டமிட்டுள்ளது.
- இவ்வாலையின் உபயோகத்தை அதிகரிப்பதற்கும், இலாபத்தினை அதிகப்படுத்துவதற்கும் முகவர்கள் மூலம் வெளிச் சந்தையில் வியாபாரத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
- இவ்வாலை சரக்கிருப்பு பிரிவு, தொழிலாளர், உற்பத்தி மற்றும் பேக்கிங் ஆகிய 4 பிரிவுகளை கணினிமயமாக்கத் திட்டமிட்டுள்ளது.
- இவ்வாலை ஐ.எஸ்.ஓ. 14001 [I.S.O. 14001] தரச் சான்றிதழைப் பெற திட்டமிட்டுள்ளது.

**(உ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்**

நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி அவற்றிற்குப் புத்துயிர் அளித்தல், விசைத்தறிக் கூடங்களை நிறுவுதல், கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தொழில்நுட்ப சேவை வழங்குதல், விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணிகளை விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தற்போது மூன்று விசைத்தறிக் கூடங்களையும், ஒரு தானியங்கி விசைத்தறிக்



கூடத்தையும், செயலிழந்த சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை ஆகியவற்றை நிர்வகிப்பது இக்கழகத்தின் செயல்பாடுகளாக உள்ளன. பொதுத் துறை நிறுவனங்களான இரயில்வே, மின் வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் சீருடைத் துணிகளையும் இக்கழகம் விநியோகம் செய்து வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.887.22 இலட்சம் அளவிற்கு இக்கழகம் விற்பனை மேற்கொண்டுள்ளது.

**தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 2004–2005 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்**

- அரசு நலத் திட்டங்கள் மற்றும் காவல் துறை உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான சீருடைத் துணிகளை வழங்கும் வகையில் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.862.92 இலட்சம் மதிப்புள்ள 20.00 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்ய இக்கழகம் திட்டமிட்டுள்ளது.
- அரசுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் 61.22 இலட்சம் மீட்டர் வெள்ளை நிறத் துணியை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூ.1592.00 இலட்சம் மதிப்பில் 2004–2005 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்ய இக்கழகம் திட்டமிட்டுள்ளது.
- இக்கழகமானது தற்போதைய சந்தை நிலவரத்திற்கேற்ற வகையில் துணிகளை வழங்கும்பொருட்டு விசைத்தறிக் கூடங்களில் ஏற்கெனவே உள்ள விசைத்தறிகளை நவீனப்படுத்தி, இலாபத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

**(ஊ) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும் பொருட்டு 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் பல வெளி மாநில கூட்டுறவு இணையங்கள் மூலமாகவும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் வாங்கி விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226218
சென்னை-600 008

இந்நாளைய நடவடிக்கைக்
குறிப்புகள் சட்டமன்றப் பேரவை
நிருபர் பிரிவால் கணினி மூலம்
வடிவமைக்கப்பட்டு அரசு மைய
அச்சகத்தால் அச்சிடப்பட்டது

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.